மாதம் இருமுறை ஜுலை 01, 2026 - 48 பக்கங்கள் இலவச சஞ்சிகை

# கதிர் ஒளி

கனடா - இந்தியா - இலங்கை வெளியீடு

KATHIROLI
ULAGATHIN OREA OLI TAMILARGALIN
IT'S A PEOPLE NEWSPAPER

647-473-9698 கனடாவின் நம்பர் 1 தமிழ் இதழ்! 437-833-4304

விலை / Price $ 1/-



Editor in Chief:
RAJAPANDIAN PAULRAJ

Editor: HUDSON PAULRAJ
Vol: 16 • Issue: 413
ePaper:
www.kathirolimedia.ca

Kathir Oli Media Inc., 35 Shoreham drive, Unit. 723 North York, Ontario. M3N1S5 Canada TP: 437-833-4304 | kathirolinews@gmail.com www.kathirolimedia.ca

# சிந்தூர் ஆபரேஷன் தொடர்பாக பாராளுமன்றத்தில் தவறான தகவல்: ராஜ்நாத் சிங் மீது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா, பாகிஸ்தான் நாட்டிற்குள் புகுந்து பயங்கரவாதிகள் முகாம்கள் மீது துல்லியமாக தாக்குதல் நடத்தியது. இதற்கு சிந்தூர் ஆபரேஷன் என்று பெயரிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்த சில நாட்களுக்கு இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நடைபெற்றது. பின்னர் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு போர் நிறுத்தப்பட்டது.

தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்திய 5-க்கும் அதிகமான விமானங்களை சுட்டு வீழ்த்தினோம்



என்று பாகிஸ்தான் தெரிவித்தது. ஆனால், இந்தியா அதை மறுத்து வந்தது. அமெரிக்க அதிபர் டிரம்பும், இந்திய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இந்தியாவின் இழப்பு குறித்து தகவல் தெரிவிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால், மத்திய அரசு எந்த தகவலையும் வெளியிடவில்லை.

பாராளுமன்றத்தில் சுமார் 16 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. அப்போது எந்தவொரும் வீரரையும் இந்தியா இழக்கவில்லை என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாக எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஆனால், சில தினங்களுக்கு முன்னதாக, 5 ராணுவ வீரர்கள், ஒரு விமானப்படை வீரர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனால் ராஜ்நாத் சிங் பாராளுமன்றத்தில் உண்மையை மறைத்து, பாராளுமன்றத்தை தவறாக வழி நடத்தியதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

இந்த நிலையில், அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் ஒரு குறிப்பிட்ட பேச்சை எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுவதாக விளக்கம் அளித்துள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# கொடூரமான படுகொலைகளைச் செய்த பிள்ளையானுக்கு விரைவில் தண்டனை! அரச தரப்பிலிருந்து தகவல்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) என்பவர் கொடூரமான கொலைகளையும், பல்வேறு குற்றச் செயல்களையும் புரிந்தவர் என்றும், அவருக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் நிச்சயம் வழங்கும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பிள்ளையான் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலை வாகனத்துக்குக் கொண்டுசெல்லப்படும்போது தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கூறியிருந்தமை பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அமைச்சர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

'மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட கொடூரமான படுகொலைகளின் பின்னணியில் பிள்ளையான் இருந்துள்ளார் என்பது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் வெளிவந்துள்ளது.

இவ்வாறான கொடூரக் கொலைகளையும் குற்றச் செயல்களையும் புரிந்துவிட்டு, இன்று தான் முற்றிலும் குற்றமற்றவர் என்று அவர் கூறுவது மிகவும் வேடிக்கையானது.

அதிகார பலத்தைப் பயன்படுத்தி அவர் இத்தனை காலம் மறைத்து வைத்திருந்த அத்தனை இரகசியங்களும், பழிவாங்கல் குற்றங்களும் இப்போது நீதிமன்றத்தின் மூலம் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

சட்டத்தின் முன்னால் யாரும் தப்பிக்க முடியாது. இத்தனை காலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில், பிள்ளையான் புரிந்த குற்றங்களுக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் மிக விரைவில் வழங்கும் என குறிப்பிட்டுள்ளார்.

## கடற்படைத்தளபதி காஞ்சன பானகொட அட்மிரலாக நியமனம்

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட அட்மிரல் நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். கடந்த 2024 டிசம்பர் 31ஆம் திகதி இலங்கை கடற்படையின் 26ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது கடற்படை மரபின்படி உயரிய பதவியான அட்மிரல் தர நிலைக்கு அவர் பதவி உயர்வு பெற்றுள்ளார். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தருமான அனுர குமார திசாநாயக்கவால் காஞ்சன பானகொடவுக்கான அட்மிரல் நிலை பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, கடற்படைத் தளபதிக்கு வழங்கப்படும் பாரம்பரிய சிறப்பு மரியாதை அணிவகுப்பு இன்று கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.










# மக்கள் உதவிக்காக இந்தியாவை நாடக்கூடும்: PoK போராட்டக்காரர்கள் பாகிஸ்தானுக்கு பகிரங்க எச்சரிக்கை..!

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (PoK) உள்ளவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுடைய போராட்டம் 22-வது நாளாக போராட்டம் நீடித்து வருகிறது. இந்த போராட்டத்தில் இளைஞர்கள், பள்ளி குழந்தைகள், பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.



பாகிஸ்தான் அரசு தங்களுக்கு சுதந்திரம், தங்களை பாகிஸ்தானின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு பகுதி என்பதை நீக்க வேண்டும் உள்ளிட்ட 38 கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டம் பாகிஸ்தான் ஆக்கிரிமிப்பு காஷ்மீரில் உள்ள ராவலகோட்டில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இங்குள்ள எய்டுகாஹ் மைதானத்தில் போராட்டக்காரர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். அப்போது, PoK-வை நீண்ட காலமாக பாகிஸ்தானின் ஒரு பகுதியாக கருத முடியாது. நாங்கள் இந்தியாவோடு வலுவான ஈடுபாட்டை கோருவோம் என எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

ஆர்வலர் சர்தார் அமன் கான் உள்ளிட்ட உள்ளூர் பிரமுகர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தின் மீது பாகிஸ்தான் அதிகாரிகள் இரண்டு வார காலத் தடையை விதித்ததைத் தொடர்ந்து, இப்போராட்டம் மேலும் வலுவடைந்தது.

போராட்டக்காரர்கள் மத்தியில் அமன் கான் பேசும்போது 'பாகிஸ்தான் நிர்வாகத்திலுள்ள காஷ்மீர் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. மேலும், பாகிஸ்தான் அந்தப் பகுதியைச் சார்ந்திருப்பதை விட, அந்தப் பகுதிக்குத்தான் பாகிஸ்தானின் தேவை அதிகமாக இருக்கிறது.

உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்ந்தால், அப்பகுதி மக்கள் உதவிக்காக இந்தியாவை நாடக்கூடும் அவ்வாறு செய்வது அப்பகுதியின் அரசியல் சூழலை மாற்றி அமைப்பதோடு, இஸ்லாமாபாத் மீதும் அழுத்தத்தை ஏற்படுத்தும்' என்றார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## உலக செய்திகள்



# டிரம்பிற்கு பேரிடி: பிறப்புரிமை அடிப்படையிலான குடியுரிமை நிர்வாக உத்தரவை ரத்து செய்யது உச்சநீதிமன்றம்

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்றதும், மற்ற உலக நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடிவு செய்தார். அவருடைய விருப்பத்திற்கு இசைவு காட்டாத நாடுகளுக்கு பரஸ்பர வரி என்ற வகையில் கூடுதல் வரி விதித்தார். இதற்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் டிரம்பின் வரி விதிப்பு செல்லாது என்று தெரிவித்ததுடன், வசூலிக்கப்பட்ட வரியை திருப்பி செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது.

இதைத் தவிர்த்து அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புரிமை அடிப்படையிலான குடியுரிமையை குறைக்கும் வகையில் நிர்வாக உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவை இன்று உச்சநீதிமன்றம் ரத்து செய்யுள்ளது. அமெரிக்க மண்ணில் பிறக்கும் ஏறக்குறைய அனைத்து குழந்தைகளுக்கும் குடியுரிமை வழங்கும் 14-வது சட்டத்திருத்தம் குறித்த நீண்டகால விளக்கத்தை நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்துவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் ஒரு குழந்தை பிறந்தால், அந்த குழந்தை தன்னிச்சையாக அமெரிக்க குடியுரிமை பெறும்வகையில்சட்டம் உள்ளது. ஆனால், அவர்களுடைய பெற்றோர்கள் அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாகவோ அல்லது தற்காலிகவிசாவிலோவந்திருந்தால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் குடியுரிமை வழங்கப்படமாட்டாது என்று நிர்வாக உத்தரவு பிறப்பித்திருந்தார். மேலும், அதில் பெற்றோர்களில் ஒருவர் அமெரிக்க குடிமகனாக இருக்க வேண்டும் அல்லது சட்டப்பூர்வ நிரந்தர குடியேறியாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பிறப்பித்திருந்தார். தற்போது அதை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. ஏற்கனவே, கீழவை நீதிமன்றம் உறுதி செய்த உத்தரவை உச்சநீதிமன்றத்தில் 6-3 என்ற நீதிபதிகளின் தீர்ப்புகள் அடிப்படையில்உறுதி செய்துள்ளது.

www.kathiroli-media.ca

## OBITUARY

Our beloved youngest daughter

**Mrs. HEPZIBHA VINOLA Aaron Bruce**

is entering into the Kingdom of God



on the 15th June 2026 Monday in Glasgow, London. Her Final Saluting will be on the 16th July at 11 am. Kindly All are remembering her parents, husband Aaron Bruce and the only son Ian Aaron in your prayers.

Born: 14-10-1981
Entered into the heaven
15-06-2026

Let us remember our beloved daughter in our prayers and pray that God grants her eternal peace.

"I am the resurrection and the life.
He who believes in me will live,
even though he dies;
and whoever lives and believes
in me will never die."
– John 11:25

Born: 14-10-1981 | Entered eternal rest: 15-06-2026

**Parents:**
Rt. Rev. Dr. Paulraj Rajapandian DD
Father.
Editor in Chief
Kathiroli media incorporation.

Mrs. Mary Angeline Rajakumari
Mother.

**Siblings:**
BEULA MERLIN BENNY
Elder Sister.

HUDSON PAULRAJ
Elder Brother

**In-laws:**
Mr. BENNY LOURDU
Mrs. THANU HUDSON

**Uncles:**
Rev. Dr. S.J. Kingsley
Dean
Loyola College
Late Mr. Andrew's
Indian Navy

**In-law Family:**
A. George Purushothaman – Father in Law
Jagatha George – mother in law
Dinesh G Moses – brother in law
Ruby – sister in law
Nissi – *neice*

# விண்வெளியில் இருந்து வழிகாட்டிய சாட்டிலைட்: உதய்பூரில் இண்டிகோ ஜெட் விமானம் வெற்றிகரமாகத் தரையிறக்கம்!



இந்திய விமானப் போக்குவரத்துத் துறை ஒரு புதிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. ஜூன் 27, 2026 அன்று, இந்தியாவின் சொந்த செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பான ‘ககன்’ (GAGAN & GPS Aided GEO Augmented Navigation) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இண்டிகோ நிறுவனத்தின் ஏர்பஸ் ஏ320 பயணிகள் ஜெட் விமானம் உதய்பூர் விமான நிலையத்தில் வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக சிறிய ரக ’டர்போப்ராப்’ விமானங்கள் மட்டுமே இத்தொழில்நுட்பத்தில் சோதிக்கப்பட்ட நிலையில், ஒரு பெரிய வர்த்தக ரீதியான பயணிகள் ஜெட் விமானம் ககன் உதவியுடன் தரையிறக்கப்படுவது இந்தியாவிலேயே இதுவே முதல் முறையாகும்.

விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநரகத்தின் நேரடிக் கண்காணிப்பில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. வழக்கமாக பெரிய நகரங்களில் உள்ள விமான நிலையங்களில், ஓடுதளத்திற்கு அருகே தரையில் அமைக்கப்பட்டிருக்கும் ரேடியோ அலைவரிசை கருவிகளின் உதவியுடன்தான் விமானங்கள் தரையிறக்கப்படும்.

ஆனால், இந்த சோதனையின் போது இஸ்ரோ மற்றும் இந்திய விமான நிலையங்கள் ஆணையம் இணைந்து உருவாக்கிய ’ககன்’ செயற்கைக்கோள் துல்லியமான வழிகாட்டுதலை வழங்கி விமானத்தைத் தரையிறக்க உதவியுள்ளது.

ஜிபிஎஸ் சிக்னல்களில் ஏற்படும் வளிமண்டலக் குளறுபடிகளைச் சரிசெய்து, விமானிகளுக்கு 10 மடங்கு கூடுதல் துல்லியமான மற்றும் பாதுகாப்பான ஓடுதளப் பாதையைக் காட்டுவதே இந்த அமைப்பின் சிறப்பம்சமாகும்.

இதன் மூலம், அதிக செலவு பிடிக்கும் தரைவழி ரேடியோ கருவிகள் இல்லாத சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் பிராந்திய விமான நிலையங்களிலும், மோசமான வானிலை நிலவும் நேரத்திலும் கூட இனி பயணிகள் ஜெட் விமானங்களை மிக எளிதாகவும் பாதுகாப்பாகவும் தரையிறக்க முடியும்.

இந்த அசாத்திய மைல்கல், உலக அரங்கில் செயற்கைக்கோள் அடிப்படையிலான துல்லிய தரையிறங்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள ஒரு சில நாடுகளின் வரிசையில் இந்தியாவையும் இணைத்துள்ளது.

## இந்திய செய்திகள்

# ஜூலை 20-இல் நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத்தொடர் தொடங்க வாய்ப்பு

நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத்தொடர் ஜூலை 20-ஆம் தேதி தொடங்கி மூன்று வாரங்களுக்கு நடைபெற வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு இது குறித்து இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. பொதுவாக, மழைக்கால மற்றும் குளிர்காலக் கூட்டத்தொடர்கள் நான்கு வாரங்களில் 20 அமர்வுகளைக் கொண்டிருக்கும்; இருப்பினும், இதற்கு முன் குறுகிய காலக் கூட்டத்தொடர்கள் நடைபெற்ற முன்னுதாரணங்களும் உள்ளன.

மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் ஆளும் பா.ஜ.க. வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சிவசேனா கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சி பூசல்களும் இந்த கூட்டத்தொடரில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனித்தனி குழுக்களாக அங்கீகாரம் கோரும் 20 திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் 6 சிவசேனா எம்.பி.க்களின் கோரிக்கைகள் குறித்து மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா எடுக்கும் முடிவை அனைவரும் எதிர்நோக்கியுள்ளனர்.

மாநிலங்களவையில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் பதவியேற்ற பிறகு, அரசியல் ரீதியான பலம் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாக மேலும் அதிகரித்துள்ளது. கடந்த கூட்டத்தொடர் அரசுக்கு ஏமாற்றத்துடன் முடிவடைந்தது.

ஏனெனில், 2029-ஆம் ஆண்டில் சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கும், மக்களவை இடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும் அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் தோல்வியடைந்தது.

அனைத்து மாநிலங்களின் மக்களவை இடங்களையும் ஒரே சீராக 50 சதவீதம் வரை அதிகரிக்கும் வகையில், அரசு தற்போது அந்த மசோதாவை மாற்றியமைத்து வருகிறது. மக்கள்தொகை அடிப்படையில் இடங்களை அதிகரிப்பது தென்னிந்திய மாநில கட்சிகளுக்கு ஒரு முக்கிய கவலையாக இருந்து வருகிறது.

## கண்ணீர் அஞ்சலி

எங்களின் அன்புக்குரிய இளைய மகள்

### திருமதி. ஹெப்சிபா வினோலா ஆரோன் புரூஸ்



அவர்கள் கடந்த 15 ஜூன் 2026, திங்கட்கிழமை அன்று லண்டன், கிளாஸ்கோவில் இறைவனின் ராஜ்ஜியத்தில் பிரவேசித்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு வரும் **16 ஜூலை காலை 11 மணிக்கு** நடைபெறும்.

அன்னாரின் பெற்றோர், கணவர் ஆரோன் புரூஸ் மற்றும் ஒரே மகன் இயன் ஆரோன் ஆகியோரை உங்கள் ஜெபங்களில் நினைவுகூருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

“ நாளே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,
என்னை விசுவாசிக்கிறவன்
மரித்தாலும் பிழைப்பான்,
– யோவான் 11:25 ”

பிறப்பு: 14-10-1981
விண்ணுலகம் சென்றது: 15-06-2026

**பெற்றோர்**

**Rt. Rev. Dr. பால்ராஜ் ராஜபாண்டியன் DD**
தந்தை.
தலைமை ஆசிரியர்,
கதிரொளி மீடியா இன்கார்ப்ரேஷன்.

**திருமதி. மேரி ஆஞ்சலின் ராஜகுமாரி**
தாய்.

**பியூலா மெர்லின் பென்னி**
மூத்த சகோதரி.

**ஹட்சன் பால்ராஜ்**
மூத்த சகோதரர்.

**உறவினர்கள்** (In-laws):
திரு. பென்னி லூர்து
திருமதி. தாணு ஹட்சன்

**மாமாக்கள்:**
அருட்திரு. டாக்டர். எஸ்.ஜே. கிங்ஸ்லி டீன் (புலமுதன்மையர்),
லயோலா கல்லூரி.
காலஞ்சென்ற திரு. ஆண்ட்ருஸ்
இந்திய கடற்படை.

**கணவர் வழி உறவினர்கள்:**
ஏ. ஜார்ஜ் புருஷோத்தமன் – மாமனார்
ஜெகதா ஜார்ஜ் – மாமியார்
திளேஷ் ஜி மோஸஸ் – மைத்துனர்
ரூபி – மைத்துனி
நிஸ்ஸி – மருமகள் (Niece)

# கனடாவில் அசுர வேகத்தில் பரவும் லைம் நோய்!

கனடாவில் உன்னிகளின் நடமாட்டமும், அதனால் பரவக்கூடிய 'லைம் நோய்' (Lyme disease) பாதிப்புகளும் கணிசமாக அதிகரித்து வருவதாக தொற்றுநோய் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும், தற்போதைய தரவுகளை விட உண்மையான பாதிப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

உண்ணிகள் தொடர்பான விழிப்புணர்வு இணையதளமான eTick.ca வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் நாடு தழுவிய ரீதியில் உன்னிகளின் நடமாட்டம் பற்றிய பதிவுகள் 38.5 சதவீதம் அதிகரித்துள்ளன.

கனடா பொது சுகாதார அமைப்பின் தரவுகளின்படி, கடந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும் வரலாற்றிலேயே மிக அதிகமாக 7,105 'லைம் நோய்' பாதிப்புகள் பதிவாகியிருந்தன.

கனடாவில் அதிகளவில் உன்னிகள் அடையாளம் காணப்படும் ஒன்ராறியோ மாகாணத்தில், இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 359 லைம் நோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

இதில் கடந்த வாரம் மட்டுமே 11 புதிய பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போது பதிவாகியுள்ள



எண்கள் உண்மையான பாதிப்பை விடக் குறைவானதாகவே இருக்க வாய்ப்புள்ளது.

இது பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடமும், ஆரம்பக்கட்ட சுகாதார அதிகாரிகளிடமும் கொண்டு சேர்ப்பதன் மூலமே முறையான நோயறிதலைச் செய்ய முடியும் என தொற்றுநோய் நிபுணர் டாக்டர் ஐசக் போகோச் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் காரணமாக உன்னிகள் இடம்பெயர்வதால், 'லைம் நோய்' மட்டுமன்றி அனபிளாஸ்மோசிஸ், பபெசியோசிஸ் மற்றும் போவாசன் வைரஸ் போன்ற அதிகம் அறியப்படாத பிற தொற்றுநோய்களும் பரவ வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஒன்ராறியோவில் இந்த ஆண்டு இதுவரை 36 அனபிளாஸ்மோசிஸ் பாதிப்புகளும், ஒரு போவாசன் வைரஸ் பாதிப்பும் பதிவாகியுள்ளன.

www.kathiroli-media.ca

## கனடிய செய்திகள்

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!






## KATHIROLI ADVERTISMENT RATES

**இந்திய வர்த்தகர்கள் விளம்பரக் கட்டணங்கள்**

Per Edition

**முழுப் பக்கம்:** Rs. 25,000 (INR)

**அரைப் பக்கம்:** Rs. 15,000 (INR)

**கால் பக்கம்:** Rs. 10,000 (INR)

**பேனர்:** Rs. 5,000 (INR)

**அன்பு கதிர் ஒளி வாசகர்களே உங்கள் அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துக்களை கூறிக் கொண்டு இந்த இதழை உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன் இதை வாசித்து பயன் அடையுங்கள் உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கும்படி தூண்டுங்கள்.**







## Kathir Oli Tamil News Paper

**Editor in chief :Dr. Paulraj Rajapandian, DD**

**Editor : Mr. Hudson Paulraj, MCs**

**Published by: Kathir Oli Media Incorporate**

**Publish Office: Kathir Oli Media Incorporate**

**#723- 35 Shoreham drive, North York, Ontario. M3N1S5 Canada.**

**Published Media: Online paper: www.kathirolimedia.ca**

**Printing Press: Sun Rise Printers, Toronto, Ontario. Canada.**

**Our Contact info: Canada office. 647-473-9698, 437-833-4304 (Editor), kathirolinews@gmail.com, www.kathirolimedia.ca, India office. +91-984-050-0001, kathirolimedia@gmail.com**



**All rights reserved to "Kathir Oli Media Incorporate" Canada, and the Associate editor's office in Chennai, India for adding and deleting the articles. The writers are only response for their own writings.**

**Confidentiality Notice from the Kathir Oli Media Incorporate, Canada.**





# இலங்கை செய்திகள்

## இணைய வழி சூதாட்டத்தினால் பறி போன இளைஞனின் உயிர்

காலி, அஹுங்கம - கபாலான பகுதியில் இளைஞர் ஒருவர் கடலில் குதித்து உயிரை மாய்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இணைய வழி சூதாட்டத்தில் ஈடுபட்டு, அதற்கு அடிமையாகி பெருமளவு கடன் ஏற்பட்டதன் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சலினால், குறித்த இளைஞன் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.



அஹுங்கம, தித்தங்கல்ல, அம்பாவில பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞர் இணைய வழி சூதாட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக சுமார் 25 லட்சம் ரூபா வரை கடனில் சிக்கியுள்ளார்.

இதனால் அவர் கடும் மன அழுத்தத்தில் இருந்ததாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அஹுங்கம கபாலான பகுதியில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றிற்குப் பின்னால் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார். பின்னர் அவர் கடலில் குதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் மிதந்து கொண்டிருந்த அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. பின்னர் உறவினர்கள் வருகை தந்து சடலத்தை அடையாளம் கண்டுள்ளனர்.

இது குறித்து அஹுங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## கடந்த ஆண்டில் பெருந்தொகை வரியை வசூலிக்கத் தவறிய உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

கடந்த 2025ம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2,164 பில்லியன் ரூபா வரி நிலுவை தொகையை வசூலிக்கத் தவறியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

2025 ஆம் ஆண்டிற்காக நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆண்டு அறிக்கையில் இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் முன்னைய 2024ம்ஆண்டைவிட வரிவருமானம்




சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

அதற்கான காரணம் வசூலிக்கப்பட்டிருக்க வேண்டிய 2,164 பில்லியன் ரூபா வரி நிலுவைத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வசூலிக்கவில்லை என்றும் அந்த அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த வரித்தொகை 2025 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்டிருந்தால், அந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை முழுமையாகக் குறைத்திருக்க முடியும் என்றும் கணக்காய்வு அறிக்கை குறிப்பிடுகின்றது.

## அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக மீண்டும் வழக்கு: வெளியிடப்பட்டுள்ள எதிர்ப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனரான அஜித் நிவாட் கப்ராலிற்கு எதிராக லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு மீண்டும் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஆணைக்குழு காழ்ப்புணர்ச்சி மற்றும் குரோத அடிப்படையில் செயற்படுவதாக, அவர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் எடுத்த கொள்கை ரீதியான முடிவின் அடிப்படையில் கிரேக்க பிணைமுறி கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக மேல் நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் ஏற்கனவே தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தில்தனது கட்சிக்காரருக்குப் பொறுப்புச் சுமத்த முடியாது என மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆரம்பத்திலேயே தீர்மானித்து, மனுவைத் தொடர அனுமதி வழங்காமல் நிராகரித்திருந்தது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்னணியிலும், லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கிலிருந்து பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், ஆணைக்குழு மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக வழக்குத் தாக்கல் செய்து வருவதாக அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் இந்தத் தொடர் நடவடிக்கைகள், அவர்கள் தனது கட்சிக்காரருக்கு எதிராகக் காழ்ப்புணர்ச்சியுடனும் குரோத மனப்பான்மையுடனும் செயல்படுவதையே காட்டுகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பிரதிவாதி தரப்பின் இந்தக் குற்றச்சாட்டுகளை லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு சார்பில் முன்னிலையான உதவிப் பணிப்பாளர் (சட்டம்) அனுஷா சம்பன்தப்பெரும முற்றாக நிராகரித்துள்ளார். ஆணைக்குழு யாருக்கும் எதிராகக் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படவில்லை எனவும், சட்டக் கட்டமைப்பு மற்றும் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் பதிலளித்துள்ளார். பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி முன்வைத்த குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இருதரப்பிலும் முன்வைக்கப்பட்ட வாய்மூல மற்றும் எழுத்துப் பூர்வமான சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம் சில உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி நேற்று முன்வைத்த ஆரம்பக் ஆட்சேபனைகளுக்கு எதிராக எழுத்துப்பூர்வமான சமர்ப்பணங்கள் ஏதேனும் இருப்பின், அதனை இரண்டு நாட்களுக்குள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யுமாறு ஆணைக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த மனுக்கள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான பொருத்தமான உத்தரவை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி வழங்குவதாக நீதிபதிகள் குழாம் அறிவித்தது. இவ்வழக்கை நீதிபதிகள் மனோஜ் அல்கொஹபிட்டிய, உதேஷ் ரத்நாயக்க மற்றும் புத்திக சி. ராகல ஆகிய மூவர் அடங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சியர்ஸ் (லாசரும், பணக்காரனும்)

**பகுதி 1**

ஐந்தாறு கோப்பைகள் செல்லமாய் மோதிக் கொள்ள உயர் ரக வைன் கோப்பைகளின் விளிம்பைத் தாண்டி வழிந்தது. மேஜை முழுதும் கமகமக்கும் உணவுப் பதார்த்தங்கள் நிரம்பியிருந்தன. தங்கள் மெல்லிய தொப்பைகளையும், பணக்காரத் தனம் புரளும் ஆடைகளையும் தட்டி விட்டுக் கொண்டு சிரித்தார்கள்.

'லைஃப் ரொம்ப ஜாலியா இருக்கு... நீங்க எல்லாம் இங்கே வந்து டைம் ஸ்பென்ட் பண்றதுல எனக்கு ரொம்ப சந்தோசம்'

இப்படி அடிக்கடி விருந்து கொடுக்கிற உனக்கு தாண்டா நாங்க நன்றி சொல்லணும்.

வாழ்க்கை அனுபவிக்கறதுக்காக கடவுள் கொடுத்ததுடா... அதை நாம அனுபவிப்போம். நீங்க எல்லாம் என்னோட சகோதரர்கள், நண்பர்கள் உங்களுக்காக என் சொத்து முழுசையுமே செலவழிப்பேன்... கடவுள் தந்துட்டே இருப்பாரு.

ஆமா... இது தான் கடவுளோட ஆசீர்வாதம். உனக்கு அது நிறையவே இருக்கு.

யா..யா.. செல்வம் இருக்கிறது கடவுளோட ஆசீர்வாதத்தின் அடையாளம் தானே...

உண்மை தான்.. அதே போல தான், பிச்சைக்காரனா இருக்கிறது கடவுளோட சாபம்.

பிச்சைக்காரன்னு சொன்னதும் தான் ஞாபகம் வருது, உன்னோட வீட்டு கேட் பக்கத்துல ஒரு பிச்சை க்காரன் இருக்கிறதைப் பாத்தேன்.

வெளிகேட்டை தானே சொல்றே...

ஆமா..

அது தான் லாசர்.

ஆமா. அவனை எனக்கும் தெரியும். எப்போ வந்தாலும் அவனை அங்கே பாக்கறேன். அடிச்சு தொரத்த வேண்டியது தானே...

நோ..நோ.. அதெல்லாம் பண்ணக் கூடாது. அவன் பாட்டுக்கு அங்கே கெடப்பான். நாம பாட் டுக்கு இங்கே இருப்போம்.

இருந்தாலும்...

உங்க கிட்டே அவன் ஏதும் தொந்தரவு செஞ்சானா ? ஏதாச்சும் கேட்டானா ?

இல்லை..

அப்ப என்ன ? நானும் அவனுக்கு எதுவும் கொடுத்ததில்லை. அவன் அப்படி இருக்கிறது அவனோட சாபம். நாம இப்படி இருக்கிறது வரம். அவ்ளோ தான்.

அதுவும் சரிதான். இந்த கிராண்ட் பார்ட்டில அவனைப் பத்தி எதுக்கு நினைக்கணும்..

யா..ம்ம்ம்.. நல்லா சாப்பிடுங்க...

விருந்து தடபுடலாய் நடந்தது. வேலைக்காரர்கள் மது ஊற்றியும், சுடச்சுட உணவுகளைப் பரிமாறியும் களைத்துப் போனார்கள்.

'ஹோ... எனக்கு லைட்டா நெஞ்சு வலிக்குது' செல்வந்தன் திடீரென நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந் தான்.

ஏய்.. என்னாச்சுடா...

சீக்கிரம் அவனைப் பிடி...

ஓடிப் போய் நம்ம வைத்தியரை கூட்டி வா...

அந்த இடம் சட்டென பதட்டமானது.

ஒருவர் ஓடிப் போய் தனது ஒட்டக த்தின் மீதேறி மருத்துவரின் வீட்டை நோக்கி விரைந்தார். வாசலைக் கடக்கும் போது தான் கவனித்தார், வாசலில் லாசர் விழுந்து கிடந்தான். அவனைச் சுற்றி நின்ற நாலைந்து நாய்கள் அவனது புண்களை நக்கிக் கொண்டிருந்தன. சில வினாடிகள் உற்றுப் பார்த்தவருக்கு விளங்கி விட்டது, லாசர் இறந்து போய்விட்டான். அவருக்கு குமட்டிக் கொண்டு வந்தது, ஒட்டக த்தை விரட்டினார்.

மருத்துவர் வந்தார். நாடித்துடிப்பைப் பிடித்துப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கினார்.

"சாரி... ரொம்ப லேட்.. உங்க நண்பர் இறந்துட்டாரு"

மருத்துவர் சொல்ல எல்லோரும் அதிர்ந்து போனார்கள். விஷயம் வெளியே கசிந்தது. உறவினர்கள் விரைந்து வர ஆரம்பித்தனர். அந்த இடம் பரபரப்பாகத் துவங்கியது.

**தொடரும்**


# House for Sale

## At Chennai on main road and one in Palakad, Kerala





**அனைத்து கனடிய மக்களே, தயவுசெய்து தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை ஈஸ்ட் FM 102.7 தமிழ் வானொலியைக் கேளுங்கள்.**





# ஈவ்-டீசிங் செய்த வாலிபரின் தலையை உடைத்த கயாடு லோஹர்.. இணையத்தில் வைரலாகும் பேச்சு



கன்னட திரைப்படமான 'முகில்பேட்டை' மூலம் திரையுலகில் அறிமுகமான நடிகை கயாடு லோஹர், தற்போது தென்னிந்திய திரையுலகின் கவனம் ஈர்த்துவரும் இளம் நடிகைகளில் ஒருவராக உள்ளார். மலையாளம், தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட பல மொழித் திரைப்படங்களில் நடித்து வரும் அவர், தமிழில் பிரதீப் ரங்கநாதன் நடித்த 'டிராகன்' திரைப்படத்தின் மூலம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றார். தொடர்ந்து மலையாளத்தில் டொவினோ தாமஸுடன் நடித்த 'பள்ளிச்சட்டம்பி' திரைப்படமும் அவருக்கு பாராட்டுகளை பெற்றுத் தந்தது. தற்போது இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கும் புதிய படத்திலும், நடிகர் சூர்யாவுடன் இணையும் திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கயாடு லோஹர், தனது பள்ளிப் பருவத்தில் நடந்த அதிர்ச்சிகரமான சம்பவம் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'நான் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது, வீட்டிற்கு அருகே இருந்த டியூஷன் வகுப்புக்கு செல்வது வழக்கம். அப்போது ஒரு பையன் என்னை தொடர்ந்து ஈவ்டீசிங் செய்தான். முதல் நாளில் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டாவது நாளும் அதேபோல் நடந்தது. ஆனால், மூன்றாவது முறையும் அவன் எல்லை மீறியபோது எனக்கு கடுமையான கோபம் வந்தது. அப்போது அருகில் இருந்த ஒரு பெரிய கல்லை எடுத்து அவனது தலையில் வீசினேன். அவனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டியது. அதன்பிறகு நான் அங்கிருந்து உடனே சென்றுவிட்டேன்', என்று தெரிவித்தார்.

மேலும், 'பார்ப்பதற்கு நான் மிகவும் அமைதியானவளாகத் தோன்றலாம். ஆனால், யாராவது தவறு செய்தால் அமைதியாக இருக்கக் கூடாது. அதற்கு எதிர்த்து நிற்க வேண்டும்; தேவையானால் திருப்பி அடிக்கவும் வேண்டும்', என்று கயாடு லோஹர் கூறியுள்ளார்.

நடிகையின் இந்த வெளிப்படையான பேச்சு தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி, ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

# 'பதவி மட்டும் மாறியுள்ளது; விஜய் மாறவில்லை' - விஷால் நெகிழ்ச்சி பேச்சு

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான நடிகர் விஷால், தற்போது 'மகுடம்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் துஷாரா விஜயன் கதாநாயகியாக நடிக்க, நடிகை அஞ்சலி முக்கிய கதாபாத்திரத்தில் இடம்பெற்றுள்ளார். ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கும் இந்த திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இயக்குநர் ரவி அரசு இயக்கத்தில் தொடங்கப்பட்ட இந்த படத்தின் படப்பிடிப்பின்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், பின்னர் படத்தின் இயக்கப் பொறுப்பை நடிகர் விஷால் ஏற்று, இயக்கியும் நடித்தும் முடித்துள்ளார். தற்போது இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வரும் நிலையில், படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் விஷால், தமிழக முதல்-அமைச்சர் விஜய் குறித்து மனம் திறந்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், 'கல்லூரி காலத்தில் பார்த்த அதே விஜய்தான் இப்போதும் இருக்கிறார். பதவி மட்டும் மாறியுள்ளது. அவரை நான் இன்னும் 'டார்லிங்' என்றே அழைக்கிறேன்.

அவரை சந்திக்கும்போது பூங்கொத்து கொடுப்பதற்கு பதிலாக, அவரது பெயரில் மூன்று குழந்தைகளின் கல்விச் செலவை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தேன். அதைக் கேட்டு அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்' என்றார்.

மேலும், 'இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முதல்வர் விஜய்க்கு ஒரு கதையை சொல்ல நேரம் கேட்டிருந்தேன். தற்போது அந்தக் கதையை நானே திரைப்படமாக பயன்படுத்தப் போகிறேன் என்று சொன்னதும் அவர் சிரித்தார்' என்றும் விஷால் பகிர்ந்தார்.

விஷாலின் இந்த பேச்சு சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வரும் நிலையில், ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றுள்ளது.




Paul Healthy Life Clinic
HOMEOPATHY & ACUPUNCTURE

Paul Joseph, B.H.M.S.(India), R.Ac., R.Hom(Canada)
(Bachelor of Homeopathic Medicine and Surgery)

1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com

- Qualified from Tamil Nadu Dr. M.G.R. Medical University, Madras, India.
- Registered Acupuncturist (Canada)
- Former Professor - Homeopathy Medical Colleges, Dr. M. G. R. Medical University, India
- Head of Department - Homeopathy & Acupuncture, Shanmuga Medical Research Foundation, India
- Twenty five years of experience in the field of medicine
- Specialist in Homeopathy Medicine, Acupuncture, Pulse Diagnosis, Acupressure, Scientific Meditation, Yoga and Counselling

Treatment for all chronic diseases


1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com

# ஐஸ்வர்யா ராஜேஷின் "ஓ சுகுமாரி" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




ஐஸ்வர்யா ராஜேஷின் 'ஓ சுகுமாரி' படம் வரும் ஜூலை 17ம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் ஐஸ்வர்யா ராஜேஷ். இவர் 'காக்கா முட்டை, தர்மதுரை, ரம்மி, கனா, சாமி 2, வடசென்னை, டிரைவர் ஜமுனா, பர்ஹானா, தீராக் காதல்' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'தீயவர் குலை நடுங்க' படம் வெளியானது. அர்ஜூன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்த இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. தற்போது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்து வருகிறார்.

நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், பரத் தர்ஷனின் இயக்கத்தில் 'ஓ சுகுமாரி' படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை கங்கா எண்டர்டெயின்மென்ட்ஸ் நிறுவனத் தின் கீழ் மகேஸ்வர ரெட்டி மூலி தயாரிக்கிறார். இதில் இளம் நடிகர் திருவீர் நாயகனாக நடிக்கிறார். இப்படம் தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னட மொழிகளில் வெளியாக இருக்கிறது.இதில் ஜான்சி, விஷ்ணு ஓ லட்டு , ஆமணி, முரளிதர் , ஆனந்த், அஞ்சிமாமா, சிவானந்த், கோட்டா ஜெயராம், கவிரெட்டி ஸ்ரீனிவாஸ் உள்பட பலர் நடிக்கின்றனர்.

ஐஸ்வர்யா ராஜேஷின் பிறந்த நாளை முன்னிட்டு, அவருடைய பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது. இதில் அவர் தாமினி என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். கிராமத்து பின்னணியில் உருவாகும் இப்படத்துக்கு சி.ஹெச்.குஷேந்தர் ஒளிப்பதிவு செய்கிறார். பரத் மஞ்சி ராஜூ இசை அமைக்கிறார். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய 5 மொழிகளில் வெளியாகவிருக்கிறது

'ஓ சுகுமாரி' படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக படக்குழு சமீபத்தில் அறிவித்திருந்தது. இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 'ஓ சுகுமாரி' படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. இப்படம் வரும் ஜூலை 17ம் தேதி வெளியாகவுள்ளது.

# இதுல நீங்க என்ன செய்வீங்கன்னு சொல்லுங்க.. உங்களிடம் மறைந்திருக்கும் குணத்தை சொல்றோம்..

நாம் ஒவ்வொருவருமே ஒவ்வொரு குணாதிசயங்களுடன் வேறுபட்டிருப்போம். இந்த குணாதிசயங்களை பல சுவாரஸ்யமான ஆளுமை சோதனைகளின் மூலம் அறியலாம். இப்படி ஒருவரது குணாதிசயங்களை பற்றி தெரியப்படுத்தும் பல்வேறு ஆளுமை சோதனை படங்கள் இணையத்தில் ஏராளமாக உலா வருகின்றன. அப்படி ஒருவரது மறைந்திருக்கும் ஆளுமையை வெளிப்படுத்தும் ஒரு போட்டோ தான் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த படத்தில் ஒரு அழகான நீல நிற கடற்கரையில் 4 விதமான உணர்வுகளை வெளிப்படுத்தும் நபர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் நீங்கள் எந்த மாதிரியான நபர் என்பதை கூறுங்கள். முக்கியமாக ஆழமாக யோசிக்காமல், பார்த்ததும் உங்களுக்கு எப்படிப்பட்ட உணர்வு ஏற்பட்டது என்பதன் அடிப்படையில் நொடியில் தேர்ந்தெடுக்க வேண்டும். அது உங்களின் மறைந்திருக்கும் ஆளுமையைப் பற்றி தெரியப்படுத்தும்.

இது ஒரு அறிவியல் பூர்வமான மதிப்பீடு அல்ல என்றாலும், இது உங்கள் ஆளுமையை அறிய உதவும் ஒரு வேடிக்கையான ஆழ்மனச் சோதனையாகும். இதன் மூலம், நீங்கள் புதிய அனுபவங்கள், உணர்ச்சிகள் மற்றும் வாய்ப்புகளை இயல்பாக எவ்வாறு அணுகுகிறீர்கள் என்பதை வெளிப்படுத்தக்கூடும்.




1. அலைகளை நோக்கி ஓடுவது

நீங்கள் கடற்கரைக்கு சென்றதும், அலையை நோக்கி ஓடுபவரானால், நீங்கள் புதிய வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டு, செயலில் இறங்குவதன் மூலம் கற்றுக்கொள்ளும் ஒரு நபர் என்று இந்த ஆழ்மன சோதனை ஆளுமை சுட்டிக்காட்டுகிறது. என்ன நடக்கிறது என்று நீங்கள் சிந்திக்கவோ அல்லது அது அர்த்தமுள்ளதா என்று கேள்வி எழுப்பவோ இல்லை. நீங்கள் வாழ்க்கையை ஆர்வத்துடனும் தைரியத்துடனும் அணுக முனைகிறீர்கள். மேலும், எல்லா பதில்களும் உங்களுக்குக் கிடைப்பதற்கு முன்பே, ஒரு விஷயத்தை செய்ய நீங்கள் பெரும்பாலும் தயாராக இருப்பீர்கள்.

2. அசையாமல் நீரில் நின்று கொண்டிருப்பது

நீங்கள் நீரில் அசையாமல் நின்று கொள்ள விரும்புபவரானால், நீங்கள் யதார்த்தமானவர், ஆழ்ந்து சிந்திப்பவர், மேலும் வாழ்க்கையை அதன் போக்கில் செல்வதை இயல்பாக ஏற்றுக் கொள்பவர். மேலும் நீங்கள் நிகழ்காலத்தில் அக்கறை கொண்டவராக இருப்பீர்கள். மற்றவர்கள் அவசரமாக முன்னேறிச் செல்லும் போது தவறவிடும் விஷயங்களை நீங்கள் காண்பீர்கள். உங்கள் அசைவின்மை என்பது தயக்கம் அல்ல; அது விழிப்புணர்வு.

3. உட்கார்ந்து நீரில் விளையாடுதல்

நீங்கள் கடற்கரை நீரில் உட்கார்ந்து விளையாட விரும்புபவரானால், நீங்கள் படைப்பாற்றல் மிக்கவராகவும், உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன் கொண்டவராகவும் இருப்பீர்கள். நீங்கள் ஒரு விஷயத்தை அனுபவிக்கும்போது, உங்கள் சொந்தக் கண்ணோட்டத்தையும் அதில் சேர்க்காமல் இருப்பது அரிது. அனுபவங்களுக்குப் பொருள் காணும் ஒரு தனித் திறமை உங்களிடம் உள்ளது. நீங்கள் வாழ்க்கையை ஒரு செயலற்ற அனுபவமாகப் பார்க்காமல், ஒரு கூட்டு முயற்சியாகப் பார்க்கிறீர்கள்.

4. கரையில் அமர்ந்து அலைகளை பார்ப்பது

நீங்கள் கடற்கரையில் அமர்ந்து அலைகளை பார்ப்பதை தேர்ந்தெடுத்திருந்தால், நீங்கள் சிந்தனைமிக்கவர், பொறுமையானவர், மேலும் உங்கள் சுற்றுப்புறத்தைப் பற்றி மிகுந்த விழிப்புணர்வு கொண்டவர். நீங்கள் உங்கள் உள்ளுணர்வை நம்புகிறீர்கள், தொலைநோக்குப் பார்வைக்கு மதிப்பளிப்பீர்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் உடனடிப் பதில் தேவையில்லை என்பதையும் புரிந்து நடப்பீர்கள்.


**உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!**




# DNA பரிசோதனை மூலம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு குடும்பத்துடன் இணைந்த மாற்றுத்திறனாளி

## உலக செய்திகள்

சீனாவில் 35 வருடங்களுக்கு முன்பு தொலைந்த மாற்றுத்திறனாளி வாலிபர் டிஎன்ஏ பரிசோதனை மூலம் குடும்பத்துடன் இணைந்தார்.

சீனாவின் ஹெநான் மாகாணத்தைச் சேர்ந்த சிறுவன் லீ ஸெக்கிங் (வயது 4) . இந்த சிறுவன் வாய் பேசவும், காது கேட்கவும் முடியாத மாற்றுத்திறனாளி. லீ ஸெக்கிங் கடந்த 1991 ஆம் ஆண்டு தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது விளையாட்டாக அங்கு நின்று கொண்டிருந்த ஒரு ரெயிலில் ஏறியுள்ளார்.

ரெயிலின் உள்ளே சென்று ஒரு இருக்கைக்கு அடியில் ஒழிந்து கொண்டு படுத்த சிறுவன் அங்கேயே அயர்ந்து தூங்கிவிட்டான். பின்னர்



அந்த சிறுவன் கண் விழித்துப் பார்த்தபோது வேறு புதிய இடத்திற்குச் சென்றிருந்தான்.

லீ வாய் பேசவும், காது கேட்கவும் முடியாத மாற்றுத்திறனாளி என்பதால், அவனால் தனது ஊர் மற்றும் பெற்றோர் விபரங்களை யாரிடமும் கூற முடியவில்லை. இதனைத் தொடர்ந்து ஷென்சென் நகருக்குச் சென்ற அவனை, அங்குள்ள ஒரு உணவக உரிமையாளர் தத்தெடுத்து வளர்த்துள்ளார் .

லீ ஸெக்கிங்கிற்கு சிறுவயதிலிருந்தே தனது பெயரை தலைகீழாக எழுதும் ஒரு தனித்துவமான பழக்கம் இருந்தது. 35 ஆண்டுகள் கழித்து, தனது குடும்பத்தைத் தேடும் முயற்சியாக இணையத்தில் ஒரு தகவலைப் பகிர்ந்திருந்தார். அதே நேரத்தில் அவரது குடும்பத்தினரும் அவரை பல வருடங்களாகத் தேடி வந்தனர்.

இணையத்தில் லீ பதிவிட்ட செய்தியையும், அவர் பெயரை தலைகீழாக எழுதியிருந்த விசித்திரமான பழக்கத்தையும் அவரது சகோதரர் தற்செயலாகக் கவனித்து, அது தனது தம்பிதான் என்பதை அடையாளம் கண்டுகொண்டார்.

உடனடியாக காவல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டது. அதில் அவர் லீ ஸெக்கிங் என்பது 100% உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து ஜூன் 11 அன்று ஷென்சென் நகரில், தனது தந்தை, சகோதரர் மற்றும் சகோதரியை லீ நேரில் சந்தித்தார்.

காணாமல் போய் 35 வருடங்களுக்குப் பிறகு மகன் நேரில் வந்ததைக் கண்டு அவரது தந்தை கண்ணீர் விட்டு அழுத காட்சி அங்கிருந்தவர்களை நெகிழச் செய்தது.

# வாட்ஸ் அப்பில் புது வசதி..இனி போன் நம்பர் தேவையில்லை.. யூசர்நேம் போதும்



சமூக வலைத்தளங்களில் முன்னணி வகிக்கும் செயலியாக வாட்ஸ் அப் உள்ளது. வாட்ஸ் அப் பயன்படுத்தாத ஸ்மார்ட் போன் யூசர்களே இல்லை என சொல்லும் அளவிற்கு தற்போது அதன் பயன்பாடு அதிகரித்துள்ளது.

இந்தியாவில் மட்டும் 50 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வாட்ஸ் அப் பயன்படுத்தி வருகிறார்கள். வாட்ஸ் அப் நிறுவனம் சந்தையில் போட்டியை சமாளிக்கவும் பயனர்களை தக்க வைக்கவும் அவ்வப்போது புதிய அப்டேட்களை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் பயனர்கள் நீண்ட காலம் எதிர்பார்த்த ஒரு அப்டேட் வெளியாகியுள்ளது. அதாவது வாட்ஸ் அப்பில், இனி போன் நம்பர் இல்லாமல் யூசர் நேம் வைத்தே பயன்படுத்தலாம். பயனர்களின் தனிப்பட்ட விவரங்களை பாதுகாக்கும் வகையில் இந்த வசதி அறிமுகம் ஆக உள்ளது.

இந்த வாரத்தில் இருந்தே பயனர்கள் விருப்பமான பெயர்களை முன்பதிவு செய்யலாம் என்றாலும், இந்த வருட இறுதிக்குள் அனைத்து பயனர்களுக்கும் இந்த வசதி செயல்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாட்ஸ் அப்பில் Settings > Account > Username வழியாக பெயரை ரிசர்வ் செய்யலாம். இந்த புதிய அம்சம் அறிமுகமான பிறகு, பயனர் பயனர்பெயர் (Username) வசதியை பயனர் பயன்படுத்தியிருந்தால், முதல் முறையாக யாராவது செய்தி அனுப்பும்போது பயனரின் தொலைபேசி எண் மற்றவர்களுக்கு தெரியாது. பயனர்களின் தனியுரிமையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வாட்ஸ்அப் கொண்டு வரவுள்ள புதிய அம்சமாக இது கருதப்படுகிறது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

**Dear Brothers n Sisters**
Daily Verses
(FREE - FREE - FREE)
Daily Verses (PAID)
old b/w photo to colour restoration
Digital Invitation, logo design, logo animation, title animation, video editing, youtube - thumbnails, meeting posters, web design
magazine (tamil)
english tamil translation
proof reading
Pls introduce any of ur well known pastors and churches.
**9944796286**



# பலமுறை தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டவர் வைகோ: ஆர்.எஸ்.பாரதி தாக்கு

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:

நான் வைகோவைப் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. அரசியலில் அவர் ஒரு முக்கியத்துவம் இல்லாத நபர். வைகோவின் பேச்சை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அவர் என்ன சொன்னாலும், நாளை காலையிலேயே தன் கருத்தை மாற்றிக்கொள்ளக்கூடும். திமுக அரசுதான் சிறந்த அரசு என்று அவர் சொல்லக்கூடும்.

அவருடைய அரசியல் வரலாற்றைப் பார்த்தால், அவர் பலமுறை தன் நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறார்.

இன்று அவர் இப்படிப் பேசியிருக்கிறார்; பொறுத்திருந்து பாருங்கள், நாளை அவர் தன் நிலைப்பாட்டை மாற்றி, திமுக அரசை, குறிப்பாக ஸ்டாலின் அரசைப் புகழ்வார்.

தமிழக முதலமைச்சர் விஜய் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து ஏற்கெனவே அவரிடம் பேசிக்கொண்டிருந்தார். அந்த இரு சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கு செல்லவில்லை. அதனால் விரக்தியின் காரணமாக நாளை அவர் ஸ்டாலின்தான் சிறந்த தலைவர் என்று சொல்லக்கூடும் என தெரிவித்தார்.

முன்னதாக, செங்கல்பட்டில்



மதிமுக பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்களிடம் பேசுகையில், 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் அனைத்திலும் கட்டிங்... கமிஷன்... கரப்ஷன் என கூறினார். கூட்டணியில் இருந்தபோது ஏன் எதிர்த்துப் பேசவில்லை என கேள்வி எழுப்பிய நிருபரிடம், கூட்டணியில் இருந்துகொண்டே எப்படி எதிர்ப்பது என வைகோ கூட்டணி தர்மம் குறித்து விளக்கினார்.




## தமிழக செய்திகள்

# ‘மேகதாது அணை தடுப்போம், காவிரி காப்போம்’ – அன்புமணி விழிப்புணர்வு பயணம்

கர்நாடக அரசு முன்மொழிந்துள்ள மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, ‘மேகதாது அணை தடுப்போம்! காவிரி காப்போம்!’ என்ற முழக்கத்துடன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி., ஜூலை 1 முதல் 4-ஆம் தேதி வரை பிலிகுண்டுலு முதல் பூம்புகார் வரை நான்கு நாள் விழிப்புணர்வு பரப்புரை பயணத்தை மேற்கொள்கிறார்.

காவிரி ஆறு தமிழ்நாட்டில் நுழையும் இடமான பிலிகுண்டுலுவில் (ஜூலை 1-ந் தேதி) காலை 10 மணிக்கு அன்புமணி காவிரி ஆற்றை பார்வையிடுகிறார். அதனைத் தொடர்ந்து காலை



11 மணிக்கு ஒகேனக்கல்லில் விழிப்புணர்வு பயணத்தை தொடங்கி, நண்பகல் 12 மணிக்கு பென்னாகரம் பஸ் நிலையம் அருகே துண்டுப் பிரசுரங்களை வழங்கி, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

மாலை 4 மணிக்கு தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்காவில் இருந்து பி.எஸ்.என்.எல். அலுவலகம் வரை விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கியபடி பேரணியாக சென்று, பின்னர் நடைபெறும் பரப்புரை கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் உரையாற்ற உள்ளார்.

மேகதாது அணைத் திட்டத்தை தடுத்து, காவிரி நதியின் நீர்வரத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் இந்த நான்கு நாள் விழிப்புணர்வு பயணம் நடைபெறுகிறது.











## உக்ரைன் போரின் தாக்கம் பறவைகளுக்கும்: பைபர்-ஆப்டிக் கேபிள்களால் கூடுகட்டும் அவலம்



உக்ரைனில் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் போர், மனிதர்களின் வாழ்க்கையை மட்டுமல்லாமல், அங்குள்ள பறவைகளின் இயற்கை வாழ்விடத்தையும் பாதித்திருப்பதாக புதிய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

போர் தீவிரமாக நடைபெற்று வரும் பகுதிகளில் இருக்கும் இரண்டு பறவை கூடுகளை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், அவை புல் மற்றும் பைபர்-ஆப்டிக் கேபிள்களைக் கொண்டு கட்டப்பட்டிருப்பதை கண்டறிந்துள்ளனர்.

மின்னணு ஜாமிங் (Electronic Jamming) தாக்கத்திலிருந்து தப்பிக்கும் வகையில், வான்வழி தாக்குதல் டிரோன்களை இயக்குவதற்காக உக்ரைன் மற்றும் ரஷ்ய ராணுவங்கள் பைபர்-ஆப்டிக் கேபிள்களை பரவலாக பயன்படுத்தி வருகின்றன. போரின் போது அறுந்து சிதறிக் கிடக்கும் இந்த கேபிள்களையே பறவைகள் தற்போது கூடுகட்டும் பொருட்களாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

இது, போரால் இயற்கைச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், சுற்றுச்சூழல் அமைப்பில் உருவாகி வரும் பாதிப்புகளையும் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். போர் மனித உயிர்களையும் கட்டமைப்புகளையும் மட்டுமின்றி, வனவிலங்குகள் மற்றும் பறவைகளின் இயற்கையான வாழ்வியலையும் மாற்றி வருவது கவலைக்குரியதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.


உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!


## ஹிஸ்புல்லா அச்சுறுத்தல் இருக்கும் வரை லெபனானில் இஸ்ரேல் ராணுவமும் இருக்கும்: நெதன்யாகு

லெபனானில் ஹிஸ்புல்லா அச்சுறுத்தல் இருக்கும் வரை இஸ்ரேல் ராணுவமும் இருக்கும் என நெதன்யாகு கூறினார்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, தெற்கு லெபனானில் பாதுகாப்பு மண்டல பகுதிக்கு சென்று பார்வையிட்டார். அப்போது அவர் வீரர்களிடம் கூறும்போது, லெபனானில் நீங்கள் மிக பெரிய வேலையை செய்திருக்கிறீர்கள். நீங்கள் பாதுகாப்பு மண்டல பகுதிகளை உருவாக்கி உள்ளீர்கள் என்றார்.

அதுவும் நம்முடைய பகுதியில் அல்ல. அவர்களுடைய பகுதியில். லெபனானில் நாம் இதனை செய்து வருகிறோம். கடந்த காலங்களில் காசாவிலும் இதனை செய்தோம் என கூறினார். நம்முடைய எல்லை பகுதியில் பயங்கரவாத ராணுவம் இருப்பதற்கு நாம் அனுமதிப்பது இல்லை என்பதே இதற்கு அர்த்தம். அவர்களை நாம் வெளியேற்றி வருகிறோம். அதனையே நீங்கள் செய்து வருகிறீர்கள் என்றார்.

லெபனானில், ஆயுதங்களுடன் ஹிஸ்புல்லா அமைப்பின் அச்சுறுத்தல் நமக்கு இருக்கும் வரை இஸ்ரேல் ராணுவமும் இருக்கும்.



அந்த அச்சுறுத்தல் நீக்கப்படும் வரை நாம் தெற்கு லெபனானை விட்டு செல்லமாட்டோம் என்றும் நெதன்யாகு கூறினார்.



# ஜூலை 1 முதல் ஆதாரில் மின்னஞ்சல் முகவரியை இலவசமாக புதுப்பிக்கலாம்



ஜூலை 1 முதல் ஆதாரில் மின்னஞ்சல் முகவரியை இலவசமாக புதுப்பிக்கலாம். பொதுமக்களின் டிஜிட்டல் தேவைகளை எளிதாக்கும் வகையில், இந்திய தனித்துவ அடையாள ஆணையம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது:-

இனி பொதுமக்கள் தங்களது ஆதார் அட்டையில் மின்னஞ்சல் முகவரியை புதுப்பிக்க எந்தவொரு கட்டணமும் செலுத்த தேவையில்லை. வழக்கமாக இதற்காக வசூலிக்கப்படும் ரூ. 75 சேவைக்கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு சலுகை நாளை (ஜூலை 1, 2026) முதல் நடைமுறைக்கு வருகிறது. வரும் டிசம்பர் 31, 2026 வரை, அதாவது அடுத்த 6 மாத காலத்திற்கு பொதுமக்கள் இந்த இலவச சேவையை பயன்படுத்தி கொள்ளலாம். செயலியை பதிவிறக்கம் செய்ய, கூகுள் ப்ளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோரை பார்வையிடலாம். பயனர் தங்களுக்கு விருப்பமான மொழியை தேர்ந்தெடுத்து, கைபேசி எண்ணை உள்ளிட்டு, OTP-ஐ சரிபார்த்து, முக அங்கீகாரத்தை நிறைவு செய்ய வேண்டும்.

இந்த இலவச சலுகை, புதிதாக மேம்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ ஆதார் மொபைல் செயலி மூலம் ஆன்லைனில் புதுப்பிப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும். நீங்கள் நேரடியாக ஆதார் சேவை மையங்களுக்கு சென்றால் வழக்கமான கட்டணம் வசூலிக்கப்படும்.

டிஜிட்டல் இந்தியாவில் போலி மோசடிகளை தவிர்க்கவும், ஆன்லைன் சேவைகளை பாதுகாப்பாக பெறவும் ஆதாரில் மின்னஞ்சலை இணைப்பது முக்கியம் ஆகும். எனவே, தேவையற்ற சேவைக்கட்டணத்தை தவிர்க்க, இந்த 6 மாத கால இலவச வாய்ப்பை பயன்படுத்தி, பொதுமக்கள் தங்களது புதிய ஆதார் செயலியில் மின்னஞ்சல் முகவரியை உடனே புதுப்பித்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.



நம் அனைவரது அன்பிற்குரிய போதகர் Rev. S.அருமைநாயகம் (எம் ஜி ஆர் நகர் சென்னை) கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார் என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




**Kathiroli Marriage Matches!**

We are here to help your children's for finding out the correct matches. So far thousands of couples joined through our Kathiroli Marriage Match bureau. For more information and the Application, please contact our coordinator @

Managing Director.

Kathiroli Media Inc.

Call: 647-473-9698, 437-833-4304

# இந்திய செய்திகள்



## நூதன முறையில் 15 கிலோ வெளிநாட்டு தங்கம் கடத்தல்; பறிமுதல் செய்த ஆர்.ஐ. இயக்குநரகம்

இந்தியாவுக்கு நூதன முறையில் கடத்தப்பட்ட 15 கிலோ வெளிநாட்டு தங்கம், ஆர்.ஐ. இயக்குநரக அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

தாய்லாந்தில் இருந்து டெல்லிக்கு 15 கிலோ எடை கொண்ட தங்கம் நூதன முறையில் கடத்தப்பட்டு உள்ளது. இதுபற்றி நிதி அமைச்சகம் வெளியிட்ட தகவலில், வருவாய் நுண்ணறிவு (ஆர்.ஐ.) இயக்குநரக அதிகாரிகள், தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் டெல்லியில் உள்ள வெளிநாட்டு பார்சல் முனையத்தில் அதிரடி சோதனை நடத்தினர்.

அதில், தாய்லாந்து நாட்டில் இருந்து இந்தியாவுக்கு வந்திருந்த ஒரு பார்சலை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்தனர். வெளிநாட்டு நபர் ஒருவருடைய நிறுவனத்தின் பெயரில் வந்திருந்த அந்த பார்சலில், இயந்திர பாகங்கள் வடிவில் 8 துண்டுகள் இருந்தன.

அதனை பரிசோதித்து பார்த்ததில், தலா 1.5 கிலோ எடை கொண்ட மொத்தம் 12 கிலோ வெளிநாட்டு தங்கம் கடத்தப்பட்டு இருப்பது தெரிய வந்தது. அவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர். தொடர்ந்து, அதனை வாங்க காத்திருந்த நபரை கண்டறிந்து அவருடைய வீட்டில் நடந்த சோதனையில் இதேபோன்று 2 வட்ட வடிவ துண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவை தலா 1.5 கிலோ எடை கொண்டிருந்தன.

இதனால், டெல்லிக்கு 15 கிலோ எடை கொண்ட தங்கம் நூதன முறையில் கடத்தப்பட்டு உள்ளது கண்டறியப்பட்டது. இதில், தொடர் குற்றத்தில் ஈடுபட்ட முக்கிய புள்ளியான வெளிநாட்டு நபர் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்தனர். இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!



# கதிர் ஒளி திருமண சேவை!



*Nancy Divya*

**Manager - Systems Engineering**

Works for an Automotive Company in Whitefield, Bangalore as a Manager in Systems Engineering.

**Personal Details :**

Date of Birth : Aug 17, 1991
Height : 153 cm (5' 2'')
Education : B.E. in ECE (Government College of Engineering, Tirunelveli)
MBA in Technology Management (Alagappa University)
Complexion : Wheatish
Native Place : Tirunelveli, Tamil Nadu

**Professional Details :**

Organization : Bluebinaries Engineering and Solutions Pvt. Ltd.
Designation : Manager - Systems Engineering
Salary : Around INR 1,70,000 per month
Workplace : Bangalore, Karnataka

**Family Details :**

Father : Mr. Ebenezer Livingston Sundersingh
Father's Occupation : Canara Bank Employee (Retired)
Mother : Mrs. Esther Cynthia
Caste : Christian Nadar
Father's Contact Number : + 91 94420 17290



## P. PREM KUMAR

PARENTS: M. Pannerselvam - P. Sundari
DOB: 29.12.1997 (27 Years Old)
QUALIFICATION: BSc.Computer Science
OCCUPATION: MBS HATCHERIES, PANANGUDI BRANCH
Marketing Incharge : Rs. 35,000 - per month
SIBLINGS: One Elder Sister - Married
ADDRESS: 2/38, Kamatchiamman Kovil Street, Seelakkampatti, Pollachi
Contact: M. Pannerselvam
+917373079977, +919095925271



K.Kishore Kumar

| | |
|---|---|
| Date of Birth | 22.05.1997 |
| Age | 28 years |
| Height | 172 cm |
| Religion | R.C. Christian |
| Caste | Sozhia Vellalar |

Educational Qualification

M.E (Manufacturing Engineering)

Professional Details

| | |
|---|---|
| Job | Enventure Engineering |
| Designation | Production Lead |

Contact & Address

| | |
|---|---|
| Mobile | 9976842291 |



Venkatesh

Age: 25
Date of Birth: 26-08-1999
place of birth: Andhra Pradesh (present-thirumullaivoyal)
Contact Number: 9361205807
Email: vr135793@gmail.com
Height: 5.3
Weight: 62
Father's Name: Ramarao.G
Occupation: Agriculture farming
Number : +918885838817



Rajesh

DOB : 03/03/1988
Blood Group : A+
Height : 4.8 ft
Weight : 68
Education : M.com
Occupation : Paytm service. sales officer
Contact :
9944058063



Jebastin. S

Msc Medical Biochemistry
Current job Title : college lecturer
Annual income: 6-7Lpa
Age : 25/07/1997
Religion :Christian
Expectations- seeking a god Fearing believer.



SANDHIYA

Name... S. Sandhiya

Education: B.E.and M.E
Religion....,...Christian
Caste...... Arunthathiyar(SCA)
DOB............06.05.2000
Pastor Name:- F. D. Collins, Athipatty
Father Name:- sakthivel
Mother Name:- santhi
Siblings: two younger sister(unmarried)
Address:- Peraiyur TK Madurai DT
Contact:- 9585222274 ,9626973171



S.Sowmya

Dob : 01-08-1997
Qualification : B.Tech
Religion : Christian
Status : Upper Middle Class
Designation : Senior Software Analyst
Salary : 6LPA
G.D.Nellore, Chittoor 517125
Contact : 9182524971



ELSON

DOB : 12/10/1996
Height : 5'11" ft
Profile Created by : Self
Education : BCA SRM College Chennai, Diploma In Game Design YTS Coimbatore
Occupation : 3D Generalist in MNC (R.R.Donnelley Chennai)
Income : 5.4 Lakhs / Annum (2.5 Lakhs + 2.9 Lakhs House Rent)
Marital Status : Divorced, No Children

OTHER DETAILS
Property : 2 Houses (Chennai) 1 House (Nagercoil)
Contact : 9488351006 (Father Number)



DR.P.A.CHARISHMA MARILIN

NAME Dr. P. A. CHARISHMA MARILIN
AGE 27
DATE OF BIRTH 12.08.1995
HEIGHT 5' 2"
COMPLEXION Dusky
EDUCATION B.D.S
PROFESSION Dentist

Contact
PHONE 9840812266, 9840708382

Church Information
PASTOR'S NAME Pastor Jay
CHURCH NAME The Ark Victory Church, Chennai



P.Prem Kumar

DOB :- 29.12.1997(28Years)
Qualification :- Bsc Computer science , Occupation :- Marketing Incharge, (MBS HATCHERIES, Panagudi)
Salary :- 35000 (per month)
Religion :- Chirstian (Spritual Church)
Address:- SeelakkamPatti,Pollachi
Ph:- 7373079977
9095925271



ROHINI SELVARAJ

Name :ROHINI SELVARAJ
Date of birth :14.12.1998
Age :25
Height :153cm
Qualification :B.E ( Production Engineering))
Gender :Female
Marital-status :Unmarried
activities.
Address : POLLACHI, COIMBATORE
Expectation : SPIRITUAL EDUCATED CARING PERSON WITH GOOD JOB



PRAKASH A

DOB :- 28 . 10 . 1989
Height :- 5.6 Inch
Weight :- 75kg
Occupation :- Supervisor In TOYTA SHOWROOM (Painting Department)
Income :- 25k To 30k

**Family Details**
Father Name :- Anthony (Late)
Mother Name :- G Theresa (Late)
Brother :- 2 Married
Sister :- 1 married

**Other Details**
Address :- Patel Muniyappa Layout 5th Cross V Nagenahalli Bangalore - 560032
Contact :- 9341988794



JEHONA

Date of Brith: 04.05.2000
Father name: Rev.M.J.Rethinaraj (late)
Basic Information:
Height: 155 cm
Mother tongue: Tamil
Complexion: Fair
Cell: 9884857743, 9442629128



MEGALDON JASPER

DOB :- 15/10/1998
Height :- 6.Ft
Education :- B.E, M.B.A
Occupation :- Software Engineer
Company Name :- Integra Micro System (IT)
Salary :- 70k

**Family Details**
Father Name :- J.Kaicer Joseph
Occupation :- Business
Mother Name :- K.Subaitha Kaicer
Occupation :- Home Maker
Brother :- K.Sheltton Welfer
Education :- B.A , VFX (Film Making)

**Others**
Address :- Bangalore, Karnataka
Contact :- 76769 89355



ASHA KARUNAKARAN

ate of Birth : 29 SEPT 1986 – 38 years
iender : Female
larital Status : Unmarried
lother Tongue : Tamil
anguages Known : Tamil, Kannada, English, Hind
eligion : Born again Christian – Pentecostal with Jewels.
amily Members : Father, Brother & Sister in Law (Father and Brother not Saved)
iblings : 1 Brother Married - Business
hurch : Mount Zion Pentecostal Church – Usloor Bangalore
ducational Qualification : M. Com, B.com DCP – Diploma in Commerce
resent Job and place: : Not Working, Looking for a better career prospects.
leight : 5ft
Height : 5ft
Native : Jolarpet, Vellore Dist. TamilNadu
Address : RT Nagar, Bangalore
Contact Number : 7406532464

# கதிர் ஒளி திருமண சேவை!



## ஆதிதான் பிள்ளை என்ற மைக்கள்

பிறந்த தேதி : 30-05-1984, வயது : 40, படிப்பு : 12, வேலை : கார் இன்ஜினியர், மாதம் சம்பளம் : RM.1800-00, அவரது கூட பிறந்தவர்கள் : 2 பேர், வீடு இருக்கிறது. கார் இருக்கிறது. தந்தை பெயர்: டாக்டர் பி.எஸ். கிருஷ்ணன் பிள்ளை என்ற கிறிஸ்து பிள்ளை, வயது 66 பாஸ்டர், தாய் பெயர்: வனிதா வயது 60

**தொடர்புக்கு : 016 5242451**



## MuthuSelvi V

| | |
|---|---|
| Date of Birth | : 10.04.1998 |
| Birth Place | : Pattathur |
| Religion | : Christian |
| Caste | : Devendra Kula Velalar (Pallar) |
| Complexion | : Fair |
| Height | : 165 |
| Blood Group | : 'AB' Negative |
| Education | : B.Sc. Nursing |
| Occupation | : Saudi Arabia (Nurse) |

*FAMILY DETAILS:-*

| | |
|---|---|
| Father's Name | : Shanmugaiya.S |
| Father's Occupation | : Farmer |
| Mother's Name | : Suppammal.S |
| Siblings | : 2 sisters Married, 1 sister unmarried |

*CONTACT DETAILS:-*

| | |
|---|---|
| Residence | : No. 7B, colony 1st Street, Pattathur (PO Sankarnkovil (TK), Tenkasi (DT). |
| Contact Number | : 9750587969 |



M. RAJKUMAR

| | | |
|---|---|---|
| Name | : | M.RAJKUMAR |
| Age | : | 35 |
| Date of birth | : | 04.03.1990 |
| Gender | : | Male |
| Complexion | : | Average Brown |
| Language known | : | English and Tamil |
| Body type | : | Slim |
| Father occupation | : | Agriculture Business |
| Mather occupation | : | House Wife |
| Elder Sister & qualification | : | M.Saral. (Married) –House wife, M.Vimala.,B.Sc.,B.PED.,M.BA., marr professor |
| Expections | : | Good family girl and spritual family |
| Address | : | Radio station street, Arunakiripuram Idaikal post, Tenkasi,Tirunelveli Distric |
| Cell No | : | 9600952876. |



G. ROJAR

G.ROJAR //
06-04-1987 //
B.A--MBA.,//
175 Cm / Fair //
CSI // Nadar //
Expect--> Any Bc //
Any Church //
Pvt Nanager- Chennai //
2-Lakh--Per Month //
(9486240711)
F-Business // M-- HW //
1-->Y Sis Married//
Own House+Sites //
N+R-Thirupur Dt.
8:55 am



RAJESH @ PETER

**Personal Details**



| | |
|---|---|
| Name | :- RAJESH @ PETER |
| Caste | :- SC Adi Dravid |
| DOB | :- 30/10/1994 |
| Blood Group | :- O +ve |
| Height | :- 158 |
| Weight | :- 68 |
| Education | :- MBA |
| Occupation | :- EQUTAS FINANCE |
| Income | :- 3.5 LPA |
| Address | :- Nandhimangalam , UTHUKOTTAI, Thiruvallur District |
| Email | :- rajeshpeter1992@gmail.com |
| Contact | :- 8838067536 |



A.BENJAMIN

A.Benjamin //
10-06-1994 //
Fair // 168 Cm //
CSI // AD. PR //
DME // Private //
Sales Officer //
Sharjah--UAE //
24 Lakh--LPA //
(8825746542)
F--Private Job // M--HW //
1--E-Sis--Married //
Own House //
N+R--> Thirupur Dt.



DR INDU SELVARAJ

**Name: Dr Indu Selvaraj,**

**Educational Qualification & Experience: M.B.B.S. from Christian Medical College, Vellore.**

**Recipient of Certificates of Honour: In Pathology, Microbiology,**

**Contact Details Mobile: 7358689427, 9899985589.**

**E-mail : dr.indu.sraj@gmail.com**



Linda Philipraj

| | |
|---|---|
| Date Of Birth | February 24, 1998 |
| Time Of Birth | 03:30 AM |
| Place Of Birth | Trichy |
| Height | 5.9 |
| Occupation | Teacher |
| Education | MA B.Ed |
| Religion | Pentecostal Christian |

**Family Details**

| | |
|---|---|
| Father's Name | P. Philipraj |
| Father's Occupation | Painter |
| Mother's Name | V. Akila |
| Occupation | Home Maker |
| Siblings | One Younger Sister (Unmarried) |
| Sister's Name | P. Libina |
| Sister's Occupation | Junior Executive Digital Quality Assurance |

**Contact Details**

| | |
|---|---|
| Contact Person | Mother |
| Contact Number | 7598638370 |
| Residential Address | Kalakad, Tirunelveli |
| Church Name | Zion Prayer House |
| Pastor | S. Jacob Paul |



S.Raja Seviyar

| | |
|---|---|
| Father name | : T. Samuvel |
| Mother name | : S. Ruth selvi |
| D o birth | : 22.08.1992 |
| Age | : 34 |
| Education | : B. Sc,Zoology |
| Work | : Rise mile Accountant |
| Salary | : 25,000/ |
| Brother's | : 2 |
| Contact | : 9626931588, 6374014719 |



A.Edward Pradip Jova

| | |
|---|---|
| MARITAL STATUS | 22.08.1987 (37) |
| HEIGHT & WEIGHT | Single |
| COMPLEXION | 173cm(5' 7) & 68 Kgs |
| COMMUNITY | Indian Brown |
| MOTHER TONGUE | BC (Christian Valluvan) |
| EDUCATIONAL QUALIFICATION | Tamil |
| JOB | DGNM (RNRM -Male Nurse) , Diploma in Theology (Bible Studies) |
| WORKING PLACE | Nurse |
| SALARY | Saudi Arabia |
| LANGUAGE KNOWN | 80,000 per Month. |
| FAMILY DETAILS | Tamil, English |
| | Father: J. Abraham Wilson ( In our hearts and memories) |
| | Mother: A. Balamani |
| CHURCH | Sister: A. Jenifer Jeba Sheela, B.Com |
| PASTOR NAME | Brother: A. William Jeba Rajan, B.Com |
| DENOMINATION | Maranatha Church, Kattumannar Koil. Pr |
| SPIRITUAL STATUS | SR. Devanesan (9976866086) , |
| INTEREST | Pr Joshua Nesan (8778385299) |



M.Daniel Andrews

| | |
|---|---|
| Data of Birth | : 03.11.1997 |
| Gender | : Male |
| Religion | : Christian |
| Educational Qualification | : B.Com.,M.Com., |
| Working In | PVT Company, Trichy |
| Salary | : 25000/Month |
| Address | : 5/230,Anbu Nagar,Mattaiparaipatti, Manikandam ,Trichy -620 012 |

Contact no 6383345177 / 8428381717



M. Catherine Bright

09-09-2002, 23 yrs

5.3 feet (160 cm)

45 kg

Protestant(Independent church)

BC

M.A (Pursuing final year in Human Resource Management)

Wheatish

Student

Contact no 9789003234



## ShinyTrinita

27-190/4 Municipal Colony, Kajoor Chittoor - 517002

7013607381, 9866272852

rosesrobert7@gmail.com

23-04-1998

Water Baptized, Pentecostal

Tamil, Telugu, English

**About Shiny**

I am a Christ-centered, God-fearing believer with a heart anchored in prayer and faith. My greatest joy lies in walking closely with the Lord and waiting patiently on His perfect will. I believe every chapter of life unfolds according to His divine plan

I've completed my **Bachelor's Degree in Pharmacy (B.Pharm)** and pursuing my career **at CMC Vellore**, one of India's most reputed Christian institutions.

**Family in Christ**

Our family is based in **Chittoor**, where my parents have been faithfully ministering for many years. I am the youngest in the family and have been deeply shaped by our home of worship and Word.

- **Father:** *Rev. D. Robert* – Head Pastor overseeing multiple church branches across Chittoor District
- **Mother:** *Rachel Pushpa* – A faithful minister, intercessor, and homemaker, anchoring our home in prayer and the Word.
- **Elder Sister:** *Linda Blessy*, Physiotherapist at CMC Vellore
- **Brother-in-law:** *Allen Santhoshraj*, Charge Nurse at CMC Vellore
- **Elder Brother:** *Richard Rabboni*, Electronics Design Engineer in Bangalore
- **Sister-in-law:** *Joycie*, currently pursuing her Ph.D in Nuclear Medicine from South Korea

**Marriage Vision**

I believe marriage is a covenant of purpose and prayer. I'm waiting for a God-fearing, responsible man who values character, calling, and a Christ-centered home.



# இயேசு கேட்ட கேள்விகள்

கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? யோவான் 5 :44

பெதஸ்தா குளக்கரையில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் நோய் வாய்ப்பட்டிருக்கிறார் ஒருவர். குளத்தைத் தூதர்கள் கலக்கும்போது முதலில் நீரில் இறங்குபவர் நலம் பெறுவர். இவரோ குளத்தின் அருகே காவல் இருக்கிறார், ஆனால் தனியாய் குளத்தில் இறங்க முடியாது. இவரை யாரும் இறக்கி விடுவதும் இல்லை, இவருக்காக இரக்கம் கொண்டு யாரும் காத்திருப்பதும் இல்லை.

எல்லோரும் சுயநலப் படிக்கட்டு களில் தான் குடியிருக்கின்றனர். குளம் கலங்கியதும் சட்டென வேறொருவர் இறங்கி விடுகிறார். நலம் பெறுகிறார். இவரோ அடுத்த முறை குளம் கலங்கட்டுமென காத்திருக்கிறார்.

இப்படியே ஓடிவிட்டன முப்பத்தெட்டு ஆண்டுகள். வாழ்க்கையின் பெரும்பாலான பகுதியை படுக்கையிலேயே செலவிட்ட அவரை இயேசு சந்திக்கிறார். அவர் தூதர்களுக்காய் காத்திருக்கவில்லை. நலம் பெற விரும்புகிறீரா ? என நேரடியாய்க் கேட்கிறார். நலமளிக்கிறார். நலம் பெற்றவர் உற்சாகத்தின் உச்சாணியில் ஏறி பரவசத்தில் பறந்திருப்பார். இயேசுவோ, 'படுக்கையையும் எடுத்துக் கொண்டு நட' என்றார்.

இதுவரை அவனைச் சுமந்த படுக்கையை, இப்போது அவன் சுமக்கிறான். அது ஒரு ஓய்வு நாள் ! அங்கே தான் மதவாதிகளுக்குப் பிரச்சினை எழுகிறது. ஓய்வு நாளில் நீ எப்படி படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடக்கலாம் ? இது சட்ட விரோதம் என அவன் மீது பாய்கிறார்கள்.

நீண்ட நெடிய முப்பத்தெட்டு ஆண்டுகள் அவனுக்காய் வராத கரிசனை ! அவனுக்காய் எழாத இரக்கம் ! சட்டத்துக்காய் வருகிறது. மனிதனின் ஊனம் ஒரு பொருட்டல்ல, ஆனால் சட்டம் கொஞ்சம் மீறப்படுவது தான் அவர்களுக்குப் பிரச்சினையாய் இருக்கிறது !

அவனை நலமாக்கியவர் இயேசு என்பதை அறிந்த யூதர்கள் இயேசுவின் மீது கோபத்தைத் திருப்பினார்கள். இயேசு அவர்களுடைய போலித்தனத்தைப் பார்த்தார். சட்டங் களைப் பிடித்துக் கொண்டு மனிதத்தைப் புறக்கணிக்கும் அவர்களது மாய வாழ்க்கையைப் பார்த்தார்.

தந்தைஎன்னைஅனுப்பியிருக்கிறார். தந்தைக்குரிய அதிகாரங்களைக் கொடுத்து தான் அனுப்பியிருக்கிறார். ஏன், தீர்ப்பு அளிக்கும் அதிகாரத்தையும் அவர் எனக்கு அளித்திருக்கிறார். என இயேசு அவர்களிடம் அழுத்தமாய்ப் பேசுகிறார்.

தன்னைக் கடவுளுக்கு இணையாக்கிப் பேசுகிறாரே, என அவர்களின் கோபம் இன்னும் கரை கடக்கிறது. அவர்களின் கோபத்தைப் பொருட்படுத்தாத இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார். 'யாருடைய சான்றும் எனக்குத் தேவையில்லை. நான் செய்து முடிக்குமாறு தந்தை எனக்கு அளித்த செயல்களே எனக்கான சான்று' என்கிறார்.

மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என துருவித் துருவிப் பார்க்காதீர்கள். மறைநூலே என்னைத் தான் சான்று பகர்கிறது. வாழ்வு பெற வேண்டுமெனில் என்னிடம் வரவேண்டும் என்றார்.

இயேசுவின் பேச்சு யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. காரணம், அவர்கள் இயேசுவை நம்பவில்லை. மறை நூலை அறிந்தவர்கள், மறைநூல் அறிவித்தவரை அறிய மறுத்தார்கள்.

அவர்களுக்கு சட்டத்தின் வரிகளின் படி வாழ்வது பிரியமாய் இருந்தது. காரணம் அதை அவர்கள் தேவைக்கேற்ப வளைத்தார்கள். இயேசுவின் வழிகளில் வாழ்வது பிடிக்காததாய் இருந்தது. காரணம் அது குறுகலான நேர் வழியாய் இருந்தது.

இயேசு அவர்களிடம் முத்தாய்ப்பாக் கேட்டது தான் இந்த கேள்வி.

''கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? ''

அவர்கள் உலகப் பெருமைக்காக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சாப்பாட்டு இடமா முதன்மையான இடத்தைப் பிடி. தொழுகைக் கூடங்களா முக்கியமான இடங்களை எடு. ரபி என அழைக்கப்படு ! ஆடைகளை அகலமாக்கு ! குஞ்சங்களைப் பெரிதாக்கு ! பொதுவில் பிரார்த்தனை நடத்தி பெருமை கொள் ! உலகம் பெருமையாய்ப் பார்க்கவேண்டும். அதுவே இலக்கு ! மற்றதெல்லாம் விலக்கு !! என்பதே அவர்களுடைய வாழ்க்கையாய் இருந்தது.

மனிதரின் பெருமையல்ல, ''கடவுள் தருகின்ற பெருமையை'' நாடுபவர்கள் மட்டுமே தன்னை நம்ப முடியும் என்கிறார் இயேசு. கடவுள் தரும் பெருமை எது ? கடவுளுக்கு ஏற்புடைய செயல்களைச் செய்யும் போது தான் அது கிடைக்கிறது. கடவுள் ஒருவர் என நம்புவதும், அவருக்காய் கனி கொடுப்பதும் மட்டுமே தேவையானது. அது மட்டுமே கடவுளிடம் நமக்குப் பெருமையைப் பெற்றுத் தரும்.

முப்பத்தெட்டு ஆண்டு கள் படுக்கையோடு கிடக்கும் ஒருவனுக்காய் பரிதவிப்பதும், அவனுக்கு உதவுவதும் இறைவனுக்கு ஏற்புடைய செயல்கள். அவன் நலம் பெற்று எழும்போது அவனோடு சேர்ந்து மகிழ்வது கடவுளுக்கு ஏற்புடைய செயல். அவனை நலமாக்கிய இயேசுவை மகிமைப்படுத்துவது கடவுளுக்கு ஏற்புடையசெயல். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு மனிதரின் பெருமையில் மட்டும் தலைசாய்ப்பது, கடவுளுக்கு ஏற்புடையதல்ல.

காலம் வரும்போது கல்லறைகளில் இருப்பவர்கள் தீர்ப்புக்காய் வெளிவருவர். அவர்கள் வரும்போது, அவர்கள் செய்த செயல்களின் அடிப்படையிலேயே அவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்படும். என்றார் இயேசு. இதன் மூலம், நமது செயல்கள் இறைவனுக்கு ஏற்புடையதாய் இருப்பதே விண்ணக வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்பதை மீண்டும் ஒரு முறை தெளிவாய் நமக்கு உறைக்கும்படி, உரைக்கிறார்.

★★★★★★★★★★★★★★★

கெத்சமெனே, அந்த அதிகாலை வேளையில் கனத்த மௌனத்துடன், ஒரு கயவனுக்காய்க் காத்திருந்தது. தனது மரண வேளை நெருங்கிவிட்டது என இயேசு அறிந்திருந்தார். தந்தையிடம் நீண்ட நெடிய செபத்தை முடித்து விட்டு, மரணத்தின் பாதையில் நடக்கப் போகும் கணத்தை இயேசு எதிர்பார்த்திருந்தார்.

அப்போது யூதாஸ் மாபெரும் படையோடு அங்கே வந்தான். முந்நூறு முதல் அறுநூறு பேர் வரை இருந்திருப்பார்கள் என்கின்றனர் விவிலிய வரலாற்று ஆய்வாளர்கள். அவர்களுடைய கைகளில் பற்றி எரியும் தீப்பந்தமும், மெல்லிய வெளிச்சம் வீசும் விளக்குகளும், வாள்களும், ஈட்டி களும் எல்லாம் இருந்தன. அவர்கள் இயேசுவை விட்டு விடவே கூடாதென முடிவெடுத்து வந்திருந்தார்கள்.

கெத்சமெனே மலைப்பிரதேசம். அங்கே அடர்ந்த மரங்களிடையே ஒளிந்து கொள்ளலாம். பாறைகளிடையே பதுங்கிக் கொள்ளலாம், குகைகளில் மறைந்து கொள்ளலாம். எங்கே இருட்டோடு இருட்டாகப் பதுங்கினாலும் இந்த முறை இயேசுவை விடவே கூடாது என்பது தான் வந்தவர்களின் திட்டம். சீடர்கள் ஆயுதங்களோடு தாக்கினாலும் அவர்களை அடியோடு அடக்க வேண்டும் என்பது தான் அவர்களுடைய தீர்மானம். அதனால் தான் இத்தனை முன்னேற்பாடு.

ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை, இயேசு ஒளிந்து கொள்பவரல்ல. துணிந்து நிற்பவர். அவரது வேளை வராத போது யாரும் அவரை நெருங்க முடியாது. அவரது வேளை வந்துவிட்டால் அவரே நெருங்கி வருவார். ! . இயேசு கேட்கிறார்

''யாரைத் தேடுகிறீர்கள் ? ''

அவர்கள் ''இயேசுவை'' என்கிறார்கள். ''நான் தான்'' என்கிறார் இயேசு. இந்தப் பதிலை எதிர்பார்க்காதவர்கள் திகைத்துப் போய் பின் வாங்குகிறார்கள். இத்தனை படைகளுக்கு முன், இத்தனை ஆயுதங்களுக்கு முன், சற்றும் அச்ச மில்லாமல் நான் தான் என்கிறாரே இயேசு ! என்பது தான் வந்தவர்களின் எண்ணமாய் இருந்திருக்கும்.

இயேசு மீண்டும் அவர்களிடம் ''யாரைத் தேடுகிறீர்கள் ?'' என்று கேட்டார். அவர்கள் இயேசுவை என்றார்கள். நான் தான் என மீண்டும் சொன்னார் இயேசு !

இன்று இயேசு நம்மிடம் கேட்கிறார், ''யாரைத் தேடுகிறீர்கள் ?''

இயேசுவைக் கண்டுபிடிப்பது சிரமம் என பிடிக்க வந்தவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததை விட மிக எளிதாக அணுகக் கூடியவராக இயேசு இருந்தார்.

நாமும் இயேசுவைக் கண்டுபிடிப்பதோ, நெருங்குவதோ கடினம் என நினைக்கிறோம். ஆனால் அவர் நாம் நினைப்பதை விட அருகே, நாம் தேடும்போது நம்மை எதிர்கொள்பவராக இருக்கிறார்.

இயேசுவை நெருங்க வேண்டுமெனில் நமது அறிவெனும் ஆயுதங்களோ, பந்தமெனும் சான்றி தழ்களோ தேவையென நினைக்கி றோம். ஆனால் அன்பொன்றே போதும் என இயேசு சொல்கிறார். என்னைத் தேடுகிறவர் கண்டடைவார் எனும் இயேசுவின் வார்த்தை மாறப் போவதில்லை.

நானே ஒளி என்றவரைப் பிடிக்க நாம் ஒளி கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லை. அவரது ஒளியைப் பெற்றுக் கொள்ளும் விளக்குடன் செல்வதே தேவையானது.

கூட்டம் போட்டு, ஆயுதங்களோடு அலைவது தேவையற்றது, தனியே சொல்வதே தகுதியானது.

இயேசு, ''யாரைத் தேடுகிறீர்கள் ?'' என்று கேட்கிறார். நாம் யாரைத் தேடுகிறோம் ?, எதற்காகத் தேடு கிறோம் ?

இயேசுவை அன்று தேடியவர்கள் அவரைக் கொலை செய்யும் நோக்குடன் தேடினார்கள். நாம் இயேசுவின் கொள்கைகளை, அவரது போதனைகளைக் கொலை செய்யும் நோக்குடன் அவரைத் தேடுகிறோமா ? இல்லை அவரது வழியில் நடப்பதற்காக அவரைத் தேடுகிறோமா ?

இயேசுவின் மனித நேயக் கோட்பாடுகளைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு திருச்சபைச் சட்ட திட்டங்களுக்குள் புதைத்து கிடக்கும் போது, இயேசு அருகில் இருந்தும் அறியாதவர்களாய் இருக்கிறோம்.

இயேசுவின் அன்பின் செயல்களை அகற்றி வைத்து விட்டு ஆசீர்வாதப் போதனைகளை அரவணைத்துக் கிடக்கும் போது நாம் இயேசுவை வெளியே நிற்க வைக்கிறோம். அவர் கண் முன் நின்றும், நாம் குருடர்களாய் இருக்கிறோம்.

தேடுங்கள், கண்டடைவீர்கள் என்றார்இயேசு. ஆனால் அவரைத் தேட வேண்டிய இடத்தில் தேடவேண்டும். அப்போது தான் கண்டடைய முடியும்.

சாதிப் பெருமைகளை மாலையாய் சுற்றிக் கொண்டு கூத்தாடும் கூட்டத்தில் இருந்து கொண்டு இயேசுவைக் கண்டு பிடிக்க முடியாது !

கர்வத்தின் மேடைகளில் தலைக்கனத்தின் ராட்டினத்தில் சுழன்று கொண்டே தேடினால் இயேசுவைக் கண்டு பிடிக்க முடியாது !

மனிதத்தை மறுதலித்து, சட்டங் களை இறுகப் பற்றிக் கொண்டு கிடக்கும் கூட்டத்தில் புதைந்து கொண்டு இயேசுவைக் கண்டுபிடிக்க முடியாது.

அப்படி அறிவீனமாய் நாம் அலையும் போது, இயேசு நம் முன்னால் நின்று கேட்கிறார். ''யாரைத் தேடுகிறீர்கள் ?''

என்னைத் தேடவேண்டுமெனில் தேவையில் உழலும் எளியவன் வாழ்வில் தேடுங்கள்.

என்னைத் தேடவேண்டுமெனில் புறக்கணிப்பின் பள்ளத்தாக்கில் கிடக்கும் பாமரனிடம் தேடுங்கள்.

என்னைத் தேடவேண்டுமெனில் தூய்மையின் சாலைகளில் திரியும் எளிய மனிதர்களிடம் தேடுங்கள்.

குறைந்தபட்சம், என்னை விவிலிய பக்கங்களிலாவது தேடுங்கள் !

இவையெல்லாம் விட்டு விட்டு நீங் கள் தேடித் திரிகிறீர்களெனில், நீங்கள் வேறு ''யாரையோ தேடுகிறீர்கள்'' என்னை அல்ல ! வேறு யாரையோ கண்டடைவீர்கள் என்னையல்ல ! என்கிறார் இயேசு !

நாம் யாரைத் தேடுகிறோம் ? எங்கே தேடுகிறோம் ? எதற்காகத் தேடுகிறோம் ?

சிந்திப்போம்

இயேசுவின் கேள்வி நம்மை பதில்களை நோக்கி நகர்த்தட்டும்

**சேவியர்**

www.kathiroli-media.ca

# திரைத்துறை கடந்து நிஜ வாழ்க்கையில் கைக்கோர்க்கும் ஆனந்த் ராம் - பிரிகிடா

தமிழ்திரையுலகின் இளம் மற்றும் திறமையான நடிகர்களான ஆனந்த் ராம் மற்றும் பிரிகிடா ஜோடி, தங்கள் வாழ்வின் மிக மகிழ்ச்சியான புதிய அத்தியாயத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். நடிகர் ஆனந்த் ராமின் பிறந்தநாளான இன்று, தங்களது காதலை நெகிழ்ச்சியான சமூக ஊடகப் பதிவின் மூலம் ரசிகர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

சினிமா மீதான அளவற்ற காதலாலும், அர்ப்பணிப்பான உழைப்பாலும் தங்களுக்கென தனித்தனி பாதைகளை உருவாக்கி, ரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள் ஆனந்த் ராம் மற்றும் பிரிகிடா. திரையில் தனித்தனியாகப் பயணித்த இவர்களின் இருவேறு கனவுகள், கலை மீதான பொதுவான ஈர்ப்பால் ஒன்றிணைந்து, தற்போது நிஜ வாழ்க்கையிலும் ஒரு அழகான இணையாக உருவெடுத்துள்ளது.

திரையுலகில் 'மீசைய முறுக்கு தம்பி' என்றும், 'பவி டீச்சர்' (Pavi Teacher) என்றும் ரசிகர்களால் அன்போடு அழைக்கப்படும் இந்த ஜோடி, தற்போது தமிழ் சினிமாவின் கியூட் நிஜ வாழ்க்கை தம்பதிகளின் (Real-life couples) பட்டியலில் இணைந்து ரசிகர்களுக்கும் திரையுலகினருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

தங்கள் வாழ்வின் இந்த அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் ஆனந்த் ராம் - பிரிகிடா ஜோடியின் திருமணம் இந்த ஆண்டே நடைபெறவுள்ளது. இது குறித்த கூடுதல் விவரங்கள் மற்றும் திருமண தேதி ஆகியவை வரும் வாரங்களில் அதிகாரப்பூர்வமாக



அறிவிக்கப்படும்.

தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் இந்த மகிழ்ச்சியான தருணத்திலும், இருவரும் கலை மீதான தங்களின் அர்ப்பணிப்பைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவுள்ளனர். தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் இவர்களது நடிப்பில் அடுத்தடுத்து சுவாரசியமான திரைப்படங்கள் வெளியாக வரிசைகட்டி நிற்கின்றன.

தோழமை, பகிரப்பட்ட கனவுகள் மற்றும் வாழ்நாள் முழுமைக்குமான அழகான நினைவுகளோடு தங்களது புதிய பயணத்தைத் தொடங்கும் இந்த இளம் ஜோடிக்கு திரையுலகினரும் ரசிகர்களும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# 'கிங்ஸ்டன்' படத்தின் தோல்வி: மனம் திறந்த நடிகை திவ்யபாரதி!

'பேச்சுலர்' படத்தின் மூலம் பிரபலமான நடிகை திவ்யபாரதி, தனது முந்தைய தியேட்டர் ரிலீஸான 'கிங்ஸ்டன்' திரைப்படத்தின் பாக்ஸ் ஆபீஸ் தோல்வி குறித்தும், பட வாய்ப்புகளில் ஏற்பட்ட இடைவெளி குறித்தும் மனம் திறந்துள்ளார்.

ஜி.வி. பிரகாஷ் குமார் தயாரித்து நடித்த 25-வது படமான 'கிங்ஸ்டன்', விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இது குறித்து திவ்யபாரதி தனது பேட்டி ஒன்றில்,

'கிங்ஸ்டன் ஒரு நல்ல படமாக உருவாவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் இருந்தன. ஆனால், இடையில் ஏதோ ஒரு கட்டத்தில் நாங்கள் எதிர்பார்த்தபடி அது அமையாமல் போய்விட்டது' என்று திவ்யபாரதி தெரிவித்துள்ளார். மேலும், 'பேச்சுலர்' படத்தின் வெற்றிக்கு பிறகும் பட வாய்ப்புகள் குறைய தனக்கு சினிமா பின்னணி இல்லாததே காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'வெற்றிக்கு பின் வாய்ப்புகள் தானாக தேடி வரும் என்று நினைத்தேன்; அது ஓவர் கான்ஃபிடன்ஸ் இல்லை, சினிமா அப்படித்தான் இயங்கும் என நம்பினேன். ஆனால், நாமாகத் தான் வாய்ப்புகளைத் தேடி நெட்வொர்க்கிங் செய்ய வேண்டும் என்பதைத் தாமதமாகவே புரிந்து கொண்டேன்' என கூறியுள்ளார்.

சமீபத்தில் ஜியோஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியான 'லிங்கம்' என்ற வெப் சீரிஸில் கதிர் ஜோடியாக திவ்யபாரதி நடித்துள்ளார். 8 எபிசோடுகளைக் கொண்ட இந்தத் தொடர், 'விலங்கு' சீரிஸ் புகழ் பிரசாந்த் பாண்டியராஜ் வழங்க, லட்சுமி சரவணக்குமார் இயக்கத்தில் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்று வருகிறது.

# வாசகர்கள் வட்டம்!

Dear Sir very informative and interesting news updates, all reader's will be admired to go-through.

Highlights of Kathir Oli from my perception

* Updated political news
* Mouth watering Food Recipes
* International news updates
* Fascinating Cinema news
* Necessary Health Tips especially for women
* Special coverage of Tamilnadu News
* News both from Tamil and English Language

My best wishes to Kathir Oli Media and Team who are creating wow experience in reading newspaper.

Keep up the same spirit Sir!

**Dr. Dennis Amirtharaj P.hd.,**

---

Today Morning 1 hour i have spent time to gothrough our Kathir Oli News paper Had a nice experience of knowing Global news updates.

**Dennis, Chennai**

---

Many thanks Bishop for your really nice and very useful Magazine " Kathiroli " ,
God Bless you , amen

---

கதிரொளி பத்திரிகை படித்தேன் ரசித்தேன் வெளி தேசத்தில் தமிழ் உணர்வுடன் தாங்கள் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வருகிறதை ஒரு பத்திரிகையாளராக மனதார வாழ்த்துகிறேன். சமூக நீதி குரல் பத்திரிகை சார்பாக எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**பரலோக தொழிலாளி போதகர் விபிஜியார்**

---

God Bless you about your magazine ministry,
We are blessed about your Editorial team,
In this issue mostly very important news

---

Thank God for your journal ministry.by monthly.we will get all information about political,general God bless you

**Pastor.victor.india**

---

Many Thanks Bishop for your very nice multi lingual Magazine,
It is always very useful for Us, may God Richly Bless You and also in your Editorial team.
**Bishop. W. S. Vetha**

---

அதிக காலத்திற்கு பின் தற்போது பத்திரிகை வாசிக்கிறேன். இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. மிக்க நன்றி Sir.!

-K.R.A

---

God Richly Bless You Bishop for your very beautiful,awesome, wonderful,marvelous Magazine Kathiroli, We are praying for your team and hard work, amen.

**Bishop. W.S. Vetha**

---

Bishop Your Kathiroli Tamil magazine is somthing special in the Tamil Literacy World , God Bless you ayya.

---

What a wonderful magazine "Kathiroli", Many Thanks Bishop, May God bless and your team, amen
**Bishop W.S. Vetha from Pollachi, Tamil Nadu, India.**

---

**Wonderful. News paper.pastor.**

கதிர் ஒளி பத்திரிக்கை, அருமையான நல்ல செய்திகள். செய்தி துணுக்குகள் மற்றும் இந்தியாவில் கிடைத்திறாத சில தகவல்களும் கொண்ட நல்ல கதிர் ஒளி. எனக்கும் எனது நண்பர்களுக்கும், மிகவும் பயனுள்ளது. பத்திரிகை என்பதை இதன் தெரிவிக்கிறேன். தொடர்ந்து இந்த கதிர் ஒளி பத்திரிக்கை தமிழ்நாட்டிலும் மற்றும் அல்ல. உலகம் முழுவதும் தமிழ் பேசும் மக்களுக்கும் இந்த. பத்திரிகை சென்றடைய எனது விருப்பம். நன்றி. **God bless you Pastor.**
**By.pastor. S DavidRajan, Tamil NADU.**

# WC Vibes: Yamal and Spain get their start

Spain were in the midst of a 294-minute scoreless streak in the World Cup, the team's longest in its World Cup history. They had been disappointing in the first game against Cape Verde and now, against Saudi Arabia they needed to take things up a notch.

And in the current La Roja squad, there is only one player who can be relied upon to do that: Lamine Yamal.

The 18-year-old didn't disappoint. Some lovely play by Mikel Oyarzabal, and the ball across the face of goal was met by Yamal at the far post. It is his first World Cup goal and no doubt, the first of many. At 18 years and 343 days old, Lamine Yamal became the eighth-youngest player to score at the World Cup.

FIFA World Cup 2026 - Egypt ride second-half surge to trounce New Zealand

Yamal is also 14 days younger than Messi (18 years and 357 days old) was when he scored his first World Cup goal. To be fair, Messi didn't have the best run at World Cup for a while after that and Spain will be hoping that it isn't the same for Yamal.

But just his presence alone seemed to inspire Spain into a different level of efficiency. He makes a difference with his runs, his vision and the threat he seems to introduce into every move. Defenders can't ignore him and that just opens up the game for others to take advantage of.

Spain were ruthless and this kind of play was the reason many had picked them as favourites to win the World Cup. That and Lamine Yamal.

SALAH INSPIRES EGYPT'S FIRST WC WIN

Mohamed Salah inspired Egypt to their first-ever World Cup victory as they rallied from a goal down to beat New Zealand 3-1, moving to the top of Group G and boosting their hopes of reaching the knockout stage. Mohamed Salah, Mostafa Zico and Trezeguet were Egypt's scorers after Finn Surman had given New Zealand the lead after 15 minutes in Vancouver.

Egypt go into the final group match against Iran needing just a draw in Seattle on Friday to move into the last 32. Egypt are making their fourth World Cup appearance after missing the field in Qatar four years ago.

Earlier 10-man Belgium were left frustrated after being held to a 0-0 draw by a determined Iran in their Group G clash in Los Angeles. Belgium's hopes were dealt a blow in the 66th minute when defender Nathan Ngoy was shown a straight red card for bringing down Mehdi Taremi after the Iranian forward had intercepted the defender's mishit attempted pass and was through on goal.

Five-star Netherlands take off in Houston

Yet despite their numerical advantage, Iran struggled to capitalise, creating little as the Belgians launched a series of attacks and cranked up the pressure in the final minutes.

Iran goalkeeper Alireza Beiranvand repeatedly saved his side with crucial interventions, including an extraordinary stop to keep out a point-blank-range effort from Maxim De Cuyper in the second half.

Winger Jérémy Doku missed the match with an illness for Belgium, who have not scored on 69 consecutive shots at the World Cup dating back to their one goal scored during their three mostly dismal games in Qatar four years ago. Kevin De Bruyne led the way with five shots and his usual creative playmaking, yet nothing could get the ball past Beiranvand.

DAD-TO-BE DOKU'S WISH AND A COUNTRY V HOME DEBATE

The club versus country is a common refrain in football, but Belgium winger Jeremy Doku has faced criticism after expressing his desire to head home if his wife is ready to give birth to their first child during the World Cup campaign.

The Manchester City winger, a livewire in the Belgium eleven, has said he wants to be with his wife Shireen, who is due to give birth in July second week. The team must first get out of Group G, which also has Egypt, New Zealand and Iran.

"It's my first child, so I would definitely want to be there," Doku, 24, was quoted as saying by Reuters. "If you ask me what I want, my answer is that nobody wants to miss the birth of their first child. But I also know that football involves many other considerations. I know the federation supports its players and understands their situations. We'll see what we can do."

Deniz Undav puts in a vintage German show against Ivory Coast

Players leaving for home to be at the birth of their child is common in international sport these days. However, it can be a challenge at a World Cup, where training, travel and final tune-up for matches are all strictly planned.

The debate has been stoked by L'Equipe channel presenter France Pierron, who has criticised Doku,



arguing that a husband is of little or no use being at the side of his partner at her delivery.

"You're living out a childhood dream, yet you're going to walk away from it all to attend the birth of your child – a disgusting moment, if you'll pardon the expression, where the dad is completely useless," she said in a message posted on the Facebook page of the French sports publication L'Equipe.

However, after many in the social media came in support of Doku, Pierron took a step back saying she was sorry if her comments had caused pain to the player.

WORLD CUP HITS THE 1,000-GAME MILESTONE

The ever-expanding World Cup may not be everyone's idea of an ideal global tournament, but it keeps logging some special numbers.

Sunday's (IST) Group F game between Asia No.1 Japan and Tunisia at Monterrey provided a sumptuous number – it was the 1,000th match in the history of the World Cup, which kicked off in 1930.

The inaugural World Cup was a 13-nation invitational affair held in Uruguay, at a time when logistics and global travel were still taking baby steps.

Last 100 matches have been a blur… France beating Croatia in the final of the 2018 edition in Russia was the 900th World Cup game.

The World Cup, now in its 23rd edition, has grown from 16 teams to 24 to 32, to the current tournament which has expanded to 48 teams.

There was also a nice milestone in Netherlands' 5-1 win over Sweden in Group F on Saturday night. When Dutch winger Cody Gakpo struck his second goal, and the team's fourth, it was the 100th goal of this edition. The mark arrived in just the 33rd match, which was the fastest since the 1958 World Cup.

FIFA used the occasion of the 1000th game to ask some of the game's former stars for their favourite moments in the World Cup.

Bebeto, the Brazil forward and member of the 1994 title-winning side, said: "As a fan, my clearest memory is from the 1970 World Cup. Brazil had a formidable team, with greats such as Pele, Carlos Alberto Torres, Rivellino, Gerson, Jairzinho and Clodoaldo. From then on, I dreamt of one day wearing the Brazil shirt and becoming world champion." It was the fourth title for Brazil in 1994.

Italy defender Marco Materazzi, a member of the 2006 title-winning side, said: "My fondest memory of a World Cup was Paolo Rossi's first goal against West Germany in the 1982 final. And my favourite moment as a player, of course, was seeing my children's faces as I lifted the trophy on 9 July 2006. No, 20 years on, it's still special."

*Advertise your business on Katiroli to reach the world!*




கலங்காதே

திரும்பிப் பார்—

தேவன்
உன்னை எவ்வளவு தூரம்
நடத்தி வந்திருக்கிறார் என்று.

இதுவரை
உதவியவர்,

இனியும்
உன்னை கைவிடாமல்
நடத்துவார்.

1 சாமுவேல் 7:12

# சிங் கீதம்- திரை விமர்சனம்




மோசடி வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வெளியே வரும் நாயகன் அயான், தனது குடும்பத்திற்கு சொந்தமான நிலத்தை தேடி குபேரபுரம் என்ற கிராமத்திற்கு செல்கிறார். தங்க சுரங்கத்தை நம்பி வாழும் அந்த கிராமத்தில், ஒரு மர்மமான சம்பவத்திற்குப் பிறகு மக்கள் அனைவரும் சாதாரணமாக பேசாமல் பாடலாகவே பேச தொடங்குகிறார்கள்.

அதை குபேர கடவுளின் சாபம் என்று நம்பும் அந்த ஊர் மக்கள், அந்த சாபத்தில் இருந்து மீண்டார்களா? பணத்தை வாங்கிவிட்டு அங்கிருந்து தப்பிக்க நினைத்த அயானின் திட்டம் என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகனாக நடித்திருக்கும் அயான், கலகலப்பான இளைஞராகவும், சென்டிமெண்ட் காட்சிகளிலும் இயல்பாக நடித்திருக்கிறார். இயற்கையை பாதுகாக்க போராடும் கதாபாத்திரத்தில் வரும் அஹல்யா பம்ரூ தனது துறுதுறுப்பான நடிப்பால் கவனம் ஈர்க்கிறார்.

நிவேதா பெத்துராஜ், ஷாலினி கொண்டேபூடி, ராகுல் ரவீந்திரன் உள்ளிட்ட அனைவரும் தங்களது கதாபாத்திரங்களுக்கு தேவையான பங்களிப்பை கொடுத்திருக்கிறார்கள். சிறப்பு தோற்றத்தில் வரும் விஜய் தேவரகொண்டாவும் மனதில் பதிகிறார்.

மனிதர்களின் பேராசை, இயற்கை வளங்களின் அழிவு, சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டிய அவசியம் போன்ற கருத்துகளை ஃபேண்டஸி பாணியில் சொல்லியிருக்கிறார் இயக்குநர் சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவ். படம் முழுவதும் அனைவரும் பாடலாக பேசுவது ஆரம்பத்தில் வித்தியாசமாக தோன்றினாலும், போகப் போக அதுவே கதையுடன் ஒன்றி விடுகிறது. எந்த இடத்திலும் சலிப்பு வராமல் அந்த முயற்சியை திரையில் கொண்டு வந்திருப்பது இயக்குநரின் வெற்றி.

சில இடங்களில் திரைக்கதை மெதுவாக நகர்ந்தாலும், புதுமையான கற்பனை, இசை, காட்சியமைப்பு ஆகியவை அந்த குறையை மறைத்து விடுகின்றன. 80 வயதைக் கடந்தும் புதிய முயற்சியில் களமிறங்கி, வித்தியாசமான திரை அனுபவத்தை கொடுத்திருக்கும் இயக்குநர் சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவ் பாராட்டுக்குரியவர்.

ஒளிப்பதிவாளர் அங்கூர் சி., வறண்ட நிலப்பரப்பு, தங்க சுரங்கம், குபேரபுரம் கிராமம் என அனைத்தையும் அழகாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

தேவி ஸ்ரீ பிரசாத்தின் இசை இந்த படத்தின் மிகப்பெரிய பலம். உரையாடல்களையே பாடல்களாக மாற்றியிருக்கும் முயற்சியை தனது இசையால் சுவாரஸ்யமாக மாற்றியிருக்கிறார். பின்னணி இசையும் காட்சிகளுக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது.

# 'House of the Dragon'

## சீசன் 3 எபிசோட் 2 விமர்சனம்



உலகம் முழுவதும் பெரும் எதிர்பார்ப்பில் வெளியான 'ஏணிதண்னு ணிஹ ணுடனு ஈணுர்ஞ்ணிண' சீசன் 3, அதன் முதல் அத்தியாயத்திலேயே அதிரடியும், உணர்ச்சிகளும், அரசியல் சதிகளும் கலந்த கதையால் ரசிகர்களை கவர்ந்துள்ளது. கடல் மற்றும் டிராகன்கள் மோதும் பிரமாண்டமான 'ஆச்ணுடுனு ணிஹ ணுடனு எதடூடுனுண' போர் இந்த சீசனின் முக்கிய தொடக்கமாக அமைந்துள்ளது.

இந்நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'ஹவுஸ் ஆஃப் தி டிராகன்' தொடரின் மூன்றாவது சீசனின் 2வது எபிசோடான 'குவீன்ஸ் லேண்டிங்' தற்போது வெளியாகியுள்ளது. இந்த எபிசோட் முழுக்க முழுக்க அரசியல் சதுரங்கம் மற்றும் கதாபாத்திரங்களின் உணர்ச்சிப்பூர்வமான இழப்புகளை மையமாகக் கொண்டு நகர்கிறது.

இந்த எபிசோடில் ராணி ரஹேனிரா தகார்கோனாக நடித்துள்ள எம்மா டி'ஆர்சியின் நடிப்பு ஒட்டுமொத்த எபிசோடையும் தாங்கிப் பிடிக்கிறது. தனது மகனை இழந்த ஒரு தாயின் தவிப்பு, அதிர்ச்சி, ஆத்திரம் மற்றும் ஏமாற்றம் போன்ற பலதரப்பட்ட உணர்ச்சிகளை அவர் மிக நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளார்.

'கேம் ஆஃப் த்ரோன்ஸ்' தொடரின் ஆரம்பகால எபிசோடுகளை நினைவூட்டும் வகையில், இந்த எபிசோடில் இடம்பெற்றுள்ள அரசியல் வசனங்களும் விவாதங்களும் சீரிஸின் தரத்தை உயர்த்தியுள்ளன. மறுபுறம் கிங்ஸ் லேண்டிங்கில் அலிசண்ட் ஹைடவர் மற்றும் ஹெலனா தகார்கோன் ஆகியோர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சில முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள்.

ரஹேனிராவின் கைகளால் அலிசண்ட்டின் தந்தை ஒட்டோ ஹைடவர் கொல்லப்படுவது இந்த எபிசோடின் மிக முக்கிய திருப்புமுனையாக அமைகிறது. தங்களின் தவறுகளையும் அதற்கான விலையையும் அலிசண்ட் மற்றும் ரஹேனிரா இருவரும் உணரும் இறுதிக்காட்சி, அடுத்த எபிசோடுக்கான எதிர்பார்ப்பை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இருப்பினும் இந்த சீசனில் ஏமண்ட் தகார்கோன், கிறிஸ்டன் கோல் போன்ற முக்கிய கதாபாத்திரங்களின் திரைநேரம் குறைக்கப்பட்டிருப்பது ரசிகர்களிடையே சற்று ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சில கதாபாத்திரங்கள் மறக்கப்பட்டது போல் தோன்றினாலும், அடுத்தடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற சுவாரசியத்தை இந்த எபிசோட் தக்கவைத்துள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# அந்தரன்- திரை விமர்சனம்

நாயகி இவானாவை காதலிக்கும் இளைஞர் கொலை செய்யப்படுகிறார். சில மாதங்களுக்குப் பிறகு அவருக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையும் மர்மமான முறையில் உயிரிழக்கிறார். அதன்பிறகும் அவரை திருமணம் செய்ய வரும் நபர்களுக்கு தொடர்ந்து மரணம் நிகழ்கிறது.

இது சாதாரண சம்பவம் இல்லை என்பதை காவல்துறை கண்டுபிடிக்க, இந்த வழக்கு போலீஸ் அதிகாரி பிரஜினிடம் வருகிறது. இவானாவை மையமாக வைத்து விசாரணையை தொடங்கும் பிரஜின், அவரையே காதலிக்க தொடங்குகிறார்.

இறுதியில் பிரஜின் வாழ்க்கை என்ன ஆனது? இந்த தொடர் கொலைகளுக்கு பின்னால் இருப்பது யார்? என்பதே படத்தின் மீதிக்கதை.




போலீஸ் அதிகாரியாக வரும் பிரஜின், அளவான நடிப்பை கொடுத்திருக்கிறார். விசாரணை காட்சிகளிலும், காதல் காட்சிகளிலும் கவனம் ஈர்க்கிறார். நாயகியாக நடித்திருக்கும் இவானா வருண் கதையின் மையமாக வருகிறார்.

பயம், குழப்பம், பதற்றம் என பல உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். நாயகியின் பெற்றோர்களாக வரும் எம்.கே. சாம்பசிவம், செந்தி குமாரி உள்ளிட்ட மற்ற நடிகர்கள் கொடுத்த வேலையை சரியாக செய்திருக்கிறார்கள்.

தொடர் கொலை, மர்மம், போலீஸ் விசாரணை என வழக்கமான கிரைம் திரில்லர் கதையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் சந்தோஷ் ராவணன். திரைக்கதையில் அடுத்தடுத்து வரும் திருப்பங்கள் படத்தை சுவாரஸ்யமாக நகர்த்துகிறது. குறிப்பாக கிளைமாக்ஸ் வரை கொலையாளி யார் என்பதை யூகிக்க முடியாத வகையில் காட்சிகளை அமைத்திருப்பது படத்தின் பெரிய பலம்.

அதே நேரத்தில், சில கதாபாத்திரங்களின் பின்னணி முழுமையாக சொல்லப்படாததும், சில லாஜிக் குறைகளும் இருக்கின்றன. இருந்தாலும் அவை படத்தின் விறுவிறுப்பை பெரிதாக பாதிக்கவில்லை.

கிஷோர் ராமச்சந்திரன் ஒளிப்பதிவு, ஹரி.எஸ்.ஆர் பின்னணி இசை இரண்டுமே படத்தின் சஸ்பென்ஸ் உணர்வுக்கு பலம் சேர்க்கிறது. பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம்.

www.kathiroli-media.ca

# தமிழின அழிப்பில் முன்னேறிச் செல்லும் பௌத்த சிங்கள அரசியல்

T.thibaharan in **கட்டுரை**

இலங்கை அரசியல் கலாச்சாரம் மகாவம்ச மனநிலையில் இருந்து ஒருபோதும் மாறப்போவதில்லை என்பதை கடந்த ஒன்றரை வருடங்களாக ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் இன்றைய இடதுசாரி அரசியல் அதிகார வர்க்கமும் நிரூபித்துள்ளது. கடந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தமிழர் தாயகத்தில் நடத்திய தேர்தல் பிரச்சாரங்களில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிதான் ஆயுதப் போராட்டம் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது.

அத்தகைய ஒரு அநீதி இனிமேல் இழைக்கப்பட மாட்டாது. மேடையில் முதலைக் கண்ணீர் வடித்தவர்கள் இன்று மீண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சாதாரண ஒரு தமிழ் பப்பிசை பாடகரை கைது செய்து அடைத்ததன் மூலம் அநுர அரசாங்கமும் தமிழின அழிப்பு செயல் திட்டத்தை மேலும் முன்னோக்கி நகர்த்தி செல்கிறது என்பதை நிரூபித்து விட்டார்கள்.

தேரவாத பௌத்த தத்துவ நூலான 'மகா மகாவம்ச'மகாநாம தேரரின் இனக்குரோத மனநிலையில் 'தம்மதீப' கோட்பாடு வடிவமைக்கப்பட்டது. அது தமிழின, இந்திய எதிர்ப்பு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள பௌத்தத்தை பாதுகாப்பதற்கு இலங்கை தீவில் தமிழினத்தை அழிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இதனை கடந்த 78 ஆண்டுகளாக ரத்தம் தோய்ந்த இனப்படுகொலை செய்ததனை சிங்கள பௌத்த அரசின் இறையாண்மை என்பதன் ஊடாக நியாயப்படுத்துகிறது.

இதன் மூலம் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கட்டமைப்பு (structural genocide) அரசியல் யாப்பு சட்டத்துக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது.

இனப்படுகொலை

இந்த இனப்படுகொலைக் கட்டமைப்பு வாதம் தனி ஒரு மகாநாம தேரரினாலோ அல்லது சில தனித்தனி மனிதனாலோ மட்டும் கட்டமைப்புச் செய்து வளர்க்கப்பட்டதல்ல. இது ஒரு நீண்ட வரலாற்று வளர்ச்சியில் (Historical development) வடிவம் பெற்று ஒரு முறைமைக்கு (System) உட்படுத்தப்பட்டு விட்டது. இன அழிப்பு என்பது இரத்தம் தோய்ந்த இனப்படுகொலைகளால் (Bloody Genocide) மட்டும் நிகழ்த்தப்படுவது அல்ல. அது ஒரு இனத்தை ஆதிக்க இனத்துக்குள் கரைத்து விடுகின்ற இனமயமாக்கல் (Assimilation) மூலமும் இல்லாத ஒழித்து விட முடியும். அதுவே இப்போது இலங்கையில் தொடர்கிறது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வரை ரத்தம் தோய்ந்த படுகொலைகளையை இலங்கை சிங்கள பௌத்த அரசு நிறைவேற்றி வந்தது. இப்போது அது இன்னொரு கட்ட வளர்ச்சி அடைந்து இன மயமாக்கல் என்ற வகையில் இனப்படுகொலையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறது. அதுவே இன்றைய இலங்கை அரசியலின் நடைமுறையாக மாற்றமடைந்துள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு

சிங்களத் தலைவர்கள் திருந்தி விட்டார்கள், உண்மையை உணர்ந்து விட்டார்கள், கடந்தகாலத்தலைவர்கள்தான் ஏமாற்றி விட்டார்கள், அவற்றை மறந்து புதிய இலங்கையை உருவாக்குவோம், தமிழர்களும் சிங்களவர்களும் மனம் விட்டு பேசினால் பிரச்சனை தீர்ந்துவிடும், சிங்களவர்களும் தமிழர்களும் பிரிந்து நின்று பேசியதினால்தான் பிரச்சனை, இப்போது சிங்களவர்கள் இறங்கி வந்து பேசத் தயாராக உள்ளனர், நாம் பேசிப் பார்ப்போம், சிங்களவர்கள் மனம் திரும்பி குணப்பட்டு விட்டார்கள் என்றெல்லாம் சிங்கள தரப்பு நயவஞ்சக அரசியல்வாதிகள் பேசுகிறார்கள்.

இதனை நம்புவது போல நடித்து சுயநல பணஅரசியலைச்செய்ய ஒருதமிழர்கூட்டம் இருக்கத்தான் செய்யும். அது இப்போதும் இருக்கும். அந்த ஓநாய் கூட்டம் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம், ஆனால் இப்போது இதனை நம்புவதாக நீண்ட கும்பகர்ணன் நித்திரைக்கு பின்னர் திடீரென விழித்தெழுந்து சில ஏமாளித் தமிழ் கம்யூனிசியர்களும் சிங்களத்தின் வாந்தியை அப்படியே விழுங்கி பிதற்ற தொடங்கி விட்டார்கள். இந்த இடத்தில் இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசியல் கலாச்சாரத்தில் இன ஒழிப்பு கட்டமைப்பு வாதமும் (structural genocide) அதன் அரசியல் செல் நெறியில் ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்று இல்லை என்பதை முடிந்த முடிவாக கொண்டிருக்கிறார்கள்.

ஈழத் தமிழர்களை ஒரு தேசிய இனம் இல்லை என்றும், தமிழர்களுக்கு தாயகம் இல்லை என்றும் நிராகரிக்கும் இடதுசாரி அனுராத தலைமையிலான இந்த அரசை எவ்வாறு ஈழத் தமிழர்கள் நம்புவது?

தமிழர்களுக்கான நியாயம்

அவர்களிடம் இருந்து நீதியான தீர்வு ஒன்று தமிழ் மக்களுக்கு எவ்வாறு கிடைக்கும் என ஏற்றுக்கொள்வது? அதனை நம்பி எவ்வாறு பேசுவது? என்பது சார்ந்து சிந்திக்கத் தெரியாத கசாப்பு கடையில் வெட்டுவதற்காக கொண்டுவரப்பட்ட ஆடு தனது மரணத்தை அறியாது அங்கு கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் குழைதழைகளை தின்னுவதுபோல தமிழ அரசியல் ஆடுகள் சிங்களத் தலைவருடன் கூடிக் குலாவி தேனிலவு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ரோகனா விஜயவீராவால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி இடதுசாரிக் கட்சி தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகவோ, தமிழ் மக்களுக்கு ஒரு தாயக நிலப்பரப்பு இருக்கின்றது என்றோ, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய



உரிமையை உள்ளது என்பதையோ இந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் தொடர்ச்சியாக உள்ள இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளாத இந்த போலி இடதுசாரிகளின் கடந்த ஒன்றரை ஆண்டு கால இலங்கைஅரசியல்அதிகாரஆட்சியில்தமிழ் மக்களுக்கான தீர்வையோ, அல்லது தமிழ் மக்களுக்கான நீதி யையோ எங்கேயாவது ஓரிடத்தில் முன்னெடுத்தார்களா என்றால் இல்லை என்றே பதில் வருகிறது. அப்படியானால் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதனைச் சொல்கிறார்கள்? இன்றைய அரசியல் நிலையில் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் அனுரகுமார திசாநாயக்கா ஜனாதிபதியாக அமர்ந்திருப்பதாகவே கட்புலனுக்கு தோன்றும்.

அரசியல் யாப்பு சட்ட விதி

ஆனால் உண்மையான ஜனாதிபதி அதிகாரம் படைத்தவர் டில்வின் சில்வாவே. இடதுசாரி கட்சி கட்டமைப்பில் செயலாளர் நாயகத்துக்கே அனைத்து அதிகாரங்களும் உள்ளது. அந்த அடிப்படையில் இன்றைய தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயலாளர் நாயகம் டில்வின் சில்வா நினைத்த எந்தநேரத்திலும் இலங்கையின் ஜனாதிபதி நாற்காலியில் அமர முடியும்.

அதற்கான சட்ட வழிமுறை அரசியல் யாப்பு சட்ட விதிகளில் உண்டு. 'மாகாண சபை தேர்தல் இந்த வருடம் நடத்தப்பட மாட்டாது' என அண்மையில் டில்வின் சில்வா அறிவித்துள்ளார். ஆனால் உண்மையில் இந்த வருடம் அல்ல இந்த அரசாங்கத்தின் ஆட்சி முடியும் வரையும் தேர்தல் நடைபெற மாட்டாது என்பதையே உண்மையாகும். இலங்கையின் அரசியல் யாப்பில் தமிழர்களுக்கென ஒரு அதிகார அலகு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் சட்ட ரீதியாக வரையப்பட்டுள்ளது.

சிங்கள அரசியல் தலைவர்கள்

அந்த சட்ட திருத்த வரைபினூடாக ஈழத் தமிழர்களுக்கான பிராந்திய ரீதியிலான ஒரு அதிகார அலகு வழங்கப்பட்டு விட்டது. அந்த பெயரளவிலான அதிகார அலகில் தமிழ் மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகள் மட்டுமே உள்ளது என்பது வேறு விடயம். ஆனாலும் சட்ட ரீதியாக அவ்வாறான ஒரு பிராந்திய அலகுகூட இருப்பதனை எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவர்களும் விரும்பவில்லை. அதற்கு அநுர தலைமையிலான இன்றைய அரசாங்கமும் விதிவிலக்கல்ல.

2004 ஆம் ஆண்டில் சுனாமி பேரழிவின் போது வடகிழக்கு மிக மோசமாக பாதிப் படைந்த நிலையில் அன்றைய காலத்தில் வட-கிழக்கின் பெரும்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதன்போது பாதிக்கப்பட்ட, அழிவுக்கு உட்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை செய்வதற்கான சுனாமிக் கட்டமைப்பு என்ற நிவாரணப்பணி அமைப்பில் புலிகள் பங்குபற்றக்கூடாது, அதற்கு அனுமதிக்க கூடாது என போர்க்கொடி தூக்கி சுனாமிக் கட்டமைப்பையே இல்லாதொழித்து இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதையே தடுத்து நிறுத்தியவர்கள்தான் இந்த தேசிய மக்கள் சக்தியினர்.

பொருளாதார விருத்தி

இதிலிருந்து இவர்களுடைய இனக்குரோத மனப்பாங்கை புரிந்து கொண்டிருக்க வேண்டும். 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண தமிழர் தாயக இணைப்பை விரும்பாமல் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கி இலங்கை நீதிமன்றத்தை நாடி அந்த வடக்கு-கிழக்கு இணைப்பை உடைத்து இரண்டாகப் பிரித்ததில் தேசிய மக்கள் சக்தியினர் வெற்றியைப் பெற்றார்கள்.

இப்போது ஆட்சிக்கு வரும் வரை தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு, தமிழ் மக்களுக்கான பொருளாதார விருத்தி என பலவாறு பேசியவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக தமிழ் அரசியல் உரிமைகள் பற்றி வாயே திறக்கவில்லை. ஆனாலும் தமிழர் தாயக நிலப்பரப்பில் அடிக்கடி பயணம் செய்து தமிழ் மக்களுடன் கூடிக் குழாகுவதாக ஒரு தோரணை காட்டுகிறார்கள்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும், உரிமைகள் பற்றியும் எதுவும் பேசாமல் தொடர்ந்து மௌனமாக காலத்தை இழுத்தடிப்பு செய்வதன் மூலம் தமிழ் மக்களுக்கான பிரச்சினையை மறைப்புச் செய்யவும், மறப்புச் செய்யவும் முனைகிறார்கள்.

முள்ளிவாய்க்கல் படுகொலை

ஏன் நாம் நிறைய பேச வேண்டும் ஒரே ஒரு உதாரணம் பட்டுலந்தை படுகொலை என்பது தேசிய மக்கள் சக்தி இடதுசாரி இயக்கத்தின் இளைஞர்கள் மோசமாக படுகொலை செய்யப்பட்ட ஒரு சம்பவம். அதுபயங்கரவாததடைகட்டத்தின்கீழேயே நிகழ்ந்தது. இவ்வாறு தமது தோழர்கள் மோசமாக வதைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக்கூட அவர்கள் விசாரிக்க தயார் இல்லை. ஏனெனில் இது தொடர்பில் விசாரிக்கப்பட்டால் முள்ளிவாய்க்கல் படுகொலைகளும் விசாரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்பதே உண்மையாகும்.

அந்த மிக மோசமான கொடூர சட்டத்தினால் கொல்லப்பட்ட தமது தோழர்களுக்காகவே விசாரனை நடத்த அவர்கள் தயார் இல்லை என்றால் தமது பிரதான எதிரியாக கருதுகின்ற தமிழினத்திற்கு ஏதாவது நீதி விசாரணை நடத்துவார்களா? அல்லது தமிழ் மக்களுக்கு ஏதாவது நீதியை வழங்குவார்களா? உரிமையைத்தான் அவர்கள் வழங்க முன்வருவார்களா? இல்லவே இல்லை ஒருபோதும் அது நடைபெற மாட்டாது.

இப்போது யாழ்ப்பாணத்தில் அதே பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் ஒரு தமிழ் இளைஞன் புலிகளைப் பற்றி பாடல் பாடினான் என கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிங்கள இன மயமாக்கல்

ஒரு சாதாரண பாடகரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வது என்பது தமிழ் மக்களை அச்சுறுத்துவதற்கான செயல். தமிழ் மக்கள் தமது அரசியல் செயற்பாடுகளை நிறுத்தி இந்த கைதைப் பற்றி பேசவும், அதைப்பற்றி அதற்காக போராடவும் விடுவதன் மூலம் தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகள் பற்றி பேசுவதை மழுங்கடிப்பது, தமிழ் மக்களுடைய கவனத்தை திசை திருப்புவது, தமிழ் மக்களைத் தொடர்ந்து அச்சத்துக்குள் வைத்திருப்பது என பல நோக்கங்களைக் கொண்டதாக அமைகிறது.

ஒரு இன மக்களை தொடர்ந்து அச்சத்துக்குள்ளும், ராணுவ நடமாட்டத்திற்குள்ளும், இராணுவ பிரசன்னத்துக்குள்ளும், இராணுவ சுத்தி வலைப்புக்குள்ளும் வைத்திருப்பது என்பது அந்த மக்களை அரசியல் ரீதியாக சிந்திப்பதை தடுப்பது, அவர்களுடைய ஆக்கத்திறன் வளர்ச்சியை தடுப்பதற்கான முயற்சியாகவும் மூலோபாயமாகவும் அமைகிறது. இதுவும் ஒரு வகையில் இனவழிப்பின் ஒரு பகுதியே. இவ்வாறு தமிழர் தாயகத்தில் ஒரு அச்ச நிலை தோற்றுவிப்பதன் மூலம் இளைஞர்களை நாட்டை விட்டு வெளியேறவும், தமது தாயகம் பற்றிய உணர்வுகளை மழுங்கடிக்கவும் செய்வதற்கான தொடர் செயற்பாடுதான். இதன் மூலம் தமிழ் மக்களை சிங்கள இன மயமாக்கல் (Assimilation) செய்வதையே இன்றைய அநுர அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

ஈழத் தமிழர்களின் குடித்தொகை

இலங்கைக்கு தீவின் ஈழத் தமிழர் குடித்தொகை பெருமளவு வீழ்ச்சி அடைந்து வருவதை அண்மைய புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 1980 களில் வடகிழக்கில் இருந்த ஈழத் தமிழர்களின் குடித்தொகையின் இயற்கை வளர்ச்சி வீதம் சரியாக இருந்திருக்குமேயானால் இப்போது வடகிழக்கில் தோராயமாக 45 லட்சம் தமிழர்கள் இருக்க வேண்டும். ஆனால் இப்போது இருப்பது வெறும் 20 லட்சம் தமிழர்களே.

அப்படியானால் தமிழர் தாயகத்தில் இருக்க வேண்டிய 25 லட்சம் தமிழர்கள் இல்லாத ஒழிக்கப்பட்டு விட்டார்கள். இதில் 15 லட்சம் பேர் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் மிகுதி 10 லட்சம் பேர் துண்டு விழுகிறது.

ஆகவே இப்போது தாயகத்தில் வாழ்கின்ற தமிழர்களின் மூன்றில் ஒரு பங்கினர் இல்லாது இருப்பது என்பது மூன்றில் ஒரு பங்கினர் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களும், மற்றும் இயற்கை வளர்ச்சி வீதத்தில் பிறப்பு விகிதம் இல்லாமல் போன அமையும்தான்.

இந்த பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் தோராயமாக கிழக்கில் 90 ஆயிரம் விதவைகள் வடக்கில் 10 ஆயிரம் விதவைகள் எனப் பார்த்தால் ஒரு லட்சம் விதவைகள் என்பதுவே பிறப்பு வீதத்தை வீழ்ச்சி அடைய வைத்திருக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டம்

அத்தோடு யுத்தத்தில் கொல்லப்பட்ட மூன்றரை லட்சம் பேரில் இளைஞர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு மேல் என்பதோடு இவர்களின் இழப்பினால் இயற்கை வளர்ச்சி அதாவது இயற்கை குழந்தைகள் பிறப்பு இல்லாத ஒழிக்கப்பட்டு விட்டது என்ற இந்தக் கணக்கை பார்க்கின்ற போது ஈழத் தமிழர்களின் நிலை என்பது நிலை என்ன என்பது புரியும்.

இந்த நிலையில் இப்போது ஒரு புதிய நெருக்கடியை தோற்றுவிப்பதன் மூலம் மேலும் பெருந்தொகை இளைஞர்களை நாட்டை விட்டு வெளியேற வைப்பதே இன்றைய அநுர அரசாங்கத்தின் நோக்காக உள்ளது. ஒரு சாதாரண பாடகனை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதன் மூலம் பல ஆயிரம் தமிழ் இளைஞர்களை நாட்டை விட்டு வெளியேற்ற இந்த நடவடிக்கை உதவும்.

இது சிங்கள தேசத்துக்கு பெரும் சேவையைச் செய்யும். தமிழர் தேசத்தில் எந்த அளவுக்கு இளைஞர்கள் வெளியேறுகிறார்களோ அந்த அளவுக்கு தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது சிங்கள தேசத்துக்கு இலகுவாக போய்விடும்.

இந்த நிலையில் ஈழத் தமிழர்கள் தமது இருப்பு நிலையை சிந்தித்து தமிழர் தாயகத்தை காக்கவும், தமிழ்த் தேசியக் கட்டுமானங்களை மீள்கட்டுமாணம் செய்வதற்குமான அவசர அரசியல் வேலை திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

# கனடாவில் துப்பாக்கிச் சூடு: 39 வயது நபர் பலி

கனடாவின் டார்ட்மவுத் பகுதியில் ஒரு மனிதரின் உயிரைப் பறித்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10:30 மணியளவில், லஹே சாலையில் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாக ஹாலிஃபாக்ஸ் பிராந்திய காவல்துறைக்குத் தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அதிகாரிகள், அங்கு 39 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் துப்பாக்கிக் குண்டுக் காயங்களுடன் கிடப்பதைக் கண்டறிந்தனர்.




துரதிர்ஷ்டவசமாக, அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்களால் அறிவிக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்தைக் காவல்துறையினர் திட்டமிட்ட கொலையாகக் கருதி விசாரித்து வருகின்றனர்.

மேலும், இது தற்செயலாகவோ அல்லது முன்பின் தெரியாத நபரால் நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

தற்போது இக்கொலை வழக்கு குறித்த விசாரணையைப் பெருங்குற்றப் பிரிவு அதிகாரிகள் கையில் எடுத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

எனவே, இந்தத் துப்பாக்கிச் சூடு குறித்து ஏதேனும் தகவல் தெரிந்த பொதுமக்கள் யாராக இருந்தாலும், உடனடியாக 902-490-5020 என்ற எண்ணிற்கோ அல்லது 'க்ரைம் ஸ்டாப்பர்ஸ்' (Crime Stoppers) அமைப்பின் 1-800-222-8477 என்ற இலவச எண்ணிற்கோ தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கனடிய செய்திகள்

# கனடாவில் அடுக்குமாடி குடியிருப்புத் தீ விபத்து: ஒருவர் பலி

கனடாவின் ஸ்கார்பரோவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

டொராண்டோ விக்டோரியா பார்க் அவென்யூ மற்றும் எக்லிண்டன் அவென்யூ ஈஸ்ட் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில், அதிகாலை 2 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாக டொராண்டோ காவல்துறை மற்றும் தீயணைப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த அவசரகால மீட்புக் குழுவினர், குடியிருப்பிற்குள் எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்தனர்.

அந்தப் பகுதிக்குள் சோதனையிட்டபோது, தீயில் கருகிய நிலையில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் புகையை சுவாசித்ததால் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர் உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும், அவருக்கு ஏற்பட்ட பாதிப்புகள் சிறிய அளவிலானவை என்றும் நம்பப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்டதற்கான துல்லியமான காரணம் என்ன என்பது குறித்து அதிகாரிகள் இன்னும் அதிகாரப்பூர்வ தகவல்களை வெளியிடவில்லை. இக்கோர விபத்து குறித்து டொராண்டோ காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க நீதிமன்றத் தீர்ப்பு: கனடாவுக்குள் நுழைய முயலும் ஹெய்ட்டி அகதிகள்!

ஹெய்ட்டி மற்றும் சிரியா போன்ற நாடுகளில் நிலவும் வன்முறை மற்றும் இயற்கை பேரிடர்களில் இருந்து தப்பித்து அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த புலம்பெயர்ந்தோருக்கான சட்டப் பூர்வ பாதுகாப்பை டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் ரத்து செய்ய அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளது.



இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவிலிருந்து ஹெய்ட்டி நாட்டு அகதிகள் புதிய அலையாகக் கனடாவுக்குள் நுழையக்கூடும் என்று மாண்ட்ரியலைச் சேர்ந்த அகதிகள் நல ஆதரவாளர் பிரான்ட்ஸ் ஆண்ட்ரே தெரிவித்துள்ளார்.

கொமிட்டே டி ஆக்சன் டெஸ் பெர்சன்ஸ் சான்ஸ் ஸ்டேட்டஸ்' அமைப்பின் செய்தித் தொடர்பாளரான ஆண்ட்ரே இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

நாங்கள் இப்போது பேசிக்கொண்டிருக்கும் இந்த நிமிடத்திலும் கூட, மக்கள் கனடாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க நீதிமன்றத் தீர்ப்பால் லட்சக்கணக்கான மக்கள் தடுத்து வைக்கப்படும் அல்லது நாடுகடத்தப்படும் அபாயத்தில் உள்ளதால், அவர்கள் வடக்கை (கனடாவை) நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அமெரிக்க உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, அமெரிக்காவில் 'தற்காலிக பாதுகாப்பு அந்தஸ்து' திட்டத்தின் கீழ் தங்கியிருந்த சுமார் 3,50,000 ஹெய்ட்டி மக்களையும், 6,000 சிரிய மக்களையும் நேரடியாகப் பாதிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. 1990-ல் கொண்டுவரப்பட்ட இத் திட்டத்தின் பாதுகாப்பை டிரம்ப் நிர்வாகம் முடிவுக்குக் கொண்டுவர நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கனடாவில் நெருங்கிய உறவினர்களைக் கொண்ட சில அகதிகள் மட்டுமே இங்கு தங்கி தஞ்சம் கோர அனுமதிக்கப் படுவார்கள்.

ஆனால், மற்றவர்கள் மீண்டும் அமெரிக்க அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட்டு, அங்கிருந்து அவர்கள் ஆபத்து நிறைந்த தங்கள் சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்படும் அபாயம் உள்ளது.

# கனடாவில் பொலிசார் துரத்தியதும் ஆற்றில் குதித்த ஏடிஎம் திருடர்கள்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் திருடர்கள் இருவர் மதுபான விடுதி ஒன்றிலிருந்த ஏடிஎம் ஒன்றைத் தூக்கிச் சென்றார்கள்.

நேற்று மதியம் 3.30 மணியளவில் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள Kamloops என்னுமிடத்தில் அமைந்துள்ள மதுபான விடுதி ஒன்றிற்குச் சென்ற திருடர்கள் இருவர், அங்கிருந்த ஏடிஎம் இயந்திரத்தை திருட்டு ட்ரக் ஒன்றில் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்கள்.

பின்னர் ட்ரக்கும் ஏடிஎம் இயந்திரமும் ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், ஏடிஎம் இயந்திரத்துக்குள் பணம் எதுவும் இல்லை. அதாவது, அதிலிருந்த பணத்துடன் திருடர்கள் தப்பிவிட்டார்கள்.

மோப்ப நாய் உதவியுடன் அவர்கள் இருவரையும் பொலிசார் தேடிக் கண்டுபிடிக்க, அவர்கள் இருவரும் தாம்ஸன் நதிக்குள் குதித்துள்ளார்கள்.

தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் பொலிசார் திருடர்களைத் துரத்த, ஒருவர் சிக்க, மற்றவர் எப்படியோ தப்பிவிட்டார்.

அவரைத் தேடும் பணி தொடரும் நிலையில், அவரைக் குறித்த அடையாளங்களை வெளியிட்டுள்ள பொலிசார் அவரைக்



கண்டால் தங்களுக்குத் தகவல் கொடுக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

www.kathirolimedia.ca

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# பொசன் பௌர்ணமி தினத்தில் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ள வேண்டுகோள்

இன்றைய சமூக கட்டமைப்பில் அழிந்து கொண்டிருக்கும் நற்பெறுமானங்களையும் அடிப்படைக் கோட்பாடுகளையும் மீண்டும் மீட்டெடுத்து நாகரிகம் நிறைந்த தேசத்தைக் கட்டியெழுப் புவதில்ஒன்றிணைந்துஅர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இது போன்றதொரு பொசன் பௌர்ணமி தினத்திலேயே, இலங்கைத் தேசத்தை நாகரிக வளர்ச்சியடைந்த தேசமாக மாற்றி, பெருமைமிக்க நாகரிகமொன்றிற்கு பாதை அமைத்த உயரிய பௌத்த தர்மம் இந்நாட்டிற்கு கிடைத்தது.

தேரவாத பௌத்த தத்துவத் தினதும் பாரம்பரியத்தினதும் மையமாக எமது நாடு உருவான ஆரம்பமும் மஹிந்த தேரரின் இலங்கை வருகையுடன் இணைந்து வரலாற்றில் பதியப்பட்டது.



இது சமூக மாற்றத்துடன் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத் தக் காரணமான அந்த அற்புதமான நிகழ்வு, வெறும் மத ரீதியான அர்த்தத்திற்கு அப்பால், எமது நாட்டின் கலாசார, சமூக, அரசியல் ஆகிய ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமான ஒரு கட்டமைப்பை உருவாக்கியது.

ஒரு தேசமாக எழுச்சி பெறுவதற்கானபலமானஅடித்தளம் பௌத்த தத்துவத்துடன் எமக்குக் கிடைத்த அதேவேளை, கல்வியில் மாற்றத்தையும் ஏற்படுத்திய பௌத்த தர்மம், விகாரைகளையும் பிரிவெனாக்களையும் உருவாக்கி நாட்டு மக்களிடையே ஆன்மீக புரட்சியை ஏற்படுத்துவதுடன், அறிவை வழங்கும் சமூகப் பணியையும் நிறைவேற்றுவதில் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

அது மாத்திரமன்றி கட்டிடக்கலை, ஓவியக் கலை, நீர்ப்பாசனம், வீடமைப்பு, சிற்பக் கலை போன்ற கலைப் படைப்புகளில் புதிய மாற்றத்தையும் ஏற்படுத்து வதன் மூலம் எமது தேசத்தை பெருமைமிக்க தேசமாக உலகின் முன் தூக்கி நிறுத்தியது.

நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி விடுத்துள்ள வேண்டுகோள்

அவ்வாறான பெருமைமிக்க, மேலான வரலாற்றின் இன்றைய பாரம்பரிய வாரிசுகளான நாம் அனைவருக்கும், இன்று சமூகத் தினுள் அழிந்து கொண்டிருக்கும் நற்பெறுமானங்களையும் அடிப் படைக் கோட்பாடுகளையும் மீண்டும் மீட்டெடுத்து நாகரிகம் நிறைந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவது இன்றைய தினத்தில் நம்மீது சுமத்தப்பட்டுள்ள தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

அதனடிப்படையில் நாடாளு மன்றம், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக் கும் நாகரிகமான மாற்றமொன்றைக் ஏற்படுத்தும் இந்த போராட்டத்தில் நாம் இன்னமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

நெறிமுறை இல்லாத நாடொன்று முன்னேற்றத்தை அடைய முடியாது. மஹிந்த தேரர் போதித்த சுல்லஹத்திபதோபம சூத்திரம் படிமுறையான பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பௌத்த தர்மத்துடன் இந்நாட் டிற்குக் கிடைத்த அந்தப்

## இலங்கை செய்திகள்

பெருமைமிக்க நாகரிக சமூகத்தை மீண்டும் இலங்கை மண்ணில் மீள் நிலைநிறுத்துவதன் மூலம், நாட்டிற்குத் தேவையான மானிட ஒழுக்கவியல், சமூகவியல் மற்றும் சூழலியல் சார்ந்த புதிய மனப்பாங்குகளைக் கொண்ட நவீன நாகரிக தேசத்தை கட்டியெழுப்புவதற்காக மென் மேலும் உறுதி பூண்டு கைகோர்த்துக் கொள்வோம். உங்கள் அனைவருக்கும் கருணை, இரக்கம், ஞானம் ஆகியவற்றால் இதயங்களை ஒளிரச்செய்யும் புண்ணியமிக்க பொசொன் தின வாழ்த்துகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாட்டை உலுக்கிய டித்வா புயல் - புனரமைப்பு பணிகள் தொடர்பில் அரசாங்கம் தீர்மானம்

டித்வா புயல் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை புனரமைக்கும் பணிகளை எதிர்வரும் ஆண்டிலேயே பூர்த்தி செய்ய முடியும் என்று அரசாங் கம் அறிவித்தள்ளது. 2027ஆம் ஆண்டுக்காக நிதி அமைச்சு வெளி யிட்டுள்ள நிதி மூலோபாய அறிக்கை யில் மேற்கண்ட விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. சீரற்ற காலநிலை காரண மாக கடந்த 2025ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அழிவு களை சீரமைக்கும் பணிகளை 2026ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியாது. அதே சமயம், 2026ஆம் ஆண்டுக் காக 500 பில்லியன் ரூபாய் மேலதிக நிதி ஒதுக் கீடு அங்கீகரிக்கப்பட்ட போதி லும், மீள் குடியேற்றத் திட்டத் தின் அளவு மற்றும் சிக்கல் தன்மை காரணமாக அந்த அனைத்துப் பணிகளையும் இந்த வருடத்திற்குள் நிறைவு செய்வது கடினம் என்றும் அந்த அறிக்கை சுட் டிக்காட்டியுள்ளது.

இந்த வருடத்திற்காக நாடாளு மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நிதி ஒதுக்கீட்டில் பயன் படுத்தப்படாத தொகையிருப்பு ஏதேனும் காணப்படும் பட்சத்தில், அதனை 2027ஆம் ஆண்டுக்கு கொண்டு செல் வதற்கு பொது நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வ ஏற்பாடு கள் இல்லை என்றும் நிதி அமைச்சு வெளியிட்டுள்ள நிதி மூலோபாய அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள் ளது. நிறைவு செய்வதற்கு எஞ்சி யுள்ள புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்றப் பணிகளுக்கான நிதி அளவு, இந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் பின்னரே தீர்மானிக்கப்படும் என வும் அந்த அறிக்கையில் கூறப் பட் டுள்ளது. இந்தத் தேவைகளின் ஒரு பகுதியை 2027ஆம் ஆண்டுக்கான முதன்மைச் செலவு வரம்பிற்குள் நிர்வகிக்க முடிந்த போதிலும், எஞ்சிய பணிகளை நிறைவு செய்வ தற்கு மேலதிக வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தேவைப்படலாம் என வும், அந்த நிதியின் அளவு மற்றும் அவை தேவைப்படும் காலம் என்பன இந்த தருணத்தில் நிச்சய மற்றதாக உள்ளதாகவும் நிதி மூலோபாய அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலை யில், பொது நிதி முகாமைத்துவ சட் டத்தின் விதிகளுக்கு உட்பட்டு, நாடாளுமன்றத்தில் அங்கீகரிக் கப்பட்ட மேலதிக நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப் பட்ட புனரமைப்பு மற்றும் மீள்குடி யேற்றப் பணிகளை நிறைவு செய் வதற்கான செலவுகளுக்கு மட் டும், 2027ஆம் ஆண்டில் துணை மதிப்பீடொன்றின் மூலம் நாடாளு மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடி க்கை எடுக்க முடியும் என குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிலங்கை அரசியலை நிலைகுலைய செய்யும் பாதாள உலகம்! சிக்கப் போகும் ரணிலின் நெருங்கிய சகா

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான ஹரக்கட்டாவின் தடுப்புக் காவல் உத்தரவை நீக்கி, அவரை சாதாரண சிறைச் சாலைக்கு மாற்றுவதற்காக அவரது மனைவியிடமிருந்து 12 கோடி ரூபாவை இலஞ்சமாக பெற்ற சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்த விசாரணையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமாக பணி யாற்றிய சாகல ரத்நாயக்கவும் சிக்கி யுள்ளார்.

விசாரணையின் போது, ஹேரத் முதியான்சேலாகே கொனகெதர நிர்மாண இந்திரஜித் பண்டார எனப்படும் ஹெர்பி என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படை யிலேயே இது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

அவர் தனது வாக்குமூலத்தின் ஒரு பகுதியில், இது தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளார்.

“நான் டுபாயில் ரகித ராஜபக்ஷ மற்றும் சரித் அபேசி ங்க ஆகியோரை சந்தித்த போது, இந்த வேலையைச் செய்யும் விதம் குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்கள் இருவரும், “நாங்கள் ஏற்கனவே சிந்தகவை கொலை செய்வதைத் தடுத்து அவருக்கு உயிர் பிச்சை கொடுத்துள்ளோம். அதற்கு நிச்சயமாக 500 லட்சம் ரூபாவை தேசபந்து தென்னகோனுக்கு வழங்க வேண்டும் ” என கூறினார்கள்.

அதேபோல் மூன்று மாதங்களுக்குள் சிந்தகவின் தடுப்புக் காவல் உத்தரவை நீக்க வேண்டும், அதற்கு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு 500 லட்சம் ரூபாவை வழங்க வேண்டும். அவர் நேரடியாக பணம் வாங்க மாட்டார், நாங்கள் அதை வேறு வழியில் செய்ய வேண்டும். சாகல ரத்நாயக்க மூலமாவது நாங்கள் அந்த வேலையைச் செய்து முடிப்போம்” என தெரிவித்ததாக ஹெர்பி கூறியுள்ளார்.

இந்த வாக்குமூலம் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அத்துடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

www.kathi-rolimedia.ca

# குழந்தைகளின் கற்பனை திறனை வளர்க்கும் கதைகள்

குழந்தைகளின் உலகம் முற்றிலும் மாறுபட்டது. பார்க்கும் விஷயங்களையும் கேள்விப்படும் செய்திகளையும் அவர்களது கற்பனை திறனுக்கேற்பவே புரிந்து கொள்வார்கள். அதனால் தான் தாத்தா, பாட்டிகள் வாழ்வியல் நெறிகளை கதைகளின் வடிவில் குழந்தைகளுக்கு சொல்வார்கள். தினமும் கதைகளை கேட்கும் குழந்தைகளின் கற்பனை திறன் நன்றாக வளர்ச்சி பெறுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கதைகளின் மூலம் வாழ்வியலுக்கான நீதி நெறிகளையும் சரியான அணுகு முறைகள் பற்றியும் அறிந்து கொள்வதால் சிக்கலான சூழ்நிலைகளில் கூட எளிதாக சமாளிக்கும் திறமை குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

ஆழமாக மனதில் பதியும்

எந்த விஷயத்தையும் கதைகளில் வடிவில் குழந்தைகளுக்கு சொல்லும் போது எளிதாக நினைவில் நிற்கும். நீதி நெறிகள், பள்ளி பாடங்கள் பொது அறிவு சார்ந்த விஷயங்கள் போன்றவற்றை சுவாரசியமான கதைகளாக கூறினால் ஆழ்மனதில் அழியாமல் பதியும்.

ஒழுக்க நெறிகளை வளர்க்கலாம்.

தங்களுடைய சுதந்திரமான போக்கில் பெரியவர்கள் தலையிட்டு அறிவுரை வழங்குவதை குழந்தைகள் பெரும்பாலும் விரும்புவதில்லை. அதனால் அறிவுரைகளையும், ஒழுக்க நெறிகளையும் ஆர்வமூட்டும் வகையில் நன்னெறிக்கதைகளாக சொல்ல வேண்டும். அவர்களது இயல்புக்கு பொருத்தமான கதாபாத்திரங்களை அறிந்து அதன் மூலம் நன்னெறிகளை வலியுறுத்தும் கதைகளை கூறுவது குழந்தைகளுக்கு பிடித்தமானதாக அமையும்.

பாட நூல்களில் உள்ள வரலாற்று சம்பவங்களை மதிப்பெண் அடிப்படையில் குழந்தைகள் படிக்கும் போது அவை அவர்களது மனதில் பதிவது இல்லை. பாடங்கள் கதைகளாக உருவகம் செய்து சொல்லும் போது அதன் உள்பொருள் அவர்களது மனக்கண்ணில் காட்சிகளாக விரியும். அதனால் பாடங்களில் உள்ள பெயர்கள் உள்ளிட்ட இதர குறிப்புகள் மனதில் எளிதாக பதிந்து விடும்.

கதைகளால் ஏற்படும் நன்மைகள்



அன்போடு கதைகளை சொல்லும் பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு பாசப்பிணைப்பு அதிகரிக்கும். கதையில் சொல்லப்பட்ட காட்சிகளை கற்பனை செய்து கொள்வதால் குழந்தைகளின் சிந்தனை திறன் வளரும். அதனால் வளர்ந்த பிறகு எதையும்கூர்ந்துகவனித்துஆராய்ந்து செயல்படுவார்கள். கதை கேட்கும்

## குழந்தைகள் வாழ்க்கைமுறை

பழக்கம் காரணமாக கைப்பேசி விளையாட்டுகளுக்கு அடிமையாகி உடல் மற்றும் மனஆரோக்கியம் பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியும்.

கதை சொல்லும் முறை

இரவு நேரத்தில் குழந்தைகள் தூங்குவதற்கு முன்னர் கதை சொல்லலாம். அவர்களது வயதுக்கு ஏற்ற கதைகளை தேர்வு செய்து சொல்லி அவற்றிலிருந்து கேள்வி கேட்பது குழந்தைகளின் கவனத்தை ஒரு முகப்படுத்த உதவும். கதை சொல்லி முடித்த பின் அதன் சாராம்சத்தை அவர்கள் புரிந்து கொண்ட விதத்தில் திரும்பவும் சொல்ல வைத்து பாராட்டலாம். திகிலூட்டும் பேய் கதைகள், மற்றவர்களை தந்திரமாக ஏமாற்றும் கதைகள், மூட நம்பிக்கைகளை வளர்க்கும் கதைகளை குழந்தைகளுக்கு சொல்வதை தவிர்க்க வேண்டும்.

# உங்கள் குழந்தை பொம்மைகளுடன் பேசுகின்றதா?

குழந்தைகள் எப்பொழுதும் தமக்கென ஒரு உலகத்தில் வாழ்கின்றனர். நாமும் அவ்வயதை கடந்து வந்திருந்தாலும். ஏனோ குழந்தைகளின் தேவைகளை புறிந்து செயற்பட தவறுகின்றோம்.

குழந்தைகளுக்கு அனேகமான பெற்றோர் சிறந்த கல்வி, சிறந்த உடை, சிறந்த வாழிடம் என்பனவற்றை வழங்குவதையே பெரிய விடயமாக கருதுகின்றார்கள். அவற்றைகடந்து அவர்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் முயல்வதில்லை. இதனால் மனரீதியாக குழந்தைகள் மிகவும் பாதிப்படைகின்றார்கள். பெற்றோர் விடும் இப்பிழை குழந்தைகளின் எதிர்காலத்தை கோள்விக் குறியாக்குகின்றது.

இப்படியான ஒரு விடயம் தான் குழந்தைகளின் கற்பனை நண்பர்கள். எமது சிறு வயதிலும் எமக்கு பிடித்த ஒரு கற்பனை பாத்திரம் இருந்திருக்கலாம். அது ஒரு செல்லப்பிராணியாகவோ, ஒரு பொம்மையாகவோ இருக்கலாம். இன்றும் உங்கள் மனதில் அது பற்றிய தாக்கம் இருக்கும்.

குழந்தைகளுக்கு விளையாடத்துணை இல்லாத பொழுது, பெற்றோர் குழந்தைகளுடன் நேரம் செலவிடாத பொழுது, குழந்தைகள் தனிமையில் அதிகமாக இருக்க நேரிடும் பொழுது, குழந்தைகளுக்கு நண்பர்கள் இல்லாத நிலை போன்ற சூழ்நிலைகளின் பொழுது அவர்கள்



தனிமையான சூழலில் இருந்து விடுபடத் தேடி அமைத்துக் கொள்ளும் விடயம் தான் இந்தக் கற்பனை நண்பன்.

குழந்தையின் 2 முதல் 9 வயது வரையிலான கால கட்டத்தில், குழந்தைகள் அனைத்து விஷயங்களிலும் சாதாரணமாக ஈடுபட்டு தனக்கெனப் பிடித்த பொம்மையைக் கொஞ்சுவது, அலங்கரிப்பது, அதனுடன் விளையாட்டாகப் பேசுவது போன்ற செயல்பாடுகள் காணப்பட்டால் அது சாதாரண சூழல். ஆனால், அந்த வயது வரம்பை மீறித் தனது கற்பனை நண்பனுடனான நட்பை நீடித்து அந்த ஒரு நண்பனுடன் மட்டுமே எப்பொழுதும் நேரத்தை செலவிட்டுக் கொண்டு, மற்ற விடயங்களில் ஈடுபாடு காட்டாமல் தனித்து, விலகிச் சென்றால், அந்தச் சூழல் கண்டிப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்நிலையைக் குழந்தைகள் அடைந்து விட்டால், அது அவர்களின் மனநிலையில் பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தி விபரீத விளைவுகளை உண்டாக்கலாம்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் செயல்பாடுகளை நன்கு கவனித்து, குழந்தை சராசரி மனிதனை போல் வளர வழிவகை செய்ய வேண்டும். உங்கள் கவனிப்பையும் மீறி குழந்தை அந்த கற்பனை நண்பன் உலகில் மூழ்க நேர்ந்தால், பெற்றோர்கள் அதை உடனடியாக கவனித்து குழந்தைக்கு மனநிலை மருத்துவருடன் கலந்தாலோசித்தல் அவசியம்.

குழந்தைதன்கற்பனைநண்பனை உங்களிடம் காட்டி பேசும் பொழுது உங்கள் வெறுப்பைக் காட்டாமல், குழந்தையின் பாணியிலேயே பாசமாக பேசிக் குழந்தைக்கு உண்மை நிலையை உணர்த்தலாம்.

www.kathirolimedia.ca

# குழந்தையை குஷிப்படுத்தும் 'விளையாட்டு உலகம்'

குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றுவதற்கு தந்தைகள் எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கு தயாராக இருப்பார்கள். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் சமயத்தில் தந்தைகள் தங்களின் உணர்ச்சிகளை பெரிதாக வெளிப்படுத்தமாட்டார்கள் என்றாலும் பிள்ளைகள் அடையும் ஆனந்தத்தை பார்த்து மனம் குளிர்ந்து போவதுண்டு.மொத்தமே 46 விநாடிகளே பதிவாகி இருக்கும் அந்த வீடியோவில் குழந்தை வெளிப்படுத்தும் உணர்ச்சிகள், பார்ப்பவர்களை மீண்டும் குழந்தை பருவத்திற்கே அழைத்து செல்ல வைத்துவிடும். அந்த அளவிற்கு குழந்தையின் ஒவ்வொரு அசைவும் ரசிக்க வைத்திருப்பதாக பலரும் பாராட்டி பதிவிட்டிருக்கிறார்கள்.

தத்தி தத்தி நடை பயலும் குழந்தை ஒன்று தனக்காக தந்தை உருவாக்கி இருக்கும் 'மினி பிளே ஹவுஸில்' ஏறி விளையாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வீடியோ ஒன்று சமூகவலைத்தளத்தில் வைரலாகி இருக்கிறது. அந்த குழந்தை சிறிய கூடாரத்துக்குள் ஓடோடி செல்கிறது. அங்கு மர பலகையில் செய்யப்பட்டிருக்கும் லிப்ட் போன்ற கட்டமைப்பின் மீது ஏறிக்கொள்கிறது. தந்தையின் அறிவுறுத்தலின்படி இரு கைகளையும் மரப்பலகையின் மீது வைத்து கெட்டியாக பிடித்துக் கொள்கிறது.

உடனே தந்தை சங்கிலியை மரப்பலகையில் பொருத்துகிறார். அதை பார்த்து குழந்தை இரு கைகளையும் தட்டி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. பிறகு குழந்தை இரு கைகளையும் மரப்பலகையின் மீது வைத்து கெட்டியாக பிடித்துக்கொண்டதும் தந்தை கயிறு மூலம் இழுக்கிறார். உடனே மர லிப்ட் அசைந்தாடியபடி சில அடி தூரம் மேலே செல்கிறது. உடனே குழந்தை ஆனந்தத்தில் மிதக்கிறது. கைகளை தட்டி ஆரவாரம் செய்கிறது.

தந்தை லிப்டை பிடித்துக்கொள்ள, குழந்தை பின்னோக்கி நகர்ந்து மர வீடு போன்ற சிறிய கூடாரத்துக்குள் செல்கிறது. அங்கிருந்து எட்டிப்பார்த்து உற்சாகம் அடைகிறது. பிறகு மர லிப்ட்டுக்குள் வந்து மீண்டும் கீழே இறங்குகிறது. தரைத்தளத்தை அடைந்ததும் மீண்டும் கைகளை தட்டி சிரித்தபடியே வெளியே வருகிறது.

மொத்தமே 46 விநாடிகளே பதிவாகி இருக்கும் அந்த வீடியோவில் குழந்தை வெளிப்படுத்தும் உணர்ச்சிகள், பார்ப்பவர்களை மீண்டும் குழந்தை பருவத்திற்கே அழைத்து செல்ல வைத்துவிடும். அந்த அளவிற்கு குழந்தையின் ஒவ்வொரு அசைவும் ரசிக்க வைத்திருப்பதாக பலரும் பாராட்டி பதிவிட்டிருக்கிறார்கள். அந்த வீடியோ 5 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளை கடந்துள்ளது.

உங்கள்
வியாபாரம்
உலகம் முழுவதும் சென்று
அடைய கதிர்ஒளியில்
விளம்பரம் செய்யுங்கள்

ஆரோக்கிய குறிப்புகள்

# ஒரு நிமிட தாமதம் கூட உயிருக்கு ஆபத்து! உங்கள் இதயம் சொல்லும் எச்சரிக்கை என்ன?

மாரடைப்பு என்பது உலகளவில் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் நோய்களில் முதன்மையான ஒன்றாகும். இதயத்திற்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் கரோனரி தமனிகள் அடைபடும்போது, இதயத் தசைகளுக்கு ஆக்சிஜன் கிடைக்காமல் அவை சேதமடைகின்றன. இந்த நிலையே மாரடைப்பு எனப்படுகிறது.

முன்பு 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் அதிகமாகக் காணப்பட்ட இந்த நோய், தற்போது 25-40 வயதுடைய இளைஞர்களிடமும் அதிகரித்து வருகிறது. மனஅழுத்தம், தவறான உணவுமுறை, உடற்பயிற்சி இல்லாமை போன்றவை இதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

இதயம் எவ்வாறு செயல்படுகிறது?

இதயம் ஒரு சக்திவாய்ந்த தசை உறுப்பாகும். இது தினமும் சுமார் 1 லட்சம் முறை துடித்து, உடலின் அனைத்து பகுதிகளுக்கும் ரத்தத்தை அனுப்புகிறது. இதயத்திற்கே ரத்தத்தை வழங்குவது கரோனரி தமனிகள். இவற்றில் கொழுப்பு, கொலஸ்ட்ரால் மற்றும் கால்சியம் படிந்து அடைப்பு ஏற்பட்டால், ரத்த ஓட்டம் குறைந்து மாரடைப்பு ஏற்படுகிறது.

மாரடைப்பு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள்:

1. அதிக கொலஸ்ட்ரால்-

கெட்ட கொலஸ்ட்ரால் அதிகரித்தால் தமனிகளில் கொழுப்பு படியும்.

2. உயர் ரத்த அழுத்தம்-

தொடர்ந்து உயர் ரத்த அழுத்தம் இருந்தால் இரத்த நாளங்கள் பாதிக்கப்படும்

3. சர்க்கரை நோய்-

சர்க்கரை நோய் ரத்த நாளங்களை சேதப்படுத்தி மாரடைப்பு அபாயத்தை பல மடங்கு அதிகரிக்கிறது.

4. புகைப்பிடித்தல்

புகை பிடிப்பதால் ரத்த நாளங்கள் சுருங்கி, ஆக்சிஜன் அளவு குறைகிறது. இதனால், ரத்த உறைவு உருவாகும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

5.மது அருந்துதல்-

அளவுக்கு அதிகமான மது இதய தசைகளை பலவீனப்படுத்தும்.

6. உடல் பருமன்-

BMI அதிகமாக இருந்தால் இதயத்தின் வேலைப்பளு அதிகரிக்கும்.

7. உடற்பயிற்சி இல்லாமை-

நாள்தோறும் உடற்பயிற்சி செய்யாதவர்களுக்கு மாரடைப்பு அபாயம் அதிகம்.

8. மனஅழுத்தம்-

அதிக கோபம், கவலை, மன அழுத்தம் ஆகியவை இதயத்தின் மீது தீவிர தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

9. மரபணு-

குடும்பத்தில் பெற்றோர் அல்லது உடன்பிறந்தோருக்கு இளம் வயதில் மாரடைப்பு இருந்தால் அபாயம் அதிகம்.

ஆண்களுக்கு மாரடைப்பு ஏன் அதிகம்?

40-60 வயதில் ஆண்களுக்கு பெண்களை விட அதிகமாக மாரடைப்பு ஏற்படுகிறது. புகைப் பிடித்தல், மது அருந்துதல், அதிக வேலைப்பளு, மனஅழுத்தம், அதிக கொழுப்பு உணவுகள் உட்கொள்வது போன்ற காரணங்களால் ஆண்களுக்கு அதிகப்படியாக மாரடைப்பு ஏற்படுகிறது.

பெண்களுக்கு மாரடைப்பு எப்படி ஏற்படுகிறது?

மாதவிடாய் நிற்கும் வரை பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன்



ஹார்மோன் பாதுகாப்பு அளிக்கிறது. ஆனால், மாதவிடாய் நின்ற பிறகு கொலஸ்ட்ரால் அதிகரிக்கும். ரத்த அழுத்தம் உயரும், சர்க்கரை நோய் அபாயம் அதிகரிக்கும் இதனால், மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு உருவாகும்.

பெண்களிடம் காணப்படும் வித்தியாசமான அறிகுறிகள்:

★அதிக சோர்வு

★வாந்தி

★செரிமானக் கோளாறு

★கழுத்து வலி

★முதுகு வலி

★மூச்சுத்திணறல்

இதனால் பல பெண்கள் மாரடைப்பை ஆரம்பத்தில் அடையாளம் காண முடியாமல் போகிறது.

மாரடைப்பின் முக்கிய அறிகுறிகள்:

★மார்பின் நடுவில் கடுமையான அழுத்தம் அல்லது வலி

★இடது கை, தோள், கழுத்து அல்லது தாடைக்கு பரவும் வலி

★மூச்சுத்திணறல்

★அதிக வியர்வை, வாந்தி

★தலைச்சுற்றல், மயக்கம், திடீர் பலவீனம்

அமைதியான மாரடைப்பு:

சிலருக்கு, குறிப்பாக சர்க்கரை நோயாளிகளுக்கு, கடுமையான மார்பு வலி இல்லாமல் மாரடைப்பு ஏற்படலாம்.

அறிகுறிகள்:

★சோர்வு

★மூச்சுத்திணறல்

★அதிக வியர்வை

★லேசான மார்பு அசவுகரியம்

மாரடைப்பு எவ்வளவு ஆபத்தானது?

சிகிச்சை தாமதமானால், இதயத் தசைகள் நிரந்தரமாக சேதமடைந்து, இதய செயலிழந்து, இதயத் துடிப்பு சீர்கேடின்றி திடீர் உயிரிழப்பு ஏற்படும். முதல் 60-90 நிமிடங்கள் 'Golden Hour' மிகவும் முக்கியமானவை.

மாரடைப்பு வந்தால் உடனே என்ன செய்ய வேண்டும்?

1. உடனடியாக அவசர மருத்துவ சேவையை அழைக்கவும்.

2. நோயாளியை அமைதியாக உட்கார அல்லது சாய்ந்து ஓய்வெடுக்கச் செய்யவும்.

3. இறுக்கமான ஆடைகளை தளர்த்தவும். 4. மருத்துவர் முன்பே பரிந்துரைத்திருந்தால் மட்டுமே அவசர மருந்துகளை பயன்படுத்தவும். 5. மருத்துவ உதவி வரும் வரை நோயாளியை தனியாக விடாதீர்கள்.

6. மூச்சு மற்றும் இதயத் துடிப்பு நின்றால், பயிற்சி பெற்றவர் உடனடியாக CPR தொடங்க வேண்டும்.

7.தானாகவே வாகனம் ஓட்டி மருத்துவமனைக்கு செல்ல முயற்சிக்க வேண்டாம்.

மாரடைப்பைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

★தினமும் 30-45 நிமிடங்கள் நடைபயிற்சி. ★புகைப்பிடித்தல் மற்றும் மதுவைத் தவிர்க்கவும். ★உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும். ★உப்பு, சர்க்கரை, எண்ணெய் ஆகியவற்றை அளவோடு பயன்படுத்தவும். ★ரத்த அழுத்தம், சர்க்கரை, கொலஸ்ட்ரால் ஆகியவற்றை முறையாக பரிசோதிக்கவும். ★மனஅழுத்தத்தைக் குறைக்க தியானம், யோகா போன்றவற்றை மேற்கொள்ளவும். ★மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை தவறாமல் எடுத்துக்கொள்ளவும்.

மாரடைப்பு என்பது திடீரென ஏற்படும் உயிருக்கு ஆபத்தான நிலை என்றாலும், பெரும்பாலான அபாய காரணிகளை வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் கட்டுப்படுத்த முடியும். சீரான உணவுமுறை, தினசரி உடற்பயிற்சி, புகைப்பிடித்தல் மற்றும் மதுவைத் தவிர்த்தல், சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்தல் ஆகியவை இதயத்தைப் பாதுகாக்கும் முக்கியமான வழிமுறைகள்.

மார்புவலி, மூச்சுத்திணறல், அதிக வியர்வை போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவற்றை அலட்சியம் செய்யாமல் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவது உயிரைக் காப்பாற்றும் மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

# சாப்பிடும்போது அவசரம் வேண்டாம்



காலையில் வேலைக்கு செல்லும் பலரும் வேகமாக சாப்பிடும் பழக்கத்தை பின்பற்றுகிறார்கள். அது இட்லியாக இருந்தால் ஒரிரு நிமிடத்திற்குள் நான்கு, ஐந்து இட்லிகளை சர்வ சாதாரணமாக சாப்பிடுபவர்களும் உண்டு. அப்படி வேகமாக சாப்பிடுவது வயிற்றுக்கு நல்லதல்ல. வழக்கத்தை விட கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கும்.

ஏனெனில் அவசரமாக, வேகமாக சாப்பிடும்போது செரிமானமாகுவதற்கு போதுமான நேரம் உடலுக்கு கிடைப்பதில்லை. அதன் வெளிப்பாடாக வயிறு உப்புசம், அஜீரணம், அசிடிட்டி உள்ளிட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். உடலுக்கும் போதிய சக்தி கிடைக்காது. இதனை தவிர்க்க, சில எளிய பழக்கவழக்கங்களை பின்பற்றினால் போதுமானது.

சாப்பிடும் முன்பு நிதானமாக அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளவேண்டும். கையில் உணவை குறைவாக எடுக்க வேண்டும். அதாவது வாய் நிறைய சாப்பிடுவதற்கு பதிலாக சிறிதளவு சாப்பிடவேண்டும். உணவை விழுங்குவதற்கு முன்பு நன்றாக மெல்லவேண்டும்.

ஒருமுறை வாய்க்குள் உணவை வைத்ததும் உடனே கையில் உணவை எடுக்கவேண்டாம். வாய்க்குள் இருக்கும் உணவை மென்று விழுங்கும்வரை கைக்கு ஓய்வு கொடுக்கவேண்டும். சாப்பிட்ட உணவால் வயிறு நிறைந்து விட்டது என்பதை உணர்ந்து கொள்ள மூளைக்கு போதிய நேரம் கொடுக்கவேண்டும். அவசரமாக சாப்பிடுவதையும், உணவை மெல்லும்போது பேசுவதையும், சாப்பிடும் நேரத்தில் கைபேசியை பார்ப்பதையும் தவிர்ப்பது நல்லது. உடல் என்பது இயந்திரம் அல்ல, அதை கவனமாக கையாளவேண்டும்.

# கன்னியாகுமரி அகஸ்தீஸ்வரத்தில் ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் பெயரில் மின்சார ரயில் இன்ஜின் பராமரிப்பு தொழிற்கூடம் அமைக்க கோரிக்கை

நாகர்கோவில், ஜூன்

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் அருகே, முன்னாள் பாரத பிரதமர் ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் பெயரில் புதிய மின்சார ரயில் இன்ஜின் முதன்மை பராமரிப்பு தொழிற்கூடம் (Electric Locomotive Shed) அமைக்க வேண்டும் என்று கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கத் தலைவர் திரு. ஸ்ரீராம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

‘தென் மாவட்டப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவிலில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குப் புதிய ரயில்களை இயக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்து வருகின்றன. இதற்கேற்ப, தற்போது நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் புதிய மின்சார இன்ஜின்பராமரிப்புபணிமனை(Trip Shed) அமைப்பதற்காக ரூ.101.82 லட்சம் மதிப்பில் ஒப்பந்தப்புள்ளி (Tender) கோரப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

ஒரு புதிய ரயில் இயக்கப்படும் போதோ அல்லது நீட்டிக்கப்படும் போதோ, அதன் பயணியர் பெட்டிகளைப் (Coaches) பராமரிக்க ’பிட் லைன்’ (Pit Line) வசதி எவ்வளவு முக்கியமோ, அதேபோல அந்த ரயிலை இயக்கி வரும் மின்சார இன்ஜின்களைச் சரிபார்த்து, அடுத்த பயணத்திற்குத் தயார் செய்து திருப்பி அனுப்ப ’ட்ரிப் ஷெட்’ (Trip Shed) வசதியும் மிக அவசியமாகும். இந்த மின்சார லோகோமோட்டிவ் ட்ரிப் ஷெட் என்பது, இன்ஜின்கள் ஒரு பயணத்தை முடித்துவிட்டு அடுத்த பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னால், மிகக் குறுகிய நேரத்தில் அவற்றை முழுமையாகப் பரிசோதித்துச் சரிசெய்யும் ஒரு சிறப்புப் பராமரிப்பு நிலையமாகும்.

பூகோள முக்கியத்துவமும் தென் தமிழகப் புறக்கணிப்பும்: தமிழகத்தில் தாம்பரம் முதல் கன்னியாகுமரி வரையிலான ரயில் பாதை இரட்டிப்பு மற்றும் மின்மயமாக்கல் திட்டப் பணிகள் முழுமையடைந்துவிட்டன. நாகர்கோவில் சந்திப்பில் பிட் லைன் பணிகளும், கன்னியாகுமரியில் பிளாட்பார்ம் மேம்பாட்டுப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. கன்னியாகுமரி மாவட்டமானது கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை ரயில் பாதைகளை இணைக்கும் புவியியல் ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முனையமாக (Terminal) அமைந்துள்ளது.

தற்போது நாகர்கோவிலில் அமையவிருக்கும் ’ட்ரிப் ஷெட்’ தற்காலிகப் பராமரிப்புக்கு உதவும் என்றாலும், இன்ஜின்களை முழுமையாகப் பழுதுபார்க்கும் பெரிய அளவிலான முதன்மை மின்சார லோகோ ஷெட் (Main Locomotive Shed) தென் தமிழகத்தில் எங்கும் இல்லை. தற்போது தெற்கு ரயில்வேயில் ஈரோடு, அரக்கோணம், ராயபுரம், திருச்சி, தண்டையார்பேட்டை, ஜோலார் பேட்டை மற்றும் கேரளாவின் எர்ணாகுளம் ஆகிய இடங்களில் மட்டுமே லோகோ ஷெட்கள் உள்ளன. இவை அனைத்தும் தமிழகத்தின் வட பகுதியிலோ அல்லது கேரளாவிலோதான் அமைந்துள்ளன. மதுரை கோட்ட எல்லைக்குள் எந்தவொரு பெரிய ரயில்வே தொழிற்கூடமும் இல்லாதது தென் தமிழகப் புறக்கணிப்பையே காட்டுகிறது. முன்னதாக, குழித்துறையில் அமையவிருந்த டிராக்ஷன் பவர் கண்ட்ரோலர் (Traction Power Controller) அலுவலகம் கேரளாவுக்கு மாற்றப்பட்டது போன்ற சம்பவங்கள் இனி நடக்கக் கூடாது.

அகஸ்தீஸ்வரத்தில் அமைய வேண்டிய வாஜ்பாய் லோகோ ஷெட்: கடந்த 2000-ஆவது ஆண்டுகளின் தொடக்கத்தில், அப்போதைய பிரதமர் மாண்புமிகு ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் இந்த பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நாகர்கோவிலில் லோகோ ஷெட் அமைக்க ஆர்வம் காட்டினார். அவரது கனவை நனவாக்கும் வகையில், கன்னியாகுமரி அருகே உள்ள அகஸ்தீஸ்வரம் ரயில் நிலையம் பகுதியில், போதிய ரயில்வே நிலங்கள் உபரியாகக் கையிருப்பில் உள்ளதால், அங்கு இத்திட்டத்தை எளிதாகச் செயல்படுத்த முடியும்.

நாகர்கோவிலில் இப்போது கோரப்பட்டுள்ள ட்ரிப் ஷெட் பணிகளோடு இணைத்து, அகஸ்தீஸ்வரத்தில் முறையான பெரிய அளவிலான லோகோ ஷெட்டை அமைக்க வேண்டும். இது அருகில் உள்ள விழிஞ்ஞும் சர்வதேசத் துறைமுகத்தில் இருந்து எதிர்காலத்தில் அதிகரிக்கவிருக்கும் சரக்கு ரயில் போக்குவரத்தைக் கையாள்வதற்கும் மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே, தென் மாவட்டங்களின் பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், அகஸ்தீஸ்வரத்தில் ’ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் மின்சார லோகோமோட்டிவ் ஷெட்’ அமைப்பதற்கான முறையான அறிவிப்பை மத்திய அரசு வெளியிட வேண்டும்‘ என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

Thanks & Regards,

S.R Sreeram

President

Kanyakumari District Railway Users' Association (KKDRUA)

IInd Floor, 4 Gandhi Street,

Kottar,

Nagercoil &629002,

Kanyakumari District

G.S.M : +91 9443204652

"Have a nice day

# கேரளா எம்பிக்களைப் பார்த்து கற்றிடுங்கள்! குமரி மக்களின் தேவையை மறந்து உறங்குகிறாரா எம்பி? சிறப்பு ரயில் நிறுத்தப்படும் அபாயம்!

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு போதிய எண்ணிக்கையில் தினசரி இரவு நேர ரயில்கள் இல்லாத சூழலில், ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பு ரயிலை தொடர்ந்து இயக்க வேண்டும் என குமரி மாவட்ட ரயில் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குமரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு தற்போது இரண்டு தினசரி இரவு நேர ரயில்கள் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ளவை வாராந்திரரயில்களாகவே உள்ளன. இதனால், ஆண்டு முழுவதும் இந்த ரயில்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது. இதன் காரணமாக, மாநிலத் தலைநகரான சென்னைக்கு அவசரத் தேவைகளுக்குச் சென்று வர பொதுமக்களுக்கு முன்பதிவு பயணச்சீட்டு (Reservation Ticket) கிடைப்பதில்லை.

தென்னக ரயில்வேயின் அதிக வருவாய் ஈட்டித் தரும் முக்கிய வழித்தடங்களில் ஒன்றாகச் சென்னை – நாகர்கோவில் தடம் திகழ்கிறது. இதன் காரணமாகவே, கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பண்டிகைக் காலங்களிலும் வார இறுதியிலும் தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது. ஆனால், இவ்வாறு இயக்கப்படும் சிறப்பு ரயில்களை நிரந்தர தினசரி ரயில்களாக மாற்ற ரயில்வே துறை எந்த ஒரு உறுதியான நடவடிக்கையும் எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, கன்னியாகுமரியிலிருந்து மதுரை வழியாக சென்னை எழும்பூருக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு 23:25 மணிக்கு புறப்படும் வாராந்திர சிறப்பு ரயில் கடந்த சில மாதங்களாக இயக்கப்பட்டு வந்தது. இந்த ரயில் வெள்ளிக்கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை கன்னியாகுமரி வந்தடையும். மீண்டும் ஞாயிறு இரவு கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும். வார இறுதி நாட்களுக்குப் பின் சென்னை திரும்பும் குமரி மாவட்ட மக்களுக்கு இந்த ரயில் மிகவும் பயனுள்ளதாக இருந்ததுடன், ரயில்வே துறைக்கும் நல்ல வருவாயை ஈட்டித் தந்தது.

கேரளா எம்பிக்களின் வேகம் - குமரி எம்பியின் மௌனம்

ஆனால், இந்த ரயில் சேவை ஜூன் 21-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. பிற தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் (குறிப்பாகக் கேரளா எம்பிக்கள்) தங்களது தொகுதி மக்களின் தேவையை உணர்ந்து போராடிச் சிறப்பு ரயில்களை நீட்டிக்கச் செய்துள்ளனர். ஆனால், குமரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இதுகுறித்து இதுவரை எந்த ஒரு கோரிக்கையையும் அழுத்தமாக வைக்காததால், இந்த ரயிலை நீட்டிப்பதற்கான எந்த அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை எனப் பயணிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

குமரி மாவட்ட மக்கள் தங்களின் மாநிலத் தலைநகருக்குச் செல்லக் குறைந்தபட்சம் கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் சுமார் 13 மணி நேரம் வரை பயணிக்க வேண்டியுள்ளது. மற்ற மாவட்டங்களை விடப் பயணத் தொலைவு அதிகம் என்பதால் நாகர்கோவிலிருந்து சென்னைக்குக் கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகும். எனவே, குமரி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பு ரயிலை நிரந்தர ரயிலாக மாற்றவோ அல்லது அதன் சேவையை உடனடியாக நீட்டிக்கவோ குமரி எம்பி மற்றும் ரயில்வே நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்

# டி.கே.சிவக்குமார் தலைமையில் வருகிற 2-ந் தேதி மந்திரிசபை கூட்டம்

கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியில் முதல்-மந்திரியாக டி.கே. சிவக்குமார் பதவி ஏற்றுள்ளார். அவருடன், 13 மந்திரிகளும் பதவி ஏற்றுள்ளனர். பதவி ஏற்பு விழா நடைபெற்ற கடந்த 3-ந் தேதியே டி.கே.சிவக்குமார் தலைமையில் மந்திரிசபை கூட்டம் நடைபெற்றிருந்தது.

அதன்பிறகு, கடந்த 20-ந் தேதி 2-வது முறையாக நடந்த மந்திரிசபை கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது.



அதாவது மக்கள் பிரச்சினைகளை தீர்க்க பொதுசேவை துறை தனியாக தொடங்கப்படும் என்று முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், முதல்-மந்திரியாக டி.கே. சிவக்குமார் பதவி ஏற்ற பின்பு 3-வது முறையாக மந்திரிசபை கூட்டம் அடுத்த மாதம் (ஜூலை) 2-ந் தேதி நடைபெறும் என்று நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மந்திரிசபை கூட்டத்திலும் சில முக்கிய அறிவிப்புகளை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# இந்திய எல்லையில் ஊடுருவிய பாகிஸ்தானியர் கைது

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் மெந்தார் சப் டிவிஷனின் பாலகோட் செக்டார் பகுதியில் இந்திய ராணுவத்தினர் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது, பாகிஸ்தான் பகுதியில் இருந்து ஒருவர் இந்திய பகுதிக்குள் ஊடுருவி வந்துள்ளார். அவரை பிடித்த

## இந்திய செய்திகள்



இந்திய ராணுவத்தினர் விசாரணை நடத்தினர். அதில் பாகிஸ்தானின் பக்துன் பகுதியை சேர்ந்த பாஜியா ஜடா கான் என்பவரின் மகன் ரயீஸ் கான் என்பது தெரியவந்துள்ளது.

எதற்காக எல்லை தாண்டினார், யாரை பார்க்க இந்திய எல்லைக்கு வந்துள்ளார், பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு உள்ளதா என்பது குறித்து இந்திய ராணுவத்தினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை, மும்பையில் ரூ.35 கோடி மதிப்புள்ள சீன பட்டாசுகள் பறிமுதல்; 12 பேர் கைது



சென்னை துறைமுகம் வழியாக சீனாவில் தயாரிக்கப்பட்ட பட்டாசுகள் மற்றும் வெடிகளை இந்தியாவுக்குள் கடத்த நடைபெற்ற இரண்டு முயற்சிகளை வருவாய் புலனாய்வு இயக்குநரகம் (டிஆர்ஐ) கண்டுபிடித்துள்ளது.

சீனாவிலிருந்து வந்த இரண்டு 40 அடி கன்டெய்னர்களை டிஆர்ஐ அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். பின்னர், அதிகாரிகள் சோதனை செய்தபோது, அவற்றில் சுமார் 46,000 பட்டாசுகளும் வாணவெடிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

டிஆர்ஐ அமைப்பிற்கு கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு வழக்கில், 18.7 மெட்ரிக் டன் சீன தயாரிப்பு பட்டாசுகளை ரகசியமாக கடத்திய ஒரு கும்பலை சென்னை சுங்கத்துறை கண்டுபிடித்துள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கன்டெய்னர் சரக்கு நிலைய ஊழியர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக, 2026 மே மாதம் முதல், மும்பையில் டிஆர்ஐ அதிகாரிகள் நடத்திய தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, சுமார் 100 மெட்ரிக் டன் சீன பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மும்பையில் டிஆர்ஐ பதிவு செய்த வழக்கில், கடத்தலுக்கு உதவியதற்கும், சரக்குகளை மாற்ற முயற்சித்ததற்கும், கன்டெய்னர் சரக்கு நிலைய ஊழியர்களின் தீவிர ஈடுபாடும் கண்டறியப்பட்டது. இந்த வழக்கில், சிஎப்எஸ்-ன் (CFS) நான்கு ஊழியர்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சமீபத்திய பறிமுதலுடன், இந்த நடவடிக்கைகளின் விளைவாக மொத்தம் சுமார் ரூ. 35 கோடி மதிப்புள்ள சீன பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ‘அரசியல் என்பது 24 மணி நேரப் பணி என்பதை ராகுல் காந்தி உணர வேண்டும்’ - சர்மிஷ்டா முகர்ஜி

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ராகுல் காந்தி, ஒரு சில நிகழ்வுகளை நடத்திவிட்டு, பின்னர் காணாமல் போய்விடுகிறார் என சர்மிஷ்டா முகர்ஜி விமர்சித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மகள் சர்மிஷ்டா முகர்ஜி. கடந்த 2014-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இணைந்த சர்மிஷ்டா முகர்ஜி, 2015-ல் டெல்லி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இவர் கடந்த 2021-ம் ஆண்டு அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இருப்பினும் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் குறித்து அவ்வப்போது விமர்சனங்களை முன் வைத்து வருகிறார்.

இந்நிலையில், தனியார் செய்தி நிறுவனத்திற்கு சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில், காங்கிரஸ் எம்.பி.யும், நாடாளுமன்ற எதிர்க் கட்சி தலைவருமான ராகுல் காந்தி குறித்து சர்மிஷ்டா விமர்சித்துள்ளார். அந்த பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது;-

“கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 99 இடங்களில் வெற்றி பெற்றது. ராகுல் காந்தி பாரத் ஜோடோ யாத்திரையை நடத்தினார். அதற்கு குறிப்பிடத்தக்க பலன் கிடைத்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக, ராகுல் காந்தி ஒரு சில நிகழ்வுகளை நடத்திவிட்டு, பின்னர் காணாமல் போய்விடுகிறார்.

பாரத் ஜோடோ யாத்திரையின் முதலாம் ஆண்டு தினத்தில் ராகுல் காந்தி எங்கே இருந்தார்? அரசியல் என்பது 24 மணி நேரப் பணி என்பதை ராகுல் காந்தி புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவர் சில பேரணிகளை நடத்திவிட்டு, சிலரை பார்த்து பேசிவிட்டு, பிறகு காணாமல் போய்விடுகிறார். என்னைப் பொறுத்தவரை இது அரசியல் அல்ல.

மேலும், மாநில சட்டமன்ற தேர்தல்களில், வெறும் கூட்டணிகளால் மட்டும் வெற்றி பெற்றுவிட முடியாது. கட்சியை முதலில் பலப்படுத்த வேண்டும். நான் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது, அவர்கள் கூட்டணி அமைப்பதில் மட்டும்தான் கவனம் செலுத்தி வந்தனர். வெற்றி பெறுவதற்கு தங்கள் கட்சியின் பலத்தை கூட்ட வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை.

காங்கிரஸ் கட்சியின் அமைப்பு பலத்தின் மீது கவனம் செலுத்தப்படாமல் இருப்பதும், தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளும் ராகுல் காந்தியின் தோல்வியையே பிரதிபலிக்கின்றன. ஏனெனில், கட்சியின் முக்கிய முகமாக இருந்து ராகுல் காந்தியால்



ஒரு தீர்க்கமான வெற்றியை பெற்றுத் தர முடியவில்லை.

2014 முதல் ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் முகமாக இருந்து வருகிறார். அதே சமயம், 2014 முதல், காங்கிரஸ் அடுத்தடுத்து தேர்தல்களில் தோல்வியடைந்து வருகிறது. பிரதமர் மோடி மாபெரும் மக்கள் தலைவராக உள்ளார். அவருக்கு கிடைக்கும் தேர்தல் வெற்றிகளின் மூலமே அவரது செல்வாக்கை காண முடியும். ராகுல் காந்தியால் அத்தகைய வெற்றியை காங்கிரஸ் கட்சிக்கு பெற்றுத் தர முடியவில்லை. இது ராகுல் காந்தியின் தோல்வியே ஆகும்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

www.kathiroli-media.ca

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம்.. தி.மு.க.-வினர் தயாராக இருக்க வேண்டும்..!- மு.க.ஸ்டாலின்

தவெக ஆட்சியில் ஓட்டுப் போட்டவர்களும் கவலைப்படுகிறார்கள், ஓட்டுப்போடாதவர்களும் கவலைப்படுகிறார்கள்.

மக்களை காக்க வேண்டிய பொறுப்பு திமுகவுக்குத்தான் அதிகமாக இருக்கிறது. தவெக ஆட்சியில் சட்டம் -ஒழுங்கு சீர்கேடு மின்வெட்டு போன்றவற்றால் மக்கள் அவதியடைந்துள்ளனர்.

கடந்த 5 வருடங்களில் தமிழ்நாட்டை 2-ஆவது பெரிய பொருளாதார மாநிலமாக உயர்த்தினோம். தினம் ஒரு திட்டம் என்ற அடிப்படையில் திமுக அரசியல் செயல்பட்டது.

உலக அளவில் மிகப்பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வந்து தொழில் தொடங்கினர். எல்லா மாவட்டங்களிலும் வேலை வாய்ப்புகள் பெருகியது.

திமுக அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படும் வரை இந்த மு.க.ஸ்டாலின் பெயர் நிலைத்து நிற்கும்.



பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை, ஆனால் தவெக 108 இடங்களில் தான் வெற்றி பெற்றார்கள்.

திமுக வெல்ல வேண்டும், ஸ்டாலின் முதல்வராகவேண்டும் என மக்கள் வாக்களித்த கட்சியினரின் ஆதரவில் வண்டி ஓடுகிறது.

வண்டி எப்போது நிற்கும் என தெரியாது. தமிழ்நாட்டில் அடுத்த 3 மாதத்திலோ, 6 மாதத்திலோ தேர்தல் வரலாம், திமுக தயாராக இருக்க வேண்டும்.

மின்வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் ஆளும் அரசோ டேக் டைவர்ஷன் அரசாக உள்ளது.

இவர்களின் டேக் டைவர்ஷன் டெக்னிக் மக்களுக்கு புரிய ஆரம்பித்துவிட்டது. திமுக பார்த்து பார்த்து வளர்த்தெடுத்த தமிழ்நாட்டை சீரழிய விடக்கூடாது.

தவெகவிற்கு ஓட்டு போட்டவர்களும், போடாதவர்களும் கஷ்டப்படுகின்றனர். கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

திமுக போல் வெற்றி பெற்ற கட்சியும் இல்லை தோல்வியடைந்த கட்சியும் இல்லை, லட்சக்கணக்கான உடன்பிறப்புகள் இதயத்தில் திமுக உள்ளது.

தமிழ்நாட்டை பார்த்துதான் காலை உணவுத்திட்டத்தை 2 மாநிலங்களில் தொடங்கி உள்ளனர்.

திமுக வெற்றி பெற்று ஸ்டாலின் முதல்வராக வேண்டும் என வாக்களித்தவர்கள் ஆதரவில் தான் தவெக வண்டி ஓடுகிறது. பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை, ஆனால் தவெக 108 இடங்களில் தான் வெற்றி பெற்றார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தி.மு.க 100% துடைத்தெறியப்படப் போவது உறுதி..!- த.வெ.க ஐடி விங்



சென்னை வானகரத்தில் இன்று மாலை, முன்னாள் அதிமுக அமைச்சர் பெஞ்சமின் தலைமையில் மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணையும் விழா நடைபெற்றது.

அப்போது பேசிய முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 'மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இருந்த கழகத்திற்கு.. அவர் பொருளாளராக இருந்து செயல்பட்ட கழகத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டுதான் முதன்முதலில் அவர் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். அதன் பின்னர் தான் தனிக்கட்சி கண்டார்' என குறிப்பிட்டிருந்தார்.

மேலும், 'தவெக ஆட்சி இன்று 3 அல்லது 6 மாதங்கள் தான் இருக்கும். அதனால், எந்நேரத்திலும் தேர்தல் வரலாம். திமுகவினர் 100 சதவீதம் தயாராக இருக்க வேண்டும்' என கூறினார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தவெக ஐடி விங் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் இருந்தார் திமுகவில் இருந்தார் என்று கொளத்தூர் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. திரு.ஸ்டாலின் அவர்கள் பெருமை பொங்க பேசினார். தி.மு.க.வால்தான் முதன்முதலில் எம்.எல்.ஏ. ஆனார். அதுதான் வரலாறு என்றெல்லாம் சொன்னவர், பிறகுதான் தனிக்கட்சி கண்டார் என்றும் தொடர்ந்து சொன்னார்.

ஆனால், தன் வாழ்நாள் எதிரியே தி.மு.க.தான் என்று கடைசி வரை வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர். தி.மு.க.வை ஒரு தீயசக்தி என்று அன்று சொன்னவர் எம்.ஜி.ஆர். தான் உயிரோடு இருக்கும்வரை தி.மு.க.வைக் கூப்பிலேயே உட்கார வைத்திருந்தார் எம்.ஜி.ஆர். என் நண்பர் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் இருந்து வந்ததும் ஆட்சியைத் திருப்பித் தந்துவிடுகிறேன்.

அதுவரை என்னிடம் ஆட்சியைக் கொடுங்கள் என்று தி.மு.க.வைக் கெஞ்ச வைத்தார் எம்.ஜி.ஆர். இதுவும் வரலாறுதான் என்ற உண்மையைச் சொல்வாரா ஸ்டாலின் சார்?.

சட்டம் ஒழுங்கு டிஜிபியை நியமிக்காமல் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கையே சந்தி சிரிக்க வைத்தவரும் இன்றைய நிலைக்கு ஆழமாய் விதை போட்டவரும் ஸ்டாலின் சார்தான். ஆனால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு, இன்று ஏதோ தன்னால் தமிழகம் பாழ்படவே இல்லை என்பதுபோலப் பேசித் தன் நகைச்சுவைத் திறனைக் காட்டுகிறார்.

இந்த நிலையில், எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம். மூன்று வருடத்தில் வரலாம். ஆறு மாதத்தில்கூட தேர்தல் வரலாம் என்று பொறாமையும் விரக்தியும் பொங்கப் பேசுகிறார் ஸ்டாலின் சார். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பதை மறந்துவிட்டு வாய்க்கு வந்ததைப் பேசுகிறார். மக்கள் தீர்ப்பை அவமதிப்பு செய்கிறார். ஆட்சி அதிகாரத்தை இழந்த விரக்தியில் விம்முகிறார். வெடிக்கிறார். துடிக்கிறார்.

ஸ்டாலின் சார் என்னதான் ஆலாய்ப் பறந்தாலும் அங்கலாய்த்தாலும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாலும் இனி வருகின்ற ஒவ்வொரு தேர்தலிலும் திமுக 100% சதவிகிதம் துடைத்தெறியப்படப் போவது உறுதி.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழக செய்திகள்

### உலகின் முதல் ஹைட்ரஜன் ஆலை: கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தில் திறந்து வைப்பு

தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் உலகின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்திற்கு பதிலாக அணு உலை வெப்பத்தால் இயங்கும் ஆலையை, இந்தியாவின் அணுசக்தித் துறை நேற்று திறந்து வைத்தது.



இந்த ஆலை உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தாமிரம்-குளோரின் வெப்பவேதியியல் சுழற்சியை பயன்படுத்தி, நீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனாக பிரிக்கிறது.

இது கல்பாக்கத்தின் ஃபாஸ்ட் ப்ரீடர் சோதனை அணு உலையில் இருந்து வரும் உயர் வெப்பநிலை அணுக்கரு செயல்முறை வெப்பத்தை நேரடியாக செலுத்துகிறது.

இந்த தொழில்நுட்பம் மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் வடிவமைக்கப்பட்டு இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் கூட்டு பொறியியல் முயற்சியாக செயல்படுத்தப்பட்டது.

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!



# பாகிஸ்தான், சீன நாணய மதிப்பு உயர்வு, இந்திய ரூபாய் மதிப்பு சரிவு - என்ன காரணம்?

கடந்த 2014-ஆம் ஆண்டு மே 26-ஆம் தேதி நரேந்திர மோதி முதன்முதலில் இந்தியாவின் பிரதமரான போது, ஓர் அமெரிக்க டாலரின் மதிப்பு 58.94 இந்திய ரூபாயாக இருந்தது. மோதி தனது இரண்டாவது பதவிக்காலத்தை வென்றபோது, ரூபாயின் மதிப்பு 17 சதவீதத்திற்கும் மேலாகச் சரிந்து, 2019-ஆம் ஆண்டு மே 30-ஆம் தேதி டாலருக்கு எதிராக 69.37 என்ற நிலையை எட்டியது.

2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நரேந்திர மோதி தனது மூன்றாவது பதவிக்காலத்தை ஏற்றபோது, ரூபாயின் மதிப்பு 83.38 என்ற நிலையை எட்டியிருந்தது. இதன் பொருள், 2019 மற்றும் 2024-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ரூபாயின் மதிப்பு 20 சதவீதத்திற்கும் மேலாகச் சரிந்துள்ளது. தற்போது, அவரது மூன்றாவது பதவிக் காலம் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில், ரூபாயின் மதிப்பு டாலருக்கு எதிராக சுமார் 96 என்ற அளவில் உள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளில் இது 14.75 சதவீதம் சரிவாகும். ஒட்டுமொத்தமாக, பிரதமர் நரேந்திர மோதியின் 12 ஆண்டு காலப் பதவிக்காலத்தில் ரூபாயின் மதிப்பு 62.33 சதவீதம் சரிந்துள்ளது. ஆனால், முந்தைய அரசாங்கங்களின்போது ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது மன்மோகன் சிங்கின் 10 ஆண்டு கால ஆட்சியில் (2004-2014), ரூபாய் 31.65 சதவீதம் சரிந்தது.

மே 2014-ல் மன்மோகன் சிங் பிரதமரானபோது, ஒரு டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 45.31 ரூபாயாக இருந்தது, அவர் பதவி விலகியபோது, ரூபாயின் மதிப்பு சுமார் 60 ஆகக் குறைந்திருந்தது. இந்திய ரூபாயின் பலவீனம் குறித்து தற்போது கடுமையான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. பொதுவாக, ஒரு நாட்டின் பொருளாதாரம் அதன் போட்டியாளர்களை விட வேகமாக வளர்ந்தால், அதன் நாணயம் வலுப்பெறும். ஆனால் இந்தியாவின் விஷயத்தில் இது அவ்வாறு இல்லை. ஒரு காலத்தில் மோதியின் பொருளாதாரக் கொள்கைகளின் ரசிகராக இருந்த சுர்ஜித் பல்லாவும் இதே கேள்வியைக் கேட்கிறார்: பொருளாதாரம் செழிப்பாக இருக்கும்போது, ரூபாய் ஏன் வீழ்ச்சியடைகிறது?

சமீபத்திய ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் சீனாவை விட அதிகமாக இருந்து வருகிறது என்று தரவுகள் காட்டுகின்றன. இருப்பினும், இதையும் மீறி, கடந்த சில ஆண்டுகளாக ரூபாய் ஆண்டுதோறும் பலவீனமடைந்து வருகிறது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியாவிலிருந்து வரும் பொருட்களுக்குக் கடுமையான இறக்குமதி வரிகளை விதித்தபோது, கடந்த ஆண்டு இந்த வீழ்ச்சி மேலும் தீவிரமடைந்தது. அதன்பின், இரான் போரின் விளைவாக ஏற்பட்ட எரிசக்தி நெருக்கடி, ரூபாயை புதிய சாதனை அளவிலான வீழ்ச்சிக்குத் தள்ளியது.

மார்ச் மாதத்தின் பிற்பகுதியிலும் ஏப்ரல் மாதத்தின் முற்பகுதியிலும், இந்திய ரிசர்வ் வங்கி ரூபாயை வலுப்படுத்தத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தது. இருப்பினும், இந்த நடவடிக்கைகள் சிறிய அளவிலான நிவாரணத்தை மட்டுமே அளித்தன, மேலும் நாட்டிலிருந்து டாலர் வெளியேறுவதையும் தடுக்கவில்லை.

மோதி அரசாங்கத்தின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்ரமணியனும், ரூபாயின் பலவீனம் இரான் போரினால் மட்டுமே ஏற்படவில்லை என்று நம்புகிறார். மே 26 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில், 'போருக்கு முந்தைய இரண்டு-மூன்று ஆண்டுகளில், துருக்கியைத் தவிர வேறு எந்த நாட்டின் நாணயமும் இந்திய ரூபாயைப் போல இவ்வளவு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைச் சந்திக்கவில்லை. அதைக் காப்பாற்றுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி அசாதாரண அளவில் தலையிட்டபோதும், அதனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. 2022-க்கும் பிப்ரவரி 2026-க்கும் இடையில், ரூபாய் 20 சதவீதத்திற்கும் மேல் வீழ்ச்சியடைந்தது, அதே நேரத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒவ்வொரு முயற்சியும் தோல்வியடைந்தது.'' என அரவிந்த் சுப்ரமணியன் எழுதியிருந்தார்.

இந்திய ரூபாய் பலவீனமடைந்துள்ள நிலையில், பல ஆசிய நாடுகளின் நாணயங்கள் வலுவடைந்துள்ளன.

மலேசியா

மலேசியாவின் நாணயமான ரிங்கிட் கடந்த ஆண்டு 9.25% வலுவடைந்து, அதே சமயம் இந்திய ரூபாய் அதே



ஆண்டில் 4.40% பலவீனமடைந்தது. மலேசிய நாணயமான ரிங்கிட், கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வலுவான நிலையை எட்டியுள்ளது. ஜனவரி 2025-ல், அதன் மதிப்பு கிட்டத்தட்ட 4.50 ஆகக் குறைந்தது, ஆனால் அதன்பிறகு ஒரு மீட்சியைக் கண்டுள்ளது. இந்த எழுச்சி, ரிங்கிட்டை தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக வேகமாக வலுவடையும் நாணயமாக மாற்றியுள்ளது.

மலேசியாவின் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்து வருவது போன்ற பல உலகளாவிய காரணிகள் இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றன. மலேசிய நாணயத்தின் வலிமைக்கான காரணங்களை விளக்கி, நிக்கெய் ஆசியா தனது அறிக்கையில், 'நாட்டின் நடப்புக் கணக்கு உபரி, வலுவான உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் 2025-ல் கணிக்கப்பட்ட 4.9 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆகியவையும் இந்த அடிப்படைப் பொருளாதாரக் காரணங்களுக்கு பின்னால் உள்ளன. அந்நிய நேரடி முதலீடும் அதிகரித்துள்ளது, இது உள்ளூர் நாணயத்திற்கான தேவையை வலுப்படுத்துகிறது. 2025-ஆம் ஆண்டு ஜூலை முதல் அக்டோபர் வரையிலான மூன்றாவது காலாண்டில் நிகர வெளிநாட்டு முதலீட்டு வரவு 8.5 பில்லியன் ரிங்கிட்டாக உயர்ந்தது. இது இரண்டாவது காலாண்டில் வெறும் 1.6 பில்லியன் ரிங்கிட்டாக மட்டுமே இருந்தது.'' என குறிப்பிட்டுள்ளது.

நிக்கெய் ஆசியாவிடம் பேசிய தென்கிழக்கு ஆசியப் பொருளாதார நிபுணர் டோரிஸ் லியு, 'மலேசியாவின் வணிகச் சூழல் குறித்த வளர்ந்து வரும் நம்பிக்கையே ரிங்கிட்டின் வலிமைக்குக் காரணமாகும். லட்சியமிக்க தொழில்துறைத் திட்டங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் விரிவாக்கம், சீனா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், மற்றும் அமெரிக்காவுடனான தற்போதைய வர்த்தகப் பதற்றங்களுக்கு மத்தியில் மலேசியாவின் உத்தி நிலைப்பாடு ஆகியவற்றின் விளைவாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது,' என்று கூறினார்.

சீனா

சீனாவின் நாணயமான ரென்மின்பி (யுவான்), அமெரிக்க டாலருக்கு எதிராக கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வலுவான நிலையை எட்டியுள்ளது. மே 11 அன்று, சீன மக்கள் வங்கி, ஒரு டாலருக்கு 6.8467 என்ற தினசரி ரென்மின்பி மாற்று விகிதத்தை நிர்ணயித்தது. இது மார்ச் 2023-க்குப் பிறகு எட்டப்பட்ட மிக வலுவான நிலையாகும். அமெரிக்காவும் ஐரோப்பாவும், சீனாவின் அதிகரித்து வரும் வர்த்தக உபரியின் காரணமாக, அது தனது நாணயத்தை செயற்கையாக பலவீனப்படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளன. கடந்த ஆண்டு, யூரோவுக்கு எதிராக ரென்மின்பி சுமார் எட்டு சதவீதம் பலவீனமடைந்தது, இது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சீனாவின் ஏற்றுமதி சாதனை அளவை எட்ட உதவியது.

ரென்மின்பி இன்னும் சுமார் 20 சதவீதம் குறைவான மதிப்பில் இருப்பதாகவும், எதிர்காலத்தில் டாலருக்கு எதிராக மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் கோல்ட்மேன் சாக்ஸ் மதிப்பிடுகிறது. சீனாவில் பல ஆண்டுகளாக நிலவும் பணவாட்டமும், யுவான் அதன் உண்மையான மதிப்பை விட பலவீனமாகவே உள்ளது என்ற கவலைகளைத் தூண்டியுள்ளது.

சிங்கப்பூர்

சிங்கப்பூரின் நாணயம் சிங்கப்பூர் டாலர் என்று அழைக்கப்படுகிறது. சிங்கப்பூர் டாலர், அமெரிக்க டாலருக்கு எதிராகவும் வலுப்பெற்றுள்ளது. கடந்த ஐந்து மாதங்களில் இது சுமார் ஒரு சதவீதம் மதிப்பு உயர்ந்துள்ளது. தற்போது, ஒரு அமெரிக்க டாலர் 1.28 சிங்கப்பூர் டாலர்களுக்குச் சமம். உண்மையில், உலகளாவிய செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி சிங்கப்பூரின் பொருளாதாரத்தை மேலும் வலுப் படுத்தியுள்ளது. இந்த வார திங்கட்கிழமை, சிங்கப்பூர் தனது முதல் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, ஏப்ரல் மாதத்தில் மதிப்பிடப்பட்ட 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு 6 சதவீதமாக இருந்ததாக அறிவித்தது.

கடந்த ஆண்டு, சிங்கப்பூரின் பொருளாதாரம் ஐந்து சதவீதம் வளர்ச்சி கண்டது. இது முன்னர் மதிப்பிடப்பட்ட 4.8 சதவீதத்தை விட அதிகமாகும். ஏப்ரல் மாதத்தில் சிங்கப்பூர் மிகவும் வலுவான வர்த்தகப் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்தது. நாட்டின் முக்கிய எண்ணெய் அல்லாத உள்நாட்டு ஏற்றுமதிகள் ஏப்ரல் மாதத்தில் 24.5 சதவீதம் வளர்ச்சி கண்டன. இது பிப்ரவரி 2012-க்குப் பிறகு பதிவான மிக வேகமான வளர்ச்சி விகிதமாகும்.

மின்னணு ஏற்றுமதிகளும் 66.7 சதவீதம் என்ற உயர்வைப் பதிவு செய்தன. இது ஆசியா முழுவதும் காணப்படும் பரந்த செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில்துறை வளர்ச்சியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

பாகிஸ்தான்

பாகிஸ்தானிய ரூபாயும் கூட நிலையாக உள்ளது. கடந்த ஆறு மாதங்களில், பாகிஸ்தானிய ரூபாய் அமெரிக்க டாலருக்கு எதிராக 1.31 சதவீதம் வலுப்பெற்றுள்ளது, அதே நேரத்தில் இந்திய ரூபாய் இந்த ஆண்டு ஆறு சதவீதத்திற்கும் மேலாக மதிப்பிழந்துள்ளது. தற்போது, ஒரு டாலரின் மதிப்பு 278 பாகிஸ்தானிய ரூபாய் ஆகும். கலீஜ் டைம்ஸ் செய்தியிடம் பேசிய செஞ்சுரி ஃபைனான்சியல் நிறுவனத்தின் தலைமை முதலீட்டு அதிகாரி விஜய் வலேச்சாவின் கூற்றுப்படி, பிராந்திய பதற்றங்கள் இருந்தபோதிலும், பாகிஸ்தானிய ரூபாய் சமீபத்திய மாதங்களில் நிலையாக இருந்து வருகிறது.

இதற்கு ஒரு முக்கிய காரணம், மார்ச் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட நடப்புக் கணக்கு உபரியாகும். இது, அதிக எண்ணெய் விலைகள் மற்றும் புவிசார் அரசியல் அபாயங்களுக்கு மத்தியில் அந்நிய செலாவணிக் கையிருப்பு மீதான அழுத்தத்தைக் குறைத்தது. கூடுதலாக, சௌதி அரேபியாவின் ஆதரவும், நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக யூரோபாண்ட் சந்தைக்கு பாகிஸ்தான் மீண்டும் திரும்பியதும் முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப் படுத்தி, குறுகிய கால நிதி திரட்டல் குறித்த கவலைகளைத் தணித்துள்ளன.

'வலுவான உள்நாட்டுப் பொருளாதார மீட்சியை விட, மேம்பட்ட வெளிப்புறச் சூழல்களின் விளைவாகவே பாகிஸ்தானிய ரூபாயின் நிலைத்தன்மை அமைந்துள்ளது. இந்த நாணய மதிப்பு உயர்வு மேலும் தொடரலாம், ஆனால் பெரும்பாலான நல்ல செய்திகள் ஏற்கனவே சந்தை விலைகளில் பிரதிபலித்துவிட்டன. எண்ணெய் விலைகள் மென்மையாக நீடித்தால், அந்நியச் செலாவணிக் கையிருப்பு மேம்பட்டால், வெளிநாட்டிலிருந்து வரும் பணம் வலுவாக இருந்தால், மற்றும் வெளிநாட்டு நிதியுதவி தொடர்ந்தால், பாகிஸ்தானிய ரூபாய் மேலும் வலுப்பெறக்கூடும்,' என்றார் விஜய் வலேச்சா.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சியின் விளைவு என்ன?

நாணய மதிப்பின் சரிவு, இறக்குமதிகளில் மிகவும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ரூபாயின் மதிப்பு குறையும்போது, எண்ணெய், சமையல் எரிவாயு, உரங்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி விலை அதிகரிக்கிறது. இந்தியா இந்தப் பொருட்களில் பெரும்பாலானவற்றை வெளிநாடுகளிலிருந்து வாங்குகிறது. பலவீனமான ரூபாய், உலகளாவிய முதலீட்டாளர்களை புதிய சந்தைகளைத் தேடத் தூண்டுகிறது, இது அவர்களின் வருமானத்தைப் பாதிக்கிறது.

மே மாத இறுதிக்குள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தைகளில் சாதனை அளவாக 23 பில்லியன் டாலர் மதிப்புள்ள பங்குகளை விற்றனர். உள்ளூர் பங்குச் சந்தையிலிருந்து வெளிநாட்டு மூலதனம் வெளியேறியது, நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமநிலைப் படுத்துவதை இந்தியாவிற்குச் சவாலானதாக ஆக்கியுள்ளது. இருப்பினும், இதற்கு ஒரு மறுபக்கமும் உண்டு. இந்தியப் பொருட்களும் சேவைகளும் வெளிநாடுகளில் மலிவாகக் கிடைப்பதால், பலவீனமான ரூபாய் இந்திய ஏற்றுமதிகளை மேலும் போட்டித்தன்மை வாய்ந்ததாக ஆக்குகிறது.

பலவீனமான ரூபாய், வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள் அனுப்பும் பணத்தைச் சார்ந்துள்ள குடும்பங்களுக்கும் நன்மை அளிக்கிறது, ஏனெனில் ஒவ்வொரு டாலருக்கும் அதிக ரூபாய் கிடைக்கிறது.

– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு

நன்றி: பிபிசி

# தங்கம், வெள்ளி விலை 7 மாதங்களில் இல்லாத அளவுக்கு குறைய என்ன காரணம்?

அஜித் காட்வி

பதவி,பிபிசி செய்தியாளர்

இரான் மற்றும் அமெரிக்கா இடையே தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தங்கம் மற்றும் வெள்ளி விலை சரிவடைந்துள்ளது.

ஹோர்மூஸ் நீரிணை முடக்கத்தின்போது உச்சத்தை தொட்ட கச்சா எண்ணெய், தங்கம் மற்றும் வெள்ளியின் விலைகள் தற்போது கணிசமாக சரிந்துள்ளன. புதன்கிழமை சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை கடந்த 7 மாதங்களில் இல்லாத சரிவைச் சந்தித்தது. அதேபோல வெள்ளியின் விலையும் கடந்த ஜனவரி மாதம் இருந்த நிலையில் இருந்து பாதியாகச் சரிந்துள்ளது. தற்போது இந்த இரண்டு உலோகங்களின் விலைகளும் கடந்த நவம்பர் மாதத் திற்குப் பிறகு குறைவான நிலையை எட்டியுள்ளன.

இந்திய புல்லியன் மற்றும் நகை வணிகர்கள் சங்க இணையதளத்தில் உள்ள தரவுகளின்படி, வியாழக்கிழமை 99.9% தூய்மை உள்ள 10 கிராம் தங்கத்தின் விலை ரூ.1.40 லட்சமாகவும் ஒரு கிலோ வெள்ளியின் விலை ரூ.2.15 லட்சமாக இருந்தது.

ஜனவரி மாதத்தின் இறுதியில், தங்கத்தின் விலை 10 கிராமுக்கு ரூ.2 லட்சத்தை எட்டியது. அதே போல வெள்ளியின் விலை ஒரு கிலோவுக்கு ரூ.4.04 லட்சத்தை எட்டியது. அதன்பிறகு இவற்றின் விலை சீராக சரிந்தது.

ராய்ட்டர்ஸ் செய்தியின்படி, கடந்த புதன்கிழமை சர்வதேச சந்தையில் கடந்த 7 மாதங்களில் இல்லாத அளவிற்கு தங்கத்தின் விலை ஒரு அவுன்ஸ் (28.35 கிராம்) 4,000 டாலருக்கும் கீழே சரிந்தது. புதன்கிழமை மட்டும் தங்கம் 3.3 சத விகிதம் அதன் விலை குறைந்தது.

அதேநேரத்தில் அமெரிக்க டாலரின் மதிப்பும் வலுவடைந் துள்ளது. இதனால் டாலர் தவிர வேறு எந்த நாணயத்திலும் தங்கம் வாங்குவது விலை உயர்ந்த ஒன்றாக உள்ளது.

தங்கத்தை மட்டும் சேமித்து வைப்பது எந்த விதமான வருமா னத்தையும் வட்டியையும் கொடுக்காது. எனவே வட்டி விகிதம் உயரும்போது தங்கம் மீதான முக்கியத்துவம் குறைகிறது.

கடந்த ஜனவரி மாதம் தங்கத்தின் விலை ஒரு அவுன்சிற்கு 5,594 டாலர் என்கிற புதிய வரலாற்று உச்சத்தை எட்டியது. அப்போதைய நிலையுடன் ஒப்பிடுகையில் தற்போது அவுன்ஸ் ஒன்றுக்கு 1,600 டாலர் வரை தங்கம் விலை சரிந்துள்ளது.

இந்தச் சூழலைப் புரிந்துகொள்ள பிபிசி நகை வணிகத் துறை நிபுணர்கள் மற்றும் வர்த்தகர்களிடம் பேசியது.

தங்கம் மற்றும் வெள்ளியின் விலையை எது பாதிக்கிறது?

அமெரிக்காவில் வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இந்த அரிய உலோகங்கள் மீது பெரிய தாக்கம் செலுத்துகிறது.

கடந்த இரண்டு நாட்களில் மல்டி கமாடிட்டி எக்ஸ்சேஞ்சில் தங்கத்தின் விலை 10 கிராமுக்கு 6,000 ரூபாய் சரிந்தது. வெள்ளியின் விலையும் ரூ.15,500 வரை சரிந்தது.

இது தொடர்பாக ஹெச்டிஎஃப்சி செக்யூரிட்டிஸில் பணிபுரியும் சரக்கு சந்தை ஆய்வாளரான செள மில் காந்தி பிபிசியிடம் பேசு கையில், 'அமெரிக்க மத்திய வங்கியில் கடந்த வாரம் கூட்டம்



ஒன்று நடைபெற்றது. அதில் புதிய தலைவர் கெவின் வார்ஷ், வட்டி விகிதம் மீது கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருந்தார்.' என்றார்.

'அமெரிக்காவில் கடந்த 5 ஆண்டு களாக பணவீக்கம் அதிகமாக இருந்து வருகிறது. எனவே பணவீக்க த்தைக் கட்டுக்குள் வைப்பதே அமெரிக்க மத்திய வங்கியின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இதனால் இந்த ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு முறை வட்டி விகிதங்களை அமெரிக்க மத்திய வங்கி உயர்த்தக் கூடும். வட்டி விகிதங்கள் உயர்வதற்கான அறிகுறிகள் தெரிவதால் தங்கத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் வெளியே எடுக்கப்பட்டு டாலரில் முதலீடு செய்யப்படுகிறது.' என்று அவர் தெரிவித்தார்.

தற்போது டாலர் இன்டெக்ஸ் 13 மாதங்களில் இல்லாத உச்ச த்தை எட்டியுள்ளதாகக் கூறும் அவர், இதனால் தங்கம், வெள்ளி மற்றும் அனைத்து அடிப்படை உலோகங்களும் விற்கப்படுவதாக தெரிவித்தார்.

சந்தை நிலவரத்தின்படி அமெரிக்க மத்திய வங்கி செப்டம்பர் மற்றும் டிசம்பரில் வட்டி விகிதங்களை உயர்த்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி மாதம் அடைந்த உச்சத்தில் இருந்து தங்கத்தைப் போலவே வெள்ளியின் விலையும் கணிசமாக குறைந்துள்ளதாக செள மில் காந்தி குறிப்பிடுகிறார்.

'அமெரிக்கா மற்றும் இரான் இடையே 60 நாள் போர்நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இது எவ்வளவு காலத்திற்கு தாக்குப் பிடிக்கும் எனச் சொல்வது கடினம். எனவே தலைப்புச் செய்திகளைப் பொருத்து தங்கம் மற்றும் கச்சா எண்ணையின் விலைகள் கூடலாம் அல்லது குறையவும் செய்யலாம்.' என்றார் அவர்.

நகை வியாபாரிகளின் நிலை என்ன?

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை சரிவதால் இந்தியாவில் தங்கம் விற்பனை அதிகரிக்குமா என்பது தொடர்பாக ஆமதாபாத் சோக்சி மகாஜனைச் (நகை வியாபாரிகள் அமைப்பு) சேர்ந்த ஹேமந்த் சத்வாரா விளக்கினார்.

தங்கம் மற்றும் வெள்ளியின் விலைகள் சரிந்தாலும் தற்போது வாடிக்கையாளர்கள் மத்தியில் அவற்றை வாங்குவதற்கான தேவை எழவில்லை என்று அவர் தெரிவித்தார்.

'தற்போதைய சூழலில் தங்கம் மற்றும் வெள்ளி சந்தையில் மந்தநிலை நிலவுகிறது என்று கூறலாம். பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன, எனவே மக்கள் தங்கள் வசம் இருந்த பணத்தை பள்ளிக் கட்டணம், புத்தகங்கள் போன்றவற்றிக்குச் செலவு செய்திருப்பார்கள். அதனால் சில்லறை வணிகத்தில் தங்கம் விற்பனை குறைவாகவே இருக்கிறது,' என்று அவர் கூறினார்.

அதோடு கூடுதலாக, தங்கம் மற்றும் வெள்ளி விலை உயர்வு மற்றும் அதன் மீதான இறக்குமதி வரி அதிகரிப்பு ஆகியவற்றால் வியாபாரம் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

மூன்று நாட்களாக டாலரால் தான் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை சரிந்ததாகக் கூறும் ஹேமந்த் சத்வாரா, 'அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதங்கள உயர்த்தினால் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை சரியும், அதே வேளையில் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டால் அரிய உலோகங்களின் விலை உயரும்.' என்றார்.

தங்கம் விலை குறைந்தாலும் வாங்க ஆர்வம் குறைவாக இருப்பது ஏன்?

ஹேமந்த் சத்வாராவின் கூற்றுப்படி ஜூன் 25 அன்று ஆமதாபாத்தில் 10 கிராம் தங்கத்தின் ரூ.1.44 லட்சமாகவும் ஒரு கிலோ வெள்ளியின் விலை ரூ.2.19 லட்சமாகவும் இருந்தது.

வாடிக்கையாளர்கள் வாங்குகிற போது இதன் மீது 3% ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், 'தற்போது தங்கம் மற்றும் வெள்ளி சந்தையில் எந்த ஆர்டர்களும் வருவதில்லை. தங்க நகைகள் வாங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோதி கேட்டுக்கொண்ட பிறகு நுகர்வு கணிசமாக குறைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சிறிய நகை உற்பத்தியாளர்கள் கூட வேலை இல்லாமல் இருக்கின்றனர்.' என்றார்.

வழக்கமாக தங்கம் விலை சரிகிறபோது சந்தையில் வியாபாரம் அதிகரிக்கும் எனக் கூறும் ஹேமந்த் சத்வாரா, இந்த முறை போதிய வியாபாரம் இல்லை எனத் தெரிவிக்கிறார். இதர துறைகளிலும் மந்தநிலை நிலவுகிறபோது அதற்கு நகைத் துறையும் விதிவிலக்காக இருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் தொடங்கும் பண்டிகை காலகட்டம் தீபாவளி வரை நிலைக்கும். அப்போது வியாபாரம் அதிகரிக்கலாம் என ஹேமந்த் சத்வாரா நம்புகிறார். அதே தற்போதைய சூழலில் முன்கூட்டியே எந்த ஆர்டரும் வழங்கப்படவில்லை என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

வெள்ளி விலை சரிந்தது ஏன்?

கடந்த ஆண்டு வெள்ளியின் விலை உயர்ந்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது. எனினும் தற்போது அது கணிசமாக சரிந்துள்ளது.

அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதங்களை உயர்த்தும் என்பது ஒரு காரணம். அதோடு அமெரிக்கா மற்றும் இரான் இடையேயான பதற்றங்கள் தணிந்ததால் வெள்ளி மீது கிடைத்துவந்த கூடுதல் லாபமும் (ரிஸ்க் ப்ரீமியம்) சரிந்துள்ளது.

தங்கத்தைப் போல வெள்ளி எந்த நிலையான வட்டி அல்லது வருமானம் வழங்காது. அதோடு ஒப்பிடுகையில் அமெரிக்கப் பத்திரங்களில் இருந்து கிடைக்கும் லாபம் அதிகமாக உள்ளது. எனவே முதலீட்டாளர்கள் கூடுதல் லாபம் பெற வேண்டும் என்பதற்காக வெள்ளியில் இருந்து விலகிச் சென்று பத்திரங்களை நோக்கி நகர்ந்தனர்.

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

**நன்றி: பிபிசி**

www.kathiroli-media.ca

## சத்தான.. எலுமிச்சை இஞ்சி ரசம் - எப்படி செய்றது-ன்னு பாத்து ட்ரை பண்ணுங்க...

உங்கள் வீட்டில் உள்ளோர் ரசப் பிரியர்களா? தினமும் உங்கள் வீட்டில் ரசம் செய்வீர்களா? அதுவும் எப்போதும் ஒரே மாதிரியான சுவையில் தான் ரசம் செய்வீர்களா? அப்படியானால் ஒருமுறை எலுமிச்சை இஞ்சி ரசத்தை செய்யுங்கள். இந்த ரசம் சுவையானது மட்டுமின்றி, சத்தானதும் கூட. அதுவும் சௌிமான பிரச்சனைகளால் சிரமப்படும் போது



இந்த ரசத்தை செய்து சாதத்துடனோ அல்லது சூப்பாகவோ எடுத்தால், நல்ல நிவாரணம் கிடைக்கும்.

உங்களுக்கு இந்த எலுமிச்சை இஞ்சி ரசத்தை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே எலுமிச்சை இஞ்சி ரசம் ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேவையான பொருட்கள்:

வேக வைப்பதற்கு...

★ துவரம் பருப்பு - 3 டேபிள் ஸ்பூன்

★ தண்ணீர் - 1 1/2 கப்

இடிப்பதற்கு...

★ இஞ்சி - 1 இன்ச்

★ மிளகு - 1/2 டீஸ்பூன்

★ சீரகம் - 1/4 டீஸ்பூன்

தாளிப்பதற்கு...

★ எண்ணெய் - 1 டீஸ்பூன்

★ கடுகு - 1/4 டீஸ்பூன்

★ வரமிளகாய் - 1

★ கறிவேப்பிலை - 1 கொத்து

★ இடிச்ச இஞ்சி

★ பச்சை மிளகாய் - 2 (கீறியது)

★ பெரிய தக்காளி - 1 (நறுக்கியது)

★ உப்பு - சுவைக்கேற்ப

★ கறிவேப்பிலை - 1 கொத்து

★ கொத்தமல்லி - சிறிது

★ தண்ணீர் - 3-4 கப்

★ மஞ்சள் தூள் - 1/4 டீஸ்பூன்

★ வேக வைத்த பருப்பு நீர்

★ வேக வைத்து மசித்த பருப்பு

★ கொத்தமல்லி - சிறிது

★ இடிச்ச மிளகு, சீரகம்

★ பெரிய எலுமிச்சை - 1

செய்முறை:

★ முதலில் குக்கரில் துவரம்பருப்பை நன்கு நீரில் கழுவி சேர்த்து, அத்துடன் 1 1/2 கப் நீரை ஊற்றி, குக்கரை மூடி அடுப்பில் வைத்து, 3-4 விசில் விட்டு இறக்க வேண்டும்.

★ விசில் போனதும் குக்கரைத் திறந்து, பருப்பு நீரை தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் பருப்பை நன்கு மசித்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

★ அடுத்து இடி உரலில் இஞ்சியை சேர்த்து நன்கு தட்டி தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

★ பின் அதே உரலில் மிளகு, சீரகத்தை சேர்த்து நன்கு ஒன்றிரண்டாக தட்டி, அதையும் தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

★ பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, வரமிளகாய், கறிவேப்பிலை சேர்த்து தாளிக்க வேண்டும். ★ பிறகு அதில் இடித்து வைத்துள்ள இஞ்சியை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். ★ பின் அதில் பச்சை மிளகாயை சேர்த்து வதக்கி, நறுக்கிய தக்காளியை சேர்த்து, சுவைக் கேற்ப உப்பு தூவி, தக்காளி மென்மையாகும் வரை வதக்க வேண்டும். ★ அதன் பின் அதில் கறிவேப்பிலை, கொத்தமல்லியைத் தூவி வதக்கி, 3 கப் நீரை ஊற்றி, மஞ்சள் தூள் கலந்து விட வேண்டும்.

★ அடுத்து அதில் வேக வைத்த பருப்பு நீர் மற்றும் மசித்து வைத்துள்ள பருப்பை சேர்த்து, கொத்தமல்லியைத் தூவி நுரைக் கட்ட வேக வைக்க வேண்டும். ★ ரசம் நுரைக்கட்ட தொடங்கியதும், அதில் இடித்து வைத்துள்ள மிளகு, சீரகத்தை சேர்த்து கலந்து, இறக்கி எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்தால், சுவையான எலுமிச்சை இஞ்சி ரசம் தயார்.






## கொங்கு ஸ்பெஷல் முட்டை சிந்தாமணி ரெசிபி - 4 முட்டை இருந்தா இத செஞ்சு பாருங்க

முட்டை என்றால் யாருக்குத்தான் பிடிக்காது. பொதுவுங்க முட்டையை குழம்பு, பொடிமாஸ் அல்லது ஆம்லெட் போன்றவற்றை செய்துதான் சாப்பிடுவோம். ஆனால் முட்டையை நூற்றுக்கணக்கான வழிகளில் சமைக்கலாம். அந்த வகையில் நாம் பார்க்கப்போவது முட்டை சிந்தாமணி. பொதுவாக கொங்கு ஸ்பெஷல் சிந்தாமணியை சிக்கனில்தான் செய்வார்கள். ஆனால் முட்டையிலும் சிந்தாமணி செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? இது செய்வதற்கு மிகவும் ஈஸியாக இருப்பதோடு, சுவையாகவும் இருக்கும்.

இந்த முட்டை சிந்தாமணியை ஒருமுறை உங்கள் வீட்டில் உள்ளோருக்கு செய்து கொடுத்தால், அடிக்கடி இதை செய்து கொடுக்க கேட்பார்கள். அந்த அளவில் இதன் சுவை பிரமாதமாக இருக்கும். நன்கு காரசாரமாக இருப்பதால், சளி பிடித்திருக்கும் போது சாப்பிட அருமையாக இருக்கும். இது சாதம், பிரியாணி மட்டுமின்றி சப்பாத்தி, புரோட்டாவுடன் சாப்பிடவும் அருமையாக இருக்கும்.

உங்களுக்கு கொங்கு ஸ்டைல் முட்டை சிந்தாமணியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே முட்டை சிந்தாமணி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேவையான பொருட்கள்:

- 5 வேகவைத்த முட்டை

- 3 ஸ்பூன் நல்லெண்ணெய்

- 4 கொத்து கறிவேப்பிலை

- 1 கப் நறுக்கிய சின்ன வெங்காயம்

- 12 விதை நீக்கிய வர மிளகாய்

- 1 ஸ்பூன் இஞ்சி-பூண்டு விழுது

- 1/4 கப் துருவிய தேங்காய்

- 1/2 ஸ்பூன் மஞ்சள் தூள்

- 1 ஸ்பூன் மிளகாய் தூள்

- தேவையான அளவு உப்பு

செய்முறை:

- முட்டையை முதலில் வேக வைத்து உரித்து சின்ன சின்ன துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். மஞ்சள் கருவை தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

- ஒரு கடாயில் எண்ணெயை நன்றாகச் சூடாக்கவும். அதில் கறிவேப்பிலை மற்றும்



விதை நீக் கிய வர மிளகாயைச் சேர்க்கவும்.

- பின்னர் நறுக்கிய சின்ன வெங்காயம் மற்றும் உப்பு ஆகியவற்றைச் சேர்க்கவும். சின்ன வெங்காயம் மென்மையாகும் வரை வதக்கவும்.

- பின்னர் இஞ்சி-பூண்டு விழுதை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.

- அதன்பின் மிளகாய் தூள் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து நன்கு கிளறவும்.

- மசாலா பச்சை வாசனை போனதும் வேக வாய்த்த முட்டை மற்றும் கால் கப் தண்ணீர் சேர்க்கவும். பாத்திரத்தை மூடி வைத்து, சில நிமிடங்கள் வேக வைக்கவும்.

- பின்னர் துருவிய தேங்காயைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். ஒரு நிமிடம் வேக வைக்கவும்.

- இறுதியாக தனியாக எடுத்து வைத்த மஞ்சள் கருவை சேர்த்து கறிவேப்பிலையை தாராளமாக தூவி அடுப்பை அணைத்தால் சுவையான முட்டை சிந்தாமணி ரெடி!


உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்




www.kathiroli-
media.ca

# சீனாவில் பரபரப்பு: 109 மாடி கட்டிடம் மீது மோதிய சிறிய ரக விமானம்

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள மத்திய தொழில் மாவட்டத்தில் 109 மாடி கொண்ட வணிக கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடத்தில் அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள் என பல செயல்பட்டு வருகின்றன. பீஜிங்கில் உள்ள மிகவும் உயரமான கட்டிடம் இதுவாகும்.

இந்நிலையில், இந்த



அடுக்குமாடி கட்டிடம் மீது நேற்று சிறிய ரக விமானம் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அந்த கட்டிடத்தின் கண்ணாடிகள் உடைந்தன. மேலும், சிறிய ரக விமானம் அடுக்குமாடி கட்டிடத்திற்குள் புகுந்தவாறு நின்றது. இந்த சம்பவம் குறித்து விரைந்து சென்ற போலீசார், விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உங்கள் வியா–பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்




# ஐதராபாத் சாலைக்கு தனது பெயர் சூட்டப்பட்டதற்கு நன்றி தெரிவித்த டிரம்ப்

தெலுங்கான மாநில தலைநகர் ஐதராபாத்தில், அமெரிக்க தூதரகம் அருகே அமைந்துள்ள சாலையின் பெயர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் பெயரில், 'டொனால்டு டிரம்ப் அவென்யூ' என மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தெலுங்கானாவில் முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி தலைமையில் காங்கிரஸ் ஆட்சியில் நடக்கிறது. தலைநகர் ஐதராபாதில் அமெரிக்க தூதரகம் அருகே அமைந்துள்ள சாலையின் பெயரை, 'டொனால்டு டிரம்ப் அவென்யூ' என்று பெயர் மாற்றம் செய்ய ரேவந்த் ரெட்டி முடிவு செய்தார். இதற்கான முயற்சி கடந்த ஆண்டு டிசம்பரில் துவங்கப்பட்டது. அப்போது இந்திய இறக்குமதிகளுக்கு அமெரிக்கா கூடுதல் வரி விதித்தது போன்ற பிரச்னைகளால் இரு தரப்பு உறவு மோசமடைந்தது.

இதனால் ஐதராபாத் சாலைக்கு டிரம்ப் பெயர் சூட்டும் திட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. தற்போது பதற்றம் குறைந்து இரு தரப்பு உறவுகள் சீரடைந்துள்ள நிலையில், இந்த திட்டம் மீண்டும் உயிர் பெற்றது.

ஐதராபாத்திற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவின் அடையாளப்பூர்வமான அங்கீகாரமாகவே இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இந்த நடவடிக்கை நகரின் உலகளாவிய மதிப்பை வலுப்படுத்தவும், இந்தியா-அமெரிக்கா உறவில் அதன் பங்கை முன்னிலைப்படுத்தவும் மேற்கொள்ளப்படும் பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் ஐதராபாத் சாலைக்கு தனது பெயர் சூட்டப்பட்டதற்கு அமெரிக்கா ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நன்றி தெரிவித்தார்.



இதுதொடர்பாக அந்த விழாவின் புகைப்படத்தை தனது ட்ரூத் சோஷியல் எக்ஸ் தளத்தில் பகிர்ந்து, அவர் கூறியதாவது:-

'இந்தியாவின் ஐதராபாத்தில் உள்ள புதிய டொனால்ட் டிரம்ப் அவென்யூ. இதுபோன்று கௌரவிக்கப்படும் முதல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ஜே. டிரம்ப். நன்றி'.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் கடந்த 24 மணி நேரத்தில் 5 முறை நிலநடுக்கம்: மக்கள் அச்சம்




பாகிஸ்தானில் நேற்று ஒரே நாளில் அடுத்தடுத்து மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. அவை ரிக்டர் அளவுகோலில் 4.5, 4.7 மற்றும் 5.3 என பதிவாகியதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலையில், இன்று காலை இந்திய நேரப்படி 6.15 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.3 ஆக பதிவானது.

இதனைத் தொடர்ந்து, இன்று காலை 8.36 மணியளவில் இரண்டாவது முறையாக ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவானது.

கடந்த 24 மணி நேரத்தில் பாகிஸ்தானில் அடுத்தடுத்து 5 முறை அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் பொதுமக்கள் அச்சமடைந்தனர். எனினும், இந்த நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேதம் அல்லது உயிரிழப்பு தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

## உலக செய்திகள்

# 24 மணிநேரம்... நிலநடுக்கத்தில் சிக்கி உயிர் பிழைத்த அதிசய குழந்தை; வைரலான வீடியோ

வெனிசுலாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்க இடிபாடுகளில் சிக்கி, பிறந்து 18 நாளேயான குழந்தை உயிர் பிழைத்த அதிசயம் நடந்துள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடான வெனிசுலாவில் கடந்த புதன்கிழமை மாலையில் ஒரு நிமிட இடைவெளியில், அடுத்தடுத்து இரு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. ஒரு நூற்றாண்டில் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களால் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் பல்வேறு கட்டிடங்கள் குலுங்கின.

ரிக்டர் அளவுகோலில் முதலில் 7.1 என்ற அளவிலும், பின்னர் 7.5 என்ற அளவிலும் இரு நிலநடுக்கங்கள் கடுமையாக தாக்கின. 2-வது நிலநடுக்கம் நிலப்பரப்பின் மேற்பகுதிக்கு அருகே (10 கி.மீ. ஆழம்) ஏற்பட்டது பெரும் பாதிப்புக்கான காரணியாகி விட்டது. இதனால், தலைநகர் காரகாஸ் உள்பட பல்வேறு மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

கட்டிடங்கள் தரைமட்டமானதில், ஆயிரக்கணக்கானோர் சிக்கியிருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 900-க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். 3 ஆயிரத்திற்கும் கூடுதலானோர் காயமடைந்தும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என தகவல் தெரிவிக்கின்றது.

இந்த கட்டிட இடிபாடுகளில் 24 மணிநேரத்திற்கும் மேலாக சிக்கிக்கொண்ட, பிறந்து 18 நாட்களேயான குழந்தை ஒன்று, உயிர் தப்பிய அதிசய சம்பவம் நடந்துள்ளது. மீட்பு குழுவினர் தொடர்ந்து நடத்திய தேடுதல் மற்றும் மீட்பு பணியில், அந்த குழந்தையை கண்டறிந்தனர்.

இதன்பின்பு குழந்தையை மீட்டு அதன் தந்தையிடம் ஒப்படைத்தனர். அதனுடன் நில்லாமல், தொடர்ந்து இடிபாடுகளை மீட்பு குழுவினர் அகற்றினர். இதில், ஒன்றரை மணிநேரத்திற்கு பின்னர் குழந்தையின் தாயாரும் மீட்கப்பட்டார். அவர்கள் இருவரும் உடல்நலத்துடன் உள்ளனர். குழந்தையை மீட்கும் வீடியோ வைரலாகி வருகிறது.

# பற்கள் மஞ்சள் நிறமாக இருக்கிறதா? இனி கவலை வேண்டாம்...

முகம் எவ்வளவு அழகாக இருந்தாலும், சிரிக்கும்போது பற்கள் மஞ்சள் நிறமாக இருந்தால் அது பலருக்கும் தன்னம்பிக்கையைக் குறைத்துவிடுகிறது.

காபி, டீ அதிகமாகக் குடிப்பது, முறையற்ற பற்கள் பராமரிப்பு மற்றும் சில உணவுப் பழக்கவழக்கங்களால் பற்களில் இந்த மஞ்சள் கறை ஏற்படுகிறது.

இனி இதற்காகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்கள் வீட்டிலேயே இருக்கும் எளிய பொருட்களைக் கொண்டு, பற்களை முத்துப்போல பளிச்சென்று மாற்றலாம்.

ஆலமரக்குச்சி அல்லது வேப்பங்குச்சி..

கிராமப்புறங்களில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் வேப்பங்குச்சி அல்லது ஆலமரக்குச்சியைக் கொண்டு பற்களைத் துலக்கலாம். குச்சியின் நுனியைப் பற்களால் மென்று பிரஷ் போல மாற்றி, பற்களைத் தேய்க்க வேண்டும்.

இதில் உள்ள இயற்கை கிருமிநாசினிகள் பற்களின் மஞ்சள்தன்மையைப் போக்குவதோடு,



ஈறுகளையும் பலப்படுத்தும்.

துளசி இலை பேஸ்ட்..

சில துளசி இலைகளைக் வெயிலில் காயவைத்து அரைத்து பொடியாக்கி, அதனுடன் சிறிதளவு கடுகு எண்ணெய் கலக்கவும். இந்த கலவையைக் கொண்டு பற்களை விரல்களால் மெதுவாகத் தேய்த்துக் கழுவ வேண்டும்.

துளசி பற்களை வெண்மையாக்குவதோடு வாய் துர்நாற்றத்தையும் முழுமையாக நீக்கும்.

வெதுவெதுப்பான உப்பு நீர்..

தினமும் சாப்பிடுவதற்கு முன்பும் சாப்பிட்ட பிறகும் வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பைக் கலந்து வாயை கொப்பளிக்க வேண்டும். இவ்வாறு செய்வது பற்களில் கறை படியாமல் இருக்கும்.

பிரஷ் மாற்றும் கால அளவு..

நமது டூத் பிரஷை 3 மாதங்களுக்கு ஒருமுறை கண்டிப்பாக மாற்ற வேண்டும். தேய்ந்த பிரஷ்கள் பற்களில் உள்ள கறைகளை நீக்காது. நன்றாக சாப்ட் ஆனா பிரஷ் பயன்படுத்தினாலும் தவறில்லை, அதிகமாக பற்களை தேய்க்க கூடாது.

வாழைப்பழத் தோல்..

வாழைப்பழம் சாப்பிட்ட பிறகு அதன் தோலைத் தூக்கி எறிய வேண்டாம். தோலின் உள்பகுதியை கொண்டு பற்களின் மேல் 2 நிமிடங்களுக்கு நன்றாகத் தேய்க்கவும். அதன் பிறகு 5 நிமிடங்கள் கழித்து பற்களைத் துலக்கலாம்.

வாழைப்பழத் தோலில் உள்ள பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் மாங்கனீசு போன்ற தாதுக்கள் பற்களை வெண்மையாக்க உதவுகின்றன.

சிம்பிள் சீக்ரெட்..

காபி, டீ அல்லது குளிர் பானங்கள் குடித்த பிறகு உடனடியாக வாயைக் கொப்பளிக்கும் பழக்கத்தை பழகிக்கொள்ளுங்கள்.

தினமும் காலை எழுந்ததும், இரவில் தூங்குவதற்கு முன்பும் ஒருமுறை பற்களைத் துலக்குவது பற்களின் ஆரோக்கியத்தைக் காக்கும்.

# கண்களுக்குக் கீழ் கருவளையம் வரவே வராது! இத ட்ரை பண்ணுங்க!

இன்றைய டிஜிட்டல் உலகில் மொபைல் மற்றும் கம்ப்யூட்டர் திரைகளைத் தொடர்ந்து பார்ப்பது, போதிய தூக்கமின்மை, மன அழுத்தம் மற்றும் உடலின் நீர்ச்சத்து குறைபாடு காரணமாக பலருக்கும் கண்களுக்குக் கீழே கருவளையங்கள் ஏற்படுகின்றன.

இதனால் முகம் எவ்வளவு அழகாக இருந்தாலும் சோர்வாகவே காணப்படும். இந்தச் சிக்கலை வீட்டிலுள்ள இயற்கையான பொருட்களைக் கொண்டு மிக எளிதாகப் போக்க முடியும்.



உருளைக்கிழங்கு சாறு..

உருளைக்கிழங்கை நன்றாகத் துருவி, அதிலிருந்து சாற்றைப் பிழிந்து காட்டன் பேட்களில் நனைத்து, கண்களின் மேல் 15 நிமிடங்கள் அப்படியே வைக்கவும், பிறகு குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

உருளைக்கிழங்கில் உள்ள இயற்கையான பிளீச்சிங் பண்புகள் கண்களைச் சுற்றியுள்ள பிக்மென்டேஷனைக் குறைத்து, சருமத்தை வெண்மையாக்க உதவும்.

குளிர்ந்த வெள்ளரிக்காய்..

ப்ரெஷ்ஷான வெள்ளரிக்காயை நடுத்தர துண்டுகளாக வெட்டி, 10 நிமிடங்கள் பிரிட்ஜில் வைத்து குளிரூட்டவும். பிறகு இரண்டு கண்களின் மேல் 10 முதல் 12 நிமிடங்கள் வரை வைத்திருக்க வேண்டும்.

வெள்ளரிக்காயில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் அதிகப்படியான நீர்ச்சத்து கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்து, வீக்கத்தைக் குறைக்கும்.

கிரீன் டீ பேக்குகள்..

பயன்படுத்திய கிரீன் டீ பேக்குகளைத் தூக்கி எறியாமல், ஒரு அரை மணி நேரம் பிரிட்ஜில் வைத்து குளிரூட்டி எடுத்துக்கொள்ளுங்கள். பிறகு குளிர்ந்த டீ பேக்குகளைக் கண்களின் மேல் 10-15 நிமிடங்கள் வைக்கவும்.

கிரீன் டீயில் உள்ள 'கஃபைன்' மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் கண்களுக்குக் கீழே உள்ள ரத்த நாளங்களைச் சுருக்கி, கருவளையங்களை மிக வேகமாக மறையச் செய்யும்.

பாதாம் எண்ணெய் மசாஜ்..

இரவு தூங்குவதற்கு முன்பு, 2 முதல் 3 துளிகள் சுத்தமான பாதாம் எண்ணெயை எடுத்துக்கொண்டு, மோதிர விரலால் கண்களைச் சுற்றி மிகவும் மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும்.

இரவு முழுவதும் அப்படியே விட்டுவிட்டு, மறுநாள் காலையில் குளிர்ந்த நீரில் முகத்தை கழுவ வேண்டும்.

பாதாம் எண்ணெயில் உள்ள வைட்டமின் இ, கண்களுக்குக் கீழ் உள்ள மென்மையான சருமத்திற்குத் தேவையான ஊட்டச்சத்தை அளித்து, ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

ஒரு குட்டி சீக்ரெட் டிப்ஸ்!

தினமும் குறைந்தது 7 முதல் 8 மணி நேரம் ஆழ்ந்த தூக்கம் அவசியம். ஒரு நாளைக்கு 3 லிட்டருக்கு மேல் தண்ணீர் குடிப்பது உடலின் நீர்ச்சத்தைத் தக்கவைத்து, கருவளையங்கள் மீண்டும் வராமல் தடுக்கும்.

www.kathirolimedia.ca

# உங்களுக்கு நெயில் பாலிஷ் போட பிடிக்குமா? அப்போ இதை ஃபாலோ பண்ணுங்க!

நிறைய பேருக்கு நகங்களுக்கு விதவிதமா நெயில் பாலிஷ் போடுறது ரொம்ப பிடிக்கும். ஆனா, போட்ட சில நாட்களிலேயே அது உரிய ஆரம்பிச்சிடும்.

உங்க நெயில் பாலிஷ் ரொம்ப நாளைக்கு அழகா நீடிச்சிருக்கவும், நகங்கள் ஆரோக்கியமா இருக்கவும் இந்த சிம்பிள் டிப்ஸை ஃபாலோ பண்ணுங்க!

நகத்தை இந்த ஷேப்ல கட் பண்ணுங்க..

நகத்தோட எட்ஜ ஓவல் ஷேப்ல கட் பண்ணுனீங்கனா அது உங்களுக்கு கிளாசிக் லுக் தரும்.

அதுவே நகத்தோட நுனியை நேராக கட் பண்ணா ஸ்கொயர் ஷேப்ல இருக்கும்.அது உங்களுக்கு மாடர்ன் லுக் தரும்.

நகத்தின் ஓரங்களை நன்றாகக் குறைத்து, நுனியை மட்டும் லைட்டாக ஷார்ப் பண்ணீங்கனா ஆல்மண்ட் ஷேப்ல ரிச் - ஸ்டைலிஷ் லுக் தரும்.

நகங்களைச் சுத்தம் செய்யுங்க..

நெயில் பாலிஷ் போடுவதற்கு முன்னாடி, நகங்களில் இருக்கும் பழைய நெயில் பாலிஷை ரிமூவ் பண்ணிடுங்க. நெயில் பாலிஷ் ரிமூவர் வச்சு நல்லா நகத்தை தொடச்சிருங்க.

நகம் சுத்தமா இருந்தால்தான் நெயில் பாலிஷ் பளபளப்பா இருக்கும்.

நகம் மஞ்சளா மாறுதா?

நெயில் பாலிஷை ரொம்ப நாள் அப்படியே விட்டுட்டா நகத்தோட இயற்கையான கலர் மாறி, ஒரு மாதிரி மஞ்சள் கலர் ஆகிடும். இதை தவிர்க்க, நெயில் பாலிஷ் போடுறதுக்கு முன்னாடி 'பேஸ் கோட்' அப்படின்ற டிரான்ஸ்பரண்ட் லேயரை முதல்ல போடுங்க.

அதுக்கப்புறம் உங்களுக்கு பிடிச்ச கலரை அடிச்சீங்கன்னா நகம் மஞ்சளாகாது.

கிளிட்டர் எட்ஜஸ்..

நகம் முழுக்க நார்மல் மேட் கலர் நெயில் பாலிஷ் போட்டுட்டு, நகத்தோட எட்ஜ்ல மட்டும் லைட்டா கிளிட்டர் பாலிஷ் வச்சீங்கன்னா, பார்ட்டிக்கு போறதுக்கு சூப்பரான, ட்ரெண்டியான லுக் ரெடி ஆயிடும்.

இயற்கையான நகம் பராமரிப்பு..

உங்க நகங்கள் நல்லா பளபளப்பாவும், ஸ்ட்ராங்காகவும் இருக்கணும்னா, வாரத்துக்கு ரெண்டு தடவை கொஞ்சமா தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் ஆயிலை நகங்கள் மற்றும் அதை சுத்தி இருக்கிற சதையில தடவி மசாஜ் பண்ணுங்க. நகம் சூப்பரா வளரும்!

உங்கள் வியாபாரம்
உலகம் முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்

# அரிய வகை கனிமங்கள்: புதிய சுரங்கப் பணிகளை மாநில அரசு அனுமதிக்காது - கேரள மந்திரி திட்டவட்டம்

கனிம மணல் சுரங்கங்களை தனியார்மயமாக்கவோ அல்லது அரிய வகை கனிமங்களை புதிதாக தோண்டி எடுக்கவோ மாநில அரசு அனுமதிக்காது என்று கேரள தொழில்துறை மந்திரி பி.கே. குன்ஹாலிகுட்டி தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;-

“அரிய வகை கனிம மணல் சுரங்கங்களை தனியார்மயமாக்க முடியாது. அது பொதுத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது, அது தொடரும். அதில் எந்தக் கேள்வியும் இல்லை. பொதுத்துறை நிறுவனங்களை உள்ளடக்கிய திட்டங்கள் மட்டுமே மறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. புதிய சுரங்க நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவில்லை.



தனியார்மயமாக்கல் அல்லது புதிய சுரங்கம் தோண்டுவதற்கான ஏதேனும் சாத்தியக்கூறு எழுந்தால், ஐக்கிய ஜனநாயக முன்னணி (UDF) அதை அனுமதிக்காது. நாங்கள் அந்த முன்மொழிவுகளை விரிவாக ஆராய்ந்து எங்கள் கொள்கையை அறிவிப்போம். ஆனால் நான் ஒன்றை மிகத் தெளிவாகக் கூறிவிடுகிறேன், புதிய சுரங்கப்பணிகளோஅல்லதுதனியார்மயமாக்கலோ நடை பெறாது.

2011-ல் உம்மன் சாண்டி தலைமையிலான UDF அரசாங்கம் பதவியேற்றதில் இருந்து, கனிம சுரங்கங்கள் தனியார்மயமாக்கலையோ அல்லது புதிய சுரங்கப் பணிகளையோ அனுமதிக்கவில்லை. அதே கொள்கை தற்போதும் தொடரும். முன்மொழியப்பட்ட கனிம வழித்தடம் குறித்து எந்தவொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் அந்த முன்மொழிவின் அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்ய அவகாசம் தேவைப்பட்டது.

நான் மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் உறுதியளிக்க விரும்புகிறேன்.தனியார்மயமாக்கல் நடக்காது, புதிய சுரங்கப் பணிகளும் நடைபெறாது. இதுதான் எங்கள் நிலைப்பாடு.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ‘கிரையோஜெனிக் இன்ஜின் தொழில்நுட்பத்தில் இந்தியா தேர்ச்சிபெற்றுவிட்டது’ - இஸ்ரோ தலைவர் நாராயணன்

மூன்று கிரையோஜெனிக் உந்துவிசை அமைப்புகளை உருவாக்கி, நமக்கு மறுக்கப்பட்ட தொழில்நுட்பத்தில் நாம் தேர்ச்சி பெற்று, அதில் தலைமைத்துவம் பெற்றுள்ளோம் என இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

விமானப்படை சங்கத்தின் கர்நாடக கிளை சார்பில், பெங்களூருவில் உள்ள HAL மேலாண்மை அகாடமியில் நடைபெற்ற 17-வது ஏர் சீப் மார்ஷல் எல்.எம்.கத்ரே நினைவு தின நிகழ்வில் இஸ்ரோ தலைவர் நாராயாணன் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது;-

கிரையோஜெனிக் இன்ஜின்

“இந்தியாவுக்கு மறுக்கப்பட்ட தொழில்நுட்பமான கிரையோ ஜெனிக் ராக்கெட் இன்ஜினை நாம் தற்போது உருவாக்கியுள்ளோம். மூன்று கிரையோஜெனிக் உந்துவிசை அமைப்புகளை உருவாக்கி, அதன் மூலம் பல உலக சாதனைகளை படைத்ததன் மூலம், நமக்கு மறுக்கப்பட்ட தொழில்நுட்பத்தில் நாம் தேர்ச்சி பெற்று, அதில் தலைமைத்துவம் பெற்றுள்ளோம்.

1963-ல் 7 கிலோ எடை கொண்ட ஒரு ஒலி ஏவுகணையை ஏவியதில் இருந்து, உலகின் மிகவும் மேம்பட்ட ஏவுகணைகள் மற்றும் விண்கலங்களை உருவாக்கும் அளவிற்கு இந்தியா இன்று பரிணமித்துள்ளது.

நமக்கு கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தை வழங்க மறுத்த நாடுகளுக்கு இன்று நான் நன்றி கூறுகிறேன். இன்று நாம் 3 கிரையோஜெனிக் உந்துவிசை அமைப்புகளை உருவாக்கியுள்ளோம்.

200 டன் செமி-கிரையோஜெனிக் இன்ஜினின் மேம்பாட்டுப் பணியில், உந்துவிசை அளவை கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்கு கொண்டு வந்துள்ளோம். நாம் படிப்படியாக முன்னேறி வருவதால், இது ஒரு பெரிய மைல்கல்லாக உள்ளது.

இஸ்ரோவின் திட்டங்கள்

மனிதர்களை விண்வெளிக்கு கொண்டு செல்லும் இந்தியாவின் திட்டத்தை தொடங்குவதற்கு முன்பு, ஆளில்லா ‘ககன்யான்’ பயண திட்டத்திற்கு தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் முதல் ஆளில்லா விண்வெளி பயண திட்டத்தில் பணியாற்றி வருகிறோம். அதன் முடிவுகளை மதிப்பாய்வு செய்த பிறகு, ஆட்கள் பயணிக்கும் திட்டத்திற்குத் திரும்புவோம்.

நிலவில் இருந்து மாதிரிகளை சேகரித்து பூமிக்கும் எடுத்து வரும் முதல் இந்திய திட்டமாக ‘சந்திரயான் 4’ இருக்கும். அதே சமயம், ஜப்பானுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள ‘சந்திரயான்-5’ திட்டத்தில், சுமார் 100 நாட்கள் செயல்படக்கூடிய 350 கிலோ எடை கொண்ட ரோவர் பயன்படுத்தப்பட உள்ளது. இது, ‘சந்திரயான்-3’ திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட 14 நாள் செயல்பாட்டுக் காலத்துடன் கூடிய 25 கிலோ ரோவரை ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

இந்தியா 2035-ம் ஆண்டுக்குள் தனது சொந்த விண்வெளி நிலையத்தை நிறுவுவதற்கும், 2040-ம்ஆண்டுக்குள்ஒருஇந்தியரை நிலவுக்கு அனுப்புவதற்கும் திட்டங்களை தீட்டி செயல்பட்டு



வருகிறது. 2040-ம் ஆண்டில், நமது தேசிய கொடியுடன் கூடிய இந்திய ஏவுகணையைப் பயன்படுத்தி இந்தியா நிலவில் தரையிறங்கும்.

இஸ்ரோ 105-க்கும் மேற்பட்ட ஏவுகணை திட்டங்களையும், 135 செயற்கைக்கோள் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், 34 நாடுகளை சேர்ந்த 434 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது. இதற்கு சுமார் 450 தொழில்துறைகள், 400-க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் சுமார் 130 கல்வி நிறுவனங்கள் உறுதுணையாக இருந்துள்ளன.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

## இந்திய செய்திகள்

# வினாத்தாள் கசிவு; மராட்டிய மாநிலத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு ஒத்திவைப்பு



மராட்டிய மாநிலத்தில் நாளை நடைபெற இருந்த ஆசிரியர் தகுதித் தேர்வு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கு முன்பு வினாத்தாள் கசிந்தது கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தில் ஜூன் 28-ந்தேதி(நாளை) ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெற இருந்தது. இதற்கிடையில், தேர்வுக்கு முன்பாகவே வினாத்தாள் கசிந்துவிட்டதாக தானே மாவட்டத்தின் பிவண்டி நகர காவல்துறைக்கு இன்று காலை ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப்படையில் பிவண்டி நகர் பகுதிகளில் போலீசார் நடத்திய அதிரடி சோதனையில், சில நபர்களிடம் இருந்து வினாத்தாள்கள் கைப்பற்றப்பட்டன. அந்த வினாத்தாள்களை உயர்மட்ட ஆய்வுக்கு அனுப்பியபோது, அவை அசல் வினாத்தாள்களுடன் ஒத்துப்போனதாக போலீசாருக்கு தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வரும் நிலையில், நாளை நடைபெற இருந்த ஆசிரியர் தகுதித் தேர்வு ஒத்திவைக்கப்படுவதாக மராட்டிய மாநில தேர்வுக் குழு அறிவித்துள்ளது. தேர்வுக்கான புதிய தேதி விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக நீட் வினாத்தாள்கள் இதேபோல் கசிந்த நிலையில், நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு மறுதேர்வு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# ட்ராபிக் சிக்னலில் ஏன் உலகம் முழுக்க சிவப்பு, மஞ்சள், பச்சை நிறம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது தெரியுமா?

உலகில் எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும் அல்லது அதிகாரமிக்க பதவி வகிப்பவராக இருந்தாலும் சில விதிகளை கடைபிடித்துதான் ஆக வேண்டும். அதிலொன்றுதான் சாலை விதிகள். யாராக இருந்தாலும் சாலையில் செல்லும்போது சிவப்பு விளக்கு எறிந்தால் வாகனத்தை நிறுத்திதான் ஆக வேண்டும். சிவப்பு, மஞ்சள், பச்சை விதிகளை யாராக இருந்தாலும் கடைபிடிக்க வேண்டும்.

சிவப்பு விளக்குக்கு நிற்க வேண்டும், மஞ்சள் விளக்குக்குச் சற்று காத்திருக்க வேண்டும், பச்சை விளக்குக்குச் செல்ல வேண்டும், இந்த விதி உலகம் முழுவதும் பொதுவனது, ஆனால் இதற்கான காரணத்தை யாரும் கேள்வி கேட்பதில்லை. இந்த மூன்று நிறங்களும் உலகின் சாலை போக்குவரத்தின் போக்கையே மாற்றியுள்ளன. பல வண்ணங்கள் நிறைந்த உலகில், சாலை போக்குவரத்தை நிர்வகிக்க ஏன் இந்த மூன்று நிறங்கள் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன?

இன்று ஏன்? எதற்கு? என கேள்வி கேட்காமல் உலகமே இதை ஏற்றுக்கொண்டாலும், இந்த நிறங்கள் தற்செயலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவை அல்ல. இவை ஒளியியல் இயற்பியல், மனித உளவியல் மற்றும் வரலாற்றுரீதியான பரிணாம வளர்ச்சி ஆகியவற்றை மிகக் கவனமாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவாகும். இந்த பதிவில் உலகம் முழுக்க போக்குவரத்து விதிகளில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கள் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்களை தெரிந்து கொள்ளலாம்.

கடந்த காலத்தில் போக்குவரத்து விதிகள்?

1868-ஆம் ஆண்டில் உலகிலேயே முதன் முதலாக லண்டனில் போக்குவரத்து விளக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது அடிப்படையில் ரயில்வே பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட, எரிவாயுவால் இயங்கும் ஒரு சிக்னல் அமைப்பாக இருந்தது. இதில் 'நில்' (stop) மற்றும் 'செல்' (go) ஆகிய இரண்டு நிலைகள் மட்டுமே இருந்தன. நாட்கள் செல்ல செல்ல, வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்ததால், மேம்பட்ட போக்குவரத்து அமைப்புகளின் தேவை எழுந்தது.

1910 மற்றும் 1920-களில் சாலைகளில் போக்குவரத்து ஒழுங்கற்றநிலையிலேயேஇருந்தது. பெரிய நகரங்களில் ரயில்கள், டிராலிகள், குதிரை வண்டிகள், சரக்கு வண்டிகள், மிதிவண்டிகள் மற்றும் சாலையில் நடப்பவர்கள் எனப் பலரும் ஒரே நேரத்தில் சாலையைப் பயன்படுத்தியதால் கடும் நெரிசல் நிலவியது. அப்போது போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணி, சாலைச் சந்திப்புகளில் நிற்கும் காவலர்களின் மூலமே மேற்கொள்ளப்பட்டது.

போக்குவரத்து சிக்னல்கள் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?

மனிதர்களால் நிர்வகிக்கப்பட்ட இந்த போக்குவரத்து முறையில் சில சிக்கல்களும் இருந்தன. விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்தன, இந்த விபத்துகள் பல உயிரிழப்புகளையும் ஏற்படுத்தின. 1900-களின் தொடக்கத்தில் ஓஹியோவின் கிளீவ்லேண்ட் நகரில் முதல் மின்சார போக்குவரத்து விளக்கு நிறுவப்பட்டது, ஆனால் அதில் சிவப்புமற்றும்பச்சைஆகியஇரண்டு நிறங்கள் மட்டுமே இருந்தன. 1920-ஆம் மிச்சிகனின் டெட்ராய்ட் நகரில், காவலர் வில்லியம் பாட்ஸ் நான்கு திசைகளுக்கும் பயன்படும் வகையிலான, மூன்று நிறங்களைக் கொண்ட போக்குவரத்து விளக்கை உருவாக்கினார். போக்குவரத்து சிக்னல்களின் அறிமுகம் சாலைப் பாதுகாப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் விபத்துகளும் உயிரிழப்புகளும் பெருமளவு குறைந்தன. ஆரம்பக் காலங்களில், வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு வகையான சிக்னல் முறைகள் இருந்ததால் ஓட்டுநர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது; இதுவே பின்னர் சிக்னல் முறைகளில் ஒரு சீரான தன்மையைக் கொண்டுவருவதற்கு வழிவகுத்தது.

சிவப்பு போட்டால் ஏன் நிற்க வேண்டும்?

போக்குவரத்து விளக்குகளில் சிவப்பு நிறத்தைப் பார்த்தால், அதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான் உண்டு. நீங்கள் வாகனத்தை அவசியம் நிறுத்த வேண்டும். சிவப்பு நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னால் ஒரு காரணம் உள்ளது. ரயில்வே சிக்னல்கள் முதல் கப்பல் போக்குவரத்துக்கான கொடிகள் வரை, நீண்ட காலமாகவே சிவப்பு நிறம் 'நிற்பதற்கான' குறியீடாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. 19-ஆம் நூற்றாண்டில் ரயில்வே துறை தனது சிக்னல் அமைப்புகளை முறைப்படுத்தியபோது, சிவப்பு நிறத்தைத் தேர்ந்தெடுத்தது. ஏனெனில், மூடுபனி மற்றும் மங்கலான சூழலிலும் அதிக தொலைவிலிருந்து தெளிவாகத் தெரியக்கூடிய நிறம் சிவப்பு தான். அதன் அலைநீளம், வளிமண்டலத்திலுள்ள மங்கலான தன்மையைக் கடந்து மற்ற நிறங்களை விடச் சிறப்பாகப் பயணிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது.

பச்சை போட்டால் ஏன் செல்ல வேண்டும்?




பச்சை நிறம் எப்போதும் 'செல்லலாம்' என்பதற்கான குறியீடாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆரம்பகால போக்குவரத்து சிக்னல்களில் வெள்ளை நிறம் பயன்படுத்தப்பட்டது, ஆனால் இது பல குழப்பங்களை ஏற்படுத்தியது. வெள்ளை நிற விளக்குகளை நட்சத்திரங்கள் அல்லது தெருவிளக்குகள் என்று மக்கள் தவறாக நினைத்ததால், ஆபத்தான தவறான புரிதல்கள் ஏற்பட்டன. இதற்கான பாதுகாப்பான மாற்றாகப் பச்சை நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டது. உளவியல்ரீதியாக பச்சை நிறம் அமைதி மற்றும் நம்பிக்கையுணர்வுடன் தொடர்புடையது. மேலும், மனிதக் கண்கள் பச்சை நிற அலைநீளங்களுக்குக் கூடுதல் உணர்திறன் கொண்டவை என்பதால், இவ்வண்ணத்தை எளிதாகக் காண முடிகிறது.

மஞ்சள் நிறம் போட்டால் ஏன் தயாராக வேண்டும்?

மஞ்சள் நிறம் போக்குவரத்து சிக்கலைத் தவிர்த்து. ஆரம்பகால அமைப்புகளில் சிவப்பு மற்றும் பச்சை மட்டுமே இருந்தன, இது திடீர் மாற்றங்களுக்கு ஓட்டுநர்கள் தயாராவதைத் தடுத்தது. பின்னர், 1930-களில், மஞ்சள் சமிக்ஞை ஒரு எச்சரிக்கைக் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. மஞ்சள் நிறம், கண்ணுக்குப் புலப்படும் நிறமாலையின் நடுவில் இருப்பதால், பகல் மற்றும் இரவு ஆகிய இரண்டிலும் தெளிவாகத் தெரிகிறது. இது ஓட்டுநர்களை வாகனத்தை இயக்க தயார்படுத்துகிறது, அதாவது, வேகத்தைக் குறைத்து, கவனத்துடன் பயணத்தைத் தொடரச் செய்கிறது. இந்த எளிய தீர்வு ஆயிரக்கணக்கான மக்களின் உயிரை பாதுகாத்து வருகிறது.




# என்னை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்துவிட்டார். நான் அவரைத் தள்ளிவிட்டுவிட்டு ஓடி வந்துவிட்டேன். வீட்டுக்கு வந்த பிறகு...

## அந்தரங்க சிந்தனைக்களம்

**நாங்கள் ஒரு வருடமாகக் காதலிக்கிறோம். அவர் எமது காதல் விவகாரத்தை அவரது வீட்டில் கூறிவிட்டார். அவர்கள் சம்மதித்தும் விட்டனர். நான் இன்னும் வீட்டில் சொல்லவில்லை. என் காதலனுக்கு, நான் படித்து ஆசிரியையாக வரவேண்டும் என்று ஆசை. அவருக்கு அனேக வேலைப்பளு இருப்பதால், குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே பேசுவார். அப்போதும், 'நீ நன்றாகப் படிக்கவேண்டும். அதற்காகத்தான் நான் அடிக்கடி உன்னுடன் கதைப்பதில்லை' என்று சொல்கிறார். ஆனால், இது எனக்கு மன உளைச்சலைக் கொடுக்கிறது. அவர் என்னை ஏமாற்றப் பார்க்கிறாரோ, வேறு யாருடனேனும் தொடர்பு இருக்குமோ, அதனால்தான் என்னை தவிர்க்க முயற்சிக்கிறாரோ என்று தோன்றுகிறது. என் மனம் ஆற ஒரு ஆலோசனை தருவீர்களா?**

ஆண்-பெண் இருபாலரிடம் இத்தகைய குணாதிசயம் காணப்படும் என்றாலும், அனேக பெண்கள் இத்தகைய உளவியல் பிரச்சினைக்கு ஆளாகிறார்கள். தன்னைக் காதலிப்பவன் தன்னை ஆராதிக்க வேண்டும், கொண்டாட வேண்டும், தன்னை ஒரு இளவரசியாகப் பார்க்க வேண்டும், தனக்கு வேண்டிய, தனக்குப் பிடித்த அனைத்தையும் அவன் செய்துதர வேண்டும் என்று பல பெண்களும் நினைக்கிறார்கள். திரைப்படங்கள் கூட இத்தகைய ஒரு உணர்வுத் தூண்டலுக்குக் காரணமாக அமைகின்றன.

ஆனால், நடைமுறையில், காதலை வேண்டும் பருவங்களில் பெரும்பாலான ஆண்கள் இவ்வாறான, பெண்கள் மனதைக் கவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், அந்தக் காதல் கைகூடியதும் அவர்களுள் ஒரு மாற்றம் வந்துவிடுகிறது. சிலர் குறிப்பிட்ட பெண் மீது தோன்றும் மோகத்தைத் தீர்த்துக்கொண்டதும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சிலர், தான் எதிர்பார்த்த காதல் கைகூடியதுமே, அந்தக் காதலைத் திருமணம் வரையும் திருமணத்துக்குப் பின்னான வாழ்க்கை வரையும் இனிமையாகக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கிவிடுகிறார்கள். இதனால், காதல் கைகூடியதும் அவர்களிடம் இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படுவதுண்டு.

ஏறக்குறைய உங்களது விடயத்தில் நடந்திருப்பதும் அதுதான். ஏனெனில், அவர் உங்களுடன் அடிக்கடி தொடர்புகொள்ளாததற்குக் காரணம் அவரது அதீத வேலைப்பளு என்பது உங்களுக்கே தெரிந்திருக்கிறது. மேலும், அவர் உங்களைஒருஆசிரியையாகஆக்கிப் பார்க்க விரும்புகிறார். இதன்மூலம், திருமணத்தின் பின், உங்களுக்கு ஒரு பொருளாதார உறுதித் தன்மையை ஏற்படுத்தித் தர விரும்புகிறார். அதேவேளையில், உங்கள் இருவரது திருமண வாழ்க்கையில் பொருளாதாரம் ஒரு பிரச்சினையாக இருக்கக்கூடாது என்பதிலும் அவர் தெளிவாக இருக்கிறார். மேலும், பெண்களுக்குப் பெரிதும் உகந்ததான தொழிலான ஆசிரிய சேவையை அவர் உங்களுக்காகத் தெரிவு செய்திருப்பதன் மூலம், உங்களுக்கு சமூகத்தில் ஒரு மதிப்பு மிக்க, தனிப்பட்ட முறையில் உங்களுக்கு வசதியானதுமான ஒரு வேலையையும் அவர் தெரிவு செய்திருக்கிறார். இதன் மூலம், உங்களது நன்மை கருதியே அவர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களது காதலரது வீட்டில் உங்கள் திருமணத்துக்குப் பச்சைக்கொடி காட்டியும் விட்டனர். எனவே, அவர் உங்களை மறுதலிக்க வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. எனவே, தேவையற்ற சந்தேகங்களைக் களைந்துவிட்டு, சிறந்ததொரு வாழ்க்கைத் துணை உங்களுக்குக் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ச்சியாக உங்கள் கல்விப் பயணத்தைத் தொடருங்கள்.

**எனக்கு உறவின்போது ஒரு இனிமையான பாடலையோ அல்லது இசையையோ கேட்க விருப்பம். ஆனால் என் மனைவியோ இதற்குத் தடை விதிக்கிறார். என்ன செய்யலாம்?**

திரைப்படங்களில் வரும் அந்த இசை உண்மையில் உறவுப் பொழுதுகளில் உங்கள் உடலால் உணரப்படவேண்டும். அதுமட்டுமல்லாமல், இது அவரவர் விருப்பத்தையும் ரசனையையும் பொறுத்தது. உறவு கொள்ள வேண்டும் என்ற உணர்வு உங்களால் இயற்கையாக உணரப்படவேண்டுமேயொழிய, அந்த உணர்வைத் தூண்டவோ அல்லது அதன் இன்பத்தைக் கூட்டவோ வேறு ஊடகங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து.

பெரும்பாலானோர் உறவின் போது பேசுவதே இல்லை. பேசினால் உறவு பாழாகி விடும் என்று கருதுகின்றனர். தன்னிச்சையான உறவுக்குப் பேச்சு எதிரி என்று நினைக்கின்றனர். ஆனால், இன்னொருவருக்கு என்ன தேவை அல்லது அவர் எதை விரும்புகிறார் என்பதைப் பரஸ்பரம் பேசினால்தானே தெரிந்து கொள்ள முடியும்? சில தொடுகைகளும் வருடல்களும் சில சமயங்களில் மிக அதிக - உச்ச நிலையை மிக எளிதில் தருவித்து விடும் என ஒருவர் உணரலாம்.

தாம்பத்திய உறவின்போது இத்தகைய பேச்சுக்களை விரும்பாததற்கு - முக்கியமாகப் பெண்கள் - காரணம், அதுபோன்ற சப்தங்கள், தங்கள் இருவரைத் தவிர அந்த அறையில் வேறு எவரோ இருக்கிறார் என்ற உணர்வைத் தந்து, அவர்களைக் கூச்சம் கொள்ள வைக்கும். உறவில் கூச்சம் இருந்தால் உச்ச நிலையை எட்ட முடியாது.

**குஷ்டரோகம் பற்றி எனக்குச் சொல்ல முடியுமா? குஷ்டரோகத்தை தொழுநோய் என்றும் சொல்வார்களா? குஷ்ட ரோகம் என்றால் என்ன, அது ஏன் வருகிறது, அதை எப்படி சரி செய்வது, சரி செய்ய முடியுமா, அது வந்தால் திருமண வாழ்க்கை தடைப்படுமா? தயவுசெய்து இதற்கான விளக்கத்தைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.**

குஷ்டரோகமும் தொழுநோயும் ஒன்றுதான். குஷ்டரோகம் பற்றிய முழுமையான விளக்கத்தை, எந்தவொரு அரசாங்க மருத்துவமனையிலும் நீங்கள் கேட்டு அறிந்துகொள்ளலாம். அது பற்றிய முழுமையான விபரத்தை அங்கே பெற்றுக்கொள்ளும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நீங்கள் குறிப்பாக குஷ்டரோகம் பற்றிக் கேட்பதனால், ஒருவேளை, உங்களுக்கு அந்நோய் ஏற்பட்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. முன்போல் அன்றி, இப்போது, குஷ்டரோகமும் முழுமையாக குணப்படுத்தக்கூடிய ஒரு நோய்தான். இந்நோய் ஏற்பட்டிருப்பதாக ஏதேனும் ஒரு அடையாளம் இருந்தால், உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்துகொண்டு, மருந்துகளை உட்கொள்ளத் தொடங்குவதன் மூலம் சர்வநிச்சயமாக குணம் பெற முடியும்.

**எனக்கு இப்போது 21 வயது. நான் ஒருவரைக் காதலிக்கிறேன். எனக்கு பதினேழு வயது இருக்கும்போது, எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் ஒருவர் என்னைக் காதலிப்பதாகச் சொன்னார். ஆனால் எனக்கு அவர் மீது அந்தமாதிரியான எண்ணம் ஒன்றும் இல்லை. ஒருநாள், எதேச்சையாக அவரது வீட்டுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. அப்போது, அங்கு அவரது தாய் மட்டுமே சமையலறையில் இருந்ததால், என்னை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்துவிட்டார். நான் அவரைத் தள்ளிவிட்டுவிட்டு ஓடி வந்துவிட்டேன். வீட்டுக்கு வந்த பிறகு, அதை அனுபவித்திருக்கலாமோ என்று ஒரு எண்ணம் ஏற்பட்டது. அவரைக் காதலிக்கலாம் என்றும் தோன்றியது. என்றாலும், அவர், பல பெண்களிடம் இவ்வாறு நடந்துகொண்டவர் என்பது பின்னாட்களில் தெரியவந்ததால், அதை அப்படியே விட்டுவிட்டேன். இப்போதும் அவரைக் காணும்போதெல்லாம் அந்தச் சம்பவமே நினைவுக்கு வருகிறது. இது நான் காதலனுக்குச் செய்யும் துரோகமா?**

அது ஒரு விபத்துத்தான். வீதியில் நமக்கு ஒரு விபத்து நேர்ந்துவிட்டது என்றால், அந்த இடத்தைக் கடக்கும்போதெல்லாம், அந்த விபத்துச் சம்பவம் நினைவுக்கு வருவதில்லையா? அதற்காக, மீண்டும் மீண்டும் அந்த இடத்திலேயே நாம் விபத்துக்குள்ளாகவேண்டும் என்று விரும்புகிறோமா? இல்லையே...! நீங்கள் குறிப்பிடுபவர் பல பெண்களிடமும் தகாத முறையில் நடந்துகொண்டவர் என்றால், நீங்களும் அவர்களில் அதாவது, பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர், அவ்வளவுதான்!

மேலும், நீங்கள் கூறுவது உண்மைதான். உங்கள் வயதில், அப்படியொரு சம்பவம் நடைபெற்றது உங்களது உணர்வுகளைத் தூண்டியிருக்கலாம். அந்த வயதில் அது இயற்கையே. என்றாலும், அவர் குறித்த உண்மை தெரிந்து நீங்கள் அவரை ஒதுக்கியது பாராட்டப்படவேண்டிய விடயம். அதற்காக, அவரை உங்கள் மனம் விரும்பியது என்று நீங்கள் எண்ண வேண்டாம்.

இளம் வயதில் அவ்வாறு நடந்தது, எப்படி உங்கள் காதலருக்குச் செய்த துரோகமாகும்? மேலும், அது நீங்கள் ஒன்றும் விரும்பி நடந்ததல்லவே? எனவே, நீங்கள் வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

www.kathirolimedia.ca

# கி.மு 1 : உலகம் உருவான கதை

## பகுதி 02

இரண்டு முக்கியமான மரங்கள் இருந்தன. ஒன்று ஜீவ விருட்சம், இன்னொன்று 'நன்மை தீமை அறியும் மரம்'. ஏதேன் தோட்டம் கடவுளின் கற்பனைகளை நிஜத்தில் எடுத்து வைத்தது. ஏதேன் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தக் கடவுள், இதுதான் மனிதனுக்குத் தகுதியான இடம் என்று சொல்லி தான் படைத்த மனிதனை அங்கே தங்கச் செய்தார்.

ஆறு நாட்களாகத் தான் படைத்த பூமியையும், உயிரினங்களையும் கடவுள் பார்வையிட்டார். அனைத்துமேமிகவும்திருப்திகரமாக இருந்தன. ஆறு நாட்களுக்கு முன் உருவமற்றிருந்த பூமி இப்போது அழகும். இன்னிசையும் நிறைந்த அழகிய இடமாக மாறியிருந்தது. தன்னுடைய படைப்பில் மகிழ்ந்த கடவுள் ஏழாவது நாளில் ஓய்வெடுத்தார்.

பின் கடவுள் ஏதேன் தோட்டத்திற்குச் சென்று மனிதனைப் பார்த்தார். அவன் நதிகளில் குதித்து, மரங்களில் கனிகளைப் பறித்துத் தின்று ஆனந்தமாக இருந்தான். கடவுள் அவனை ஏதேன் தோட்டத்தின் நடுவே இருந்த மரத்தின் அருகே கூட்டிச் சென்று ' இதோ.. இந்தத் தோட்டத்திலும், இந்த உலகத்திலும் உள்ள எல்லாமே உனக்குச் சொந்தமானவை தான். ஆனால் இந்த ஒரு மரத்தின் கனியை மட்டும் நீ உண்ணக் கூடாது. இதன் பெயர் நன்மை தீமை அறியும் மரம்.' என்று கடவுள் மனிதனுக்கு தன்னுடைய முதல் கட்டளையைக் கொடுத்தார். அதுதான் கடவுளிடமிருந்து மனிதன் பெற்றுக் கொண்ட முதல் கட்டளை. மனிதன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். கடவுள் அவனையும் அழைத்துக் கொண்டு ஏதேனை விட்டு வெளியே வந்தார்.

'இதோ இந்த பூமி முழுவதும் உனக்கே சொந்தம். உனக்கு விருப்பமானவற்றை உண்டு, விருப்பமானதைச் செய்து மகிழ்ச்சியாக இரு. இந்த விலங்குகள், பறவைகள், நீர் வாழ் உயிரினங்கள் அனைத்தை யும் நான் உனக்காகத் தான் உருவாக்கியிருக்கிறேன். நீ எனக்கு மட்டும் பணிந்திரு, மற்றவை அனைத்தையும் ஆட்சி செய். இப்போது நான் படைத்த இந்த உயிரினங்களுக்கு நீ பெயரிடவேண்டும்'. கடவுள் சொன்னார்.

கடவுள் ஒவ்வொரு விலங்கினருகிலும் மனிதனை அழைத்துச் சென்றார். அவன் தன்னுடைய மனதில் தோன்றிய ஒரு பெயரைச் சொல்ல அதுவே அந்த இனத்தின் பெயரானது. அவ்வாறே அவன் பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் அனைத்திற்கும் பெயரிட்டான். மனிதனின் முதல் பணி அத்துடன் முடிவடைந்தது.

மனிதன் அனைத்திற்கும் பெயரிட்டு முடித்தபின் ஏதேன் தோட்டத்திற்குத் திரும்பினான். கடவுள் பார்த்தார். எல்லா உயிரினங்களும் ஜோடி ஜோடியாக அலைய மனிதன் மட்டும் தனியாக இருக்கிறானே என்று நினைத்து வருந்தினார். அவர் எல்லா காட்டு விலங்குகளையும் கவனித்துப் பார்த்தார், எல்லா பறவையினங்களையும் பார்வையிட்டார் ஆனால் எதுவுமே மனிதனுக்குத் தக்க துணையாகத் தோன்றவில்லை. மனிதனைப் போன்ற தோற்றத்தில், மனிதனோடு நல்ல அன்புடன் உறவாடக் கூடிய ஒரு உயிரைத் தான் மனிதனுக்குத் துணையாக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்தார்.

அன்று இரவில் மனிதன் தூங்கிக் கொண்டிருக்கையில் அவனருகில் கடவுள் வந்து நின்றார். மண்ணினால் இன்னொரு உருவத்தைச் செய்தால் அது இன்னொரு இனமாகி விடும். எனவே மனிதனிலுருந்தே ஒரு உயிரைப் படைக்கவேண்டும். அப்போது தான் அது மனிதனின் உயிரின் பாகமாகவும், உடலின் பாகமாகவும் இருக்கும் என்று கடவுள் நினைத்தார்.

அவனுடைய உடம்பில் எந்த பகுதியிலிருந்து மனிதனை உருவாக்குவது என்னும் குழப்பம் கடவுளுக்கே ஏற்பட்டது. காலிலிருந்து இன்னொரு உயிரைப் படைத்தால் அவள் மனிதனை விடக் கீழானவளாகக் கருதப் படலாம், தலையிலிருந்து படைத்தால் மனிதனை அடக்கி ஆள முயலலாம், எனவே விலா எலும்பிலிருந்து ஒரு உயிரைப் படைக்க வேண்டும் என்று கடவுள் திட்டமிட்டார்.

அப்போது தான் மனிதனும், மனிதனின் துணையும் ஒரே நிலையில் இருப்பார்கள். அவர்கள் இருவருமே சமமானவர்களாகக் கருதப் படுவார்கள். யாரும் யாரையும் விட உயர்ந்தவர் என்றோ, தாழ்ந்தவர் என்றோ எண்ணிக் கொள்ள மாட்டார்கள் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். தூங்கிக் கொண்டிருந்த மனிதனுக்குக் கடவுள் ஆழ்ந்த தூக்கத்தைக் கட்டளையிட்டார். அவன் மயக்க நிலையில் விழுந்தான். அப்போது கடவுள் அவனுடைய விலா எலும்பிலிருந்து ஒன்றை எடுத்து அதை மனிதனின் துணையாக உருவாக்கினார்.

மனிதன் விழித்தெழுந்ததும் கடவுள் அவனிடம்,' இதோ... இந்த உயிரை நான் உன் துணைவியாகத் தருகிறேன். உன்னுடைய விலா எலும்பிலிருந்து இவளை நான் உருவாக்கி இருக்கிறேன். எனவே இவளும் நீயும் ஒரே உடலாகவும், ஒரே உயிராகவும் வாழுங்கள்' என்றார். மனிதன் மகிழ்ந்தான்.

'இவள் என் எலும்பின் எலும்பும், சதையின்சதையும்ஆனவள். எனவே இவளுக்கு நான் பெண் என்று பெயரிடுகிறேன் என்றான்'. மனிதன் துணையுடன் வாழத்துவங்கினான். இருவருமே நிர்வாணத்தை அணிந்திருந்தார்கள், ஆனாலும் வெட்கத்தை அறிந்திருக்கவில்லை. மனிதனின் ஆனந்தத்தைக் கண்ட கடவுள் தன்னுடைய படைப்பு முழுமையடைந்து விட்டதை அறிந்து மகிழ்ந்தார்.

அன்புடன்

சேவியர்
writerxavier@gmail.com

Kongu Mandala Pastors Fellowship

கொங்கு மண்டல போதகர்கள் ஐக்கிய கூடுகை

கிறிஸ்துவுக்குள் அன்பிற்கினிய போதக பிதாக்களுக்கு அன்பான வேண்டுகோள் வருகின்ற ஜூலை 9-ஆம் தேதி வியாழக்கிழமை பொள்ளாச்சியில் நடைபெறும் கொங்கு மண்டல போதகர் ஐக்கியத்திற்கு கடந்து வரும் போதக பிதாக்களின் கனிவான கவனத்திற்கு. இக்கூடுகையில் உறுப்பினர்கள் உள்ள அனைவரும் பங்கெடுக்கலாம். நீங்கள் அனைவரும் ஐடி கார்டு அணிந்து வரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

25 ஆண்டுகள் ஊழியம் செய்த தேவ ஊழியர்களை கணப்படுத்துகிறோம். தயவுகூர்ந்து நீங்கள் மட்டும் வந்து பங்கெடுக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். விசுவாசிகளை உடன் அழைத்து வரவேண்டாம். ஒருவேளை உங்கள் விசுவாசிகள் முன்பாக ஊழிய சமூகப் பணிகளுக்காக கொடுக்கின்ற வாழ்நாள் சாதனையாளர் விருது பெற விரும்பினால் உங்கள் சபையில் அதற்கான விழா ஏற்பாடுகளைச் செய்யுங்கள் அங்கு வந்து நாங்கள் கொடுக்கின்றோம். மற்ற யாரையும் அழைத்து வரவேண்டாம்.

சிறப்பு வெகுமதியை அருட்திரு. ஆனந்த் ஐயா அவர்கள் இம்மாதக் கூடுகையில் கொடுக்க இருக்கிறார்கள். கொங்கு மண்டல போதகர் ஐக்கியத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். மற்ற ஊழியர்களும் கூட்டத்தில் பங்கெடுக்கலாம். புதிதாக கொங்கு மண்டல ஐக்கியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளலாம். அடுத்து வருகின்ற கூட்டங்களில் வருகின்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களின் முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். கர்த்தர் உங்களையும், உங்கள் ஊழியத்தையும ஆசீர்வதிப்பாராக.

அன்புடன் இனிதே வரவேற்கும்...

பிஷப். Dr. N. ராஜசேகர் (சேர்மன்) பிஷப். Dr. W.S. வேதா (தலைவர்) அருட்திரு. G. பாபுஜான்சன் (பொது செயலாளர்)

மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்

கொங்கு மண்டல போதகர்கள் ஐக்கியம்

94431 83873 / 95975 62641 / 90259 14884 / 94430 28007



# உலக செய்திகள்

## ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல்

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. GeographicReference

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது.



அமைதி ஒப்பந்தம்

அதேவேளை, பாகிஸ்தான், கத்தார் போன்ற நாடுகளின் முயற்சியால் அமெரிக்கா, ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், ஹர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களுக்கக் கட்டணம் விதிக்கப்படும் என்று ஈரான் அறிவித்தது. மேலும், தங்கள் அனுமதியின்றி ஹர்முஸ் ஜலசந்தியை கடக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்தது. அதன்படி, தங்கள் அனுமதியின்றி ஹர்முஸ் ஜலசந்தியை கடந்ததாக கூறி சரக்கு கப்பல் மீது ஈரான் நேற்று தாக்குதல் நடத்தியது.

தாக்குதல்

இந்நிலையில், ஈரான் மீது அமெரிக்கா இன்று தாக்குதல் நடத்தியுள்ளது. சரக்கு கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈரானின் தெற்கு துறைமுக நகரமான தஹிரியொ பெரி நகரில் ஏவுகணை, டிரோன் மற்றும் ஆயுதக்கிடங்குகள், ரேடார் கட்டமைப்புகளை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## ரஷியா மீது மிகப்பெரிய அளவில் டிரோன் தாக்குதல் நடத்திய உக்ரைன்

ரஷியா மீது உக்ரைன் மிகப்பெரிய அளவில் டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன், ரஷியா போர் இன்று 1,583வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.



இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. போர் நிறுத்த முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மேற்கொண்ட நிலையில் அது தோல்வியில் முடிந்தது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ரஷியா மீது உக்ரைன் இன்று மிகப்பெரிய அளவில் டிரோன் தாக்குதல் நடத்தியது. ரஷியாவின் 12 மாகாணங்கள்மீது 660டிரோன்களை ஏவி உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இந்த டிரோன்கள் ரஷிய வான்பாதுகாப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்த தாக்குதலில் உயிரிழப்பு போன்ற பாதிப்பு ஏற்படவில்லை என்று ரஷியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள்.. அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி முதலிடத்தில் சீனா

அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் பட்டியலில் அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி சீனாவின் 'லைன்ஷைன்' என்ற கம்ப்யூட்டர் முதலிடத்தை பிடித்துள்ளது.

அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் தரவரிசைப் பட்டியல் ஆண்டுக்கு 2 முறை மிகவும் துல்லியமாக வெளியிடப்பட்டு வருகிறது. சூப்பர் கம்ப்யூட்டிங் துறையில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர்கள் மற்றும் கணினி வல்லுனர்கள் அடங்கிய 'டாப்500'' என்ற அமைப்பை சேர்ந்த குழு இந்த பட்டியலை வெளியிடுகிறது.

உலகின் பல நாடுகளில் உள்ள நிறுவனங்கள் தங்களின் சூப்பர் கம்ப்யூட்டர்களின் வேகத்தைச் சோதித்து இந்த அமைப்புக்கு தரவுகளை அனுப்புவார்கள். அதை ஆய்வு செய்து இந்த அமைப்பு பட்டியலை தயாரிக்கும்.

அசுர வளர்ச்சி

கடந்த 1993-ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த தரவரிசைப்பட்டியல் புதுப்பிக்கப்பட்டு அதிகாரப்பூர்வ மாக வெளியிடப்படுகிறது. உலக நாடுகளுக்கு இடையே சூப்பர் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தில் உள்ள போட்டி மற்றும் அசுர வளர்ச்சியைத் துல்லியமாக இந்த அமைப்பு 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆவணப்படுத்தி வருகிறது.

சீனா முதலிடம்

அதன்படி, நடப்பாண்டில் ஜூன் மாதத்துக்கான அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் தரவரிசை பட்டியலை ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சூப்பர் கம்ப்யூட்டிங் மாநாட்டில் வெளியிட்டு இருக்கின்றனர்.

இதில் சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மையத்தில் நிறுவப்பட்டிருக்கும் 'லைன்ஷைன்' என்ற கம்ப்யூட்டர் முதலிடத்தை பெற்றிருக்கிறது. இது வினாடிக்கு 2 குவின்டில்லியனுக்கு அதிகமான வேகத்தில் கணக்கீடுகள் செய்துள்ளது.

எல் கேபிடன்



இதுவரை உலகின் அதிவேக கம்ப்யூட்டராக முதலிடத்தில் இருந்த அமெரிக்காவின் 'எல் கேபிடன்' என்ற கம்ப்யூட்டரை விட இது 20 சதவீதம் கூடுதல் வேகம் கொண்டது ஆகும். அது இப்போது 2-வது இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 2017-ம் ஆண்டுக்கு பிறகு சீனா இந்த பட்டியலில் மீண்டும் முதலிடத்தை பெற்றிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

'லைன் ஷைன்' கம்ப்யூட்டர்

அமெரிக்கா விதித்த கடுமையான தொழில்நுட்பத் தடைகளை மீறி சீனா இந்தச் சாதனையைச் செய்துள்ளதுதான் உலக அரங்கில் வியப்பாகப் பார்க்கப்படுகிறது. சீனா இந்த கம்ப்யூட்டரை முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இயங்கு தளத்தில் இயக்கியுள்ளது.

'லைன் ஷைன்' கம்ப்யூட்டர் பொதுவான அறிவியல் மற்றும் என்ஜினீயரிங் கணக்கீடுகளில் அதிவேகமாகச் செயல்பட்டாலும், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) சார்ந்த பணிகளுக்கான சோதனையில் இது உலகளவில் 4-வது இடத்தில்தான் உள்ளது.




## கால்பந்து போட்டியில் ஈக்வடாரின் பிரமாண்ட வெற்றி; ஒருநாள் பொது விடுமுறை அறிவித்த அதிபர்

அமெரிக்கா, மெக்சிகோ, கனடாவில் கடந்த ஜூன் 11 ஆம் தேதி தொடங்கிய 23-வது பிபா உலகக் கோப்பை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழாவில், உலகில் மிகவும் விலையுயர்ந்த இந்தக் கோப்பையை யார் வெல்லப் போகிறார்கள் என ஒட்டு மொத்த கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்தத் தொடரில் கோப்பையை வெல்லும், முனைப்பில் அணிகள் மிகத்தீவிரமாக விளையாடி வருகின்றன.

இந்தத் தொடரின் 'இ' பிரிவில் ஈக்வடார், ஜெர்மனி அணிகள் இடையிலான ஆட்டம் நியூ ஜெர்சியில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய ஈக்வடார் அணி 2-1 என்ற கணக்கில் வலிமைவாய்ந்த ஜெர்மனியை வீழ்த்தி அதிர்ச்சியளித்தது.



இதன் மூலம், 2006-ஆம் ஆண்டுக்குப்பிறகு முதல்முறையாக ஈக்வடார் அணி நாக்-அவுட் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்தநிலையில், உலகக் கோப்பை கால்பந்து தொடரில் 4 முறை சாம்பியன் பட்டம் வென்ற ஜெர்மனியை வீழ்த்திய ஈக்வடாரின் பிரமாண்ட வெற்றியை கொண்டாடும் விதமாக ஒருநாள் பொது விடுமுறை அறிவித்து அதிபர் டேனியல் நோபோவா உத்தரவிட்டுள்ளார்.

# 39 மனைவிகள், 94 குழந்தைகள் என ஆலமரமாய் வாழ்ந்த இந்தியர் யார் தெரியுமா? உலகிலேயே பெரிய குடும்பம் இவரோடதுதான்

தற்போதைய காலகட்டத்தில் பெரிய குடும்பம் என்றாலே அது அப்பா, அம்மா மற்றும் இரண்டு குழந்தைகள் என்றுதான் புரிந்து கொள்ளப்படுகிறது. பெரும்பாலான மக்கள் முக்கியமான விழாக்கள் அல்லது பண்டிகைகளின் போதுதான் தங்களின் பெற்றோரையே சந்திக்கும் நிலையில்தான் நாம் வாழ்கிறோம். ஆனால் இந்தியாவில் உள்ள ஒரு குடும்பம் கற்பனைக்கும் எட்டாத நபர்களைக் கொண்டுள்ளது. சொல்லப்போனால் இதுதான் உலகிலேயே மிகப்பெரிய குடும்பமாகும். இந்த அதி

ஜியோனா சானாவின் குடும்பம்

உலகின் மிகப்பெரிய குடும்பத்தின் தலைவராக அறியப்படும் ஜியோனா சானா வின் குடும்பம், பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. 2021-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது 76-வது வயதில் காலமான ஜியோனா, தனது 17-வது வயதிலேயே முதல் திருமணம் செய்துகொண்டார்; அதன்பிறகு மேலும் 38 திருமணம் செய்துகொண்டார், இதன் மூலம் அவருக்கு 94 குழந்தைகள் மற்றும் 33-க்கும் மேற்பட்ட பேரக் குழந்தைகள் இருந்தனர். இந்தக் குடும்பத்தில், 160 முதல் 200-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். இதுவே இக்குடும்பத்தை உலகிலேயே மிகவும் மிகப்பெரிய குடும்பமாக மாற்றியது.

மிசோரமில் உள்ள பிரம்மாண்டமான இல்லம்

மிசோரமின் ரம்மியமான பக்தாவ்ங் கிராமத்தில் அமைந்துள்ள இந்தக் குடும்பத்தின் பிரம்மாண்டமான இல்லம் 'சுவான் தார் ரன்' என்று அழைக்கப்படுகிறது; இதற்கு 'புதிய தலைமுறையின் இல்லம்' என்று அர்த்தம். இளஞ்சிவப்பு மற்றும் ஊதா நிறங்களில் நான்கு தளங்களைக் கொண்ட இந்த பிரம்மாண்டமான கட்டிடம் சுமார் 100 அறைகளைக் கொண்டுள்ளதுடன், அந்தப் பகுதியிலேயே மிகப்பெரிய இல்லமாக கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது.

இது வெறும் வீடாக மட்டுமல்லாமல், ஒரு குட்டி கிராமம் போலவே இயங்குகிறது. இந்த இல்லத்தில் மூன்று தலைமுறையினர் ஒன்றாக வசித்து, பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டும் அன்றாட வாழ்வில் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் இருக்கிறார்கள். இந்த வீட்டின் பிரம்மாண்டமான அளவையும், அனைத்தும் சீராக இயங்குவதற்குத் தேவைப்படும் நிர்வாகத் திறனையும் பார்த்து அனைவரும் வியப்படைகிறார்கள். மிசோராமின் பாரம்பரியத்தின் படி குடும்பத்தின் மூத்த பெண்மணி பாரம்பரியமாக வீட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதுடன், அன்றாடப் பணி களைப் பகிர்ந்தளித்து, அந்தப் பெரிய இல்லத்தில் ஒழுங்குமுறையைப் பேணவும் உதவுகிறார்.

வீடு எவ்வளவு நிர்வகிக்கப்படுகிறது?

நான்கு பேர் உள்ள குடும்பத்தை நிர்வகிப்பதே நமக்கு சிரமமாக இருக்கும் நிலையில் இவ்வளவு பெரிய குடும்பத்தை நிர்வகிப்பது என்பது கடினமானதாக இருக்கும். வீட்டு வேலைகள் குடும்ப உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சிலர் சமையல் பணிகளைக் கவனிக்கும் போது, மற்றவர்கள் விவசாயம், வீட்டை சுத்தம் செய்தல், பராமரிப்பு மற்றும் பிற பொறுப்புகளைக் கவனிக்கின்றனர்.



இந்தக் குடும்பத்தின் சமையலறையைப் பார்த்தாலே நாம் வாயைப் பிளந்து விடுவோம். இந்த ஒரு குடும்பத்திற்கு மட்டும் தினமும் 45 முதல் 90 கிலோ அரிசி, சுமார் 40 கிலோ உருளைக்கிழங்கு, 25 கிலோ காய்கறிகள் மற்றும் 20 கிலோ பருப்பு வகைகள் சமைக்கப்படுவதாக கூறப்படுகிறது. அசைவ உணவைப் பொறுத்தவரை 30 முதல் 40 கோழிகள் சமைக்கப்படுகிறது. மிகப்பெரிய விறகு அடுப்புகளின் மீது பிரம்மாண்ட பானைகளில் உணவுகள் சமைக்கப்படுகிறது. மனைவிகள் சுழற்சி முறையில் உணவு தயாரிப்பதாகவும், மகள்களும் மருமகள்களும் வீட்டின் அன்றாட வேலைகளை நிர்வகிக்க உதவுவதாகவும் கூறப்படுகிறது.

கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் குடும்பம்

இந்தக் குடும்பத்தினர், சியோனா சனா தலைமையிலான 'லால்பா கோஹ்ரான் தார்' (The Lord's New Church) எனும் கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவரது தலைமையின் கீழ் இச்சமூகம் கணிசமாக வளர்ச்சி அடைந்து இன்று மிசோரம் முழுவதும் ஆயிரக்கணக்கான பின்பற்றுபவர்களைக் கொண்டுள்ளது.

ஒரு மிகப்பெரிய குடும்பத்தின் தலைவராகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், விவசாயம், கால்நடை வளர்ப்பு, தச்சு வேலை மற்றும் சிறுதொழில் உற்பத்தி ஆகியவற்றின் மூலம் கிராமத்தில் ஒரு தன்னிறைவான வாழ்வாதாரச் சூழலை உருவாக்கவும் சியோனா உதவினார். அதுமட்டுமின்றி, உள்ளூர் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கான கல்வி வசதிகளையும் அவர் ஏற்படுத்திக் கொடுத்தார்.

சியோனா சானா 2021-இல் இறந்திருந்தாலும், அந்தக் குடும்பத்தின் கதை இன்றும் மக்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. தனிக்குடித்தனங்கள் பெருகிவரும் இக்காலத்தில், ஏறக்குறைய 200 உறவினர்கள் ஒரே வீட்டில் வசிப்பது என்பது நம்பவே முடியாத ஒரு விஷயமாகத் தோன்றுகிறது.

# சில நாடுகள் ஏன் இடதுப்புறத்தில் கார் ஓட்டுகின்றன? சில நாடுகள் ஏன் வலதுப்புறத்தில் கார் ஓட்டுகின்றன தெரியுமா?

இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் பல வேறுபாடுகள் உணவு. அதில் முக்கியமான ஒன்று வாகனங்கள். வெளிநாடுகளில், வாகனப் போக்குவரத்து வழக்கத்திற்கு மாறான திசையில் செல்வது நாம் நன்கு அறிந்த ஒன்றுதான். இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாகனங்கள் சாலையின் இடதுபுறமாகச் செல்கின்றன. ஆனால் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் வாகனங்கள் வலதுபுறமாக ஓட்டப்படுகின்றன.

வெளிநாட்டில் கார் ஒன்றை வாடைகக்கு எடுக்கும்போதோ அல்லது புதிய நகரமொன்றில் சாலையைக் கடக்கும்போதோ, இந்த வித்தியாசம் இந்தியர்களுக்கு நிச்சயம் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால், உலகம் ஏன் இப்படி இருவேறு முறைகளாகப் பிரிந்தது? இதற்கான காரணங்கள் இடைக்காலக் குதிரை வீரர்கள் மற்றும் காலனித்துவ அரசியல் முதல், காரின் கண்டுபிடிப்பு மற்றும் போக்குவரத்து முறை மாற்றம் என நீண்டு கொண்டே செல்கின்றன. அவை என்னென்ன என்று இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம்.

குதிரைகளிலிருந்து தொடங்கியது

உலகின் முதல் சாலை விதிகளுக்கும் கார்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பண்டைய காலங்களில், குதிரையில் சவாரி சென்றவர்கள் இயல்பாகவே இடதுபுறமாகச் சென்றனர், அதனால் அவர்களின் வலது கை அசைப்பதற்கும், வாழ்த்துவதற்கும், அல்லது தாக்கப்பட்டால் ஆயுதத்தால் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கும் பயனுள்ளதாக இருந்தது. இந்தப் பழக்கம் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு கலாச்சாரங்களில் ஆழமாக வேரூன்றியது. பின்னர், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், குதிரைகளால் இழுக்கப்பட்ட பெரிய வண்டிகள் ஒரு புதிய முறையை உருவாக்கின. ஓட்டுநர்கள் இடதுபுறம் பின்பக்கக் குதிரையில் அமர்ந்தனர், அதனால் அவர்கள் தங்கள் வலது கையால் சாட்டையால் அடிக்க முடிந்தது. இது வலதுபுறமாகச் செல்வதைப் பாதுகாப்பானதாக மாற்றியது, ஏனெனில் அது எதிரே வரும் வாகனங்களை நன்றாகப் பார்க்க உதவியது. இயந்திரங்கள் வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, இடைக்காலப் பழக்கவழக்கங்கள் போக்குவரத்தை வடிவமைத்து வந்தன.

பேரரசுகள் தங்களுக்கான வழியை தேர்ந்தெடுத்தன

மரபுகள் மட்டுமே உலகைப் பிரித்திருக்க முடியாது. காலனி ஆதிக்க விரிவாக்கமே சாலை விதிகளைக் உலகம் முழுவதும் பரப்பியது. பிரிட்டன் தனது பரந்த பேரரசு முழுவதும் இடதுபுற ஓட்டுதலை அமல்படுத்தியது, அதனால்தான் இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா இன்றும் அதைப் பின்பற்றுகின்றன. மறுபுறம், நெப்போலியன் ஐரோப்பியக் கண்டம் முழுவதும் வலதுபுறம் ஓட்டுவதற்கு உத்தரவிட்டார், மேலும் அவரது செல்வாக்கு பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளில் நிலைத்திருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு, பெரும்பாலான நாடுகள் தங்கள் அமைப்பை மாற்றவில்லை, அவர்கள் தாங்கள் மரபுரிமையாகப் பெற்றதை அப்படியே தக்க வைத்துக் கொண்டனர்.

கார்கள் இந்த மாற்றத்தை நிரந்தரமாக்கின

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கார்களின் வருகை இந்த மாற்றத்தை நிரந்தரமாக்கியது. பிரிட்டனில், உற்பத்தியாளர்கள் வலதுபுற ஸ்டீயரிங் சக்கரங்களைக் கொண்ட கார்களை உருவாக்கினர், இது இடதுபுறப் போக்குவரத்தை வலுப்படுத்தியது. அதேசமயம் அமெரிக்காவில், ஹென்றி ஃபோர்டின் புரட்சிகரமான Model T இடதுபுற ஸ்டீயரிங்குடன் வந்தது, இது வலதுபுறம் ஓட்டுவதை தேர்வாக மாற்றியது. Model T வரலாற்றில் அதிக அளவில் தயாரிக்கப்பட்ட வாகனங்களில் ஒன்றாக இருந்ததால், அமெரிக்க கார்களை இறக்குமதி செய்த நாடுகளும் வலதுபுற ஓட்டுதலை ஏற்றுக்கொண்டன. கார் உற்பத்தியாளர்கள் வெறும் கார்களை மட்டும் தயாரிக்கவில்லை, அவர்களுடைய சாலை விதிகளை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

சில நாடுகள் இந்த வழக்கத்தை மாற்றிக்கொண்டன

அரிதாக இருந்தாலும், சில நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளன. 1967-ல் 'டேகன் எச்' (Dagen H) எனப்படும் ஒரு நிகழ்வில் ஸ்வீடன் இந்த மாற்றத்தைச் செய்தது. அப்போது ஒரே இரவில் போக்குவரத்து இடமிருந்து வலமாக மாறியது. இந்த மாற்றத்தை உறுதி செய்வதற்காக, அரசாங்கம் மாபெரும் மக்கள் பிரச்சாரங்களை முன்னெடுத்தது, ஆயிரக்கணக்கான சாலை அடையாளங்களை மாற்றியது, மேலும் போக்குவரத்தை சிறிது நேரம் நிறுத்தியது. ஸ்வீடனின் அண்டை நாடுகள் ஏற்கனவே வலதுபுறத்தில் வாகனம் ஓட்டி வந்தன, மேலும் இந்த மாற்றம் அவர்களுக்கு வசதியாக இருந்தது.

இப்போது மாற்ற முடியுமா?

தற்போதைய காலகட்டத்தில், நாடுகள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றுவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. சாலை அடையாளங்களை மாற்றுவதற்கும், கட்டுமானங்களை மீண்டும் கட்டுவதற்கும், ஓட்டுநர்களுக்கு மறுபயிற்சி அளிப்பதற்கும், கார்களை மாற்றி அமைப்பதற்கும் ஆகும் செலவு கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. அதைவிட முக்கியமாக, இந்த மாற்றத்தின் போது விபத்துகள் ஏற்படுவதற்கான அபாயம் அபாயகரமான அளவில் அதிகமாக உள்ளது. அதனால்தான் பெரும்பாலான நாடுகள் தங்களின் பழைய முறையையே கடைப்பிடிக்கின்றன. இது சுற்றுலாப் பயணிகளைக் குழப்பலாம், ஆனால் சாலைகளில் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்கிறது. இதனால் இந்த சாலை விதியை இனி எப்போதும் மாற்ற முடியாது.

பெண்கள் வாழ்க்கைமுறை

# ஐஸ்க்ரீம் சாப்பிடும்போது கடுமையான தலைவலியை உணர்வது ஏன்? எப்படி தவிர்ப்பது?

எலிசபெத் ஆன் ப்ரவுன்

உங்களுக்கு அடிக்கடி ஐஸ்கிரீம் தலைவலிகள் ஏற்பட்டால், அது உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இருக்கிறதா என்று பார்ப்பதும், மூளை உறைவு (brain freeze) அல்லாத உங்களது மற்ற தலைவலிகளையும் இன்னொரு முறை கவனிப்பதும் பயனுள்ளதாக இருக்கும். அது ஒரு கடுமையான கோடைக் காலம், உங்களுக்குப் பிடித்த குளிர்ச்சியான உணவு ஒன்றை நீங்கள் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; அப்போது திடீரென்று யாரோ ஒரு பனிக்கோடரியால் உங்கள் நெற்றியில் குத்துவது போல் உணர்கிறீர்கள். உங்கள் மூளையின் ஆழத்திலிருந்து ஒரு கூர்மையான, குத்துவது போன்ற வலி தோன்றுவது போல் தெரிகிறது. உங்கள் ஐஸ்கிரீம் உருகி வழிந்துகொண்டிருக்க, வலி குறையும் வரை நீங்கள் அங்கே ஏமாற்றத்துடன் அமர்ந்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

'ஐஸ்கிரீம் தலைவலி என்பது மிக, மிக சாதாரணமான ஒன்று,' என்கிறார் அமெரிக்காவின் மினசோட்டாவில் உள்ள மாயோ கிளினிக்கைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான அமால் ஸ்டார் லிங். சாக்லேட் ஐஸ்கிரீம் அவருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. '(ஐஸ்கிரீம் தலைவலி ஆபத்தில்லாதது, வரும், பிறகு அதுவே போய்விடும்.' குளிர்ச்சியான உணவுகள் அல்லது பானங்களை மிக வேகமாகச் சாப்பிடும்போதோ குடிக்கும்போதோ, ஏன் இப்படி திடீர் தலைவலி ஏற்படுகிறது? பல தலைமுறைகளாக ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான இனிப்புகளை விரும்பிச் சாப்பிடுபவர்களுக்கு திடீர் தலைவலியை ஏற்படுத்தி வந்த 'மூளை உறைதல்', அறிவியல் ஆய்வுகளுக்கும் பல தசாப்தங்களாக பங்களித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், இது உங்கள் உடல்நலம் குறித்து நீங்கள் நினைப்பதை விட அதிக தகவல்களை அளிக்கக்கூடும்.

மூளை உறைவு என்றால் என்ன?

நம்மில் பலர் சிறுவயதிலிருந்தே 'மூளை உறைதல்' அல்லது 'ஐஸ்கிரீம் தலைவலி' என்று அழைக்கும் இந்த நிலையை, விஞ்ஞானிகள் 'குளிர் தூண்டல் தலைவலி' (cold-stimulus headache) என்று குறிப்பிடுகின்றனர் என ஸ்டார்லிங் கூறுகிறார். 'வாயின் மேல் பகுதி அல்லது தொண்டையின் மிக ஆழமான பகுதியில் ஏற்படும் விரைவான குளிர்ச்சி' காரணமாக இது நிகழ்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள் என்று ஸ்டார்லிங் கூறுகிறார். இந்த குளிர்ச்சி ரத்த நாளங்களை மிக விரைவாக சுருங்கச் செய்கிறது, அதன்பின் ரத்த ஓட்டத்தை மீட்டெடுப்பதற்காக அவை மீண்டும் வீங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றன.

இந்த ரத்த நாளங்களின் சுவர்களில் உள்ள வலி நரம்புகள், உங்கள் நெற்றி மற்றும் முகத்திலிருந்து வரும் வலி சமிக்ஞைகளைச் செயலாக்கும் நரம்பான ட்ரைஜெமினல் (trigeminal) நரம்புடன் இணைகின்றன என்று அவர் விளக்குகிறார். அதனால்தான் ஒரு ஐஸ்கிரீம் தலைவலி என்பது வாயின் உள்ளே வராமல், உங்கள் மூளையிலோ அல்லது நெற்றியிலோ ஏற்படும் அழுத்தம் மற்றும் வலி போல உணர்கிறது. (மேலும் கவலைக்குரிய வகையில், குளிர்ச்சியான உணவுகள் அல்லது பானங்கள் இதயத் துடிப்பு வேகமாகவோ ஒழுங்கற்றதாகவோ உணரப்படும் 'இதயப் படபடப்பு' ஏற்படக் காரணமாக இருக்கலாம் என்று ஆய்வுத் தரவுகள் தெரிவிக்கின்றன. இது 'கோல்ட் டிரிங் ஹார்ட்' (Cold Drink Heart) என்று அழைக்கப்படுகிறது. குறிப்பாக நடுத்தர வயது ஆண்களில், இது இதயத் துடிப்பு ஒழுங்கின்மை (heart arrhythmia) ஏற்படுவதுடனும் தொடர்புடையதாக இருக்கலாம்.)

குளிர்-தூண்டல் தலைவலியைத் தவிர்க்க, குளிர்ந்த உணவுகள் மற்றும் பானங்களை உட்கொள்ளும்போது நிதானத்தைக் கடைபிடியுங்கள் என்கிறார் ஸ்டார்லிங். விரைவான குளிர்ச்சிதான் மூளை உறைவை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது, எனவே குளிர்ச்சியான உணவுகளை



உட்கொள்ளும் ஒவ்வொரு இடைவெளியிலும் உங்கள் வாயின் மேல் பகுதிக்கு சற்று சூடாக மாறுவதற்குக் நேரம் கொடுத்தால் இவற்றைத் தடுத்துவிடலாம். ஆனால், நீங்கள் மிகவும் ஆர்வமாகி (யார் தான் அப்படி இருந்ததில்லை!) ஏற்கெனவே உங்களுக்கு ஐஸ்கிரீம் தலைவலி வந்துவிட்டால், அதன் நேரத்தைக் குறைக்கவும், வலியைக் குறைக்கவும் ஒரு சில நிரூபிக்கப்பட்ட வழிகள் உள்ளன என்கிறார் ஸ்டார்லிங். உங்கள் நாக்கின் அடிப்பகுதியைப் பயன்படுத்தி உங்கள் வாயின் மேல் பகுதியை மீண்டும் சூடாக்க அவர் பரிந்துரைக்கிறார். அல்லது உங்கள் நாக்கின் இரு பக்கங்களும் குளிர்ந்து போயிருந்தால், அதற்குப் பதிலாக உங்கள் கட்டைவிரலையோ அல்லது ஒரு சூடான பானத்தையோ பயன்படுத்துங்கள்.

இருந்தாலும், சிலருக்கு ஏன் மூளை உறைவு ஏற்படுகிறது, மற்றவர்களால் எப்படி எந்தப் பாதிப்பும் இல்லாமல் மில்க் ஷேக்கைக் குடிக்க முடிகிறது? இதைக் கண்டறிய, இத்தாலியில் உள்ள படுவா பல்கலைக்கழகத்தின் குழந்தை நரம்பியல் மற்றும் மனநலப் பேராசிரியரான ஜீன் டொல்டோ மற்றும் அவரது சகாக்கள், ஐஸ்கிரீம் தலைவலிகள் குறித்த நான்கு தசாப்த கால அறிவியல் ஆய்வுகளை ஆராய்ந்தனர். (இவருக்கு அதிமதுர ஜெலாட்டோ என்றால் மிகவும் பிடிக்குமாம்.) தைவான், ஜெர்மனி மற்றும் கனடாவில் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளி குழந்தைகள் மற்றும் பிரேசில், துருக்கி மற்றும் பிரிட்டனில் வயதுவந்த ஒற்றைத் தலைவலி நோயாளிகள் பலர் மீதான ஆய்வுகள் உட்பட, உலகம் முழுவதிலுமிருந்து பெறப்பட்ட ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்து, டொல்டோ பல வடிவங்களைக் கண்டறிந்தார்.

முதலாவதாக, மூளை உறைவு என்பது குடும்பங்களில் தொடர்வதாகத் தெரிகிறது என்று ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகிறது × உங்கள் பெற்றோருக்கு ஐஸ்கிரீம் தலைவலி இருந்தால், உங்களுக்கும் அது இருக்க வாய்ப்புள்ளது. (இந்தக் கண்டுபிடிப்புகள் இதுவரை வெறும் தொடர்புகளை மட்டுமே காட்டுகின்றன, மேலும் இந்தத் தொடர்புக்குக் காரணமான குறிப்பிட்ட மரபணுக்களை அறிவியலாளர்கள் இன்னும் துல்லியமாகக் கண்டறியவில்லை.) மூளை உறைவினால் ஏற்படும் வலி நபருக்கு நபர் எப்படி மாறுபடுகிறது என்பதைப் பொறுத்தவரை, மிக முக்கியமான காரணி உங்களுக்கு ஐஸ்கிரீம் அல்லாத பிற தலைவலிகள் மற்றும் ஒற்றைத் தலைவலித் தாக்குதல்கள் (பல மணிநேரங்கள் மற்றும் சில நாட்கள் கூட நீடிக்கக்கூடிய கடுமையான தலைவலிகள்) வருகிறதா என்பதுதான். 'ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் வழக்கமாக இந்த வகையான தலைவலிகளை அதிக தீவிரத்துடன் எதிர்கொள்கிறார்கள்,' என்கிறார் டொல்டோ. 1970-களின் ஒரு சிறிய ஆய்வில், ஒற்றைத் தலைவலித் தாக்குதல்களை எதிர்கொண்டவர்களில் 93% பேருக்கு ஐஸ்கிரீம் தலைவலியும் ஏற்பட்டுள்ளது, அவர்களில் பெரும்பாலானோருக்கு மிதமானது முதல் கடுமையான அசௌகரியம் இருந்தது; அதே சமயம் ஒற்றைத் தலைவலி இல்லாதவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே ஐஸ்கிரீம் தலைவலியை எதிர்கொண்டிருந்தனர்.

ஸ்டார்லிங் கூட ஒற்றைத் தலைவலித் தாக்குதல்கள் மற்றும் மிகவும் வலிமிகுந்த ஐஸ்கிரீம் தலைவலிகள் இரண்டையும் எதிர்கொள்கிறார். 'எனது ஒற்றைத் தலைவலித்தாக்குதல்களின்காரணமாக எனது ட்ரைஜெமினல் நரம்பு மிகவும் உணர்திறன் வாய்ந்தது, எனவே... அது குளிர்ச்சிக்கு ஆளாகும்போது, அது இன்னும் கணிசமாகச் செயல்படத் தொடங்கும்,' என்று அவர் கூறுகிறார். இறுதியில், உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைக்கோ மிகவும் வலிமிகுந்த மூளை உறைவு ஏற்பட்டால், அதற்கு முன்பு இத்தகைய தலைவலி எப்படி ஏற்பட்டுள்ளது என்பதை யோசித்துப் பார்ப்பதும், உங்களது மூளை உறைவு அல்லாத மற்ற தலைவலிகளை இன்னொரு முறை கவனிப்பதும் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொண்ட விஷயம், நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரு தீவிரமான, ஆனால் குணப்படுத்தக்கூடிய பாதிப்பாக இருக்கலாம். 'ஆறு பெண்களில் ஒருவருக்கு ஒற்றைத் தலைவலி உள்ளது, 11 குழந்தைகளில் ஒருவருக்கு ஒற்றைத் தலைவலி உள்ளது, மற்றும் 10 ஆண்களில் ஒருவருக்கு ஒற்றைத் தலைவலி உள்ளது,' என்கிறார் ஸ்டார்லிங். 'ஒற்றைத் தலைவலி உள்ளவர்களில் 50%-க்கும் அதிகமானோர் தங்களது அறிகுறிகளைப் பற்றி ஒரு மருத்துவரிடம் கூடப் பேசியதே இல்லை. இதற்கு ஒரு நோயறிதல் உள்ளது. சிகிச்சை முறைகளும் கிடைக்கின்றன.'

ஒரு உறைந்த ஒற்றைத் தலைவலி

இந்த ஆச்சர்யமான தொடர்பைக் கருத்தில் கொண்டு, உலகளவில் உடலுறுப்பு செயல்திறன் இழப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஒற்றைத் தலைவலி (மைக்ரேன்) குறைபாட்டை ஆய்வு செய்வதற்காக, குறைந்தது 1960களிலிருந்தே விஞ்ஞானிகள் தன்னார்வலர்களை வேண்டுமென்றே 'மூளை உறைதல்' (brain freeze) ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லி ஆய்வுகள் நடத்தி வருகின்றனர். இந்த பாதிப்பு பரவலாக இருந்தபோதிலும், தலைவலிகளை முன்கூட்டியே கணிக்க முடியாது என்பதால், எம்ஆர்ஐ (MRI) மற்றும் சிடி (CT) ஸ்கேன்கள் மூலம் ஒற்றைத் தலைவலி ஏற்படுவதை ஆராய்ச்சியாளர்களால் பதிவு செய்வது சவாலானது; அதுமட்டுமல்லாமல், ஒற்றைத் தலைவலி மிகவும் கடுமையானதாக இருக்கக்கூடும் என்பதால், தனிநபர்கள் அந்த நேரத்தில் ஆய்வகத்துக்குச் செல்வதும் சிரமமாக இருக்கும்.

அங்குதான் மூளை உறைவு இந்த நிலைமையைச் சரிசெய்ய உதவக்கூடும் என்கிறார் ஸ்டார்லிங். ஐஸ்கிரீம் போன்ற இனிப்புகளைச் சாப்பிடுவதன் மூலமும் (அவ்வளவு சுவையாக இல்லாவிட்டாலும், சிறிய பனிக்கட்டித் துண்டுகள் அல்லது மிகவும் குளிர்ந்த நீரைக் குடிப்பதன் மூலமும்) குளிர்-தூண்டல் தலைவலியை வேண்டுமென்றே ஏற்படுத்த முடியும். மேலும் அவை ஒற்றைத் தலைவலித் தாக்குதலைப் போன்றே அதே நரம்புத் தொகுதியான ட்ரைஜெமினல் நரம்பைப் பாதிப்பதால், அவை ஒரு ஒற்றைத் தலைவலித் தாக்குதலுக்கான அறிவியல் ரீதியான மாற்றாகச் செயல்பட முடியும்.

'தலைவலி மருத்துவத்தின் ஆரம்ப நாட்களில், ஆராய்ச்சியாளர்கள் தலைவலியின் அடிப்படை வழிமுறைகளைப் புரிந்து கொள்ள முயன்றபோது, மூளை உறைவு என்பது ஒரு வசதியான சோதனை மாதிரியாக இருந்தது,' என்று விளக்கும் ஸ்டார்லிங், இது ரத்த ஓட்டம் மற்றும் பல்வேறு நரம்புத் தொகுதிகளின் பங்கைக் கண்டறிய அறிவியலாளர்களுக்கு உதவியது என்று குறிப்பிடுகிறார்.

இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில், அடுத்த தலைமுறை ஒற்றைத் தலைவலி மருந்துகளை உருவாக்குவதற்காக மனிதர்களுக்கு ஒற்றைத் தலைவலித் தாக்குதல்களைத் தூண்டுவதற்கு ஆராய்ச்சியாளர்கள் நைட்ரோகிளிசரின் செலுத்துதல் உட்பட (ஆமாம், வெடிபொருட்கள் தயாரிக்கப் பயன்படும் அதே நைட்ரோகிளிசரின் தான்) மற்ற வழிகளைச் சார்ந்துள்ளனர்.

மேலும் ஒற்றைத் தலைவலி பாதிப்பு உள்ளவர்கள், மூளை உறைவு ஏற்படும் என்ற பயத்தில் குளிர்ந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. 'நீங்கள் ஐஸ்கிரீம் சாப்பிடுவதை நிறுத்த வேண்டியதில்லை,' என்கிறார் டொல்டோ. 'அதை எவ்வாறு கையாள்வது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ளலாம்.' அதிர்ஷ்டவசமாக, இந்த அறிவுரை அனைவருக்கும் ஒன்றுதான் × உங்கள் ஐஸ்கிரீமைச் சாப்பிடும்போது கொஞ்சம் கூடுதல் நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதன் மூலம் அந்தச் சுவைகளையும் உங்களால் நன்றாக ரசிக்க முடியும்.

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

# ‘காசா விவகாரத்தில் இந்தியா மவுனம் காக்கிறது, உலகம் தொடர்ந்து குரல் கொடுக்கிறது’ – சோனியா காந்தி

காசா விவகாரத்தில் உலக நாடுகள் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் நிலையில், இந்தியா மவுனம் காத்து வருகிறது என காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக ஆங்கில நாளிதழில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பதாவது;-

மோடி அரசின் மவுனம்

‘‘பாலஸ்தீனத்தில் கொடூரமாக குறிவைத்து தாக்கப்படும் குழந்தைகளுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும் என இந்தியாவின் ஆன்மா கோருகிறது. காசாவில் இஸ்ரேல் நடத்திவரும் இனப்படுகொலை குறித்தும், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் லட்சக்கணக்கான பாலஸ்தீனிய குடும்பங்களை இடம்பெயரச் செய்து, அவர்களின் உடைமைகளைப் பறித்தது குறித்தும் மோடி அரசு தொடர்ந்து மவுனம் காத்து வருவதை பகுத்தறிவு ரீதியாகவோ, தார்மீக ரீதியாகவோ விளக்கவே முடியாது.

ஐ.நா. விசாரணை ஆணையம்

செப்டம்பர் 2025-ல், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிரதேசம் குறித்த ஐ.நா.வின் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையம், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேலிய அதிகாரிகள் இனப்படுகொலை செய்து வருவதாக கூறியது.

ஜூன் 2026-ல், அதே ஆணையம், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களின் குழந்தைகளை குறிவைப்பதன் மூலம், அவர்களின் இருப்பையே அழிக்கும் நோக்கத்துடன் இஸ்ரேல் செயல்பட்டு வருகிறது என்று மீண்டும் உறுதி செய்தது.

94 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை, காசாவில் இஸ்ரேல் நிகழ்த்திய பேரழிவின் அளவு மற்றும் அதன் செயல்களுக்குப் பின்னால் உள்ள இனப்படுகொலை நோக்கம் குறித்த கொடூரமான விவரங்களுடன், மனதை உலுக்கும் ஒரு அறிக்கையாகும். குறைந்தது 20,000 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் 44,000 பேர் காயமடைந்துள்ளனர், அவர்களில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

குழந்தைகள் மீது தாக்குதல்

குழந்தைகளைக் குறிவைப்பது தற்செயலானது அல்ல. இது ஒரு திட்டமிட்ட செயலாகும். கொல்லப்பட்டவர்கள் அல்லது காயமடைந்தவர்களில் 27 சதவீதம் பேர் குழந்தைகள் ஆவர். பல சிறுவர்கள் தலை மற்றும் கழுத்தில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர். காசாவின் 97 சதவீத பள்ளிகள் அழிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் மருத்துவமனைகள் உட்பட சுகாதார உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக கருச்சிதைவு மற்றும் பிரசவச் சிக்கல்கள் 300 சதவீதம் அதிகரித்துள்ளன.

ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய கோழைத்தனமான, கொடூரமான மற்றும் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத தாக்குதலுக்குப் பிறகு கடந்த இரண்டரை ஆண்டுகளில், இஸ்ரேலிய ஆயுதப் படைகளின் பதிலடி நடவடிக்கைகள் கண்மூடித்தனமானதாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் இருந்துள்ளன.



இனப்படுகொலை

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் மூத்த இஸ்ரேலிய தலைவர்கள் காசாவை முழுமையாக அழிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். பாலஸ்தீனியர்களை வாழ்வதற்கு உரிமையற்ற மிருகங்கள் என்று கூறிய அவர்கள், லட்சக்கணக்கானோர் காசாவில் இருந்து தப்பி ஓடுவதை இஸ்ரேலின் வெற்றியாக வரையறுத்துள்ளனர்.

இஸ்ரேலின் செயல்பாடுகளில் தெளிவான இனப்படுகொலை நோக்கம் இருந்தாலும், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் ஆதரவு, பாலஸ்தீனியர்களுக்கு எதிரான தனது கொடூரமான தாக்குதல்களை தொடர இஸ்ரேலுக்கு ஊக்கமளித்துள்ளது. ஆனால், உலகின் பிற நாடுகள் தங்கள் மனசாட்சிக்கு நேர்மையானதை செய்துள்ளன.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் இடையூறுகளால் ஐ.நா.வால் உறுதியான நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆனால் ஐ.நா.சபை, அதன் முகமைகள் மூலம் இஸ்ரேலின் போர்க்குற்றங்களை ஆவணப்படுத்துவதில் சிறந்த பங்கை ஆற்றியுள்ளது.

காசா விவகாரத்தில் உலக நாடுகள்...

வரலாற்று ரீதியாக மேற்கத்திய கூட்டமைப்புடன் தொடர்புடைய பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட முன்னணி நாடுகள், பாலஸ்தீனத்தின் நலன் மீது பல ஆண்டுகளாக காட்டி வந்த அலட்சியத்திற்குப் பிறகு, தற்போது பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க முன்வந்துள்ளன.

காலனித்துவ எதிர்ப்பு தொடங்கி, இந்தியாவுடன் நீண்டகாலமாக ஒற்றுமையை பகிர்ந்து கொள்ளும் நாடான தென் ஆப்பிரிக்கா, 1948-ம் ஆண்டின் இனப்படுகொலை உடன்படிக்கையை மீறியதற்காக இஸ்ரேலை சர்வதேச நீதிமன்றத்திற்கு இழுத்துள்ளது.

பல ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனையைக் கட்டுப்படுத்தியுள்ளன. மேலும் பல லத்தீன் அமெரிக்க நாடுகள் அந்நாட்டுடனான தங்கள் உறவுகளை குறைத்துள்ளன அல்லது துண்டித்துள்ளன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலிய அரசியல் தலைமைக்குக் கைது வாரண்டுகளைக் கூட பிறப்பித்துள்ளது.

இந்தியா மவுனம் காக்கிறது

இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ள பல்வேறு நாடுகள், காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை இனப்படுகொலை என்று அங்கீகரித்துள்ளன. இஸ்ரேலுக்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பு அதிகரித்து வரும் நிலையிலும், காசா மீது கட்டவிழ்த்து விடப்பட்ட நியாயப்படுத்த முடியாத கொடூரங்களை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ள நிலையிலும், இந்தியா, ஒரு தனிக்குரலாக மவுனம் காக்கிறது.

காசாவில் இஸ்ரேல் நிகழ்த்தும் கொடூர இனப்படுகொலைக்கு ஹிந்த் ரஜப்பின் சோகக் கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். வெறும் 5 வயதே ஆன சிறுமியான ஹிந்த் ரஜப், தன் குடும்பத்துடன் காசா நகரிலிருந்து தப்பிச் சென்றபோது, இஸ்ரேலியப் படைகள் அவர்கள் சென்ற காரை நோக்கி 335 முறை சுட்டதில், அவளது குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கொல்லப்பட்டனர். மருத்துவ உதவியாளர்கள் அவளை மீட்க முயன்றபோது, அவள் தன் உறவினர்களின் சடலங்களுடன் காரில் சிக்கிக்கொண்டாள். இறுதியில், 2 மருத்துவ உதவியாளர்களுடன் அவளும் கொல்லப்பட்டாள்.

காசா விவகாரத்தில் மோடி அரசின் மவுனமும், செயலற்ற தன்மையும் தார்மீக ரீதியாகக் கண்டிக்கத்தக்கவை மட்டுமல்ல, தேசிய நலன் கண்ணோட்டத்தில் விளக்க முடியாதவையும் ஆகும். உலகம் இஸ்ரேலிடம் இருந்து படிப்படியாக விலகிச் செல்லும் இவ்வேளையில், இந்தியா இஸ்ரேலின் மூலோபாய வட்டத்திற்குள் நழுவிச் செல்கிறது.

பிரதமர் மோடியின் இஸ்ரேல் பயணம்

இந்த சூழ்நிலைகளுக்கு மத்தியில், பிரதமர் மோடி மேற்கொண்ட இஸ்ரேல் பயணம்,

## இந்திய செய்திகள்

வரலாற்றில் ஒரு குழப்பமான மூலோபாய முடிவு என்று பதிவு செய்யப்படும். பாலஸ்தீனம், ஈரான் மற்றும் பரந்த மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள நமது வரலாற்று நட்பு நாடுகளிடம் இருந்து நாம் நம்மை அந்நியப்படுத்திக் கொண்டுள்ளோம்.

உலகளாவிய பொதுக் கருத்தில் இருந்து நாம் நம்மைத் தூரப்படுத்திக் கொண்டுள்ளோம். மேலும், அனைத்து நாடுகளிலும், கொடூரமான பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தும் தொடர்ந்தும் வரும் ஒரு நாடான பாகிஸ்தானை, ஒரு மத்தியஸ்தரின் இடத்தைக் கைப்பற்ற நாம் அனுமதித்துவிட்டோம். அனைத்து தரப்பினருடனும் நமக்குள்ள வரலாற்று நட்புறவைக் கருத்தில் கொண்டால், மத்தியஸ்தம் செய்வது நமக்கே உரியது என்பது தெரியவரும்.

இந்தியா தனது மூலோபாய நலன்களையும், தார்மீகத்தையும் தியாகம் செய்ததன் விளைவாக, பிரதமர் மோடிக்கும், பிரதமர் நெதன்யாகுவுக்கும் இடையிலான நட்புறவைத் தவிர வேறு எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. தற்போது நெதன்யாகு அமெரிக்கா உள்பட உலகம் முழுவதும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறார்.’’

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!



உடல்நலம்

# ‘40 வயதை எட்டிவிட்டீர்களா? மார்பகப் புற்றுநோய் உங்களைத் தாக்கும் முன் முந்திக்கொள்ளுங்கள்!‘

தற்காலத்தில் பெண்களை அதிகம் அச்சுறுத்தும் நோய்களில் முதன்மையானதாக 'மார்பகப் புற்றுநோய்' உருவெடுத்துள்ளது. மாறிவரும் வாழ்வியல் முறை, உணவுப் பழக்கம் மற்றும் விழிப்புணர்வு இல்லாமை ஆகியவற்றால் இந்நோயின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, ‘40 வயதைக் கடந்த பெண்கள்‘ இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

பொதுவாக வயது அதிகரிக்கும் போது புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகரிக்கின் றன. 40 வயதை எட்டும்போது பெண்களின் உடலில் பல்வேறு ஹார்மோன் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே, இந்த காலகட்டத்தில் இருந்தே விழிப்புடன் இருப்பது அவசியம். ஆரம்ப கட்டத்திலேயே இதனைக் கண்டறிந்தால், முழுமையாகக் குணப்படுத்துவதுடன் உயிர்பலி ஏற்படுவதையும் தவிர்க்கலாம்

மேற்கொள்ள வேண்டிய முக்கிய பரிசோதனைகள்:

மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிய பின்வரும் பரிசோதனைகள் பெரிதும் உதவுகின்றன:

1.சுய மார்பகப் பரிசோதனை:

★ மாதத்திற்கு ஒருமுறை பெண் கள் தங்களை தாங்களே கண்ணாடி முன்னின்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

★ மார்பகத்தில் ஏதேனும்



புதிய கட்டிகள், வீக்கம், தோலின் நிறமாற்றம் அல்லது மார்பகக் காம்புகளில் இருந்து திரவம் கசிதல் போன்ற மாற்றங்கள் தென்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

2.மருத்துவப் பரிசோதனை:

★ ஆண்டுக்கு ஒருமுறையாவது தகுதிவாய்ந்த பொது மருத்துவர் அல்லது மகப்பேறு மருத்துவரிடம் சென்று முறையான பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

3.மேமோகிராம் பரிசோதனை:

★ 40 வயதைக் கடந்த பெண்கள் ‘ஒன்று அல்லது இரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை‘ கட்டாயமாக 'மேமோகிராம்' பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

★ நமது கைகளுக்குத் தட்டுப் படாத மிகச்சிறிய கட்டிகளைக் கூட இந்த பரிசோதனை மூலம் மிகத் துல்லியமாகக் கண்டறிந்துவிட முடியும்.

3. மார்பகப் புற்றுநோயின் நிலைகளும் அதன் உயிர் பிழைப்பு விகிதமும்:

நிலை 0 மற்றும் 1: புற்றுநோய் மார்பகத் திசுக்குள் மட்டுமே இருக்கும் ஆரம்ப நிலை. இந்த நிலையில் கண்டறிந்தால் 100% முற்றிலும் குணப்படுத்த முடியும்.

நிலை 2: கட்டி சற்றே பெரியதாகி அக்குள் நிணநீர் முனைகளுக்கு பரவும் நிலை. இதன் பிழைப்பு விகிதம் 98% ஆகும்.

நிலை 3: புற்றுநோய் மார்பகத்தின் பெரும்பகுதிக்கும் அருகிலுள்ள திசுக்களுக்கும் பரவியிருக்கும். இதன் பிழைப்பு விகிதம் 72% ஆகக் குறைகிறது.

நிலை 4: புற்றுநோய் நுரையீரல், கல்லீரல் அல்லது எலும்புகளுக்குப் பரவிய முற்றிய நிலை. இதன் பிழைப்பு விகிதம் 22% மட்டுமே.

40 வயதில் கண்டறியப்படும் கட்டிகள் பொதுவாக அளவில் சிறிய தாகவும், ஆரம்ப நிலையிலும் இருப்பதால், சிகிச்சை எளிமையாக வும், மார்பகத்தை முழுமையாக அகற்ற வேண்டிய அவசியம் இல்லா மலும் குணப்படுத்த வாய்ப்புகள் அதிகம்.

4. மார்பக சுய பரிசோதனை செய்யும் முறை:

மாதவிடாய் நின்ற 7 முதல் 10 நாட்களுக்குள் சுய பரிசோதனை செய்ய வேண்டும்.

கண்ணாடி முன் நின்று கவனித் தல்:

கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு, மார்பகங்களின் வடிவம், அளவு சமமாக உள்ளதா, தோலில் சுருக்கங்கள் அல்லது காம்புகள் உள் நோக்கி இழுக்கப்பட்டு உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

படுத்துக்கொண்டு பரிசோதித் தல்:

இடது மார்பகத்தைப் பரி சோதிக்க இடது கையை தலைக்கு அடியில் வைக்க வேண்டும். வலது கையின் மூன்று விரல் நுனிகளால் வட்ட வடிவில் அழுத்திப் பார்த்து, அக்குள் பகுதி வரை கட்டிகள் ஏதேனும் உள்ளதா என ஆராய வேண்டும். இதேபோல் வலது மார்பகத்திற்கும் செய்ய வேண்டும்.

எச்சரிக்கை அறிகுறிகள்:

பின்வரும் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

★ மார்பகம் அல்லது அக்குள் பகுதியில் வலியற்ற கட்டிகள் தோன்றுவது.

★ மார்பகத்தின் அளவு அல்லது வடிவத்தில் திடீர் மாற்றம் ஏற்படு வது.

★ மார்பகத் தோல் சுருங்குவது அல்லது ஆரஞ்சுப் பழத்தோல் போல மாறுவது.

‘வருமுன் காப்பதே சிறந்தது.‘

மார்பகப் புற்றுநோய் என்பது ஆரம்பத்தில் வலியைக் காட் டாது என்பதால், பலர் இதனை அலட்சியப்படுத்துகிறார்கள். ஆனால், முறையான இடைவெளி யில் மேற்கொள்ளப்படும் பரிசோத னைகள் மட்டுமே இதிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் கேடயம். எனவே, 40 வயதைக் கடந்த அனைத் துப் பெண்களும் தயக்கமின்றி, தங்களின் ஆரோக்கியத்திற்காகப் பரிசோதனைகளை மேற்கொண்டு, ஆரோக்கியமான சமுதாயத்தைப் படைக்க முன்வர வேண்டும்.

# இரவு உணவை தவிர்ப்பவரா நீங்கள்? இந்த தப்பை செய்யாதீங்க!

இன்றைய வேகமான வாழ்க்கை முறையில் பலர் உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், வேலைப்பளு காரணமாகவும் இரவு உணவைத் தவிர்க்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், மருத்துவ நிபுணர்கள் இதுபோன்ற பழக்கம் உடலுக்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரிக்கின்றனர்.

உடலுக்குத் தேவையான சக்தி மற்றும் ஊட்டச்சத்துகள் சீராக கிடைக்காதபோது, உடலின் இயல் பான செயல்பாடுகள் பாதிக்கப்படு கின்றன. குறிப்பாக இரவு நேரத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு உணவு கிடைக்காமல் போனால், ரத்தச் சர்க்கரை அளவில் மாற்றம் ஏற்படலாம்.

சில ஆய்வுகளின்படி, இரவு உணவை அடிக்கடி தவிர்ப்பவர் களுக்கு இதய நோய்கள் மற்றும் உயர் ரத்த அழுத்தம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது. உடலின் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுவதும் இதற்கு ஒரு காரணமாக கருதப்படுகிறது.

மருத்துவர்கள் கூறும் முக்கிய பாதிப்புகள்:

★கடுமையான பசி உணர்வு

★அஜீரணம் மற்றும் வயிற்று எரிச்சல்

★தூக்கமின்மை

★தலைச்சுற்றல் மற்றும் சோர்வு

★கவனக்குறைவு

★ரத்தச் சர்க்கரை அளவில் ஏற்றத் தாழ்வுகள்

★நோய் எதிர்ப்பு சக்தி குறைதல்

இரவு உணவை தவிர்ப்பதால், மறுநாள் காலை அல்லது மதிய நேரங்களில் அதிகளவு உணவு உட்கொள்ளும் நிலை உருவாகலாம். இது உடல் எடை அதிகரிப்பதற்கும், செரிமான கோளாறுகளுக்கும் வழிவகுக்கிறது.

உடல் எடையைக் குறைப்பதற் காக இரவு உணவை முழுமையாக தவிர்ப்பது ஆரோக்கியமான முறையாக இல்லை என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு பதிலாக:

★குறைந்த அளவு உணவு எடுத்து கொள்வது

★காய்கறி மற்றும் பழங்களை அதிகரிப்பது

★புரதச்சத்து நிறைந்த உணவு களை சேர்ப்பது

★இரவு 7-8 மணிக்குள் உணவருந்துவது

★தினசரி உடற்பயிற்சி செய்வது

போன்ற பழக்கங்கள் உடல் எடையை கட்டுப்படுத்த உதவும்.

மருத்துவர்கள் பரிந்துரைக்கும் ஆரோக்கியமான இரவு உணவுகள்:

★காய்கறி சாலட் ★சூப் வகைகள் ★சிறுதானிய உணவுகள்

★சப்பாத்தி மற்றும் காய்கறி

★பழங்கள் ★புரதச்சத்து நிறைந்த பருப்பு வகைகள்

இரவு உணவை முற்றிலும் தவிர்ப் பதற்குப் பதிலாக, அளவான மற்றும் சத்தான உணவை எடுத்துக்



கொள்வதே உடல்நலத்திற்கு நல்லது. உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் சரியான நேரத் தில் கிடைப்பது மட்டுமே நீண்ட கால ஆரோக்கியத்தை உறுதி செய்யும் என மருத்துவர்கள் வலியுறுத்து கின்றனர். உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்க த்தில் இரவு உணவைத் தவிர்ப்பது தற்காலிக பலனைத் தரலாம்.

ஆனால் நீண்டகாலத்தில் செரி மானக் கோளாறு, சோர்வு, தூக்கமின்மை, வளர்சிதை மாற்ற பாதிப்பு உள் ளிட்ட பல உடல்நலப் பிரச்சனை களை ஏற்படுத்தும் அபாயம் உள் ளது. எனவே, இரவு உணவை தவிர்க் காமல், ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை பின்பற்றுவது அவசியம்.

## தமிழக செய்திகள்

# தங்க மோதிரமா? தரமான மகப்பேறு சிகிச்சையா? – தமிழக அரசுக்கு ஜவாஹிருல்லா கேள்வி

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம் எச் ஜவாஹிருல்லா வெளியிடுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளதை மறுபரிசிலனை செய்து இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஊரக பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளின் பிரசவ அறைகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



தமிழகத்தின் பல அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு அறைகளில் நெரிசல், மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை, போதிய படுக்கை வசதியின்மை மற்றும் உபகரணக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. பல ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்த குறைபாடுகளின் மத்தியில் பிரசவ சேவைகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவது அரசின் முன்னுரிமை சரியான திசையில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

குழந்தையின் கையில் தங்க மோதிரம் அணிவிப்பதை விட, தாயின் உயிரைக் காக்கும் நவீன மகப்பேறு அறை (வார்டு), குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் சிறப்பு சிகிச்சைப் பிரிவு, போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவையே மக்களுக்கு உண்மையில் தேவை.

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் அரசின் கடமை, காட்சிப்படுத்தும் திட்டங்களை அறிவிப்பது அல்ல; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நீடித்த முதலீடுகளை மேற்கொள்வதாகும்.

தங்க மோதிரம் சில நாட்களுக்கு செய்தியாக இருக்கலாம்; ஆனால் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனைகள் பல தலைமுறைகளுக்கு நன்மை பயக்கும்.

எனவே, தமிழக அரசு பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை கைவிட்டு, அதற்காக ஒதுக்கப்படும் நிதியை குறிப்பாக ஊரக அரசு மருத்துவமனைகளின் மகப்பேறு அறைகள், குழந்தைகள் நலப் பிரிவுகள் மற்றும் மருத்துவ கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் திருப்பிவிட வேண்டும். அதுவே சமூக நலனுக்கும், தாய்-சேய் பாதுகாப்பிற்கும், பொது சுகாதார முன்னேற்றத்திற்கும் ஏற்ற பொறுப்பான முடிவாக இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வழக்கை ரத்து செய்ய கோரிய சேகர்பாபு மனு தள்ளுபடி- ஐகோர்ட் உத்தரவு

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நாளான கடந்த ஏப்ரல் 23-ந்தேதி, சென்னை துறைமுகம் தொகுதி தவெக வேட்பாளர் சினோரா அசோக், தேர்தல் பணிமனையில் இருந்த போது,



அங்கு வந்த முன்னாள் அமைச்சர் சேகர்பாபு மற்றும் திமுகவினர், தவெக வேட்பாளரையும், தவெக தொண்டர்களையும் தாக்கியதாக புகார் அளிக்கப்பட்டது.

இந்த புகாரின் அடிப்படையில், தனக்கு எதிராக வடக்கு கடற்கரை போலீசார் பதிவு செய்துள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி சென்னை ஐகோர்ட்டில், திமுக எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான சேகர்பாபு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்த போது, சேகர்பாபு தரப்பில், சம்பவம் நடந்து 29 நாட்களுக்கு பின், புதிய அரசு பொறுப்பேற்ற பின் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரில் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் வழக்கை ரத்து செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

இந்த வாதங்களை ஏற்க மறுத்த நீதிபதி, வழக்கை ரத்து செய்ய எந்த முகாந்திரமும் இல்லை எனக் கூறி, சேகர்பாபுவின் மனுவை தள்ளுபடி செய்வதாகவும், விரிவான உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பின்னர், சேகர்பாபு தரப்பில் மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மனுவை வாபஸ் பெற அனுமதித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# அப்பாவை சட்டமன்றத்தில் தேடாதீர்கள்... அவர் மக்கள் மனதில் இருக்கிறார் - மு.க.ஸ்டாலின்

திருவாரூர் மாவட்டம் காட்டூரில் நடைபெற்ற திருமண விழாவில் கலந்துகொண்ட திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

★ அப்பாவை சட்டமன்றத்தில் தேடாதீர்கள், அவர் மக்கள் மனதில் இருக்கிறார்.

★60 ஆண்டுகள் பொதுவாழ்க்கையில் மக்களோடு மக்களாகவே நான் இருக்கிறேன். ★ நான் சட்டமன்றத்தில் இல்லாவிட்டாலும் மக்கள் மன்றத்தில் இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் முதலமைச்சர் விஜய் 'அப்பாவை காணோம்' குட்டிக்கதை மூலம் பதிலடி கொடுத்த நிலையில், அதற்கு தற்போது திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

# தமிழ்நாடு மின் வாரியத்தின் தற்போதைய கடன் ரூ.2.47 லட்சம் கோடி- வெள்ளை அறிக்கை வெளியிட்ட அமைச்சர் நிர்மல் குமார்

தமிழ்நாடு மின்துறை நிலை குறித்து மின்சார துறை அமைச்சர் நிர்மல்குமார் வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளார்.




இதுகுறித்து அவர் கூறியதாவது:-

25 ஆண்டுகள் மின்துறையின் நிலை குறித்து வெள்ளை அறிக்கை. 2001 முதல் 2006 வரை மின்துறையில் ரூ.8,355 கோடி நஷ்டம், 2006 முதல் 2011 வரை மின்துறையில் ரூ.35,463 கோடி நஷ்டம்.

மின்துறையில் 2011 முதல் 2016 வரை ரூ.56,361 கோடி நஷ்டம், 2016 முதல் 2021 வரை ரூ.58,534 கோடி நஷ்டம்.

மின்துறையில் 2021ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரை ரூ.34,447 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தற்போதைய கடன் ரூ.2,47,130 கோடியாக உள்ளது.

மின்சார வாரியத்தில் புதிதாக எதுவும் செய்யவில்லை, ஆனால் ரூ.51,000 கோடி செலவுகள் அதிகமாகியுள்ளது.

மின்சாரத்துறையில் புதிதாக டிரான்ஸ்பார்மர்கள் வாங்கவில்லை, முந்தைய ஆண்டுகளில் செய்ததை தான் செய்துள்ளனர்.

மின்சாரத்துறையில் புதிதாக எதுவும் செய்யாமல் செலவுகள் மட்டும் எப்படி அதிகமானது?

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.








உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# வாங்கவே முடியாது போல... மீண்டும் ஸ்மார்ட்போன் விலையை உயர்த்திய ஐகூ




ஐகூ நிறுவனம் தனது ஸ்மார்ட்போன்கள் விலையை மீண்டும் உயர்த்தியுள்ளது. அதன்படி ஐகூ 15, ஐகூ 15R மற்றும் ஐகூ நியோ 10 ஸ்மார்ட்போன் மாடல்களின் விலை இந்தியாவில் அதிகரித்துள்ளது. மூன்று ஸ்மார்ட்போன்களின் விலை ரூ. 2,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஸ்மார்ட்போன் மாடல்களின் பல்வேறு வேரியண்ட்கள் விலை மாறியுள்ளது.

ஸ்மார்ட்போன் சந்தையில் சமீப காலங்களில் பல்வேறு நிறுவனங்களும் தங்களது மொபைல்களின் விலையை உயர்த்தி வருகிறது. சமீபத்தில் ஆப்பிள் நிறுவன தலைமை செயல் அதிகாரியான டிம் குக் தங்களது நிறுவன சாதனங்களின் விலை உயர்த்தப்பட இருப்பதாக அறிவித்து இருந்தார்.

புதிய விலை விவரங்கள்:

ஐகூ 15 (12 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி) ரூ. 74,999-இல் இருந்து ரூ. 76,999 என மாறியுள்ளது

ஐகூ 15 (16 ஜிபி ரேம், 512 ஜிபி மெமரி) ரூ. 81,999-இல் இருந்து ரூ. 83,999 என மாறியுள்ளது

ஐகூ 15R (8 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி) ரூ. 47,999-இல் இருந்து ரூ. 49,999 என மாறியுள்ளது

ஐகூ 15R (12 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி) ரூ. 52,999-இல் இருந்து ரூ. 54,999 என மாறியுள்ளது

ஐகூ 15R (12 ஜிபி ரேம், 512 ஜிபி மெமரி) ரூ. 59,999-இல் இருந்து ரூ. 61,999 என மாறியுள்ளது

ஐகூ நியோ 10 (8 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி) ரூ. 39,999-இல் இருந்து ரூ. 41,999 என மாறியுள்ளது

ஐகூ நியோ 10 (12 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி) ரூ. 44,999-இல் இருந்து ரூ. 46,999 என மாறியுள்ளது

தற்போது விலை உயர்த்தப்பட்ட மூன்று ஸ்மார்ட்போன்களின் விலை ஏற்கனவே உயர்த்தப் பட்ட நிலையில், தற்போது மீண்டும் இவற்றின் விலை உயர்த்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

www.kathirolimedia.ca

## தொழில் நுட்பம்

# இந்தியாவில் லிமிடெட் எடிஷன் ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்த இன்பின்க்ஸ்



இன்பினிக்ஸ் நிறுவனத்தின் நோட் 60 ப்ரோ ஸ்மார்ட்போன் கடந்த ஏப்ரல் மாதம் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. முன்பு இந்த ஸ்மார்ட்போன் மூன்றுவித நிறங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில், நோட் 60 ப்ரோ பினின்ஃபரினா லிமிடெட் எடிஷன் மாடல் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பினின்ஃபரினா நிறுவத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டு இருக்கும் புதிய லிமிடெட் எடிஷன் ஸ்மார்ட்போன் சூப்பர்கார் மாடலை தழுவி உருவாக்கப்பட்டு இருக்கிறது.

கார்பன் ஃபைபர் ஃபினிஷ் செய்யப்பட்டுள்ள இந்த ஸ்மார்ட்போனின் பேக் பேனல் மெல்லியதாகவும், அதிக உறுதியான அனுபவத்தை வழங்குகிறது. இந்த மொபைல் 360 டிகிரி ஏரோஸ்பேஸ்-கிரேடு அலுமினியம் ஃப்ரேம் கொண்டு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

அம்சங்களை பொருத்தவரை இந்த மாடலில் 6.78 இன்ச் 1.5K AMOLED பேனல், குவால்காம் ஸ்னாப்டிராகன் 7s ஜென் 4 பிராசஸர், 6500mAh பேட்டரி, 90 வாட் ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி, 30 வாட் வயர்லெஸ் சார்ஜிங், 50MP பிரைமரி கேமரா, OIS வழங்கப்பட்டுள்ளது.

இந்திய சந்தையில் புதிய இன்பினிக்ஸ் நோட் 60 ப்ரோ பினின்ஃபரினா லிமிடெட் எடிஷன் மாடலின் 8 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 37,999 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் விற்பனை ஜூன் 29-ஆம் தேதி மதியம் 12 மணிக்கு ப்ளிப்கார்ட் மற்றும் இன்பினிக்ஸ் இந்தியா ஆன்லைன் ஸ்டோரில் நடைபெற உள்ளது.

அறிமுக சலுகையாக இந்த ஸ்மார்ட்போன் வாங்குவோர் ஹெச்டிஎப்சி, ஆக்சிஸ், ஐசிஐசி ஐ மற்றும் எஸ்பிஐ வங்கி கிரெடிட் கார்டு பயன்படுத்தும் போது ரூ. 2000 தள்ளுபடி வழங்கப்படுகிறது. இத்துடன் எக்சேஞ்ச் சலுகையாக ரூ. 2000 வரை கூடுதல் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

# குறைந்த விலையில் ஓபன்-இயர் இயர்பட்ஸ்... சம்பவம் செய்த போட்

போட் நிறுவனம் இந்திய சந்தையில் தனது புதிய ஏர்டோப்ஸ் ப்ரோ க்ளிப் மாசலை அறிமுகம் செய்தது. புதிய ஓபன்-இயர் இயரபட்ஸ் விலை 1,599 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளிப்புறத்தில் நடக்கும் விஷயங்களை கேட்டுக் கொண்டே இசையை அனுபவிக்க செய்யும் வகையில் புதிய இயர்பட்ஸ் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

புதிய இயர்பட்ஸ் குறைந்த விலையில் தரமான அம்சங்களுடன் வெளியாகி இருக்கிறது. அந்த



வகையில், இந்த மாடல் சந்தையில் கடும் போட்டியை ஏற்படுத்தும் என்று தெரிகிறது. இந்த இயர்பட்ஸ் ஆடியோ இழப்பை தவிர்க்க சோனிக் சீல் தொழில்நுட்பம் கொண்டிருப்பதாக போட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த இயர்பட்ஸ்-இல் 12மிமீ டிரைவர்கள் உள்ளன. இதன் கேஸ்-இல் 500mAh பேட்டரி உள்ளது. இந்த இயர்பட்ஸ் மொத்தத்தில் 52 மணி நேரத்திற்கு பிளேபேக் வழங்கும் என்று போட் தெரிவித்துள்ளது.

உடற்பயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி செய்யும் போதும் இந்த இயர்பட்ஸ் பயன்படுத்த ஏதுவாக ஏர்டோப்ஸ் IPX4 சான்று பெற்ற வாட்டர் ரெசிஸ்டண்ட் வச தியுடன்வருகிறது. சற்றே குறைந்த விலையில் கிடைக்கும் இந்த இயர்பட்ஸ் சவுகரியம், சிறப்பான பயன்பாடு என பலவிதங்களில் பயனர் தேவையை கச்சிதமாக பூர்த்தி செய்யும் என்று தெரிகிறது.

இந்திய சந்தையில் போட் ஏர்டோப்ஸ் ப்ரோ க்ளிப் விலை ரூ. 1,599 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இயர்பட்ஸ் வெல்வெட் வைட், சில்க் கிரே மற்றும் சேட்டின் வைட் நிற ஆப்ஷன்களில் கிடைக்கிறது. இதன் விற்பனை போட் அதிகாரப்பூர்வ வலைதளம், அமேசான் மற்றும் ப்ளிப்கார்ட் தளங்களில் நடைபெறுகிறது.

# 'கூகுள் ஹோம் ஸ்மார்ட் ஸ்பீக்கர்' உலக சந்தையில் விற்பனை

கடந்த ஆண்டு கூகுள் நிறுவனம், 'கூகுள் ஹோம் ஸ்பீக்கர்' கேட் ஜெட்டை உலக சந்தையில் விற்பனைக்கு கொண்டு வர உள்ளதாக அறிவித்தது.

இந்த வகை ஸ்மார்ட் ஸ்பிக்கர் 1 ஜிபி ரேம் மற்றும் 4 ஜிபி சேமிப்பு வச தியுடன் இணைக்கப்பட்டுள்ளது. 360 டிகிரியில் அனைத்து திசை களிலும் ஒலி பரப்பக்கூடிய வகையில் 58 மி.மீ டிரைவரைக் கொண்டுள்ளது.

பழைய கூகுள் அசிஸ்டன்ட்-டின் மேம்படுத்தப்பட்ட 'ஜெமினி ஏஜ' தொழில்நுட்ப அம்சத்துடன் சந்தைக்கு வர உள்ளது. வைஃபை 6 மற்றும் ப்ளூடூத் 5.4 வசதியுடன் வடிமைக்கப்பட்டு உள்ளது.

இந்த வகை கூகுள் ஸ்பீக்கரில், ஸ்பேஷியல் சரவுண்ட் சவுண்ட் வசதியை பெறுவதற்கு வைஃபை நெட்வொர்க் வழியாக கூகுள் டிவி ஸ்ட்ரீமரை இணைக்க வேண்டும். இதில் பத்து புதிய இயல்பான குரல்கள் இடம்பெற்றுள்ளன.

கூகுள் ஹோம் ஸ்பீக்கர்கள் ஜேட், பெர்ரி, போர்சிலின் மற்றும் ஹேசல் ஆகிய நான்கு வண்ணங்களில் விற்பனைக்கு வர உள்ளது.

ஜேட் மற்றும் பெர்ரி ஆகிய வண்ணங்களில் விற்பனைக்கு வரும் ஸ்பீக்கர்கள், அமெரிக்காவில் மட்டுமே பிரத்யேகமாக விற்பனைக்கு வரும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.



தற்போது மேம்படுத்தப்பட்டுள்ள புதிய வகை கூகுள் ஹோம் ஸ்பீக்கர் ஜூன் 25 அன்று சுமார் 9,500 ரூபாய் விலையில் விற்பனைக்கு வர உள்ளது.

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# உலக செய்திகள்

## ஈரான் ராணுவம் சிங்கப்பூர் கொடி ஏந்தியக் கப்பலை தாக்கியதால் பரபரப்பு!

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே தற்காலிக அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் நிரந்தர அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ள இருதரப்பும் 60 நாட்களுக்கு காலக்கெடு நிர்ணயித்து ஆராய்ந்து வருகிறது. தற்காலிக ஒப்பந்தம் கையெழுத்துக்கு பிறகு ஹார்முஸ் நீரிணையை வணிகக் கப்பல்கள் கடந்து வருகின்றன.



இந்த நிலையில், ஹார்முஸ் நீரிணையை கடக்க முயன்ற சிங்கப்பூர் கொடி ஏந்திய 'எவர் லவ்லி' என்ற கப்பலை ஈரான் ராணுவம் தாக்கியுள்ளது. ஓமானின் தாஹித் துறைமுகத்திலிருந்து 7.5 கடல் மைல் தென்கிழக்கில், கப்பலின் வலது புறத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் கப்பலின் மேல் தளம் சேதமடைந்ததாகவும், உயிரிழப்புகள் ஏதும் இல்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. தாங்கள் அங்கீகரித்த வழித்தடத்தை மட்டுமே கப்பல்கள் பயன்படுத்த வேண்டும் என ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்த தாக்குதல் நடந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனால் ஹார்முஸ் நீரிணையை கடக்காமல் பல்வேறு கப்பல்கள் பின்வாங்கியுள்ளன.

## பிலிப்பைன்ஸ் பள்ளியில் துப்பாக்கி சூடு; 3 மாணவர்கள் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டின் பள்ளிக்கூடத்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் 3 மாணவர்கள் பலியானார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய




பகுதியில் தக்லோபன் நகரில் சான் ஜோஸ் நேஷனல் என்ற பெயரில் பள்ளிக்கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. வழக்கம்போல் இன்று காலை பள்ளி தொடங்கி நடந்தபோது, 2 மர்ம நபர்கள் திடீரென உள்ளே புகுந்து துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில், பள்ளியில் இருந்த மாணவர்கள் 3 பேர் பலியானார்கள். தவிர 5 பேர் காயமடைந்தனர். இதுதொடர்பாக 2 பேரை போலீசார் பிடித்து, விசாரணைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் அந்த பள்ளியின் முன்னாள் மாணவர் என முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவர்கள் 2 பேரும் ஆண்கள். இந்த துப்பாக்கி சூட்டுக்கான காரணம் என்னவென்று உடனடியாக தெரிய வரவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. அந்த பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டு உள்ளது.

www.kathiroli-media.ca

## ஹார்முஸ் ஜலசந்தியை மூடினால் உங்கள் நாடே இருக்காது: ஈரானுக்கு டிரம்ப் மீண்டும் மிரட்டல்

அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே சுவிட்சர்லாந்தில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. முதல் சுற்று பேச்சுவார்த்தை நேற்று இரவு நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தையின் போது, ஹார்முஸ் ஜலசந்தி திறந்த நிலையில் இருப்பதை உறுதி செய்ய இரு நாடுகளுக்கும் இடையே நேரடி தகவல் தொடர்பு வழிகளை ஏற்படுத்தவும், லெபனானில் நடைபெற்று வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவும் ஒப்புதல் எட்டப்பட்டதாக மத்தியஸ்த நாடுகளான கத்தார் மற்றும் பாகிஸ்தான் கூறின.

சுவிட்சர்லாந்தில் அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்று கொண்டு இருக்கும் நேரத்திலும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரானுக்கு பகிரங்க



மிரட்டலை விடுத்துள்ளார். நேற்று செய்தி நிறுவனம் ஒன்றில் பேசிய டிரம்ப், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்லும் போக்குவரத்தில் ஈரான் தலையிட்டால், அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்துவதோடு, ஜலசந்தியின் கட்டுப்பாட்டையும் கைப்பற்றுவோம். நீங்கள் ஹார்முஸ் ஜலசந்தியை மூடினால், உங்களுக்கே ஒரு நாடு இருக்காது என்று ஈரான் அதிகாரிகளிடம் நான் கூறினேன்'' என்று டிரம்ப் எச்சரித்து இருக்கிறார்.

## விசாரணைக்கு சென்ற இடத்தில் நாயை சுட்டுக்கொன்ற காவலர்

விசாரணைக்கு சென்ற இடத்தில் தன் மீது பாய்ந்த நாயை காவலர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டார். இது தொடர்பான வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர காவல்துறைக்கு கடந்த 13-ந்தேதி அவசர அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் பேசிய பெண், தனது பக்கத்து வீட்டில் நீண்ட நேரமாக அலறல் சத்தம் கேட்பதாகவும், அங்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த அழைப்பின்பேரில் 2 காவலர்கள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். அலறல் சத்தம் கேட்டதாக கூறப்பட்ட வீட்டிற்கு போலீசார் சென்றபோது அந்த வீட்டில் ஒரு பெண் இருந்தார். அந்த பெண்ணிடம் போலீசார் பேசிக் கொண்டிருந்தபோது வீட்டிற்குள் ஒரு நாய் இருப்பது தெரியவந்தது. அந்த நாய் போலீசாரைப் பார்த்து குறைத்ததோடு, வீட்டிற்குள் இருந்து வெளியே வர முயன்றது. இதையடுத்து காவலர்கள் அந்த பெண்ணிடம் உடனடியாக நாயை பிடித்து உள்ளே



அனுப்புங்கள் என்று கூறினர். அந்த பெண், ''பயப்பட வேண்டாம், எனது நாய் ஆக்ரோஷமானது கிடையாது'' என்றார். பின்னர் நாயை உள்ளே இழுத்து கதவை மூடினார்.

தொடர்ந்து அந்த பெண் கதவை திறந்து மீண்டும் வெளியே வந்தார். அவரிடம், வீட்டில் இருந்து அலறல் சத்தம் வந்தது ஏன்? என போலீசார் கேட்டபோது, என்.பி.ஏ. கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் நியூயார்க் அணி வெற்றி பெற்றதை கொண்டாடினோம் என்று அந்த பெண் தெரிவித்தார். அவரது நாய்க்கும் கூடைப்பந்து அணியின் ஜெர்சியை அணிவித்திருந்தார்.

அந்த பெண் போலீசாரிடம் பேசி கொண்டிருந்தபோதே, திடீரென நாய் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்துவிட்டது. அதோடு, அந்த நாய் காவலரைப் பார்த்து குறைத்து அவர் மீது பாய்வது போல சென்றது. இதனால் பதறிப்போன காவலர், உடனடியாக தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து நாயை நோக்கி 4 முறை சுட்டார். இதில் படுகாயமடைந்த நாய், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

இந்த காட்சிகள் அனைத்தும் காவலர்களின் உடலில் பொருத்தப்பட்டிருந்த கேமராக்களில் பதிவாகி உள்ளது. கண் முன்னே தனது வளர்ப்பு நாய் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டு அந்த பெண் அழுது புலம்பினார். இந்த சம்பவத்திற்கு சமூக வலைதளங்களில் விலங்குகள் நல ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறை வருத்தம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறை தலைவர் ஜிம் மெக்டொனால் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வளர்ப்பு பிராணியின் இழப்பு மிகவும் துயரமானது. நாய் என்பது பலருக்கு ஒரு விலங்கு மட்டுமல்ல, அது ஒரு நண்பனாகவும், ஒரு குடும்ப உறுப்பினர் போலவும் இருக்கிறது.

ஒரு காவல் அதிகாரி தனது துப்பாக்கியை பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்படுவது மிகவும் மோசமானது. இதன் காரணமாகவே, ஆபத்தான சூழ்நிலைகளை கையாள லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறையில் சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டு காவல் அதிகாரிகளுக்கு கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

நாய் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விரிவான, வெளிப்படையான விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் பொதுமக்களை பாதித்துள்ளது என்பதை அறிவோம். இந்த துயரமான சம்பவத்திற்கு வருத்தம் தெரிவிப்பதோடு, நாய்களை கையாள்வதில் காவல் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், வழிகாட்டுதல்கள் குறித்தும் மறுஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெரிவித்துள்ளார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# ஈர்ப்பு விதியை ஏமாற்றுகிறதா பறவைக் கூட்டம்?



ஒவ்வொரு வினைக்கும், சமமான எதிர்வினை உண்டு என்கிறது நியூட்டனின்மூன்றாம்விதி. ஆனால், பறவைக் கூட்டங்கள், பாக்டீரியா கூட்டமைப்புகள் மற்றும் நகரும் செல்கள் ஆகியவை இவ்விதியைப் புறக்கணிக்கின்றனவோ என்று விஞ்ஞானிகள் சந்தேகிக்கின்றனர்.

பறக்கும் பறவைக் கூட்டத்தில், ஒரு பறவை தனக்கு முன்னால் அல்லது பக்கவாட்டில் உள்ள பறவைகளின் அசைவுகளுக்கு மட்டுமே எதிர்வினை ஆற்றுகிறது.

மோதலைத் தவிர்க்கிறது. தனக்குப் பின்னால் உள்ள பறவைகளை கவனிப்பதில்லை. இத்தகைய ஒருதலைப்பட்ச தொடர்புகள், அடிப்படை இயற்பியல் விதியை மீறுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. என்றாலும், ஜெர்மனியின் டிரெஸ்டன் தொழில் நுட்ப பல்கலை விஞ்ஞானிகள், இதற்கு ஒரு புதிய கணித விளக்கத்தைக் கண்டறிந்துள்ளனர்.

விஞ்ஞானிகளின் இந்த தீர்வு, எதிர்பாராவகையில் மிக நேர்த்தியாகவும் அமைந்துள்ளது. அதாவது, தங்களது கணிதக் கணக்கீடுகளில் 'கற்பனைத் துணைகளை' (Imaginary partners) அறிமுகம் செய்தனர். இந்த சமச்சீரற்ற அமைப்புகளில், விடுபட்ட சமநிலையை, இக்கற்பனைக் கூறுகள் இட்டு சமன் செய்கின்றன.

இதன் வாயிலாக, நியூட்டனின் விதிகளை மாற்றி எழுதாமல், ஆற்றலை நுகர்ந்து சுயமுடிவெடுக்கும் கூறுகளாலான 'இயங்கு பருப்பொருள்' (Active matter) அமைப்புகளைப் புரிந்துகொள்ள இந்த கணித மாதிரி உதவுகிறது.

இந்த கண்டுபிடிப்பின் பயன்கள், பறவைக் கூட்ட ஆய்வோடு நிற்பதில்லை. பாக்டீரியா காலனிகள், மனிதக் கூட்ட நெரிசல், ரோபோடிக்ஸ் மற்றும் மனித திசுக்கள் போன்ற பல துறைகளுக்கும் இந்த புதிய விளக்கம் பொருந்தும்.

தானியங்கி ரோபோக்கள் மற்றும் போக்குவரத்து மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்த இக்கூட்டு நடத்தை பற்றிய புரிதல் பெரிதும் உதவும். இயற்கை, பாடப்புத்தகங்களை விட விசித்திரமானது. ஆனால், அதே நேரத்தில் ஒழுங்கானது என்பதை இந்த ஆய்வு நிரூபித்துள்ளது.

# பிரபஞ்சத்தில் தொலைந்த கோள்கள்

இன்று நாம் காணும் கோள்களை விட அதிக கோள்கள் நமது சூரிய குடும்பத்தில் இருந்திருக் கலாம் என்று விஞ்ஞானிகள் கருதி வருகின்றனர். விண்வெளியின் அந்த தொடக்க கால கொந்தளிப்பான சூழலில், குறைந்தபட்சம் இரண்டு கோள்களாவதுகாணாமல்போயிருக்கலாம் என்று ஒரு புதிய ஆய்வு தற்பொழுது உறுதிப்படுத்தியுள்ளது. விண்ணியல் அறிஞர்களைப் பல ஆண்டுகளாகக் குழப்பி வந்த இந்த மர்மத்திற்கு இக்கண்டுபிடிப்பு ஒரு புதிய விளக்கத்தை அளித்துள்ளது.

பில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இருந்த குழப்பமான சூழலை, ஆராய்ச்சியாளர்கள் கணினி மாதிரி மூலம் மறுவடிவமைப்பு செய்து ஆராய்ந்தனர். இந்த மாதிரிகளின்படி, நமக்கு தெரிந்த கோள்களுடன் சேர்ந்து கூடுதல் கோள்களும் உருவாகியிருக்கலாம் என்றும், பின்னர் அவை விண்வெளிக்கு வெளியேற்றப்பட்டிருக்கலாம் அல்லது பிற கோள்களுடன் மோதி அழிந்திருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடையே உள்ள ஆச்சரியமளிக்கும் பெரிய இடைவெளியைப் பற்றியும் விளக்குகிறது.

இப்பகுதியில் ஒரு கூடுதல் கோள் இருந்திருக்கலாம் என்றும், அது மறைவதற்கு முன்பு அண்டை கோள்களின் இயக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பிற நட்சத்திரங்களைச் சுற்றியுள்ள கோள் அமைப்புகள் நமது சூரிய குடும்பத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டு காணப்படுவதற்கும் இத்தகைய நிகழ்வுகளே காரணமாக இருக்க லாம்.



புதிய முடிவுகள் இந்த மர்மத்தை தீர்ப்பதற்கு பதிலாக, மேலும் ஆழமாக்குகின்றன. கோள்கள் உண்மையில் காணாமல் போயிருந்தால், தொடக்கத்தில் எத்தனை கோள்கள் இருந்தன, அவை எங்கு சென்றன மற்றும் இன்று நாம் காணும் சூரிய குடும்பத்தை வடிவமைப்பதில் அவை என்ன பங்காற்றின என்பதை வானியலாளர்கள் இனிமேல் கண்டறிய வேண்டும்.

## நவீன அறிவியல்

# தொலைநோக்கி காட்டும் பிரபஞ்சத்தின் புதிய முகம்!

சனிக் கோளின் நிலவான டைட்டனுக்கும், குள்ளக் கிரகமான புளூட்டோவுக்கும் இடையே ஒரு வினோத ஒற்றுமையை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். நாசாவின் 'ஜேம்ஸ் வெப்' விண்வெளி தொலைநோக்கி மூலம் கிடைத்த அகச்சிவப்பு தரவுகளின்படி, இவை இரண்டின் நிறமாலையிலும் 5.11 மைக்ரோ மீட்டர் அலைநீளத்தில் மர்மமான வகையில் ஒரு 'ஒளி உறிஞ்சுதல்' நிகழ்வது கண்டறியப்பட்டுள்ளது.

விண்வெளி ஆய்வாளர் புருனோ பெஸார்ட் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு, தொலைநோக்கியின் இரு வேறு கருவிகள் வாயிலாக இந்த சமிக்ஞையைத் தனித்தனியாகப் பதிவு செய்திருந்தது. எனவே, இது கணினி பிழை அல்ல; உண்மையான விண்வெளி நிகழ்வு தான் என்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தினர்.

விஞ்ஞானிகளின் இந்த குழப்பத்திற்கு ஒரு முக்கியக் காரணம் இருக்கிறது. அளவிலும், வெப்பநிலையிலும் முற்றிலும் மாறுபட்ட இந்த இரண்டு உலகங்களும், பல பில்லியன் கிலோமீட்டர்தொலைவில்உள்ளன. ஆனால், இவை இரண்டுமே மீத்தேன் கலந்த, நைட்ரஜன் நிறைந்த வளி மண்டலத்தைக் கொண்டுள்ளன என்பது மட்டுமே பொதுவான அம்சம்.

ஆய்வகங்களில் நன்கு அறியப்பட்ட பனிக்கட்டி வகைகள் மற்றும் கரிம சேர்மங்கள் வெளியிடும் ஒளிக்கற்றைகளுடன், ஜேம்ஸ் வெப் பதிவு செய்த இந்த மர்ம ஒளி உறிஞ்சித் தரவுடன் விஞ்ஞானிகள் ஒப்பிட்டு பார்த்தனர். ஆனால், பூமியில் உள்ள எந்தவொரு வேதியியல் பொருளுடனும் இது பொருந்தவில்லை!



ஜேம்ஸ் வெப் பதிவு செய்த இந்த நிறமாலையின் மர்மமான அம்சம் மேலும் உறுதிசெய்யப்பட வேண்டும். அப்படி உறுதியானால், சூரிய குடும்பத்தின் தொலைதூரப் பகுதிகளில் நிலவும் கடுங்குளிரில், சிக்கலான கரிம மூலக்கூறுகள் எவ்வாறு உருவாகின்றன என்ற புதிய வேதியியல் உண்மையை அது வெளிச்சமிட்டுக் காட்டும். விண்வெளியின் இந்த மர்ம சேர்மத்தை துல்லியமாகக் கண்டறிய, கூடுதல் ஆய்வகச் சோதனைகளும் தற்போது தேவைப்படுகின்றன.

இந்த மர்ம முடிச்சு அவிழ்ந்தால், சூரியக் குடும்பத்தின் வேதியியல் பட்டியலில் ஒரு புதிய பக்கமே எழுதப்படும்!

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# வெட்டுக்கிளிக்கு வலிக்குமா?

மனிதர்களுக்குக் காயம் ஏற்பட்டால் வலியால் துடிப்பர். அதே போல், வெட்டுக்கிளி உள்ளிட்ட பூச்சிகளுக்கு, காயம் படு மானால் வலிக்குமா? லண்டனிலுள்ள குவீன் மேரி பல்கலை ஆய்வுகளின்படி, அவை வலி போன்ற ஒரு நிலையை அனுபவிக்கக்கூடும் என்று தெரியவந்துள்ளது. இதன் வாயிலாக பாலூட்டிகளுக்கும், முதுகெலும்புள்ள விலங்குகளுக்கும் மட்டுமே வலியுணர்வு உண்டு என்ற கருத்து கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

காயமடைந்த பூச்சிகளுக்கு, தொடு உணர்திறன் அதிகரிப்பதையும், லேசான தூண்டுதலுக்குக்கூட மிக வலுவாக எதிர்வினை ஆற்றுவதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இந்த மாற்றங்கள், காயம் ஏற்பட்ட ஆரம்பக்கட்டத்தைத்தாண்டியும் நீடித்தது. இது மனிதர்கள் மற்றும் பிற விலங்குகளில் வலியோடு தொடர்புடைய, 'உணர்திறன் அதிகரிப்பு' (sensitisation) போன்ற நரம்பியல் விளைவை ஒத்திருக்கிறது.

இந்தக் கண்டுபிடிப்பு, பூச்சிகள் மனிதர்களைப் போலவே வலியை உணர்கின்றன என்பதை முழுமையாக நிரூபிக்கவில்லை. ஏனெனில் எந்தவொரு உயிரினத்திலும் உணர்வுப்பூர்வமான அனுபவத்தை அளவிடுவது கடினம். இருப்பினும், அறிவியல் முன்பு கணித்ததை விட, பூச்சிகள் காயம் குறித்து மிகவும் சிக்கலான நரம்பியல் எதிர்வினைகளைக் கொண்டுள்ளன என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது. பல்வேறு முதுகெலும்பில்லாத உயிரினங்களிலும் இதேபோன்ற வலியுணர்வு இருப்பதற்கான ஆதாரங்கள் பெருகிவருகின்றன. இதனால், விஞ்ஞானிகள் வெகுகாலமாக கேட்கப்பட்டுவரும் ஒரு கேள்வியை மீண்டும் ஆராயத் துவங்கியுள்ளனர்: 'துன்பத்தை அனுபவிக்கும் திறன், துல்லியமாக எந்த உயிரினத்தில் தொடங்குகிறது?'

# உலகக்கோப்பை கால்பந்து: துனிசியாவை வீழ்த்தி நெதர்லாந்து அபார வெற்றி!

## விளையாட்டு செய்திகள்

23-வது உலகக் கோப்பை கால்பந்து தொடர் அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடாவில் நடைபெற்று வருகின்றன.

கான்சாஸ் மைதானத்தில் நடந்த 'எப்' பிரிவு லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து - துனிசியா அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 3 வது நிமிடத்திலேயே துனிசியா வீரர் எல்லீஸ் ஸ்கிரி தவறுதலாக சேம் சைடு கோல் அடித்ததால் நெதர்லாந்து 1-0 என முன்னிலை பெற்றது.



7வது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் பிரையன் ப்ரோபி கோல் அடித்தார். இதன் பின் முதல் பாதியில் யாரும் கோல் அடிக் காததால் நெதர்லாந்து 2-0 என முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதியில் சுதாரித்த துனிசியா 54 வது நிமிடத்தில் ஹசெம் மஸ்தூரி மூலம் ஒரு கோல் ஈட்டி 2-1 என்ற நிலைக்கு வந்தது.

ஆட்டத்தின் 62வது நிமிடத்தில் நெதர்லாந்தின் ஜான் பால் வான் ஹெக்கே அடித்த கோல் மூலம் ஆட்டம் 3-1 ஆனது.

இதன் பின் ஒரு அணிகளும் கோல் அடிக்காமல் நேரம் முடிந்தது. இறுதியில் நெதர்லாந்து 3-1 என்ற கோல் கணக்கில் துனிசியாவை வெற்றி கொண்டது.

# மகளிர் டி20 உலகக் கோப்பை: வங்கதேச அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்தியா

மகளிர் டி20 உலகக் கோப்பை தொடரின் 23-ஆவது போட்டியில் வங்கதேசம் மகளிர் மற்றும் இந்திய மகளிர் அணிகள் மோதின. மேன்செ ஸ்டரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்திய அணி 5 விக்கெ ட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.



இந்தப் போட்டியில் டாஸ் வென்ற வங்கதேச அணி முதலில் பேட்டிங் செய்தது. துவக்க ஆட்டக் காரர்களாக களமிறங்கிய திலாரா அக்தெர் 4 ரன்னில் ஆட்டமிழந்து வெளியேறினார். இவருடன் களமிறங்கிய ஜெனரியா ஃபெர் டௌஸ் 31 பந்துகளில் 33 ரன்களை எடுத்தார். இவருடன் ஆடிய ஷோபனா மொஸ்தாரி 22 ரன்களை எடுத்தார். அடுத்து வந்தவர்களில் கேப்டன் நிகர் சுல்தானா 27 பந்துகளில் 32 ரன்களை எடுத்தார். 20 ஓவர்கள் முடிவில் வங்கதேச மகளிர் அணி 8 விக்கெட் இழப்புக்கு 136 ரன்களை எடுத்தது.

இந்திய அணி சார்பில் சிறப்பாக பந்துவீசிய ராதா யாதவ் 3 விக்கெ ட்டுளையும், ஸ்ரீ சரணி 2 விக்கெ ட்டுகளையும், ரேனுகா சிங் மற்றும் நந்தனி ஷர்மா தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

137 எனும் எளிய இலக்கை துரத்திய இந்திய மகளிர் அணிக்கு ஷபாலி வெர்மா அதிரடியாக ஆடி 34 பந்துகளில் 53 ரன்களை குவித்தார். இவருடன் 18 பந்துகளில் 23 ரன்களை குவித்தார்.

ரிச்சா கோஷ் 10 ரன்களில் ஆட்டமிழக்க, ஜெமிமா ரோட்ரிக்ஸ் 26 ரன்களை விளாசினார். 16.5 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு இந்திய மகளிர் அணி 39 ரன்களை குவித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# 3-ஆவது டெஸ்ட்: 96 ஆண்டுகால சாதனையை முறியடித்த டாம் லேத்தம் - டெவான் கான்வே ஜோடி...

நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியை சேர்ந்த டாம் லேத்தம் மற்றும் டெவான் கான்வே இணைந்து புது சாதனை படைத்து அசத்தியுள்ளனர்.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா 1 வெற்றியுடன் 1-1 என்ற கணக்கில் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் விளையாடி வருகின்றன. இந்தப் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 361-4 எனற வலுவான நிலையில் உள்ளது.

ஆட்டத்தின் முதல் நாளில் நியூசிலாந்து கேப்டன் லேத்தம் 151 ரன்களும், டெவான் கான்வே 157 ரன்களும் குவிக்க முதல் விக்கெ ட்டுக்கு இந்த ஜோடி 317-0 என்ற நிலையை உருவாக்கின.

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வீரர்களின் அதிகபட்ச பார்ட்னர்ஷிப்



ஆக இது மாறியது.

முன்னதாக 1930-ஆம் ஆண்டு வெலிங்கடனில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து வீரர்கள் ஸ்டீவி டெம்ஸ்டர் மற்றும் ஜாக்கி மில்ஸ் ஜோடி விக்கெட் இழப்பின்றி 276 ரன்கள் அடித்ததே விக்கெட் இழப்பின்றி நியூசிலாந்து வீரர்கள் அடித்த அதிகபட்சாக இருந்தது. இதன் மூலம் 96 ஆண்டுகால சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

விக்கெட் இழப்பின்றி நியூசிலாந்து அணி 317 ரன்களை எடுத்த நிலையில், அந்த அணி தனது முதல் விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து 319 ரன்களில் 2-ஆவது விக்கெட்டையும் இழக்க முதல் நாள் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 361 ரன்களை சேர்த்துள்ளது.

# வைபவ் சூர்யவன்ஷிக்காக இங்கிலாந்து கிரிக்கெட் போர்டு எடுத்த அதிரடி முடிவு..!

இந்திய அணி இந்த மாதம் இறுதி முதல் அடுத்த மாதம் இரண்டாவது வாரம் வரை அயர்லாந்து மற்றும் இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாட இருக்கிறது. டி20 இந்திய அணியில் சூர்யவன்ஷி இடம் பிடித்துள்ளார். இவருக்கு 15 வயதாகிறது. இதனால் அவருடன் அவருடைய பெற்றோர்கள் உடன் செல்வார்கள். அவர்களுடைய செலவை இந்திய கிரிக்கெட் வாரியம் ஏற்றுக் கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்தில் விளையாடும்போது, சூர்யவன்ஷிக்கு தனி உடைமாற்றும் அறை வழங்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் போர்டு தெரிவித்துள்ளது. அவருக்கு 16 வயது முடிவடையாததால், 16 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான பாதுகாப்பு விதிமுறைகளின்படி (ECB மற்றும் ICC-யின் விதிமுறைகள்) இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ECB தெரிவித்துள்ளது. அதேவேளையில், வீரர்களுடன் அறைகளில் ஆலோசனையில் ஈடுபடலாம். ஓட்டல் அறையில் பெற்றோருடன் தங்கிக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளது.



இரண்டு டி20 போட்டிகளில் விளையாட அயர்லாந்து செல்ல இருக்கிறார். ஆனால், அயர்லாந்து கிரிக்கெட் சங்கம் இது தொடர்பாக எந்த அறிக்கையும் வெளியிடவில்லை.

ஐபிஎல் மற்றும் இலங்கையில் நடைபெற்ற ஏ அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு தொடரில் சக வீரர்களுடன் உடைமாற்றும் அறையை பகிர்ந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!
www.kathiroli-media.ca

# யுஎஸ் ஓபன் பேட்மிண்டன்: கலப்பு இரட்டையர் முதல் சுற்றில் இந்திய ஜோடி வெற்றி

யு.எஸ்.ஓபன் பேட்மிண்டன் தொடர் அமெரிக்காவில் நடை பெற்று வருகிறது. இந்தத் தொடர் வரும் 28-ம் தேதி வரை நடக்கிறது. இந்நிலையில், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் ராவத்-மனீஷா ஜோடி, இந்தோனேசியாவின் விராவன் இஷான் ஆதம் -செரினா கனி ஜோடி உடன் மோதியது.

இதில் அதிரடியாக ஆடிய இந்திய ஜோடி 21-15, 21-16 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.



# கோவாவில் கோலாகலமாக நடைபெற்ற சுந்தர்.சி - குஷ்பு மகளின் திருமணம்!



பிரபல இயக்குனரும் நடிகருமான சுந்தர்.சி- குஷ்பு தம்பதியினருக்கு அவந்திகா, அனந்திதா என்ற இரு மகள்கள் உள்ளனர். இதில் மூத்த மகள் அவந்திகாவுக்கும், ஷ்ரவன் சீனிவாசனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

திருமணத்திற்கான அழைப்புகளை சுந்தர்.சி-குஷ்பு தம்பதியினர் பிரதமர் மோடி, தமிழக முதல்-அமைச்சர் விஜய் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு நேரில் சென்று கொடுத்தனர்.

இதைத்தொடர்ந்து குஷ்பு மகள், அவந்திகா- ஷ்ரவன் திருமணம் கோவாவில் உள்ள ரிசார்ட்டில் இன்று காலை நடந்தது. திருமண விழாவில் நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். தமிழ் திரை உலகில் இருந்து ராதிகா சரத்குமார், சுகாசினி மணிரத்னம், பூர்ணிமா பாக்யராஜ், திரிஷா, சுஜாதா விஜயகுமார், நடன இயக்குனர் பிருந்தா மற்றும் நடிகர்கள் நாகார்ஜூன், வெங்கடேஷ் உள்பட திரை உலக பிரபலங்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

விரைவில் சென்னையில் திருமண வரவேற்பு பிரமாண்ட முறையில் நடைபெற இருக்கிறது.

இயக்குநர் சுந்தர் சி - குஷ்பு தம்பதியின் மகளான அவந்திகா சுந்தர், 'அட்டாக்கர்' திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார்.

# 'நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை' - மனம் திறந்த நடிகை ஸ்ரீலீலா

தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையும், அசுர வேக ஆட்டக்காரருமான ஸ்ரீலீலா, 'பராசக்தி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நுழைந்தார். தற்போது தனுஷ் ஜோடியாக 'ஓம்' படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் தனக்கு இணையாக ஆட எந்த நடிகரும், நடிகையும் கிடையாது என ஸ்ரீலீலா தெரிவித்ததாக ஒரு தகவல் வெளியானது.



இதனை ஸ்ரீலீலா மறுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறும்போது, 'அகந்தை எப்போதுமே என்னிடம் கிடையாது. நான் அப்படி வளரவும் இல்லை. எல்லோரையும் மதிப்பவள் நான். எனவே இதுபோன்ற தேவையற்ற வதந்திகளை பரப்புவோர் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள். என்னை பற்றி தெரிந்தவர்களுக்கு என்னை பற்றி புரியும்' என்றார்.

# குட் நியூஸ் சொன்ன சமந்தா! இணையத்தில் குவியும் வாழ்த்துக்கள்!

நடிகை சமந்தா ரூத் பிரபு கடைசியாக கடந்த ஆண்டு வெளியான 'சுபம்' திரைப்படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தார். இந்த படம் அவரது தயாரிப்பில் வெளியானமுதல்திரைப்படமாகும். இதனைத் தொடர்ந்து, 'மா இன்டி பங்காரம்' திரைப்படத்தை சமந்தா தயாரித்து, கதாநாயகியாகவும் நடித்துள்ளார். இயக்குநர் பி.வி. நந்தினி ரெட்டி இயக்கியுள்ள இந்தப் படத்தில் கவுதமி, மஞ்சுஷா, திகந்த் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ள இப்படம், 1980-களின் பின்னணியில் குடும்பம் மற்றும் அதிரடியை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. தமிழில் இந்தப் படம் 'எங்கள் தங்கம்' என்கிற தலைப்பில் வெளியானது.

சமந்தா தயாரித்து நடித்துள்ள புதிய திரைப்படமான 'மா இன்டி பங்காரம்' கடந்த 19ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. கடந்த 4 தினங்களில் மட்டும் சுமார் ரூ.50 கோடி வரை வசூலித்திருக்கிறது. இப்படத்தின் மேக்கிங் வீடியோ சமீபத்தில் வெளியாகி இருக்கும் நிலையில், இதில் நடிப்பதற்காக சமந்தா எடுத்திருக்கும் ரிஸ்க் குறித்து அனைவரும் பேசி வருகின்றனர்.

இப்படத்தின் விழாவில் நடிகை சமந்தா கலந்து கொண்ட புகைப் படங்கள் சமூக வலைதளங்களில் வைரலானது. சமந்தா கர்ப்பமாக இருப்பதாகத் தகவல்கள் வெளியானது.



இத்தகவலை நடிகை சமந்தா உறுதிப்படுத்தியிருக்கிறார். ஐதராபாத்தில் நேற்று நடைபெற்ற 'மா இன்டி பங்காரம்' படத்தின் சக்சஸ் மீட்டில் இத்தகவலை அவர் பகிர்ந்து கொண்டார். அந்த நிகழ்வில் பேசியவர், ''இன்னும் ஒரு சிறிய இடைவெளி எடுக்கப்போகிறேன். அதன் பிறகு நான் மீண்டும் வந்துவிடுவேன். நான் இப்போது மகப்பேறு விடுப்பு எடுக்க வேண்டும். இந்தத் தருணத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்'' என்றார். நடிகர் நாக சைதன்யாவிடமிருந்து விவாகரத்து பெற்ற பிறகு, நீண்ட காலமாக தனிமையில் இருந்த சமந்தாவின் திருமணம் கடந்தாண்டு டிசம்பர் மாதம் இயக்குநர் ராஜ் நிதிமொருவுடன் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

www.kathiroli-media.ca

# மாஸ் காட்டும் தலைவர்! 'தர்மன்' பர்ஸ்ட் லுக் மேக்கிங் வீடியோ!

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் அடுத்தடுத்த படங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. தற்போது நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் உருவாகி வரும் 'ஜெயிலர் 2' படத்தின் பணிகளை முடித்துள்ள ரஜினிகாந்த், அடுத்ததாக தனது 173-வது திரைப்படத்தில் நடிக்க தயாராகி வருகிறார்.

தற்காலிகமாக 'தலைவர் 173' என அழைக்கப்பட்ட இந்தப் படத்தை முதலில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்க உள்ளதாக தகவல் வெளியானது. பின்னர் சுந்தர்.சி இயக்குவார் என கூறப்பட்டது. ஆனால் அவர் விலகியதால், 'டான்' படத்தின் இயக்குனர் சிபி சக்கரவர்த்தி இந்த படத்தை இயக்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் அவரும் இந்த படத்தில் இருந்து விலகிய நிலையில், 'ஓ மை கடவுளே' மற்றும் 'டிராகன்' படங்களை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து இந்த படத்தை இயக்க ஒப்பந்த செய்யப்பட்டுள்ளார்.

இந்த படத்தை நடிகர் கமல் ஹாசன் தனது ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் தயாரிக்கிறார். மேலும், பிரபல இயக்குநர் ஷங்கர் முக்கிய வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாகவும், மலையாள நடிகர் பாசில் ஜோசப் ரஜினிகாந்தின் மகனாகநடிக்கஉள்ளதாகவும்தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ரஜினிகாந்தை மையமாகக் கொண்ட சிறப்பு அதிரடி பாடல் காட்சியுடன் படப்பிடிப்பு தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், 'தலைவர் 173' படத்தின் டைட்டில் நேற்று(ஜூன் 24) வெளியிடப்பட்டது. இதன்படி, இந்த படத்திற்கு 'தர்மன்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்க உள்ளார். இந்த படத்தின் அறிமுக விழா சென்னையில் நேற்றுநடைபெற்றது. இந்த விழாவில் நடிகர் ரஜினிகாந்த், நடிகர் கமல்ஹாசன், இயக்குனர் அஸ்வத் மாரிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அதோடு 'தர்மன்' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.



ஆக்சன் கலந்த கதையாக உருவாகவுள்ள இப்படத்தில் ரஜினி மருத்துவராக நடிக்கிறார். இது, படையப்பா மற்றும் வேட்டையாடு விளையாடு கலவையாக இருக்கும் என இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து தெரிவித்திருந்தார். அன்பறிவ் சகோதரர்கள் சண்டைப் பயிற்சியாளர்களாக பணியாற்ற உள்ளனர்.

இந்த நிலையில், 'தர்மன்' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டருக்கான மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இதில், மருத்துவர் வேடத்தில் ரஜினி போஸ் கொடுக்கும் காட்சி கவனம் பெற்று வருகிறது.


THE LAW OFFICES OF MELENI DAVID
Nice
Naughty
THE LAW OFFICES OF MELENI DAVID
Your Personal Injury Lawyer
MDLAW.CA
416.430.0044
HOTLINE
416.271.5992
THE LAW OFFICES OF
MELENI DAVID
BARRISTERS AND SOLICITORS
885 Progress Avenue, Suite 110
Scarborough, ON M1H 3G3
PHONE: 416.430.0044


INTERNATIONAL SHOTOKAN KARATE-DO ORGANIZATION
KARATE RAJAGURU ACADEMY
சர்வதேச ஷோடோகான் கராத்தே - டோ ஆர்கனைஸேஷன்
கராத்தே ராஜகுரு அகாடமி
55 Years Golden Jubilee 1965 - 2020
1965 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அளவில், விஞ்ஞான தற்காப்புக்கலையில் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் வேண்டி அனுபவம் நிறைந்த
கராத்தே
சிலம்பம்
ஆயுத பயிற்சி
யோகா
தியானம்
பெண்களுக்கான சிறப்பு தற்காப்புப் பயிற்சி
மனித நேயர், சேவ ரத்னா, வீர ரத்னா, மாமல்லன், போதிதர்மா, கிரேண்ட் மாஸ்டர், ஹான்ஷி, லயன்
ராஜகுரு த. ரவிந்திரன் M.A., M.S., M.I.B.R.
(9th Dan Black Belt - International Grand Champion - Gold Medalist)
அவர்களின் நேரடி தனிச்சிறப்பு பயிற்சி பெற்று, இன்று கனடாவின் முதன்மை ஆசிரியராக
கராத்தே, யோகா, தியானப் பயிற்சியில், தலை சிறந்து விளங்கும் ஒப்பற்ற
இலங்கை வீராங்கனை ரென்ஷி கயலினியின்
(5th Dan Black Belt - International Secretary - Examiner - Chief Instructor - Technical Director)
அவர்களின் திறமையான பயிற்சியை நேரடியாக பெறவும்,
அன்பு, அமைதி, பொறுமை, ஒழுக்கம் மற்றும் வீரம் போன்ற நற்குணங்களுடன் வாழவும்,
மாதா, பிதா, குரு, தெய்வம் மற்றும் குடும்பம் போன்ற நினைவுகளுடன் சிறப்புடன் வாழவும்,
தமக்கும், பிறர்க்கும் ஆபத்து ஏற்படும் காலங்களில் பாதுகாத்துக்கொள்ளவும்,
இளைஞர்களை நல்வாழ்க்கையில் அமைத்துக்கொள்ளவும், மற்றும் அனைத்து குழந்தைகளும்,
இளைஞர்களும் கல்வியறிவுடன் கூடி, தெளிவான சிந்தனையும், சுய கட்டுப்பாடும்,
நிறைவான தன்னம்பிக்கையும், பூர்த்தியான ஞானத்தையும் பெற்று,
மன அமைதியுடன் வாழவும்...
எமது தற்காப்புக்கலை பயிற்சி நிலையங்களை அணுகவும்
647-719-4756
E: info.isko@yahoo.com | Web: isko.co | Fb.com/karaterajaguru | Instagram @ KarateRajaguru | Twitter @ KarateRajaguru | karaterajaguruofficial.blogspot.com
SCARBOROUGH
* CONDITIONS APPLY - PROMOTIONS & DISCOUNTS IS A LIMITED TIME OFFER - PLEASE CONTACT OUR OFFICE FOR DETAILS
MISSISSAUGA

# வெனிசுலா நிலநடுக்கம்: கூகுள் எச்சரித்தது எப்படி?

வெனிசுலாவில் நேற்று முன் தினம் மாலை 7.1 மற்றும் 7.5 ரிக்டர் என்ற அளவில் சில நொடிகள் இடைவெளியில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இதில் தலைநகர் காரகஸ் உட்பட பலவேறு இடங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. கட்டிடங்கள் சீட்டுக் கட்டுபோல சரிந்து விழும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. மக்கள் தங்கள் உயிரை காக்க கடைசி நொடியில் அலறியடித்து கட்டிடங்களில் இருந்து வெளியேறும் வீடியோக்களும் வெளியாகின.

இந்த நிலநடுக்கத்தால் இதுவரை 188 பேர் உயிரிழந்ததாகவும் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி




உள்ளது.

இந்நிலையில் முதல் நிலநடுக்கம் மாலை 6.04 மணிக்கு ஏற்படுத்துவதற்கு சற்று முன் தங்களது ஆண்ட்ராய்டு மொபைலுக்கு கூகுள் நிறுவனத்திடமிருந்து நிலநடுக்க எச்சரிக்கை அறிவிப்பு வந்ததாக உயிர்தப்பிய பலர் ஆச்சர்யத்துடன் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக நிலநடுக்கத்தின் முதன்மை அலைகள் (பி-அலைகள்), இரண்டாம் அலைகள் (எஸ்-அலைகள்) என்ற நிலையில் தனித்தனியே வருகின்றன.

விநாடிக்கு 6 கிமீ வேகத்தில் மிக வேகத்தில் பயணிக்கும் பி-அலைகளால் பாதிப்பு இல்லை. இதனை தொடர்ந்து வரும் எஸ்-அலைகள் தான் அழிவை ஏற்படுத்துன.

ஒவ்வொரு ஸ்மார்ட்போனிலும் அக்ஸிலரோமீட்டர் என்ற மிக முக்கிய சென்சார் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் மிகச்சிறிய அளவிலான அதிர்வுகளையும் துல்லியமாகக் உணர முடியும். இந்த சென்சார் நிலநடுக்கம் ஏற்படும் போது உருவாகும் ஆரம்பகட்ட அதிர்வுகளை இந்த சென்சார் கண்டறிந்து அந்த சிக்னலை அது பதிவான இடத்தின் விவரத்துடன் கூகுளின் ஆண்ட்ராய்டு நிலநடுக்க எச்சரிக்கை அமைப்பிற்கு அனுப்புகிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஒரு மொபைலில் இருந்து அதிர்வு சிக்னல் வந்தவுடன், கூகுளின் சர்வர்கள் அந்தப் பகுதியில் உள்ள மற்ற ஆண்ட்ராய்டு போன்களையும் ஆராய்ந்து அதேபோல அதிர்வு சிக்னல்கள் அந்த பகுதியில் வருகிறதா என கண்காணிக்கும்.

அப்படி நூற்றுக்கணக்கில் ஒரே இடத்தில் இருந்து சிக்னல்கள் வந்தால் கூகுள் சர்வர்கள் அதை கண்டறிந்து அந்தப் பகுதி மக்களுக்கு அலர்ட் அனுப்புகிறது.

# ஹார்முஸ் நீரிணையை பயன்படுத்தத் தடை விதித்தது ஐ.நா.



கப்பல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணை வழியாக கப்பல்களை வெளியேற்றும் பணியை ஐ.நா. அமைப்பு இடைநிறுத்தியது.

ஐ.நா. ஆதரித்த ஒரு பாதையை பயன்படுத்திய பல எண்ணெய் கப்பல்கள் கடந்து சென்றதை தொடர்ந்து, ஓமன் கடற்கரைக்கு அப்பால் ஒரு கப்பல் மீது ஏவுகணை தாக்கியதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்ததை அடுத்து, ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அமைப்பு ஹார்முஸ் நீரிணை வழியாக கப்பல்களை வெளியேற்றும் பணியை இடைநிறுத்தியது.

வெளியேற்ற பட்டியலில் உள்ள மற்றும் அப்பகுதியில் உள்ள கப்பல்களின் பாதுகாப்பு உத்தரவாதங்களை அந்த அமைப்பு உறுதிப்படுத்தும் வரை, பாரசீக வளைகுடாவில் சிக்கியுள்ள கப்பல்களை நீரிணை வழியாக வெளியேற்றும் திட்டம் நிறுத்தி வைக்கப்படும் என்று சர்வதேச கடல்சார் அமைப்பின் தலைவர் கூறினார்.

தெஹ்ரானின் அனுமதியின்றி நீரிணை வழியாக அந்த பாதையை பயன்படுத்துவதை நிறுத்துமாறு கப்பல்களை ஈரான் அச்சுறுத்திய சில மணிநேரங்களுக்கு பிறகு இந்த தாக்குதல் குறித்த அறிக்கை வெளியானது. தாக்கப்பட்ட கப்பல், வெளியேற்றும் பணியின் ஒரு பகுதியாக இல்லை என்று ஐ.நா. சர்வதேச கடல்சார் அமைப்பின் பொதுச்செயலாளர் அர்செனியோ டொமிங்கஸ் கூறினார்.

அந்த கப்பல் ஈரானிய ஆளில்லா விமானத்தால் தாக்கப்பட்டதாக ஒரு அமெரிக்க அதிகாரி அசோசியேட்டட் பிரஸ்ஸிடம் தெரிவித்தார். ஒரு முக்கியமான சூழ்நிலையை பற்றி விவாதிப்பதற்காக, பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி, ஈரானின் துணை ராணுவ படையான புரட்சிகர காவலர்களால் இயக்கப்படும் டிரோன் மூலம் 'எவர் லவ்லி' என்ற வர்த்தக கப்பல் தாக்கப்பட்டதாக கூறினார்.

இந்த தாக்குதல் குறித்த செய்திகளை தொடர்ந்து, பாரசீக வளைகுடா நீரிணையில் கப்பல் போக்குவரத்தை கட்டுப்படுத்த நிறுவப்பட்ட ஒரு புதிய அரசாங்க அமைப்பான ஈரானின் பாரசீக நீரிணை ஆணையம், தனது சொந்த நியமிக்கப்பட்ட வழித்தடங்களுக்கு வெளியே செல்லும் போக்குவரத்திற்கு 'பாதுகாப்பான பயணத்திற்கான உத்தரவாதம் வழங்கப்படாது' என்று எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டது.

உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!




# பில் கேட்ஸின் தகாத உறவுகளும், எப்ஸ்டீனின் பிளாக்மெயிலும்!

சிறுமிகள், இளம்பெண்களை கடத்தி பணம் படைத்த பெரும் புள்ளிகளுக்கு அனுப்பிய மறைந்த பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டீன் உடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் தொழிலதிபர்பில்கேட்ஸ். எப்ஸ்டீன் உடனும் பல பெண்களுடனும் கேட்ஸ் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் எப்ஸ்டீன் கோப்புகளில் இருந்து வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தின.

பில் கேட்ஸ்க்கு இருந்த பல தகாத உறவுகள் காரணமாகவே 2021 இல் அவரை மெலிண்டா கேட்ஸ் விவாகரத்து செய்ததாக கூறப்படுகிறது. மேலும் தனக்கு இருந்த உறவுகளை வைத்து எப்ஸ்டீன் தன்னை மறைமுகமாக மிரட்டி வந்ததாகவும் பில் கேட்ஸ் அண்மையில் பொதுவெளியில் கூறியிருந்தார்.

இந்நிலையில் எப்ஸ்டீன் ஆவணங்களின் அடிப்படையில் ஜூன் 10 அன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் மேற்பார்வைக் குழு நடத்திய இரகசிய விசாரணையில் பில் கேட்ஸ் பல முக்கிய உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளார். அவர் தனது சாட்சியத்தில், மூன்று பெண்களுடன் திருமணத்திற்குப் புறம்பான உறவு இருந்ததாக பில் கேட்ஸ் ஒப்பிட்டுக்கொண்டார். ரஷிய பிரிட்ஜ் விளையாட்டு வீராங்கனை மிலா அன்டோனோவா மற்றும் அணு இயற்பியலாளர் கரிமா நிக்மதுலினா ஆகியோருடன்தனக்கு உறவுகள் இருந்ததாகவும், இதுபற்றி எப்ஸ்டீனுக்குத் தெரிந்திருந்தது என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

தொழில்முனைவோர் ஆலிஸ் ஜேக்கப்ஸ் நெசல்ரோட் டுடன் மூன்றாவது உறவு கொண்டிருந்ததையும் அவர் ஒப்புக்கொண்டார்.

ஆனால் இந்த உறவுகளுக்கோ அல்லது எப்ஸ்டீனுடனான சந்திப்புகளுக்கோ எந்தத் தொடர்பும் இல்லை என்று கேட்ஸ் மறுத்துள்ளார். எப்ஸ்டீனின் குற்றங்களுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

மேலும், 'எனது துரோகம் குறித்த மேலும் பல பொய்களை இணைத்து கூறி, அவருடன் மீண்டும் இணையுமாறு எப்ஸ்டீன் என்னை வற்புறுத்த முயன்றார்' என்று கேட்ஸ் கூறினார். இருப்பினும், எப்ஸ்டீன்



தன்னை நேரடியாக பிளாக்மெயில் செய்து மிரட்டவில்லை என்றும், ஆனால் அவரின் செயல்கள் அதை கருத்தில் கொண்டே அமைந்ததாகத் தான் நம்புவதாகவும் கேட்ஸ் கூறினார். தொண்டு வேலைகளுக்கு நன்கொடை பெற செல்வந்தர்களை அறிமுகப்படுத்துவதாக அறிமுகப்படுத்துவதாகக் கூறியதால் மட்டுமே எப்ஸ்டீனைச் சந்தித்ததாக கேட்ஸ் தெரிவித்துள்ளார். மொத்தம் நான்கு ஆண்டுகளில் எப்ஸ்டீனை 12 முதல் 14 முறை சந்தித்ததாகவும், இரண்டு முறை காணொளி அழைப்புகள் மூலம் பேசியதாகவும் கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும் அண்மையில் வெளியான எப்ஸ்டீன் ஆவணங்களில் தனக்கு பால்வினை நோய் இருப்பதாகவும் அதற்கு ரகசியமாக மருந்து எடுத்து கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததையும் பில் கேட்ஸ் மறுத்துள்ளார்.